Koviloor Digital Library

அகஸ்தியர் மஹாதிராவகம் 800

தாமரை நூலகம், சென்னை - 600 026.

Acc. No: 44801
R 689

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/H

அகத்தியர்

மகா திராவகம்-800

பதிப்பாசிரியர்:

ஆர்.சி. மோகன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44801

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி. 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண்: 99

முதல் பதிப்பு : சூலை 1993

இரண்டாம் பதிப்பு : ஆகஸ்டு 2004

மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி 2015

நான்காம் பதிப்பு **மே 2020**

நூல் பற்றி:

உரிமை பெற்றது

நூலின் பெயர் : அகத்தியர் மகாதிராவகம்-800

பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
சென்னை-26

பதிப்பு ஆண்டு **மே 2020**

உரிமை : பதிப்பகத்துக்கு

நூல் வடிவம் : டெமி

அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ

மொத்த பக்கங்கள் : 214

விலை ரூ **100/-**

அச்சிட்டோர் கிரியேட்டிவ், ஆப்செட்
சென்னை-34

Koviloor Digital Library

91/14

பதிப்புரை

எண்ணூறு முத்தான பாடல்களை இந்த நூலில் அகஸ்தியர் பாடிக் கொடுத்திருக்கிறார். இந்த நூலின் அருமை படித்து அறிந்தால் மட்டும் போதாது. அதில் கூறப்பட்டுள்ள முறைகளை அனுபவத்தில் கையாண்டு பார்க்கும்போதுதான் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நூலை மிகப் பல ஆண்டுகளுக்கு முன்பு பதிப்பித்தவர் ஹக்கீம்-பா-முகமது அப்துல்லா சாயுபு அவர்கள். அவரே இரசவாத சிந்தாமணி முதலான பல நூல்களை இயற்றியவர். அவர் இந்நூலைப் பற்றி எழுதுகையில்.

சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் ஆகிய இம்மகான்கள் ஜீவகாருண்யத்தினால் சொன்ன வைத்திய கிரந்தங்கள், வாத கிரந்தங்கள் ஆகிய பற்பல நூல்களுக்கும் மேற்கண்ட மஹாதிராவகம் என்னும் நூலே குரு நூல் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

ஏனெனில் இதில் சொல்லப்பட்டிருக்கிற மஹா திராவகத்தினால் எல்லாவித பஸ்பங்கள்,,,செந்தூரங்கள் முதலியவைகளை இலகுவாய் முடிக்கக்கூடும். மேலும் இவ்விதம் சித்தம் செய்யப்பட்ட அவுடதங்களினால் மானிடர்களை வருத்தித் துன்புறுத்தும் கொடிய வியாதிகளை நீக்கி ஜெயம் பெற முடியலாம் என்பதே!

ஆனால் இந்நூல் கிடைக்கப் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் தம் தம் பரம்பரையாய்ப் பரமரகசியமாய் வைத்து வந்தார்களே ஒழிய இதுவரையில் அச்சிட்டு வெளிப்படுத்தினவர்கள் அல்லர். அவ்விதமே அடியேனது பரம்பரையார்களும் இந்நூலைப் பரம ரகசியமாய் வைத்து வந்தனர்.

ஆனால் அடியேனால் செய்யப்பட்ட யூநானி வைத்திய போதினி முதலிய பல கிரந்தங்களையும் கைக் கொண்டு அவற்றால் பலவித நன்மைகளையும் சுகிர்தங்களையும் அடைந்து நம்மைப் பல விதத்தாலும் ஆதரித்துக் கவுரவப்படுத்தி வரும் சுதேசாபிமானிகளாகிய கனவான்களின் விருப்பத்தை யவலமாக்க வசமற்றவனாய் இந்நூலையும் அச்சிட்டு வெளிப்படுத்த முன்வந்தேன்.

இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு முறையும் மிகவும் அருமையானது. ஒவ்வொரு பாகமும் யாவரும் தெரிந்து கொள்ளும் விதமாய் மிகவும் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இவை அனுபவத்திற்கும் ஒத்தே வருகின்றன.

Koviloor Digital Library

மனிதர்களைக் கஷ்டப்படுத்தும் மகாரோகம் முதலிய கஷ்ட நோய்களினின்று ஈடேற்ற விரும்பும் ஒவ்வொருவரிடத்திலும் இக்கிரந்தம் அவசியம் இருக்கத் தக்கது. இதனைப் பார்வையிடும் ஒவ்வொருவரும் இதன் உபயோகத்தை ஒருவர் எடுத்துக் காண்பிக்காமலே நாம் நாமே தெரிந்து கொள்ளக் கூடுமாகையால் அதைப் பற்றி இங்கு விரிவாய்ச் சொல்வது அனாவசியம் என்று கூறுகிறார்.

அபூர்வமான பயன்களைத் தரும் நூல்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளும் குணம் இன்னும் நம்மவர்களிடமிருந்து மறையவில்லை. இந்நூல் திரும்ப அச்சிடப்படாததற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பல மருந்துகளையும் சுலபமாகச் செய்து முடித்துக் கொள்வதற்கு உதவக் கூடிய மஹாதிராவகத்தைச் சொல்ல வந்த இந்த நூலில் அகஸ்தியர் மேலும் பல பல அரிய விஷயங்களைக் கூறியிருக்கிறார்.

துலா ராசியில் பிறந்தவனுக்கு தேவி முதல் சித்தி சிவனோடு மந்திரங்கள் எல்லாம் சித்தி. வாதசித்தி, குளிகை சித்தி, காயசித்தி, எல்லாம் கைகூடும் என்றுகூறுகிறார்.

சித்தி என்பது எல்லோருக்கும் கைகூடி விடக் கூடியதா என்ன? துலா ராசியில் பிறந்தவர்களே அதை அடையக்கூடிய பாக்கியசாலிகள். ஆனால் துலாத்தில் பிறந்த எல்லோருக்கும் அது கிட்டி விடுமா? அதற்கான கிரக அமைப்பும் இருக்க வேண்டும். கிரகங்களின் பலத்தைப் பொறுத்தே அவர் எந்த அளவு சித்தி அடைவார் என்பது நிர்ணயிக்கப்படும்.

அடுத்தபடி கன்னி, மீன ராசிகளில் பிறந்தவர்கள்...!

இவர்கள் வணிகர்களைபோல் என்ன செய்தால் என்ன பயன் கிட்டும் என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்துச் செய்வார்கள். இவர்களுக்கு ஆசை அதிகம், அதனால் எதையும் வெகு நேரம் ஆலோசிப்பார்கள். வாசியிலே அதாவது வாசி (பிராணாயாமம்) யோகம் செய்தபடி நீண்டகாலம் லயித்து நிற்பார்கள். தேவி பூசையில் அதிக ஈடுபாடு ஏற்படாது. ஆனால் மனம் துணிந்து ஈடுபட்டுவிட்டால் காயசித்தி, வாதசித்தி பெறுவார்கள்.

மேஷம், தனுசு ராசிகளில் பிறந்தவர்கள் தாயைப் போற்றி வணங்கி ஆழ்ந்த தியானத்தில் லயித்து சமாதியிலும் நின்று தேறுவார்கள். வாசிசித்தும் வாதசித்தும் அடைவார்கள். குரு பக்தியுடையவர். நூல்களைத் தேடிச் சேர்ப்பார்கள். படித்துப் பொருள் உணர்ந்து மற்றவர்களுக்கும் விளக்குவார்கள்.

Koviloor Digital Library 91/4

மற்ற இராசிகளில் பிறந்தவர்கள் வெகு அதிகமாகப் பேசுவார்களே தவிரச் சித்தி அடைவதற்கு முயற்சி செய்ய மாட்டார்கள். குருவை நாடமாட்டார்கள். தனக்கே எல்லாம் தெரிந்து விட்டாற்போல் பேசுவார்கள். வாதம் செய்வதாகக் கூறிப் புடம் போட்டுப் புடம் போட்டுச் சுட்டு மாள்வார்கள் என்கிறார் அகஸ்தியர்.

அடுத்தபடியாக நட்சத்திரங்களை எடுத்துக்கொண்டால் உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி - உத்திரத்தில் நான்காம் பாகத்திலிருந்து கன்னிராசி. அடுத்த நட்சத்திரங்கள் துலா ராசி, மூலம், உத்திராடம், தனுசு, உத்திராட்டாதி, ரேவதி, மீனம், அஸ்வனி, பரணி, மேஷம். முன் கூறியவைகளில் உள்ள நட்சத்திரங்களேதான் கூறப்பட்டுள்ளன.

ஆனால் லக்னமும் ராசியும் ஒத்திருந்தால் அதன் பலன் மிக அதிகம். கன்னி லக்னமும், அஸ்தம், சித்திரை நட்சத்திரங்களும் ஒத்திருந்தால் அவன் சாதாரண மனிதனே அல்ல. அவன் சித்தன் என்றே சொல்லி விடலாம்.

அப்படியில்லாமல் லக்னமும் இராசியும் வேறு வேறானால் கிரகங்கள் என்ன அம்சம் பெற்றுள்ளார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். கடக அம்சத்தில் சந்திரன், துலா அம்சத்தில் செவ்வாயும், கும்ப நவாம்சத்தில் சனி நிற்பது நன்று அவ்வாறிருக்கப் பிறந்தவர் காய சித்தியடைவார். கன்னி நவாம்சத்தில் புதன் நிற்கப் பிறந்தவன் ஞானியாவான்.

கிரகங்கள் நட்பு வீடுகளில் இருந்தால் அல்லது நட்பு நவாம்சம் பெற்றிருந்தாலும் வாத சித்தி காய சித்தி உண்டாகும். ஆனால் பகை வீடு, நவாம்சங்களில் இருந்தால் உலக ஆசை பிடித்து உயிருள்ள வரை புலம்பிக் கொண்டிருந்து மாள்வான்.

சித்தர் மார்க்கம்

சித்தர்கள் எல்லோரும் துறவிகள் அல்லர். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டவர்களே! ஆனால் தங்களுடைய வாழ்க்கையை ஒரு குறிப்பிட்ட விதத்தில் அமைத்துக் கொண்டவர்கள். இளமையிலிருந்தே ஆசனங்களால் உடலின் புற அக உறுப்புகளை வலுப்படுத்திக் கொள்வதும் பிராணாயமத்தின் மூலம் மூச்சுப் பயிற்சி செய்து வாசி யோகத்தில் பயிற்சி பெற்று முன்னேறுவதும் சித்தர் வாழ்க்கையின் ஆரம்ப நிலை.

பிறகு கற்பம் உண்டு உடலை மூப்படையாமல் காப்பது அடுத்த நிலை.

Koviloor Digital Library

லக்கினத்தில் சுக்கிரன் நிற்கிற காலத்தில் கற்பம் உண்ணலாம். குரு ஐந்தில் நிற்கலாம். செவ்வாய் ஒன்பதில் நிற்கலாம். புதன் இரண்டில் நிற்கலாம். சூரியன் பதினொன்றில் நிற்கலாம். இப்படி உள்ள காலத்தில் கற்பம் உண்ணுவது நல்ல பலன் அளிக்கும்.

கற்பம் உண்ண ஆரம்பித்தவுடன் சிவ தீட்சை சத்தி தீட்சை குரு பகவான் மூல பாகம் பெற முயற்சி செய்ய வேண்டும்.

போகாமல் தீட்சை பெற்றோர் பெரியோர் பாதம்
பொற்பூவால் பூசைசெய்து புகழ்ந்து கேளு
வேகாமல் நின்றதொரு தலையைக் கேளு
விளங்கியதோர் சாகாத காலைக் கேளு
வாகாமல் இரண்டையுந்தான் யார்தான் சொல்வார்
மகத்தான தசதீட்சை வந்தோர் சொல்வார்
சாகாமலிருக்க வென்றால் பஞ்ச தீட்சை
சாதிக்கக் கற்பமுண்டு தள்ளியேறே!

ஐந்து தீட்சை பெற்றுக் கற்பம் உண்டாலே சாகாமல் இருக்கலாம். அப்படியென்றால் பத்து தீட்சை பெற்றவர்களின் நிலை? அகஸ்தியர் இந்த நூலில் படிப்படியாக விளக்குகிறார்.

கற்பம் உண்பதால் உண்டாகும் பலனைப் பற்றிச் சட்டைமுனி இவ்வாறு கூறுகிறார்.

காணப்பா காயசித்து பண்ணும்போது
காட்டுகிறேன் வாலையிலே தின்றாராகில்
பூணப்பா வாலையைப் போலிருந்து வாழ்வார்
பகழாக யவ்வனத்தே தின்றாராகில்
ஊணப்பா யவ்வனம் என்றும் வாழ்வார்
உத்தமனே முப்பதிலே தின்றாராகில்
தோணப்பா முப்பதுபோல் என்றும் வாழ்வார்
சுகமாக ஐம்பதிலே தின்றால் கேளே!

கேளப்பா ஐம்பது போய்ப் பதினாறாமே
கெடியான எண்பதிலே தின்றாராகில்
வாளப்பா இருப்பதுபோல் எந்நாலும்தான்
வாங்காமல் நின்று விடும் வளர்த்தி கூடா
நாளப்பா இதன்மேலே வளர்த்தி மிஞ்சில்
நரம்பெல்லாம் தளர்ந்துபோம் கடினம் பாரே

Koviloor Digital Library

வேளப்பா எரித்த சிவன் சொன்ன மார்க்கம்
வெவ்வேறாம் சித்தர் சொன்ன வித்தை பாரே.

சட்டைமுனி கற்பவிதி 99-100
கற்பநூல் திரட்டு - தாமரை வெளியீடு

பாலப் பருவத்தில் கற்பம் உண்டால் அந்த அளவில் பருவம் நின்றுவிடும். என்றும் பதினாறாக வாழ்வான். இளமைப் பருவத்தில் கற்பம் உண்பவன் என்றும் இளமையோடிருப்பான். முப்பதிலே உண்பவன் என்றும் முப்பதாக இருப்பான். ஐம்பதிலே உண்டால் வயது குறைந்து வாலிபம் திரும்பும். ஆனால் எண்பதிலே உண்டால் அதற்கு மேல் வயதாகாமல் அப்படியே இருக்கலாம். அதற்கு மேல் நரம்புகள் தளர்ந்து போவதால் கற்பம் உண்டாலும் பயனில்லை. இது சிவன் சொன்னதாகும் என்று கூறுகிறார்.

அகஸ்தியர் இந்த நூலில் பல கற்ப மருந்துகளைக் கூறுகிறார். எவ்வளவு கொடிய நோய்வாய்ப்பட்டவனாயினும் குணமடைவதற்கு வழி கூறுகிறார். இந்த நூல் மீண்டும் கிடைப்பது தமிழகத்திற்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும். சித்த மருத்துவம் வெறும் மருத்துவம் மட்டுமல்ல. மனிதனைச் சாகா நிலைக்கு இட்டுச் செல்லும் வழிகாட்டி. சாகாநிலை யாருக்கு வாய்க்கும்? விட்ட குறை தொட்ட குறை உள்ளவர்களுக்கே வாய்க்கும்.

சாகாக் கலை பற்றிக் கூறும் சித்தர் நூல்களின் பெருமையை யாரால் அளவிடமுடியும்? மதிப்பிட முடியாத இந்தத் தமிழ்ச் செல்வங்களின் பயனைத் தமிழன் உணரவேண்டும். அடையவேண்டும்.

எஸ். பி. ராமசந்திரன்
பதிப்பாசிரியர்.

Koviloor Digital Library

அகத்தியர் மஹாதிராவகம்
எண்ணூறு பொருளடக்க அட்டவணை

	பக்க எண்
கடவுள் வாழ்த்து	1
இன்னின்னார்க்கு ஞானம் வாதம்	
முதலியவை சித்திக்கு மென்பது	1
துலாராசியின் பலன்	1
கன்னி மீனம் இவ்விராசிகளின் பலன்	1
மேஷம், தனுசு இவ்விராசிகளின் பலன்	2
இராசியும் கோளும் ஒத்திருப்பதின் பலனும்	
அங்கிஷத்தின் அல்லது அமிசையின்பலனும்	2
நட்பங்கிஷ பலன்	3
பகையங்கிஷ பலன்	3
கற்பமுண்ண காலம்	3
தசதீகைஷ மார்க்கம்	4
பிராணாயாமம்	8
காந்தசத்து	12
அயச்சத்து	14
அப்பிரேகச் சத்து	14
சத்து சோதனை	15
கெந்தகச்சத்து	16
சத்துகளின் கிண்ணி	17
அப்பிரேக ஆதிரசம்	18
நவநீதகற்பம்	19
சத்துகளின் சிந்தூரம் அல்லது சிந்தூர கற்பம்	20
கற்பங் கொள்ள அ ானம்	21
கற்பமுண்ணும்போது பத்தியம்	24
மூலிகை யானந்தகற்பம்	24
குளிகை	27
கிறாவணம்	29
குடோரி	30
தேவி பூஜாதேவி	33
சிதம்பரச் சக்கரம்	37
ஓலையில் சக்கரங்கீறித் தணல்காட்டுதல்	47
மகா திராவகம்	49

Koviloor Digital Library

வீரக்கட்டு	51
இரசக்கட்டு	51
இரச சிந்தூரம்	51
இரசசிந்தூரம் (வேறு)	52
வாலைச்சந்திர சிந்தூரம்	52
துத்தச்சத்து	53
துத்தச்சத்து சிந்தூரம்	54
காந்தச்சத்து	54
காந்தச்சத்து சிந்தூரம்	55
காந்தச்சத்து சிந்தூரம் (வேறு)	56
பூனாகச்சத்து	56
பூனாகச்சத்து சிந்தூரம்	57
பூனாகச்சத்து சிந்தூரம் (வேறு)	57
இரும்புச்சத்து	57
இரும்புச்சத்து சிந்தூரம்	57
ஷெ வேறு	58
இராஜவர்த்தி சத்து	58
இராஜவர்த்தி சத்து சிந்தூரம்	58
நிமிளைசத்து	59
நிமிளைசத்து சிந்தூரகுரு	59
நிமிளைசத்து சிந்தூரம்	60
கர்பூரசிலை சத்து	60
கர்ப்பூரசிலை சத்து சிந்தூரம்	61
காரீயக்கட்டுச் சிந்தூரம்	61
காரீயக்கட்டுச் சிந்தூரம் (வேறு)	62
வங்ககுரு	62
படிகச் சத்து	63
படிகச் சத்து சிந்தூரம்	63
கல்நார் சத்து	63
இரசக்கட்டு	64
கல்னார்சத்து சிந்தூரம்	64
சுக்கான்கல்சத்து	64
சுக்கான்கல் சத்து குரு	65
கெந்தகச்சத்து	65
கெந்தகசத்து குரு	66
தாளகச்சத்து	66

Koviloor Digital Library

தாளகசத்து சிந்தூரம்	66
மனோசிலைசத்து	67
மனோசிலைசத்து சிந்தூரம்	68
தொட்டிச்சத்து	68
தொட்டிச்சத்து சிந்தூரம்	68
லிங்கச்சத்து	68
லிங்கச்சத்து சிந்தூரம்	69
கெவுரிச்சத்து	69
கெவுரிச்சத்துச் சிந்தூரம்	69
தீமுறுகல் சத்து	69
தீமுறுகல் சத்து சிந்தூரம்	70
பவளப்புத்துச் சத்து	70
பவளப்புத்துச் சத்து சிந்தூரம்	70
மிருதார்சிங்கிச் சத்து	70
மிருதார்சிங்கிச் சத்து சிந்தூரம்	71
வெள்ளைப் பாஷாண சத்து	71
வெள்ளைச் சத்து குரு	71
பிராணாயாமம்	72
சூதக்கட்டு	74
சூதபற்பம்	75
கெந்தகத்தைலம்	77
வெடியுப்பு செயநீர்	78
நாகக் கட்டு	79
நாகக்கட்டு சிந்தூரம்	79
காரீயக்கட்டு	80
காரீயக்கட்டு சிந்தூரம்	80
தாளகக் குரு	80
செம்பு சுத்தி	81
மகா திராவகம் (வேறு)	81
சவ்வீரத்திராவகம்	82
ரோமதிராவகம்	83
ரசத்திராவகம்	84
சீனக்கட்டு	86
சீனச் சுண்ணம்	86
வாலைரச சிந்தூரம்	88
பஞ்சமுக திராவகம்	89

Koviloor Digital Library

சாரக்கட்டு 90
சாரக்கட்டு சிந்தூரம் 90
சவுக்காரச் சுன்னம் 91
சவுக்காரச் சுன்னம் (வேறு) 92
துருசிக்குரு 94
ரசிதவித்தை 94
ஏமவித்தை 96
வெடியுப்புக்கட்டு 97
கல்லுப்புக்கட்டு 98
சீனச் சுன்னம் 99
வெண்காரச் சுண்ணம் 101
சவளை 101
கெந்தகத் தைலம் 102
கற்பூரவுப்பு 105
கெந்தகமெழுகு 105
லிங்கக்கட்டு 106
சூடனுப்பு 106
வெண்காரச் சுண்ணம் 107
மெழுகுகளுக்குக்குரு 109
துரிசிச்சுன்னம் 110
கெந்தக சுத்தி 110
வாலைரசம் 111
கல்லுப்பு சுண்ணம் 112
வாலைரசக்கட்டு 114
வாலைரச சிந்தூரம் 114
வாலைரச வுப்பு 115
கெந்தகவுப்பு 115
சவுக்காரவுப்பு 115
துருசிக் குரு 116
கெந்தி தாளகவுப்பு 119
துருசியால் ரசக்கட்டு 119
பூநீறுபாஷாணசிங்கிநீர் 120
சகலமும் சுன்னமாக திராவகம் 120
பூநீர் சங்குநீர் பாஷாணம் 121
சுன்னவரிசை உப்பு, பூரம். தாளகம், வங்கம் 122
சிங்கி 124

Koviloor Digital Library

ஏமக்குரு	125
சூடனுப்பு	127
கெந்தகவுப்பு	127
சவ்வீரவைப்பு	128
நாகரசம்	129
நாகரசத் தொழில்	130
லிங்கக்கட்டு	131
நாகரச சவ்வீரம்	131
ஏமரச சவ்வீரம்	132
ஏமரசத் தொழில்	132
தொந்தம்	133
ஏமரசலிங்கம் கட்டும் விபரம்	134
ஏமரச சவ்வீரம்	135
காரீயச் செயநீர்	136
திரிவங்கம்	139
தங்கச் சூதம்	140
வெடியுப்புக் கட்டு	140
வெடியுப்புச் செந்தூரம்	142
வெடியுப்புக்கட்டி யுருக்க	143
காரீய செயநீர்	145
செந்தூரத்திற்கு காரீயத்திராவகம்	145
சவ்வீர உப்பு	146
கல்லுப்புக் கட்டு	148
கெந்திபூர உப்பு	148
துருசிகுரு ரசக்கட்டு	149
வீரமைனம்	150
சிப்பிநீர் சாரக்கட்டு ஜெயநீர்	151
கல்லுப்புச்சுண்ணம் வாலைரசம்	153
பூநீறு திராவகம்	155
முட்டை ஜெயநீர்	155
தங்கச் சுன்னம்	156
தங்க ஜெயநீர்	156
சவ்வீரமெழுகு அண்ட நீர்க்கட்டு	158
வாலைரசம்	159
அன்னபேதித் திராவகம்	160
துரிசிக்குரு	161

Koviloor Digital Library

கட்டிணம் நீற்றினம்	162
ரசவுப்பு	163
தங்கரசம் வெடியுப்புச் செந்தூரம்	1163
கெந்தகத் திராவகம்	165
தூரிசிகுரு வீரமைனம்	165
உமுரியுப்புத்துறை	166
வீரமைனம்	167
இனச்சேர்வை	168
பஞ்சசுன்னக் குகை	168
மயூரச்சத்து	170
தாளகச்சத்து	171
தாளகச் செந்தூரம்	172
கெந்தகச் செம்பு	173
லிங்கக்கட்டு	174
கிளிஞ்சித் தொழில்	175
கல்லுப்புக்கட்டு	176
கல்லுப்புக்கட்டு (வேறு)	177
பஞ்சவர்ண உப்பு	178
உப்புச் சுன்னம்	179
சத்து மெதுவு	180
பாலரசம்	181
அப்ரேக செந்தூரம்	183
காந்த செந்தூரம்	184
கடுங்கற்பம்	186
சாரக்கட்டு	187
சவளை பரீட்சை	192
தீட்சை உதகம்	193
பொற்குரு	194
வெள்ளிக்குரு	195

Koviloor Digital Library

Koviloor Digital Library

கடவுள் துணை

அகத்திய முனிவர் அருளிச் செய்த மஹாதிராவகம்

எண்ணூறு

கடவுள் வாழ்த்து

ஆதியா யெங்கு மளவிலானாய் நிறைந்து
சோதியாய் நிற்குஞ் சுரூபனே - மேதினியிற்
சிவனார் திராவகமாஞ் சீராரு மெண்ணூறு
காவலனே நீயிதற்குக் காப்பு.

இன்னின்னார்க்கு ஞானம் வாதம் முதலியவை சித்திக்கு மென்பது

வானைத்தா வியபொதிகை மகத்தானிஷிகளது வாக்கின்நேர்மை
பானத்தா வியபூசை பரிவானசிவயோகப் பண்போர் கேளீர்
மீனத்தாவியராசி விளங்கிநின்றகன்னியுமே வில்லுமேஷம்
சேனத்தாவியதுலா சென்மராசிக்கருவை செப்புவேனே. 1

துலாராசியின் பலன்

செப்புவேன் துலாத்தோர்க்குத் தேவிமுதல்சித்தி
சிவனோடு மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
ஒப்புவேன் வாதசித்தி குளிகைசித்தி
உயர்ந்துநின்ற காயசித்தி உறுதியாகுந்
தப்புவேன் என்றாலுந் தவறிடாது
சாதகமாய் வாசியது தானேதூக்கும்
கொப்புவேன் உலகத்தில் தசதீஷைபெற்ற
கொடியசிவ யோகியெனக் கூறுவாரே. 2

கன்னி, மீனம் இவ்விராசிகளின் பலன்

கூறியதோர் கன்னியுமே மீனத்தோன்தான்
கொள்கியவன் வணிகனைப்போல் கூர்ந்து செய்வான்
ஆறியதோர் மனம்பார்த்துப் பின்புகொள்வான்
ஆசைகொண்டு வெகுமனதாய் ஆலோசிப்பான்
தேறியதோர் வாசியிலே மூழ்கிநிற்பான்
தேவியது பூசையிலே திறமோகொஞ்சம்

Koviloor Digital Library

மாறியதோர் மனம்பிடித்தால் வாதசித்தாம்
மயக்கமற்றால் காயசித்தி வருகுந்தானே. 3

மேஷம், தனுசு இவ்விராசிகளின் பலன்

தானென்ற மேஷமுமே தனுசோன்கேளு
சாதகமாய்க் கொண்டேறித் தாயைப்போற்றி
வானென்ற சமாதியிலே நின்றுதேறி
வாதசித்தும் வாசிசித்தும் வரவேசெய்வான்
கோனென்ற குருபதத்தை அடுத்துக்காப்பான்
குறையாமல் சாஸ்திரத்தை விளங்குவானே
வேனென்ற மாய்கையிலே மனதுகொள்வான்
வேதாந்த சாஸ்திரத்தை விளங்குவானே. 4

விளங்கிநின்ற மற்றேழு மிராசியோர்கள்
வெறும் பேச்சாய்த்திரிவார்கள் சித்தியில்லை
புளங்கிநின்ற பூசைக்கு வருவோமென்பார்
புகுந்தாலும் மாயசித்தே புணர்ச்சிசெய்வார்
தளங்கிநின்ற வாதத்தைச் சுட்டுமாய்வார்
சாஸ்திரமுங் குருதேடார் தான்தானென்பார்
அளங்கிநின்று மலைவார்கள் அறிந்துகொள்ளு
அவரேழுமிரா சியோர் அறைந் திட்டேனே. 5

ஜனன நட்சத்திர பலன்

அரைந்திட்டார் நட்சத்திர விபரங்கேளு
அப்பனே உத்திரமும் அஸ்தந்தானும்
நிறைந்திட்ட சித்திரையும் சுவாதியாலும்
நிலைக்குமடா காயசித்தி யோகசித்தி
பறந்திட்ட மூலமுமே உத்திராடம்
பாங்கான அஸ்வினியும் பரணிதானும்
உறந்திட்டு நின்றதொரு உத்திரட்டாதி
உத்தமனே ரேவதியும் மெத்தநன்றே. 6

இராசியுங்கோளும் ஒத்திருப்பதின் பலனும் அங்கிஷத்தின் அல்லது அமிசையின் பலனும்

நன்றான ராசியுமே நாளுமொத்தால்
நரஜென்மம் அல்லவடா சித்தன்சித்தன்
கன்றான கோளொன்றும் ராசியானால்
கண்டுகொள்ளும் அங்கிஷத்தின் பலனைக்கேளு
ஒன்றான கர்க்கடக அங்கிஷத்தில்
உதித்ததுமே யதிலுமே நிற்கவேண்டும்

Koviloor Digital Library

தண்டான துலாவினது அங்கிஷத்தில்
சகச்சித்தாம் சுக்கிரன் தானிருக்கப்பாரே. 7

இதுவுமது

பாரப்பா தனுசான அங்கிஷத்தில்
பாங்கு பிரகஸ்பதியும் இருக்கநன்று
நேரப்பா விருட்சிகமாம் அங்கிஷத்தில்
நேரான செவ்வாய் தானிருக்கநன்று
வேறப்பா சிங்கமென்ற அங்கிஷத்தில்
வேதாந்த ரவிநிற்க மெத்தநன்று
காரப்பா கும்பமென்ற அங்கிஷத்தில்
காரிநின்றால் காயசித்தி கைக்குள்ளாச்சே. 8

(காரி - சனி பிரகஸ்பதி - குரு)

நட்பங்கிஷ பலன்

ஆச்சப்பா கன்னியென்ற அங்கிஷத்தில்
ஆச்சரியம் புதன்நின்றால் ஞானியாவான்
வாச்சப்பா இப்படிஅங் கிஷத்தில்நின்றால்
மகாசித்தன் மகாசித்தன் வர்தஞானி
ஓச்சப்பா இதுவன்றி உறவுவீடு
உயர்ந்துநின்ற அங்கிஷத்தின் கிரகங்கேளு
மூச்சப்பா அவ்விடத்தில் வாசிசித்தி
மூதண்ட காயசித்தி பண்ணுந்தானே. 9

(மூதண்டம் - நாதம் விந்து)

பகையங்கிஷ பலன்

தானென்ற ராசியோடு உறவுவிட்டு
சத்துருவாம் அங்கிஷத்தில் கிரகம்நின்றால்
வானென்ற உலகத்திலாசை கொண்டு
மாளமட்டும் புலம்பியல்லோ மாள்வானையோ
கோனென்ற ராசியதில் கோளைப்பாரு
குருவான அங்கிஷத்தில் நிலைதான்பாரு
பானென்ற கற்பமுண்ணச் சொல்வேன்மைந்தா
பாருலகிற் பரத்தோற்கும் அறைகிறேனே. 10

கற்பமுண்ண காலம்

அறைகிறேன் கற்பமுண்ணுங் காலங்கேளு
அதற்காக லக்கினங்க ளறியச் சொல்வேன்
நிறைகிறேன் லக்கினத்தில் சுக்கிரன்தான்நன்று
நேரான அஞ்சிலே வியாழன்நன்று

Koviloor Digital Library

உறைகிறேன் ஒன்பதிலே செவ்வாய்நன்று
உத்தமனே வாக்கிலே புதனும்நன்று
பறைகிறேன் பதினொன்றில் பானுநன்று
பாங்கான சந்திரனும் ஏழில்நன்றே. 11

தசதீகைஷ மார்க்கம்

நன்றாக இப்படித்தானிருக்கும் நாளில்
நலமாக கற்பமள்ளி உண்ணுஉண்ணு
கன்றான தசதீகைஷ கேட்டானாகில்
கடுஞ்சுறுக்கில் காயசித்தியுமாய் கவனமோடும்
பன்றான பத்துவிதங் கிடையாவிட்டால்
பாருலகில் அஞ்சுவித தீட்சைகேளு
வென்றான அஞ்சுவித தீட்சையில்லான்
விரைந்து கற்பமுண்டாலும் விழலாய்ப்போமே. 12

போகாமல் தீட்சைபெற்றோர் பெரியோர்பாதம்
பொற்பூவால் பூசைசெய்து புகழ்ந்துகேளு
வேகாமல் நின்றதொரு தலையைக்கேளு
விளங்கியதோர் சாகாத காலைக்கேளு
வாகாம லிரண்டையுந்தான் யார்தான்சொல்வார்
மகத்தான தசதீகைஷ வந்தோர்சொல்வார்
சாகாம லிருக்கவென்றால் பஞ்ச தீட்சை
சாதிக்கக் கற்பமுண்டு தள்ளியேறே. 13

ஏறேறு கற்பங்கள் அனேகஞ்சொல்லும்
இதினாலே ஆச்சரியஞ் சாத்திரமும்பொய்யோ
வாறென்ற வாதமெல்லாம் மண்ணாய்ப்போச்சோ
வாவென்ற தசதீட்சை வணங்கிக்கேளு
ஆறென்ற தீட்சையெல்லாம் பாவத்தாலே
ஆச்சரியஞ் சாஸ்திரங்கள் பொய்யேயாச்சோ
மாறென்ற வயிரவரோ நிருத்தஞ்செய்வார்
வாசியிட்ட மருந்தெல்லாஞ் சித்தியாமே. 14

சித்திக்க வேண்டுமென்றால் முறையைக்கேளு
சிதம்பரமும் தேவியது பூசைபண்ணு
முத்திக்கும் இதுபாதை மோசமில்லை
முப்புரத்தைத் தீயிட்டோர் எனக்குச்சொன்னார்
பத்துக்குப் பிராணாயம் பண்ணும்போது
பாங்காகப் பூசைசெய்து கற்பமுண்ணு

Koviloor Digital Library

எத்திக்குந் தெரியாமல் ஈசனாவாய்
ஏதுபோவென்று விட்டால் இறப்பாய்நீயே. 15

இறவாமற் சொல்லுகிறேன் பிராணாயாமம்
எல்லோருஞ் சொன்னதற்கோ கருவேயில்லை
மறவாமல் நீகேளு புலத்தியனேயையா
மகத்தான யோகமடா வாசியோகம்
திறவாதே யாருக்கும் வெளியாய்ச்சொல்வேன்
செகத்திலே இதையறிந்தால் சித்தனாவான்
பிறவாமல் பிறப்பிக்கு பூரணத்தினுள்ளே
பேரான பிராணாயப் பெருமைகேளே. 16

கேளப்பா சித்தரது சாத்திரங்களெல்லாம்
கெடியான வாசியிலே பிராணாயமென்பார்
நீளப்பா சிலபெயர்கள் மூலத்தீயில்
நின்றூது நின்றூது பிராணாயமென்பார்
தாளப்பா சிலபெயர்கள் சக்கரத்திலென்பார்
தாக்கியல்லோ வைத்ததொரு பிராணாயமென்பார்
நாளப்பா இதுவெல்லாம் நாடிசுத்தி
நயமான காயசித்தி யாகும்வாறே. 17

வாகான பிராணாய வரிசைகேளு
வகையான பூரகமே முப்பத்திரண்டு
ஆறான கும்பகமே அறுபத்துனாலு
அடவான ரேசகமே பதினாறப்பா
கூறாத மாத்திரைதான் இந்தவகையெல்லாங்
குறிப்பாக அறிந்துகொள்ளு மாத்திரையைச் சொல்வேன்
தாறான தலைசுத்தி டொப்பதப்பா
சமுசயங்கள் ஒன்றுமில்லை மாத்திரையும்ஒன்றே. 18

ஒன்றான கடிகைக்கு மாத்திரையைக்கேளு
உத்தமனே முன்னூற்று அறுபதாச்சு
நன்றான பிராணாயம் மூன்றுஞ்செய்தால்
நலமான கடிகையே மூச்சுதப்பா
கன்றான பிராணாயஞ் சந்திரனில்வாங்கு
கலக்குமடா நரம்பெல்லா மிறுகுஞ்சித்தி
தன்றான பிராணாயஞ் சித்தியாகச்
சாற்றுகிறேன் தீட்சைவிதி சாற்றுவேனே. 19

Koviloor Digital Library

சாற்றுகிறேன் சிவனுடைய தீட்சைமார்க்கம்
சதாசிவன் தானெந்தனுக்கும் உபதேசித்தார்
போற்றுகிறேன் ருத்திரனில் இரண்டு தீட்சை
பொலிவாக மயேசுரனில் இரண்டு தீட்சை
ஆற்றுகிறேன் சதாசிவத்தில் ஐந்து தீட்சை
ஆதியென்ற பராசத்தி தீட்சையப்பா
மாற்றுகிறேன் மவுனமென்ற தீட்சையொன்று
மகத்தான பூரணத்தில் நிற்குந்தானே. 20

தானென்ற பதினோறு தீட்சையப்பா
சத்தியது பூசையிலே பதினொன்று சொல்வேன்
கானென்ற வாலையொன்று திரிபுரைதானொன்று
கலந்துநின்ற புவனையொன்று சாமளை தானென்று
வானென்ற இராசமாதங்கி ஒன்று
மைந்தனே உமாசத்தி மார்க்கமொன்று
ஊனென்ற அம்பிகா சத்தியொன்று
உத்தமனே கெவுரியென்ற சத்தியொன்று. 21

ஒன்றான ஈஸ்பரி அனாதிசத்தி
உயர்ந்துனின்ற உன்மனையாஞ் சத்தியொன்று
நன்றான தசதீட்சை மேலேயப்பா
நாதாந்த ஞானசத்தி யானதீட்சை
பன்றான பதினொன்றுஞ் சத்திதீட்சை
பாக்கியங்கள் செய்தவர்க்கு எய்தும் எய்தும்
குன்றாத சிவசத்தி இரண்டு தீட்சை
குறியாக இருபத்தி இரண்டு மாச்சே. 22

ஆச்சிந்த தீட்சைவிதி கேட்டோரப்பா
ஆச்சரியம் சகலநூல் அவர்க்கேயெய்தும்
ஒச்சிந்த வாதமவன் கொன்னபடி கேழ்க்கும்
உத்தமனே வயிரவன்தான் ஏவல் கேழ்க்கும்
பாச்சிந்த பூசையிலே வஸ்துவைத்து
பார்க்கையிலே சலமாகும் பாரும் பாரும்
மாச்சிந்த தாதுவெல்லாஞ் சித்திகொண்டு
மைந்தனே தாதுவிர்த்தி யாகும்பாரே. 23

பாரப்பா அவன் செய்யும் பிராணாயாமம்
பரிவாக சிவதீட்சை பதினொன்றுந்தான்

Koviloor Digital Library

நேரப்பா லெட்சியத்தை நிறுத்தி வாங்கி
நேராகக் காலையிலே செய்வார் செய்வார்
காரப்பா மாலையிலே சத்தி தீட்சை
கலந்துபத்து லெட்சையிலே கலகஞ் செய்வார்
ஊரப்பா இருந்தாலென்? காட்டில் வாழ்ந்தென்?
உத்தமனாஞ் சிவயோகி உறைத்துத்தேடே. 24

தேடியவர் பதம் போற்றிப் பிராணாயாமம்
செப்புமென்றே அடிதொழுது செப்பக்கேட்டு
நாடியவர் தசதீட்சை பிராணாயாமம்
நாட்டில்வைத்தால் அவனுக்குப் பிராணாயஞ்சித்தி
நீடியிதை விட்டுவிட்டே உலகத்தோர்கள்
நேரான பிராணாயம் பண்ணிச்செத்தார்
கூடியிவை அறிந்தவனே ராஜயோகி
குருவறியான் பிராணாயக் குருடுதானே. 25.

குருடாகப் போகாமல் தீட்சைக்குள்ளே
கூட்டியது பிராணாயம் செய்யும்போது
அருளான அருள்வந்து தன்னைத் தூக்கும்
அப்பொழுதே காயசித்தி யாகுந்தேகம்
மருளான மருளனைப் போல் தீட்சை விட்டால்
மண்ணாச்சு பிராணாயம் ஒன்றுமில்லை
திருடான திருப்பாட்டால் சித்தரெல்லாம்
திருட்டு வித்தை பிராணாயஞ் செப்பினாரே. 26

செப்புகிறேன் பிராணாயம் சித்தியாக
சிவன்சொன்ன கற்பம்முன்னே தின்றால் சித்தி
ஒப்புகிறேன் கற்பத்தை விட்டு நீயும்
யுகம் வரைக்கும் பிராணாயம் பண்ணினாலும்
தப்புகிறேன் என்றல்லோ சீவன்தப்பிச்
சாதகமாய்க் கற்பமுண்டால் பலந்தான் கேளு
முப்புகிறேன் முன்னூற்று அறுபத்திரண்டு
மூதண்ட ருத்திரன்போல் இருப்பாய் பாரே. 27

பாரப்பா துலாமென்ற ராசியோர்க்குப்
பரிவாக சித்திக்குந் தீட்சையெல்லாம்
நேரப்பா கன்னியென்ற ராசியோர்க்கு
நேரான மனமுறைத்தால் சித்தியாகும்

Koviloor Digital Library

சீரப்பா மற்றுரைத்த ராசிக்கெல்லாம்
சித்தியாய் மனமுறைக்க மாட்டார் மாட்டார்
காரப்பா தசதீட்சை வந்தோர்பாதம்
கார்க்கவில்லை ஒன்றுமில்லை கண்டுதேறே. 28

பிராணயாமம்

தேறவே பிராணாயக் கருவைச் சொல்வேன்
திறமாக சதாசிவனும் உபதேசித்தார்
ஆறவே முந்தி முந்தி அப்பியாசிக்க
அடிதொடுத்துச் சொல்லுகிறேன் அப்பா கேளு
கூறவே மூலத்தில்வாசி கொண்டு
கோழிமுட்டை போலிருந்து முக்கோணத்தில்
மாறவே யிடைபின்னாம் இரண்டுமோடும்
மற்றொன்று சுழிமுனைதான் மகிழ்ந்து கேளே. 29

கேளிந்த இடைகலையில் சிங்கென்று வாங்கி
கெடியான சிங்கொன்று கும்பித்து நில்லு
நாளிந்தப் படிநீதான் பழக்கம் பண்ணு
நலமான மூலத்தீ மேலேசாடி
தாளிந்த தாதுவெல்லாஞ் சித்தியாகுஞ்
சாதகமாய் ஆண்டொன்றில் தானேதானாம்
ஆணிந்த வாசிக்கே அவ்வளவே சித்தி
அப்பியாச மார்க்கத்துக் கடிதான்பண்ணே. 30

பண்ணயிலே பிராணாயப் பலனைக்கேளு
பாங்கான ரோமமெல்லாம் வெயர்வையோடும்
அண்ணயிலே சிவதீட்சை ரெண்டிலூன்றி
அதற்குள்ளே பிராணாயம் பண்ணும்போது
கண்ணயிலே சடத்திலுள்ள தோஷமெல்லாம்
க்குமடா நெய்போலே கண்டுபாரு
தண்ணயிலே மூன்றில் நின்று நித்தந்தானும்
சதாசிவம்போல் பிராணாயம் பண்ணிக்கேளே. 31

கேளப்பா சட்டையொன்று திரண்டு போகும்
கெடியான சிவதீக்ஷை ஆறில் நின்று
நீளப்பா சடத்தினுள்ளே தோய்ந்து நின்ற
நிலையற்ற நோயெல்லாம் நீறாய்ப் போகும்
ஆளப்பா சிவ தீட்சை அஞ்சினுள்ளே
அடுத்த நின்ற பிராணாயம் பண்ணப்பண்ண

Koyiloor Digital Library

நாளப்பா சட்டைதள்ளிப் போகும்போகும்
நலமான தேகமது சிவப்புமாகும். 32

சிவப்பாகும் கண்கள் ரண்டும் இறுகுந்தேகம்
சிவசிவா சக்கரங்கள் ஆறுங்காணும்
உவப்பாகும் பஞ்சகர்த்தாள் ஐவருந்தான்
உதித்துமவர் கேட்டதெல்லாம் உதவி செய்வார்
தவப்பாகும் நிறுவாணி ஏவல் கொள்ள
சகலவித வாதமெல்லாந் தானே சித்தி
உவப்பாகுங் குளிகையிட்டால் ஓடும் வேகம்
ஓங்கி நின்ற ஐந்துவித தீட்சையாட்டே. 33

ஆட்டான சிவதீட்சை ஆறில் நின்று
அப்பனே பிராணாயம் பண்ணுவோர்க்கு
மூட்டான தாதுவிர்த்தி யெல்லாங்காணும்
மூதண்ட சடத்திலொரு சட்டைபோகுங்
கூட்டான வினைகளெல்லாங் கழன்று போகுங்
கூர்ந்துபார் சுழிமுனையோ வெளியாய்க்காணும்
பூட்டான சடமெல்லாந் தெறித்துப் போகும்
பொற்பதுமை போலவுந்தான் இருந்துபாரே. 34

பாரப்பா சிவதீட்சை ஏழினுள்ளே
பரிவாக பிராணாயஞ் செய்யும்போது
நேரப்பா சட்டையொன்று வெளுப்பாய்த் தள்ளும்
நிர்மலமாய்த் தீயினது காந்திகாணுஞ்
சேரப்பா உன்மனையும் வாவாவென்பாள்
சடமல்ல வெளிபோலத் திறந்து காணும்
ஆரப்பா இதுவரைக்குந் தீட்சை சொல்வார்
அவரவர்க்குச் செய்தவத்தால் எய்துங்காணே. 35

(உன்மனை - உன் மனைத்தாய் - சத்தி)

எய்துமென்ற சிவதீட்சை எட்டினுள்ளே
இதமாகப் பிராணாயஞ் செய்வோர்க்கையா
நையுமென்ற சடந்தானும் நினைத்தாப்போல
நலமான கூடுவிட்டுக் கூடுபாயுங்
கையுமென்று மீந்தவர்க்குப் பானமீயுங்
கண்திறக்க வொட்டாமல் கிரிமிநீறுங்
கொய்யுமென்ற பூவேது வாமமேது
கூடினார் நாதாந்தக் குறியில்தானே. 36

Koviloor Digital Library

தானென்ற சிவதீட்சை ஒன்பதிலே நின்று
சாதித்துப் பிராணாயம் செய்வோர்க்கையா
கோனென்ற ரவிபோலே தேகமாகுங்
கூப்பிட்டால் தேவரெல்லாம் வணங்கி நிற்பார்
ஊனென்ற சடம்போச்சு கயிலாசதேகம்
உந்தனக்கு வாச்சுதடா மைந்தாபாரு
வானென்ற வெளியெல்லாம் நீயாய்க்காணும்
வார்த்தையினால் அஷ்டமா சித்தியாமே. 37

சித்தியாம் சிவதீட்சை பத்தில் நின்று
செய்தவர்க்குப் பிராணாய மென்ன சொல்வேன்
பத்தியாம் தீபம்போல் சடமோகாணும்
பாங்கான சத்தியுமே நடுவேயோடும்
அத்தியாம் அகண்டசிவனாக நிற்பார்
அப்பனே இதுவல்ல சுரூபசித்தி
முத்தியாம் இதுவரைக்குஞ் சித்தராட்டு
முழுமோசங் குளிகை யொன்றை ஏய்ச்சிட்டாரே. 38

ஏய்ச்சிட்ட சிவ தீட்சை தன்னையப்பா
இதமாக மறைத்ததனை வாசியென்றார்
மாய்ச்சிட்ட குளிகையென்றே காயசித்தியென்றே
மாய்கையைப்போ லொளித்தல்லோ மாயஞ் செய்தார்
ஓய்ச்சிட்ட நூல்களிலே தீட்சைவிதியில்லை
உத்தமனே ரசவித்தை யாடினார்கள்
மாய்ச்சிட்ட சிவதீட்சை பெற்ற பின்பு
மவுனமென்ற தீட்சையைத்தான் மருவிக்கேளே. 39

கேளப்பா அண்டத்தில் மவுனதீட்சை
கெடியான கேசரியிற் காணுங்காணும்
நாளப்பா மந்திரங்க ளொன்றுமில்லை
நாளில்லை பகலில்லை நானென்பதில்லை
சூளப்பா அகண்டவெளி கோடிபானு
சுடர்கோடி காந்தியைப்போல் தோற்றுந்தோற்றும்
வாளப்பா இதுவல்ல மவுன தீட்சை
மகத்தான குருசொல்லி மாட்டுவாரே. 40

மாட்டினால் கண்டத்தில் லயிச்சுங்போகும்
மைந்தனே தான்அதுவாம் அதுதான்ஆகும்

Koviloor Digital Library

மூட்டினால் கற்பவரை சமாதியாகும்
மூதண்ட ரிஷிகளுக்கு அடுத்தவாறு
கூட்டினால் மனம்வேறு பிரிந்திடாது
கூடப்போய் பூரணத்திற் கூர்ந்துநிற்கும்
ஊட்டினால் மவுனமென்ற தீட்சையாச்சு
உத்தமனே பதினொன்று முடிந்தவாறே. 41

வாறான வுலகத்தில் விட்டகுறையோர்க்கு
வந்துதென்றால் தசதீட்சை மைந்தாகேளு
வீறான சிதம்பரமுந் தேவிபூசை
மெச்சியல்லோ அற்சித்து சித்திசெய்து
கூறான வாதசித்தி பார்த்துத்தேர்ந்து
கூறினால் மோசமென்று கூறார்கூறார்
மாறான பாவங்கள் ஒன்றுஞ்செய்யார்
வந்த பெயருலகத்தில் வாய்பேசாரே. 42

பேசாமலிருந்து கொண்டு சமாதிபார்த்து
பிரிவான லட்சியத்தைத் தொட்டுதொட்டே
யேசாத பிராணாயம் ஏற்றியேற்றி
இமுத்திமுத்து விடுவார்கள் மறவாமற்றான்
ஓசாதே கற்பமுண்டு பிராணாயத்தை
உறைத்திடுவார் பின்புதான் அந்தப்புத்தி
வாசாக தசதீட்சை வந்திருந்தால்
வருகாது வருகாது வினைகள்தானே. 43

வினையில்லை அவரை நிதந்தெரிசித்தாக்கால்
வேதாந்த சாரத்தில் மனமுந்தேறும்
வினையில்லை அவர்பதத்தைப் போற்றிநிற்க
வேண்டியவர் மனமுவந்து திரும்பமட்டும்
வினையில்லை உண்மையதை தசதீட்சைசெய்யும்
வேதாந்த சிரோமணியே என்றுகேட்டு
வினையில்லை தன்னுடலும் பொருளுமாகி
விளங்கியதோர் உதகத்தால் தாரையூற்றே. 44

ஊற்றியவர் பதம்போற்றி தீட்சைபெற்று
உற்றுநின்று லட்சியங்கள் நன்றாய்க்காட்டி
மாற்றியந்த லட்சியத்தில் பிராணாயம் வைத்து
வாங்கியதோர் தீட்சைவிதி வைத்தேயேறி

Koviloor Digital Library

ஏற்றியந்த பிராணாய தீட்சையொன்றே
இருத்திப்பார் ஆண்டொன்றில் அதுதான்சித்தி
போற்றியிது பத்தாண்டு தீட்சைபத்துப்
புகழாகச் செய்தவனே சுரூபியாமே. 45

ஆமப்பா தசவருஷம் மார்க்கஞ்செய்வார்
ஆச்சரியம் ரிஷிசெய்வார் சித்தர்செய்வார்
ஓமப்பா உலகத்தோர் செய்யமாட்டார்
உத்தமனே உலகத்தார் கேட்டுநின்றால்
சோமப்பால் உண்ணுவிக்கும் முத்திமுத்தி
சுகமாக அஷ்டமா சித்தியாகுங்
காமப்பால் விடுகாமல் கட்டிநின்று
காயசித்தி யாவார்க்குக் கற்பங்கேளே. 46

கேளுயான் சொல்லுகிறேன் கற்பத்திற்குக்
கெடியான சித்தர்சொன்ன கற்பமெல்லாந்
தாளுயா னென்றுசொன்னேன் சமுசயமுமானால்
சாத்திப்பார் லோகத்தில் தங்கமாகும்
வாளுயான் பிராணாயம் பண்ணும்போது
மருவியுண்ண ஆண்டொன்றில் தானேசித்தி
நாளுநான் உண்டபடி உனக்குச்சொன்னேன்
நற்சீட ரானாக்கால் அவர்க்குச் சொல்லே. 47

சொல்லையிலே தசதீட்சை முன்னேசொல்லி
சொற்பெரிய பிராணாயக் கருவுங்கூட்டி
தில்லையிலே நடராஜ சக்கரமுங்காட்டி
தேவியது சக்கரத்தின் பூசைகாட்டி
எல்லையிலே சைதன்னிய இருப்புங்காட்டி
இதமாக ஏறுகிற வழியுங்காட்டி
தொல்லையிலே விடுகாமல் சொல்லுநீதான்
சோதித்துச் சீஷனது மனதைநீயே. 48

காந்த சத்து

நீகேளு புலத்தியனே கற்பமார்க்கம்
நிர்மலமாம் சதாசிவன்தான் எனக்குச்சொன்னார்
வாகேளு காந்தமது கொண்டுவந்து
மைந்தனே கொள்ளுடனே வேகவைத்து
பாகேளு ஆட்டிரத்தமதிலே வார்த்துப்
பரிவாக ஆதாரமதனால் கட்டித்

Koviloor Digital Library

தாகேளு நெற்குழியிற் கூடவைத்துச்
சாதகமா யஞ்சுதிங்கள் தாண்டிவாங்கே. 49

வாங்கியதோர் காந்தத்தை நொறுக்கிக்கொண்டு
மைந்தனே வேப்பங்காய்ச் சாற்றிலாட்டி
தாங்கியதோ ரெள்ளுமொச்சை குன்றிகாரம்
சாதகமாய் உளுந்தோடு புறாவின்எச்சம்
ஓங்கியதோர் குதிரையது குளம்பின்சீவல்
உத்தமனே சேறுண்ணும் பூனாகந்தான்
பாங்கியதோர் முட்கொழிஞ்சி வேரினோடு
பரிவான காட்டினாமணக்கு வித்தே. 50

வித்தோடு வகைவகைக்குப் பலந்தானொன்று
விளங்கியதோர் இரண்டுபத்து பலந்தான்காந்தம்
கொத்தோடே இவையெல்லாம் அரைத்துக்கொண்டு
கூசாமல் சரவுலையில் கொடுத்துவாநீ
பத்தோடு மணிமணியாய் இறங்கிப்போகும்
பாங்கான காந்தத்தின் சத்துசத்து
சத்தோடு காந்தமெல்லாம் எடுத்துக்கொண்டு
சாங்கமாய் உருக்கவுந்தான் துறையைக்கேளே. 51

கேளப்பா வெண்காரம் பலந்தான்நாலு
கெடியான துருசியது பலமும்ஒன்று
நாளப்பா சவுக்காரம் பலமுமிருகால்
நலமான சாரமது பலங்கால்சேர்த்து
நீளப்பா வெடியுப்புச் செயநீரோடு
நிறைந்து நின்ற சாரநீர்கூடவிட்டு
சூளப்பா அரைத்தஞ்சு பங்காய்ச்செய்து
சுகமாக ஒருபங்கைப் பிசறிவையே. 52

வைத்ததனைக் குகைக்குள்ளே தாக்குலையிலூது
மைந்தனே காந்தசத்து மணியாய்நிற்கும்
நைத்ததனை எடுத்துமே யுடைத்துக்கொண்டு
நலமான நாலுபங்கும் இப்படியேயூதி
பைத்தல்லோ காந்தமது வெள்ளிபோல
பளபளத்துத் தோஷமெல்லாம் பறந்துபோகும்
ஐத்தல்லோ காந்தமது உருக்கினமுமாகி
அப்பனே சோதனையும் ஆச்சுபாரே. 53

Koviloor Digital Library

அயச்சத்து

பாரப்பா அயமெடுத்தும் உருக்கச்சொல்வேன்
பரிவான அரப்பொடியும் பலமும்பத்து
நேரப்பா வெண்காரம் பலமும் அஞ்சு
நிலைத்துநின்ற சவுக்காரம் பலமுமொன்று
தாரப்பா பாறையுப்பின் ஜெயமாங்கட்டு
சாதகமாய்ப் பலமரைதான் கூடச்சேர்த்து
பேரப்பா சாரமது பலமுங்கால்தான்
பேரான துருசுபலம் அரையும்போடே. 54

போட்டல்லோ கல்வத்தில் வெடியுப்பின்நீரும்
புகழான சாரநீர் விட்டேஆட்டி
நீட்டல்லோ அஞ்சுபங்காய்ச் செய்துகொண்டு
நேராக அஞ்சுதிரம் உருக்கித்தீரு
பூட்டல்லோ அயத்தினது தோஷம்நீங்கிப்
புகழான வெள்ளியைப்போல் கண்விட்டாடும்
மூட்டல்லோ இதுமூட்டு அயமுருக்கமைந்தா
மூதண்டமாட்டு விக்கும் அயத்தினாட்டே. 55

அப்பிரேகச் சத்து

ஆட்டான அப்பிரேகச் சத்தைக்கேளு
அப்பனே முதல்தரந்தான் இரத்தவர்ணம்
மூட்டான ஓமவர்ணம் ரண்டாம்பட்சம்
மூதண்ட கருப்பானால் மூன்றாம்பட்சம்
நாட்டான வெளுப்பானால் வெள்ளிக்காகும்
நான்குவகைஅப் பிரேக சாதிதானும்
நீட்டான சிவப்புவர்ண சாதியானால்
நிமிஷத்தில் காயசித்தி யாகும்பாரே. 56

பாரப்பா அப்பிரேகம் இடித்துநன்றாய்ப்
பாங்காக அரைத்ததனை நவநீதஞ்செய்து
நேரப்பா இரண்டுபத்துப் பலமெடுத்து
நேகஅரை முள்ளங்கிக் கிழங்குச்சாற்றில்
தூரப்பா மூன்று நாள் அரைத்தபின்பு
துடியீர வெங்காயச் சாறுவார்த்து
சேரப்பா இரண்டுநா ளரைத்தபின்பு
திறமாக வெண்காரஞ் செப்பக்கேளே. 57

Koviloor Digital Library

செப்புகிறேன் மூவைந்து பலந்தான்காரஞ்
சேரவிட்டு அரைக்கையிலே செலுத்தக்கேளு
செப்புகிறேன் குதிரையது குளம்பின்சீவல்
திறமாக விரண்டுபலங் கூடப்போட்டு
செப்புகிறேன் முயலெலும்பு பலந்தான்ரண்டு
சேலெருமைக் கொம்பதுவும் பலந்தான்ரண்டு
செப்புகிறேன் இவையெல்லாம் ஒன்றாயாட்டித்
திறமாக வில்லையைப்போல் செய்திடாயே. 58

செய்தொரு வில்லையெல்லாம் வங்கநாளஞ்
செலுத்தியே ஊதிடவே சத்துமாகும்
நைத்தொரு கரடெல்லாம் அரைத்துமுன்போல்
நலமாக ஊதிடவே சத்துவீழும்
கைத்தொரு அஞ்சுதிறம் அரைத்தேயூது
காட்டிலுள்ள சத்தெல்லாங் கழன்றுவீழும்
பைத்தொரு சத்தெடுத்து உருக்கிநன்றாய்ப்
பரிவான சோதனையைக் கேளுகேளே. 59

சத்துசோதனை

கேளப்பா வெண்காரம் பலந்தானொன்று
கெடியாக அரைப்பலந்தான் வளையல்கூட்டி
நாளப்பா வீரமதிற் பலமுங்கால்தான்
நலமாகப் பொடிசெய்து வைத்துக்கொண்டு
நீளப்பா சத்திற்கு நாலிற்கொன்று
நேராக உருகையிலே நீட்டுநீட்டு
தேளப்பா கொட்டியதோர் வேகம்போல
சேர்ந்துநின்ற கல்மிஷங்கள் சேரப்போமே. 60

(வளையல் - வளையலுப்பு)

போனபின்பு சத்தெடுத்தே உருக்கிவார்க்கப்
புகழாகச் சொல்லுகிறேன் புலத்தியனேகேள்
கானத்து சதிர்க்கள்ளிப் பாலோர்சேரை
கருப்பாட்டுப்பால் சேரை தேனோர்சேரை
யேனபின்பு எள்ளினது தயிலஞ்சேரை
இதமான கதலியது கிழங்கின்சாறும்
தானபின்பு இதுசேரை அமுரிசேரை
சாதனமாய் முலைப்பாலுஞ் சேரைவாறே.

Koviloor Digital Library

(சதுரக்கள்ளிப்பால், கருப்புநிற ஆட்டின்பால், தேன்., நல்லெண்ணெய், வாழைக்கிழங்கின் சாறு, அமுரி. முலைப்பால் வகைக்கு ஒரு சேரை)

வாரிதிலே இலுப்பைப்பூச் சாறுதானும்
வளமாகப் படியொன்று நெய்ரண்டுசேரை
பேரிதிலே அதிமதுரம் பலந்தானொன்று
பிறவான சர்க்கரையும் பலந்தானொன்று
சேரிதிலே ஜெயலவணம் பலந்தானொன்று
சிறப்பான சாரமரை காரமோடு
நேரிதிலே அரைத்தெல்லாம் கலக்கிக்கொண்டு
நேரான சத்துருக்கி இதிலேவாரே. 62

(இலுப்பைச்சாறு ஒரு படி, நெய் இரண்டு சேரை ஊற்றிக் கலக்கிக் கொண்டு அதிமதுரம் சர்க்கரை ஜெயலவணம் வகைக்கு ஒரு பலம் காரம் அரைப் பலம் அரைத்துக் கலக்கி வைத்துக் கொண்டு சத்தை உருக்கி வார்க்கவும்)

வார்த்திடுவாய்ப் பதினைந்து தரந்தான்நீயும்
மகத்தான சத்ததுவும் வெள்ளிபோலாம்
போர்த்திடுவாய் சோதித்த சத்தின்வேகம்
புகழாகச் சூதத்தைத் துரத்திக்கவ்வும்
மார்த்திடுவாய்ச் சோதனையைத் தீர்க்காவிட்டால்
மைந்தனே வைத்தியத்திற் காகுமாகும்
கோர்த்திடுவாய் உபரசங்கள் சத்தானதெல்லாங்
கொடாவிட்டால் சோதனைதான் வேதை போச்சே. 63

கெந்தகச் சத்து

போச்சென்று விடாதேநீ கெந்தகத்தின் சத்தைப்
புகழாகச் சொல்லுகிறேன் இனத்தைக் கூட்டி
ஆச்சென்று கெந்தகம் பலமஞ்சு பத்து
அப்பனே பூனாகமவ்வளவே சேரு
வாச்சென்று மயிலிறகு சுட்டசாம்பல்
மைந்தனே பதினைந்து பலந்தான் போடு
கோச்சென்ற இதற்கெல்லாம் பாதிகாரம்
கொட்டியதைக் குமிரவே யாட்டுவாட்டே. 64

ஆட்டையிலே சன்னமச்சம் பலந்தான் பத்து
அப்பனே எள்ளோடு உளுந்தும் குன்றி

Koviloor Digital Library

மூட்டையிலே மொச்சையொடு புறாவினெச்சம்
மூதண்ட வெண்ணெயொடு சர்க்கரையுந்தேனும்
நீட்டையிலே குதிரையது குளம்பின் சீவல்
நேரான முயலெலும்பு மயிஷக் கொம்பு
தீட்டையிலே வகையொன்று பலமுமொன்று
திறமான மாங்கொழுந்துச் சாற்றாலாட்டே. 65

(மயிஷக் கொம்பு - எருமைக் கொம்பு)

ஆட்டியதை வில்லைதட்டி உலரப் போட்டு
அப்பனே வங்கமென்ற நாளசத்து
ஓட்டியந்தச் சத்தெல்லாம் உருகி வீழும்
உத்தமனே சத்தையெல்லாம் வாங்கிக் கொண்டு
தாட்டியதின் கரட்டையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துச்
சாதகமாய் அரைத்து முன்போல் வில்லைதட்டி
கோட்டியதை நாளத்தில் ஊதுவூது
கொடியதொரு சத்தெல்லாம் வருகும்பாரே. 66

சத்துகளின் கிண்ணி

பாரப்பா இப்படியே மூன்றுதரம் ஊது
பருவமுடன் சத்தெல்லாம் வந்து போகும்
நேரப்பா இதையெடுத்து சோதனையைச் செய்து
நேராக மூன்று பத்து பலந்தான் தூக்கு
காரப்பா அப்பிரேகச்சத்து தானும்
கலங்கவிதில் ஈரைந்து பலமும்போடு
சேரப்பா சேர்த்திந்தக்காந்தம் அயம்ரெண்டும்
திறமான வகையொன்று பலந்தான் பத்தே. 67

பத்தான தங்கமதில் பலந்தான்பத்துப்
பரிவாக இதனுடனே கூடச்சேர்த்து
கொத்தான குகையினுள்ளே உருக்கி நன்றாய்க்
குறையாமற் கிண்ணியைப் போல் வாருவாரு
சித்தான கிண்ணியதை சீவிப் போட்டுத்
திறமான ஆனம் நெய்யைப் பூசிவைத்து
முத்தான நிறுவாணி சிவனு மாற்றும்
மூதண்ட வாயிபாதம் பூசை பண்ணே. 68

பண்ணியபின் கிண்ணியிலே கற்பஞ் செய்யப்
பாடுகிறேன் சூத்திரமாய்ப் புலத்தியனேஐயா

Koviloor Digital Library

கண்ணியபின் சித்தரெல்லாஞ் சாத்திரங்கள் சொன்னார்
கருவென்று சாத்திரத்தின் சூத்திரமுஞ் சொன்னார்
ஒண்ணியபின் காயசித்திக் காதிரசந்தன்னை
உரைக்காமல் மறைத்து மேகாயசித்தி சொன்னார்
கண்ணியபின் உலகத்தில் கற்பங்களுண்டு
கருவில்லாப் பிராணாயம் பண்ணினாரே. 69

பிராணாயம் பண்ணியப்பேர் இறந்தோர் கோடி
பாங்கில்லா கற்பமுண்டே யிறந்தார் கோடி
பிராணாய தீட்சை விதிவிதமுங் காணார்
பலபலவாஞ் சாஸ்திரத்தைப் பார்த்துங்கெட்டார்
பிராணாயக் கருவோடு கற்பந்தானும்
பரிவாக குருசொல்லச் சித்தியாமே. 70

அப்பிரேக ஆதிரசம்

ஆமப்பா புலத்தியனே கற்பத்திற்கே
ஆதிரசம் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
ஓமப்பா அப்பிரேக நவநீதந்தான்
உத்தமனே பலம்பத்து நிறுத்துக் கொண்டு
சேமப்பா முள்ளங்கிக் கிழங்கின் சாறு
சிறுகவிட்டு மூன்று நாளரைத்த பின்பு
வேமப்பா வெங்காயச் சாறுவார்த்து
விடுகாமல் தினமொன்று அரைத்திடாயே. 71

அரைத்த பின்பு வெள்ளுள்ளித் தயிலம் வாங்கி
அதில் வார்த்துத் தினமொன்று ஆட்டு ஆட்டு
விரைத்த பின்பு மிளகுமதில் பலமும் போடு
வெகு சுருக்காய்க் கடுகுமொரு பலமும்போடு
நிறைத்த பின்பு வீரமைந்து காசுபோடு
நேரான சவுக்காரங் காசு போடு
தரைத்த பின்பு இவையெல்லாம் அரைத்து நன்றாய்ச்
சாதகமாய்க் குப்பியிலே யேற்று ஏற்றே. 72

(வெள்ளுள்ளி - பூண்டு)

ஒற்றியே வாலுகையில் எரிக்கும் போது
இதமாக சலாகிட்டுப் பாருபாரு
மாற்றியே ரசமெல்லாங் கீழே நிற்கும்
மைந்தனே சலாகையிலே ரசமுங்காணும்

Koviloor Digital Library

போற்றியே முறுகாமல் பதத்தைப் பாரு
புகழான ஆதிரசம் புகழ்ந்து கேளு
தோற்றியே யிதன்வேதை பரிசவேதை
சொற்பெரிய காயசித்தி பட்சந்தானே. 73

நவநீத கற்பம்

தானென்ற சூதமது பலந்தானொன்று
சமனாக வூர்ச்சூதம் பலந்தானொன்று
வானென்ற தங்கமது பலந்தானொன்று
மைந்தனே முன்சொன்ன கிண்ணியிலே விட்டு
கோனென்ற வாலுகையில் ஏற்றி மூட்டி
கொட்டடா வூர்ச்சூதம் பலந்தானொன்று
வேனென்றால் ஊமத்தஞ் சாறு வார்க்க
வேதாந்த நவநீத மாகும் பாரே. 74

(ஆதிரசம் ஒரு பலம். சாதாரணமாகக் கடையில் கிடைக்கும் ரசம் ஒரு பலம்.)

பாரிந்த நவநீதங்குன்றி தானும்
பருவமுடன் பட்சமுண்டு பிராணாயம் பண்ண
நேரிந்த தசதீட்சைப் படியே செய்ய
நிலைத்திருந்த ஏழுசட்டை நீங்கிப்போகும்
காரிந்தப் பதினோறாந் தீட்சைக்குள்ளே
கவிந்துபார் தீபம் போலாகுந்தேகம்
சேரிந்த விதம்விட்டு திருட்டுச் சித்தர்
சிக்கெடுக்க குளிகை யென்றுசெப்பினாரே. 75

செப்பியதோர் நூல்பார்த்து உலகத்தோர்கள்
செய்ததையே சாரணையைச் சூதத்திற்கு
ஒப்பியதோர் கவனமிதில் குறுக்கேயல்லால்
ஒளியான தேகம் போலானதில்லை
தப்பியதோர் பொய்வார்த்தை நூலிற்சொன்னார்
சாதகந் தானெதுவென்று ஆய்ந்து பார்த்து
அப்பியல்லோ நூலினது மரபிற்சென்று
அவரவர்கள் குருபதத்தை வணங்கினாரே. 76

வணங்கினார் அவரவர்கள் நூல்முறையினூடே
வழியாக நாட்டைவிட்டு வந்தீரோவென்று
இணங்கினதோர் மனம் பார்த்துத் தசதீட்சை வைத்து
ஏறுகிற லக்ஷியத்தின் குறிப்புஞ் சொல்லி

Koviloor Digital Library

குணங்கினதோர் மனந்திருத்தி மாய்கைநீக்கிக்
குறிப்பான பதினோறாம் தீட்சைசொல்லி
தணங்கினதோர் பிராணாயக் கருவுஞ் சொல்லி
சாதகமாய்க் கற்பமுண்ணத்தான் சொன்னாரே. 77

சொன்னதொரு ஆதிரச கற்பமுண்டு
சுரூப சித்தியாச்சுதென்று சந்தோஷித்தார்
தன்னதொரு சித்திக்கும் மகிமை கேளு
சடம்பார்க்கக் கற்பூர தீபமாகும்
பன்னதொரு கத்திகொண்டு வீசினாக்கால்
பாங்கான வெளிபோல கத்தியோடும்
என்னதொரு பூரணமேயென்று நோக்க
இழுக்குமடா காந்தம்போலிது தான்காணே. 78

காணப்பா இதுவன்றோ சுரூபசித்தி
கைமுறையாய்ப் பாடாமல் தீட்சைமார்க்கம்
பூணப்பா குளிகையென்று கெடுத்தார் சித்தர்
பொய்யாச்சு உலகத்தே சுரூபசித்தி
வீணப்பா வென்றுவிட்டு செத்தோர்கோடி
வேதைகண்டு போகித்து இறந்தோர் கோடி
ஆணப்பா பெண்ணாமே பெண்ஆணாமே
அறிந்தகுரு பதம்போற்றி தீட்சை கேளே. 79

கேளப்பா முன்சொன்ன நவநீதத்தால்
கெடியான ஒன்பதிலும் பரிசவேதை
நாளப்பா உபரசத்தில் பரிசவேதை
நலமாக ஆயிரத்திற்கு ஒன்றேயோடும்
வாளப்பா வாமத்தில் நின்று தேறு
மைந்தனே பிராணாயங் கண்டே ஏறு
கோளப்பா சொல்லாமல் சொன்னேன் சொன்னேன்
கூறுகிறேன் செந்தூரங் கூறுவேனே. 80

சத்துகளின் சிந்தூரம் அல்லது சிந்தூர கற்பம்

கூறுகிறேன் முன்வார்த்த கிண்ணிதானும்
குறையாமல் நான்குபலம் நிறுத்துக் கொண்டு
கூறுகிறேன் ஆதிரசம் பலந்தான்ரெண்டு
குறிப்பான ஊர்ரசமும் பலந்தான்ரெண்டு
கூறுகிறேன் தங்கமது பலந்தான் ரெண்டு
குமுட்டியிலே ஒன்றாக உருக்கிக் கொண்டு

Koviloor Digital Library

கூறகிறேன் இதை நறுக்கிக் கல்வத்துள்ளே
கூட்டுகிற மருந்தினது குறிசொல்வேனே. 81
சொல்லுகிறேன் இவ்வெடையே கெந்தகமுங் கூட்டி
துடியான மனோசிலை தான் நாலுக்கொன்று
மல்லுவேனெனப் பொடித்துக் குப்பிக்கேற்றி
வாகான வாலுகையில் வைத்து நீயும்
வெல்லவேனென்றுநீ தீயை மூட்டி
வேதாந்த சிரோமணியாய் நிர்வாணிக்கு
நல்லுவேனெனச் செபித்தே ஈசான்யத்தில்
நலமாகப் பூசை செய்து பதத்தைப்பாரே. 82

பதம்பார்க்கச் சொல்லுகிறேன் புலத்தியனேயையா
பாங்காகச் சிலாகிட்டுக் கிண்டும்போது
இதம்பார்க்க சிலாகின்நுனி கரகரத்தும்
இயல்பாகச் சிலாகின் நுனி சிவந்து காணும்
மிதம்பார்க்கச் சிந்தூர மாச்சுதென்று
மிஞ்சாமல் தணலவித்துப் பூசைபோடு
சதம்பார்க்கச் சிந்தூரத் துறைகட் கெல்லாம்
சாதகமாம் பதமிதுகாண் சார்ந்து பாரே. 83

கற்பங்கொள்ள அநுபானம்

காணப்பா சிந்தூரமாயிரத்திற் கொன்று
காட்டிடுவாய் உபரசமும் நவலோகத்தில்
பூணப்பா மாத்தென்ன இருபத்தஞ்சு
புகழான ஈயம்போல் துவண்டுநிற்கும்
ஊணப்பா இதைஎடுத்து கற்பங்கொள்ள
உத்தமனே சொல்லுகிறேன் வரிசை தானும்
வீணப்பா கெடுக்காமல் கடுகாயிந்து
மேலான சீரகமும் சமனாய்க்கூட்டே. 84

(கடுக்காய் இந்துப்பு சீரகம்)

கூட்டியல்லோ் இவ்வெடைக்கு நாலில் ஒன்று
குறையாமல் கள்ளிக்காய் கூடப்போட்டு
நீட்டியல்லோ நாலிலொன்று குமரியொன்று
நேரான நாலிலொன்று நீலஞ்சோதி
ஆட்டியல்லோ இதையெல்லாஞ் சூரணமேசெய்து
அப்பனே சூரணத்தினாலிற் கொன்று
கூட்டியல்லோ சர்க்கரையிற் பிசைந்து கொண்டு
கூர்மையுடன் தின்பதற்குத் தேகங்கேளே. 85

Koviloor Digital Library

கேளப்பா வாதமுறுந் தேகமானால்
    கெடியாகக் காசெடை சூரணத்தைவாங்கி
தாளப்பா இரண்டுகுன்றி சிந்தூரமிட்டுச்
    சாதகமாய்த் தேனுடனே கொள்ளுகொள்ளு
நீளப்பா பித்தமுறுந் தேகமானால்
    நேரான குன்றியெடை சிந்தூரமிட்டு
சூளப்பா சூரணந்தான் முக்காற்காசு
    துடியான சீரகத்தின் கஷாயத்துண்ணே. 86

உண்ணப்பா சேத்துமத்தின் தேகமானால்
    உத்தமனே அரைக்காசு சூரணமுங்கூட்டிக்
குண்ணப்பா குன்றியிடை சிந்தூரமிட்டுக்
    குலாவியதோர் தூதுவளைக் கஷாயத்திலுண்ணு
விண்ணப்பா வாதபித்த தேகமானால்
    விளங்கியதோர் முசுமுசுக்கைச் சாற்றினுள்ளே
சண்ணப்பா சூரணமுங் காசிடையே தூக்கிச்
    சாதகமாய் ரெண்டுகுன்றி சிந்தூரம் வையே. 87

வையடா வாதமொடு சேத்தும மானால்
    வகையான இன்பூரல் நொச்சிச்சாறு
கையடா காசிடைதான் சூரணமுங்கூட்டி
    காணிதிலே ரெண்டுகுன்றி சிந்தூரமிட்டு
பையடா தேனோடு குழப்பியுண்ணப்
    பாங்கான ரோகமெல்லாம் நாசமாகும்
தையடா பித்தத்தில் சேத்துமமானால்
    சார்வாகச் சொல்லுகிறேன் அறிந்துகொள்ளே. 88

கொள்ளடா ஆட்டுப்பால் தேனுங்கூட்டி
    குறையாமல் காசிடைதான் சூரணத்தினுள்ளே
அள்ளடா சிந்தூர மொன்றரையே குன்றி
    அதினோடே குழப்பியுண்ண அறுமேநோய்தான்
தள்ளடா இதினாலே நோய்களெல்லாந்
    தவிடுபொடி யாகிவிடும் மண்டலத்தி னுள்ளே
மெள்ளடா ரோகமெல்லாம் தீர்ந்தபின்பு
    மேலான நவநீதச் சூதமுண்ணே. 89

சூதமுன்னே உண்ணாதே சிந்தூரமுண்டு
    சூழுகின்ற நோய்களெல்லாந் தீர்ந்தபின்பு

Koviloor Digital Library

சூதமுன்னே உண்ணாதே பிராணாயத்தைத்
துடியான வாசிகொண்டு ஊதித்தீரு
சூதமுன்னே உண்ணாதே நாடிசுத்திசெய்து
தொடுகுறியாம் வாசியினால் சுத்தியாகும்
சூதமுன்னே உண்ணாதே தசதீஷை கேட்டுச்
சுகமாக லெட்சியத்தில் சுழன்றுநில்லே. 90

நில்லடா அனாகதத்தில் ரவியின்காந்தி
நிர்மலம்போல் கண்கூசும் பார்க்கப்பார்க்க
அல்லடா சித்தியினால் கூடிப்பாரு
அருணனைப்போல் வாசியது கருவோகாணும்
மல்லடா ஆக்கினையில் நின்றுபாரு
மனோன்மணியிற் கோடிரவி மயக்கமாகும்
வில்லடா எய்தாப்போலேழு தலமேற
வேதாந்த குருசொல்லக் கேட்டேஏறே. 91

ஏறுகையில் தீட்சைவிதி அங்கங்கே வைத்து
இயல்பாகக் குருசொன்ன மொழியேஏறு
மாறயிலே பிராணாயம் அங்கங்கே வைத்து
வாகாக இழுக்கையிலே ஒளியேகாணும்
தேறயிலே ஒளியோடு சென்றுஏற
சிறப்பான பிராணாசத்தங் கேழ்க்கும்
கூறவே அவளெடுத்து அமுதமீவாள்
கூப்பிட்டால் பூரணமே பேசும்பாரே. 92

பேசவே பூரணந்தான் எளிதோ மைந்தா
பேரான தசதீஷை குருவைக்காரு
ஆறவே அவர்மனது உவந்துதானால்
ஆண்டிலே சித்தியெல்லாம் ஆடலாகும்
நேசவே இதைவிட்டு வர்மத்திற்சென்று
நினைவுகெட பானமுண்டு நிலைக்கமாட்டார்
கூசவே கூசாதே சற்குருவைத்தேடி
கொடுத்திட்டால் உடல்பொருளும் ஆவிநீயே. 93

ஆவியவர் கைக்கொண்டால் கண்டம்கொள்ளும்
அப்பனே ஆணுவந்தான் பிறவிபோச்சு
பாவியென்ற நாமமெல்லாம் நீறேயாச்சு
பராபரத்தின் நுண்ணறிவு பாய்ந்துபோச்சு

Koviloor Digital Library

காவியென்ற சீலையென்ன வேடமென்ன
கற்றுணர்ந்தோர் சமுசாரத் துள்ளேநிற்பார்
கோபியென்ற கோபம்வந்து சபித்தாரானால்
கோடியிடி விழுந்தது போலாகும்பாரே. 94

கற்பமுண்ணும்போது பத்தியம்

பாரப்பா சிந்தூரங் கற்பமுண்ணில்
பாடுகிறேன் சூஸ்திரத்தில் பத்தியத்தை
நேரப்பா கட்டியதோர் உப்புகூட்டு
நேரான புளியாரை நெல்லிக்காயாஞ்
சேரப்பா கொருக்காயின் புளியும்மாகுந்
திறமான சிறுபயரும் தேனுமாகும்
ஊரப்பா சிறுகீரை பொன்னாங்காணி
உத்தமனே சர்க்கரையு மிளகுமாமே. 95

ஆமடா தூதுவளை சமூலமாகும்
அப்பனே வெல்லமொடு பால்நெய்யாகும்
ஓமடா வல்லாரை நல்லாரையாகும்
ஊர்க்குருவி காடையொடு முயலுமாகுங்
காமடா ஆடாகும் நிகருங்கோழியாகுங்
காட்டிலுள்ள மயிலாகுங் கண்டுகொண்டு
நாமடா திண்டபடி சூத்திரத்திற் சொன்னேன்
நாதாந்த சத்திசிவன்தான் சொன்னவாறே. 96

வாறான சிந்தூரக் கற்பமுண்ணில்
மைந்தனே இதுவெல்லாம் ஆகும்ஆகும்
வீறான் நவநீதக் கற்பச்சூதம்
வெருவி உண்ணிற் சிறுபயறு தேனுமாகும்
கூறான பாலாகும் நெய்யுமாகுங்
கொடியதொரு மிளகோடு சர்க்கரையுமாகும்
தேறான பசுச்சுத்தி கூட்டலாகுஞ்
சிவயோகக் கோரக்கர் மூலியாமே. 97

மூலிகை யானந்தகற்பம்

ஆமிந்த மூலிகையைக் கற்பங்கூட்ட
அறைகிறேன் புலத்தியனே லெட்சியங்கள்சித்தி
ஓமிந்தப் பனிரண்டாமாண்டிற் கஞ்சா
உத்தமனே வேர்மேலாய்ப் பிடுங்கித்தூக்கி

Koviloor Digital Library

தாமிந்த நிழலுலர்த்தி உலர்ந்தபின்பு
சாதகமாய்ச் சடையெல்லாம் பாலிற்போட்டு
காமிந்த மறுநாள்தான் பாலூத்திப்போட்டு
கைமுறையாய் மறவாமல் நிழலிற்போடே. 98

.போட்டெடுத்து உலர்ந்தபின்பு பாகங்கேளு
புகழாகச் சட்டியிலே நெய்யைவார்த்து
மூட்டெடுத்த கஞ்சாவை அதிலேபோட்டு
மூதண்ட அடுப்பேற்றி எறிக்கும்போது
காட்டெடுத்த பொன்னிறமாய்ப் பதமும்பார்த்துக்
கடுகெனவே வாரியெல்லாம் வைத்துக்கொண்டு
நீட்டெடுத்த பலம்நூறு இதனில்தூக்கி
நேராகச் சேர்க்கிறதோர் வரிசைகேளு. 99

கேளப்பா பூமிசர்க்கரையின் கிழங்கு
கெடியாகப் பலம்பத்து நிறுத்துக்கொள்ளு
நாளப்பா நிலப்பனையோ பலமோபத்து
நலமான சீரகமும் பலமும்பத்து
வாளப்பா மிளகதுவும் பலமோபத்து
வாழ்நீலஞ் சோதியது பலமோபத்து
வேளப்பா ஜாதிக்காய் பலமுமைந்து
மேலான ஏலமது பலமும்அஞ்சே. 100

அஞ்சல்லோ பலமெடுப்பாய் கிராம்புதானும்
அப்பனே பலமைந்து பத்திரியுந்தூக்கு
கஞ்சல்லோ அஞ்சுபலஞ் சொல்லக்கேளு
கடியதொரு தாளிகையின் பத்திரியைப்போடு
தஞ்சல்லோ அதிமதுரம் பலமுமூன்று
சாதகமாய் கோஷ்டமது பலமும்மூன்று
பிஞ்சல்லோ இவையெல்லாஞ் சூரணமேசெய்து
பிலமான சீனியென்ற சர்க்கரையைக்கேளே. 101

சர்க்கரையோ அஞ்சுபத்துபலந்தான் தூக்கு
சார்வாக சூரணத்திற் கலந்துகொண்டு
சர்க்கரையோ நெய்யுமொரு படியோவார்த்து
சாதகமாய்த் தேனுமொரு படியோவார்த்து
ஒக்கரையோ வெனக்கலந்து வைத்துக் கொண்டு
உத்தமனே கஞ்சாவை அரைத்துநன்றாய்

Koviloor Digital Library

மூக்கரையோ வெனக்கலந்து பிசைந்தேஆட்டி
மூதண்ட ரவியினுள்ளே வைத்திடாயே. 102

வைத்திடவே ஏழுதர முறவுசேரு
வாகாக இதைஎடுத்துப் பீங்கானில்வைத்து
மொய்த்திடவே உடம்பறிந்து மாட்டாய்க்கொள்ளு
மூதண்டங் கிழிந்தாடும் போதைமீறி
பைத்திடவே யப்போது பிராணாயம்பண்ணிப்
பாரடா தசதீட்சைப் பரப்பையெல்லாம்
கைத்திடவே விடுகாது மேலேஏற்றுங்
கலகலென்ன நடனமங்கே காணும்பாரே. 103

பாரடா லகிரியது உள்ளே தூக்கிப்
பரிவான லட்சியத்தை நிறுத்திக்கொண்டு
ஆரடா என்னைவிட பூரணமுமில்லை
ஆச்சரிய மூலமுதல் மேல்நானாச்சு
நாடடா என்னுள்ளே எங்கும் யான்தான்
போக்கில்லை வரவில்லைப் பிறப்பிறப்புமில்லை
காரடா குருபதத்தைத் தசதீட்சை செப்பக்
கண்டுகெட்ட சமையமெல்லாந் தள்ளுதள்ளே. 104

தள்ளியல்லோ தீட்சையிலே நின்றுகொண்டு
சாதகமாய் ஆதிரச நவநீதத்தை
அள்ளியல்லோ கஞ்சாவின் கற்பத்தூடே
அப்பனே கொண்டுபார் அதிசயங்கோடி
வள்ளியல்லோ சலவுகத்தில் கும்பகத்தைப் பண்ணு
மகத்தான தீயுகத்தில் அமுர்தவிந்தில்
நன்றியல்லோ காலுகத்தில் நாதவிந்தில்நில்லு
நலமாக அசைக்கவுந்தான் கூடாவாறே. 105

(கால் உலகம் - காற்று உலகம் - வாயுலோகம்)

வாறாக இப்படியே நாமிருந்து வாழ்ந்தோம்
மைந்தனே நவகோடி சித்தருக்குப்பீடந்
தாறாக்க காஷாயவேட மீந்தோம்
சார்வான மேருவுக்குத் தெற்கெல்லாம்பாரு
கூறாக நம்முடைய வேடங்கண்டால்
குறுக்கொன்றுஞ் சொல்லார்கள் சித்தர்தாமும்
வீறான தசதீட்சை எல்லார்க்குமுண்டு
விட்டல்லோ வெறும்பாட்டைப் பாடினாரே. 106

Koviloor Digital Library

பாடினதோர் பாட்டையெல்லாம் பார்த்துப்பார்த்துப்
பரிவான உலகத்தோர் இருந்துகொண்டு
நாடினதோர் கற்பத்தால் பலனுமற்று
நமனுக்கே இரையாகப் போனார்கோடி
ஓடினதோர் வாசியென்ற ஓட்டத்தாலும்
உதித்தெழுந்த ரவியினது தினத்தினாலும்
கூடினதோர் வயதெல்லாங் குறைந்துமாண்டார்
கூறுகிறேன் குளிகையினிக் கூறுவேனே. 107

குளிகை

கூறுகிறேன் நற்சூதஞ் சுத்திசெய்து
குறையாமல் ரண்டுபலமெடுத்துக் கொண்டு
ஆறுகிறேன் அப்ரேகச் சூதந்தானும்
அப்பனே பலமொன்று பலமுமூன்றும்
மாறுகிறேன் ரெண்டும் ஒன்றாய்க் கலந்துகொண்டு
மைந்தனே பரிச்சுன்னம் பலந்தான் போட்டு
தேறுகிறேன் கார்மத்தன் சாற்றாலாட்டத்
திரண்டுருண்டு மணியாகுஞ் சிறந்துகாணே. 108

(கார்மத்தன் - கரு ஊமத்தை)

சிறந்துநின்ற மணியெடுத்து உருக்கிக்கொண்டு
செப்புகிறேன் சாரணையே நன்றாய்க்கேளு
உறந்து கொண்டு நாயுருவி சித்திரமூலம்
உத்தமனே சதிர்கள்ளி பாலைதில்லை
அரைத்திந்த அஞ்சையுந்தான் சாம்பலாக்கி
அப்பனே வெவ்வேறே உப்பேசெய்து
கறந்துநின்ற அஞ்சுப்பும் வகையதொன்று
கனக்கவே பலம்பத்து எடுத்திடாயே. 109

எடுத்திடுவாய் கழுதையொடு குதிரையானை
இதமான மாடோடு மனுஷனஞ்சும்
மடுத்திடுவாய் மூத்திரங் களுப்பாய்க் காய்ச்சி
வகையொன்று பலம்பத்து நிறுத்துப்போட்டு
கொடுத்திடுவாய் அஞ்சுவகை லவணந்தானும்
சொற்பெரிய கடல்நுரையும் வளையல் தானுந்
தடுத்திடுவாய் நவாச்சாரஞ் சத்திச்சாரம்
சார்வான யெவாச்சாரம் வரிசைகேளே. 110

(வளையல் - வளையல் உப்பு)

Koviloor Digital Library

கேளப்பா சவுக்காரம் காசிச்சாரம்
கெடியான சவ்வீரம் வகையதொன்று
நாளப்பா பலமஞ்சு நிறுத்துக்கொண்டு
நலமான கெந்திசிலை, தாளகமுங்கூட
வேளப்பா வெள்ளையொடு கெவுரிலிங்கம்
வெவ்வேறே பலமூன்று நிறுத்துப்போட்டு
தாளப்பா இவையெல்லாம் பொடியாய்ப்பண்ணி
சார்வாகப் பீங்கானில் வைத்திடாயே. 111

வைத்ததொரு பொடிப்பெயரும் பிடந்தானொன்பார்
மாசித்தர் சாத்திரத்தில் இப்படியே சொல்லும்
நைத்ததொரு பூனாகச்சத்துத் தானும்
நலமாக ரசத்துக்கு நேர்தான்கூட்டி
பைத்ததொரு குகையில் நின்று உருகும்போது
பாச்சியல்லோ பிடம்போட சத்தையுண்ணும்
அய்த்ததொரு சூதமது நிறுத்துப் பார்க்க
ஆச்சரியம் ரசமிடையே நிற்குங்காணே. 112

காணப்பா விச்சூதமிடைக்குத் தானுங்
கைமுறையாய் அப்ரேகச்சத்துங் கூட்டி
பூணப்பா உருக்கையிலே புடத்தைப் போட்டு
புகழாக விடுவித்துத் தீர்ந்த பின்பு
ஊணப்பா கெந்தகத்தின் சத்தைக் கூட்டி
உத்தமனே விடுவித்தால் தீபனமுமேறும்
ஆணப்பா பாஷாணம் அறுபத்து நாலும்
அப்பனே உபரசங்கள் நூற்றிருபத்தி யொன்றே. 113

ஒன்றோடு ரத்தினங்கள் ஒன்பதுவுங்கேளு
ஓர்மையாம் லோகங்கள் ஒன்பதுவுந்தானும்
பண்டோடு சத்தெடுத்து மாறிவிட்டு
பாச்சியல்லோ சாரணையைத் தீருதீரு
தண்டோடு சகடான குளிகையிது மைந்தா
சாதகமாய்ச் சீஷனுட வாயிலிட்டு
கண்டோடி அரிசிக்கறி கொள்ளச் சொல்லி
கைமுறையாய்ச் சீஷருக்குக் காட்டுவாயே. 114

காட்டியதோர் சாரணையும் ஒன்றேயாச்சு
கைமுறையாய் இப்படியே இருபத்தொன்று

Koviloor Digital Library

மூட்டியதோர் விடுவித்தால் கெவனமாச்சு
மூதண்ட உலகமெல்லாஞ் சுத்தியாகும்
ஆட்டியதோர் இதின்பேரைக் கமலியென்று
அஷ்டமா சித்தியென்றுஞ் சூரூபமென்றும்
பூட்டியல்லோ பேரிட்டுப் பாடிச் சித்தர்
புகழாக உலகமெல்லாங் கெடுத்தார்தானே. 115

தானென்ற குளிகை எல்லாஞ் சூரூபமல்ல
சற்குருவால் தசதீட்சை கேட்டு நின்று
வானென்ற பிராணாயம் பண்ணித் தீர்த்து
மைந்தனே நவநீத கற்பமுண்டால்
கோனென்ற தீபம்போல் சடமுமாகுங்
கொடியகத்தி விசிறினால் வெளியாயோடும்
பானென்று கவனித்தால் அமுர்தம் வீசும்
பாங்கான சூத்திரத்தைப் பரிவாய்ப் பாரே. 116

கிறாவணம்

பரிவான கிறாவணத்தை சொல்லக் கேளு
பாங்கான பெருவாயன் ஆடு மாடு
தரிவான மனுஷனொடு கோழி பன்றி
சாதகமா யாறுபிச்சும் வெவ்வேறே வாங்கி
அறிவான வகையொன்று பலமே தூக்கி
அப்பனே மனுஷனுட குரும்பிதானும்
பிரிவான நாதவிந்து அமுரியுப்பு
பேரான முலைப்பாலும் வாய்னீர்தானே. 117

(பெருவாயன் - கழுதை)

தானென்ற வெண்காரஞ் சீனக்காரஞ்
சாதகமாம் வெடியுப்புக் கல்லுப்பினோடு
வானென்ற நவாச்சாரம் வெள்ளைகண்டர்
மைந்தனே சவுக்காரம் வீரத்தோடு
வேனென்ற சிறுமெழுகு புழுகுபூரம்
மேலான சவ்வாது தேனும் வெண்ணெய்
கோனென்ற குன்றிமணி சர்க்கரையினோடு
குறையாமல் வகையொன்று பலமுந்தூக்கே. 118

தூக்கியல்லோ நாகத்தை மனோசிலையைப் பூசித்
துடியாகப் புடம்போட்ட நாகபற்பம்

Koviloor Digital Library

தாக்கியல்லோ கெந்தகத்தைக் காரீயத்தில்
சமரசமாய் புடம்போட்ட ஈய பற்பம்
நோக்கியல்லோ வகைக்குரண்டு பலமே போட்டு
நுண்மையாய்ப் பூனாகம் இந்திரகோபம்
வாக்கியல்லோ வகையொன்று பலந்தானொன்று
மர்த்தித்து வகையெல்லாம் வைத்திடாயே. 119

வைத்த பின்பு வசம்புச்சார் படிதான்ரெண்டு
மைந்தனே நல்லெண்ணெய் அரைப்படியும் விட்டு
நைத்தபின்பே இவைரண்டும் காயும்போது
நலமாக முன்னரைத்த மருந்தை போட்டு
கைத்தபின்பு கிண்டியிதை மெழுகுபோல
கனமான பீங்கானில் அடைத்துக் கொண்டு
பைத்தபின்பே இதின்பெயரு கிறாவணந்தானப்பா
பாச்சடா சாரணைக்குப் பரிந்து காணே. 120

காணப்பா கிறாவணத்தைத் தொட்டுப் போட
கடுஞ்சுறுக்காய் உட்கொள்ளும் உபரசமுஞ் சாகும்
பூணப்பா வேதைகளில் தொட்டுப் போட
புக்கியல்லோ வெகுதூரம் போகும் போகும்
கோணப்பா வழிதப்பித் திரியாமல்தான்
கூர்மையுடன் கைமுறையாய்ச் செய்து கொள்ளு
வீணப்பா கிறாவணத்தை விட்டாயானால்
வேதைமுதல் குளிகை வரை விழலூமாமே. 121

குடோரி

விழலாகப் போகாமல் குடோரி சொல்வேன்
வெகு சுறுக்காய் உபரசங்கள் சத்தேயாகத்
தழலாகப் பாஷாணம் உபரசமும் லோகஞ்
சமரசமாய் சேர்ந்துருகி மணியுமாகும்
குழலாகப் போவதெல்லாம் வயிரம் போலாகக்
குமுறவே உருக்கிவிக்கும் கோடிக் கோடுஞ்
சுழலாமல் சாத்திரத்தில் குடோரி சொன்னார்
சுறுக்கல்ல சுறுக்கல்ல சொல்லக் கேளே. 122

கேளப்பா ரோமமது பலந்தான்நூறு
கெடியாக நிறுத்தெடுத்துக் கழுவிப் போட்டு
நாளப்பா கல்லுப்பு சீனக்காரம்
நலமான வெடியுப்பு துரிசுசாரம்

Koviloor Digital Library

நீளப்பா வெண்காரம் துத்தம் சூடன்
நிலையாக வகையொன்று பலந்தானஞ்சு
சூளப்பா எருக்கம்பால் விட்டே ஆட்டித்
துடியான மயிருக்குள் பிசறிப்போடே. 123

போட்டல்லோ ரவியிலே உலர்ந்த பின்பு
புகழான அழிஞ்சில்வித்து ரெண்டுபத்து பலந்தான்
மூட்டல்லோ புரசம்வித்து ரெண்டுபத்து பலந்தான்
மூதண்ட குன்றிவித்து ரெண்டுபத்து பலந்தான்
கூட்டல்லோ பூவரசம் வித்து தானும்
குறையாமல் ரெண்டுபத்து பலந்தான் தூக்கே
பூட்டல்லோ இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துப்
பொடியாகக் கல்வத்தில் தாக்குதாக்கே. 124

தாக்கியல்லோ சதிர்க்கள்ளிப் பாலாலாட்டிச்
சதிராக வில்லைகட்டிக் காசு போல
பாக்கியல்லோ உலர்ந்த பின்பு மயிரினோடு
பரப்பியல்லோ அடுக்கடுக்காய்ப் பாண்டத்துள்ளே
தேக்கியல்லோ சில்லிட்டுச் சீலை செய்து
சிறுகவே தூருக்குள் தமரும் போட்டு
தாக்கியல்லோ பூப்புடத்தில் தைலம் வாங்கி
சாதகமாய்ப் பீங்கானில் வைத்துக் கொள்ளே. 125

வைத்ததொரு தயிலத்தின் துறையைக் கேளு
மைந்தனே தாளகந்தான் பலமுமஞ்சு
நைத்ததொரு கெவுரியது பலமுமஞ்சு
நல்லவெள்ளைப் பாஷாணம் பலமுமஞ்சு
கைத்ததொரு வீரமது பலமுமைந்து
கறிவான வெண்காரம் பலமும்ரெண்டு
ஒய்த்ததொரு வெடியுப்பு பலமுமூன்று
உத்தமனே கல்லுப்பு பலமும்ஒன்றே. 126

ஒன்றாக இவையெல்லாம் தயிலத்தாட்டி
உத்தமனே தினமொன்று அரைத்த பின்பு
கன்றாக இதையெடுத்து மேருவிலே போட்டு
கனக்கவே மேருவுக்குச் சீலை செய்து
பன்றாக வாலுகையில் எடுத்து ஏத்தி
பாங்காகத் தினம்ரெண்டு தீயைப் போட்டு

Koviloor Digital Library

நன்றாக நாளதிலே பதங்கமேறும்
    கொடுஞ் சுருக்காய் பதங்கமது குடோரிதானே. 127

தானென்ற குடோரியது பலமும் நாலு
    சாதகமாய் சவ்வீரம் பலமும் ஒன்று
வேனென்று கட்டியதோர் வெங்காரந்தான்
    விளங்கியதிற் பலமூன்று கூடப் போட்டு
கானென்ற ரெங்கதுவும் பலந்தான் ஒன்று
    கட்டியதோர் சாரமது பலந்தான் ஒன்று
பானென்று கட்டினதோர் கல்லுப்பு மைந்தா
    பாங்காகப் பலம்போட்டுப் பரிந்துபாரே. 128

பாரப்பா இவையெல்லாம் பொடியாய்ச் செய்து
    பாங்காகப் ப்ானையிலே அடைத்துக் கொள்ளே
நேரப்பா இதின்பேரு குடோரி என்பார்
    நேரான போகமென்பார் உருக்கினமே என்பார்
தூரப்பா குருவென்பார் சத்தைவாதி
    துரிதமாஞ் சாரணைக்குச் சோதி யென்பார்
சேரப்பா யிதைவிட்டு சித்தர்தானும்
    ஜெகசாலக் குடோரி தன்னைப் பாடினாரே. 129

பாடினார் இப்படியே அங்கங்கம் எல்லாம்
    பலபலவாய்ப் பிச்செறிந்து பாட்டாய்ச் சொன்னார்
ஊடினார் சித்தரது நூலைப் பார்த்து
    உலகத்திற் கெட்டலைந்தோர் கோடாகோடி
தேடினார் தசதீட்சைக் கிடையாதென்று
    செகத்திலே இறந்தவர்கள் கோடாகோடி
மூடினார் சித்தரப்பா மெத்தநன்று
    முசுவைப்போல் சீஷன்வந்தால் முயன்றுபாரே. 130

முயன்றுகொண்டு சீஷனுட குணத்தைப்பாரு
    மூதண்ட சித்திக்கும் ராசி பாரு
வயின்றுகொண்ட மயமெத்த கள்ளனானால்
    வார்த்தையினால் பசப்பியல்லோ மயக்கஞ்செய்வான்
செயன்றுகொண்ட பிரம்மகுலத் துதித்தோராகில்
    சேர்த்துப்பார் நித்தியகருமக் கருவையெல்லாம்
தயன்றுகொண்ட ராசகுலத் துதித்தோராகில்
    சக்கரத்தைப் போற்றியவன் சார்ந்துபாரே. 131

Koviloor Digital Library

பாரப்பா வசியகுலத்து உதித்தோனாகில்
பரிவாகப் பணங்கேழ்க்கில் லோபஞ் சொல்வான்
நேரப்பா சூத்திரனாஞ் சாதியானால்
நிலைத்து நின்ற வேளையிலே குணத்தைப் பாரு
சாரப்பா நற்குணமாய் நடந்தானாகில்
தசதீட்சை முந்திவைத்துத் திறத்தைக்காணு
தூரப்பா பாராமல் தீட்சை சொன்னால்
சொக்குவார் நரகத்தில் குருதான் காணே. 132

குருவுக்கு நரகம்வர நடந்தசீஷன்
குலக்ஷீணமாய்க் கோடிநரகில் வீழ்வான்
குருவுக்கு மனம்வேறாய் நடந்தானாகில்
கூறியதோர் தீட்சையெல்லாம் பாழாய்ப் போகும்
குருவுக்கு வஞ்சனையே செய்தானாகில்
குலங்கோடி நரகத்தில் குமுறிப்போவான்
குருவுக்கு மனதுவர நடந்தசீஷன்
குலங்கோடி மோட்சமெய்தும் சித்தனாமே. 133

தேவி பூஜா விதி

ஆமப்பா பூசைவிதி சக்கரத்தைச் சொல்வேன்
ஆருந்தான் சொல்வார்கள் அப்பா கேளு
ஓமப்பா தேவிக்கு ஆதிபீடம்
உத்தமனே நாற்பத்து மூன்றே கோணங்
காமப்பா வித்தையதுக் காதிவித்தை
காசினியில் பூசைசெய்வார் தசதீட்சைப் பெற்றோர்
நாமப்பா முந்தியவள் பூசைபண்ணி
நலமான சிவபோகத் திருந்திட்டேனே. 134

இருந்திட்ட சக்கரத்தி னியல்புகேளே
இதமாக வளையம்போல் கீறிக்கொண்டு
அருந்திட்ட குறுக்கிலிட ரேகைதானும்
ஆதித்தன் ரேகையொன்று திங்களொன்று
தெரிந்திட்ட செவ்வாயின் ரேகையொன்று
செயலான புதனுடைய ரேகையொன்று
பருந்திட்ட குருவினது ரேகையொன்று
பாங்கான சுக்கிரன்தன் ரேகைதானே. 135

தானென்ற காரியது ரேகையொன்று
சாதகமாய் குருவினது ரேகையொன்று

Koviloor Digital Library

கானென்ற கேதுவது ரேகையொன்று
கைமுறையாய் ஒன்பதையுங் குறுக்கேகீறில்
பானென்ற தேவியது பாதரேகை
பாடினார் சிவனன்று சக்கரமாய் மைந்தா
வானென்ற செவ்வாயின் ரேகைமுனை ரெண்டும்
வாங்கியல்லோ கீழாகும் வளையத்தூட்டே. 136

ஊட்டிடுவாய் மைந்தனது ரேகைமுனை ரெண்டும்
உத்தமனே வளையத்தின் மேல்முகத்தி லூட்டு
கூட்டிடுவாய் திங்களது ரேகைமுனை ரெண்டும்
குலமான கேதுவது நடுமையத்தூட்டு
பூட்டிடுவாய் கேதுவது ரேகைமுனை ரெண்டும்
புகழான செவ்வாயின் மையத்தூட்டு
மாட்டிடுவாய்க் குருசொல்ல முறையாகத் தானும்
வண்மையுடன் வழிவழியாய் வருந்தித்தாக்கே. 137

தாக்கடா ஆதித்தன் ரேகைமுனை ரெண்டுந்
தயவான சுக்கிரனாம் மையத்தூட்டு
தேக்கடா சுக்கிரனாம் ரேகைமுனைரெண்டுந்
திங்களது மையத்தில் சேருசேரு
போக்கடா புதனுடைய ரேகைமுனை ரெண்டும்
புகழான ராகுவது மையத்தூட்டு
நாக்கடா ராகுவின் ரேகை முனை ரெண்டு
மறுகாவே சனிமையத் தூட்டிப்பாரே. 138

பாரடா ராகுவது ரேகைமுனை ரெண்டும்
பதராமல் மேல்நோக்கில் ரவிமையத்தூட்டு
யேறடா வாசிநிலை கண்டுநீதான்
இருத்திடவே இரவிமதி யொன்றாய் நிற்கும்
பேறடா வாசிவிட்டா லெல்லாம் போச்சு
பேணுவது பிறவியில்லா செனனமாகுங்
கூறடா குருவினுப தேசந்தன்னை
கோடான கோடிபாவந் துலையும் பாரே. 139

பாரப்பா ஆதித்தன் வளையத்துள்ளே
பரிவான மேல்ரேகை சனியின் ரேகை
சேரப்பா அதின்கீழே திங்கள் ரேகை
சிறப்பாக அதின்கீழே செவ்வாய் ரேகை

Koviloor Digital Library

பேரப்பா அதின் கீழே புந்திரேகை
புகழாக அதின்கீழே வியாழம் ரேகை
வேறப்பா அதின்கீழே வெள்ளி ரேகை
விளங்கி அதின் கீழ்ரேகை காரியாமே. 140

காரியின்கீழ் ராகுவடா கண்டு கொள்ளு
கைமுறையாய் ராகுவின்கீழ் கேதுரேகை
பாரியிந்தப் படிகீறி முனையின்மையம்
பகுந்தறிந்து முனையோடு மையங்கூட்டு
தாரியந்தப் படியறிந்து கீறிப்பார்த்தால்
சக்கரம்போல் திரிகோண முனையிற்காணும்
சாரியிந்த நாற்பத்து முக்கோணத்தை
சதாசிவன்தான் வகுத்தீபடி சாத்தினேனே. 141

சாத்தினதோர் சக்கரத்தின் மேலேகேளு
சார்வாக எட்டிதழும் ஈரெட்டிதழும்
மாத்தினதோர் வளையமிட்டு வெவ்வேறப்பா
வாகாக இதுமேலே இருபத்தைந் திதழ்தான்
போத்தினதோர் பூரேகை சதுரமாக
புகழாக மூன்றுவரை வரைந்து நீயும்
ஆத்தினதோர் நால்வாசல் விட்டு நீயும்
அப்பனே சக்கரத்தின் மையங்கேளே. 142

கேளப்பா மையமென்ற திரிகோணத்தில்
கெடியான விந்துவிட்டு நடுவே கேளு
நாளப்பா றீங்காரம் நடுவேயிட்டு
நலமான பதினாறும் இருபத்தைந்தில்
சூளப்பா அகாரமுதல் சகாரவரைதானுஞ்
சுகமாக அன்பத்தி யொன்று கீறி
வாளப்பா வாசலிலே தேவதைகளுண்டு
வகையாகச் சொல்லுகிறேன் மருவிக்காணே. 143

காணடா தேவியுட கீழ்முகத்து வாசல்
கலங்காத கேந்திரனாம் வடுகன்நிற்பார்
பூணடா மேல்முகத்தில் கணபதியுங் கந்தன்
புகழான வடமுகத்தில் சூலியொடு துற்கி
தோணடா தென்முகத்தில் வீரபத்திரன்
துடியான காளியொடு நிற்பாரப்பா

Koviloor Digital Library

ஊணடா நாலுதிக்கு அட்சரங்கள் தானும்
    உத்தமனே தேவதைகள் உறையும்பாரே. 144

பாரப்பா நால்வாச லானபின்பு
    பரிவான மூன்றுவரை இரண்டுவீதி
நேரப்பா அஷ்டதுர்க்கி அஷ்ட நாகம்
    நிலையான அஷ்டகஜம் அஷ்டகசத்தி
காரப்பா வீதியொன்றில் அவர்கள் பீடம்
    கைமுறையாய் இட்டல்லோ பூசைபண்ணு
தூரப்பா மறுவீதி சொல்லக்கேளு
    துடியான பயிரவத்தின் நாமந்தானே. 145

தானென்ற அதிதரங்கன் ரூருச்சண்டன்
    சமரசமாங் குறோதனோடு உன்மத்தனப்பா
கானென்ற கபாலியோடு பீஷ்மமூர்த்தி
    கடியதொரு சம்மாரன் எட்டுப்போகும்
வானென்ற மறுவீதி பீடமிட்டு
    வாகாக அர்ச்சித்து மைந்தாகேளு.
கோனென்ற சக்கிரத்தைச் சுழ்ந்துநின்ற
    குறிப்பான தேவதையின் பேருகேளே. 146

கேளப்பா தென்புரத்தில் தெட்சணாமூர்த்தி
    கெடியான வடபுரத்திற் சண்டகேசன்
நாளப்பா ஈசான்யம் ஆதித்தனோடு
    நலமான பயிரவனும் நிற்பாரைய்யா
சூளப்பா சுரதேவர் பிருங்கியோடு
    துடியான வாசலிலே துவாரபாலர்
நீளப்பா இவர்களது பீடமிட்டு
    நிலைய விச்சக்கரத்தை விதித்திடாயே. 147

விதித்திருந்த சக்கரமாம் விந்துக்குள்ளே
    மேலான ஞானசத்தி யிருந்தாள்பாரு
மதித்திருந்த அவள்நாமம் வாலையென்பார்
    மைந்தனே திரிபுரைதான் புவனையென்பார்
கதித்திருந்த சாமளையாஞ் சத்தியென்பார்
    கலியாண ராஜராஜேஸ் வரியென்பார்
பதித்திருந்த உமாசத்தி அம்பிகாதேவி
    பாங்கான கணனசத்தி பரிந்துகாணே. 148

Koviloor Digital Library

காணப்பா ஈஸ்பரிதான் உன்மாதையையா
கண்டுகொள்ளும் அச்சத்தி நாமமென்பார்
ஊணப்பா இவள்பத்து நாமத்துக்கும்
உத்தமனே சத்தியது தீட்சைப்பத்து
பூணப்பா இதுகடந்து ஞானசத்தி
பூரணியாந் தீட்சையொன்று புகழ்ந்துகாணுந்
தோணப்பா தசதீட்சை அட்சரங்களெல்லாஞ்
சுகமாகச் சக்கரத்திற் போடுபோடே. 149

போட்டல்லோ இதழ்களிற் பூசைசெய்வார்
புகழான சிவயோக தசதீட்சை பெற்றோர்
மூட்டல்லோ ஞானசத்தி நிருத்தஞ்செய்வாள்
மோசமில்லை வாதமொடு ஞானசித்தி
பூட்டல்லோ இதுபூட்டு வாமியத்துக்குப்
பூட்டறியக் குருபதத்தில் தொண்டுபண்ணு
நாட்டல்லோ வாமிகள்தான் வெறும்பூசைபண்ணி
நலமாகப் பாவித்து அலைவார்தாமே. 150

தானென்ற தசதீட்சை செய்தால்ஐயூ ர
சகலசித்து மாடலாந் தாழுஞ்சொல்வாள்
வானென்ற ஞானமெல்லாம் வெட்டவெளியாகும்
வாயிலிட்ட குளிகையடா கெவனமோடுங்
கானென்ற அணிமாவும் மகிமாவோடு
கலந்துநின்ற கிரிமாவும் லகிமாத்தானும்
பானென்ற பிறாப்தியொடு பிறாகாமிய
பாருலகில் ஈசத்துவ வசித்துவமாமே. 151

ஆமப்பா எட்டுப்பேர் ஏவல்கேட்டு
அஷ்டாங்க யோகமுதல் அறுபத்துனாலும்
ஓமப்பா ஆடலாம் இவர்களெட்டும்
உத்தமனே அஷ்டதளத் துள்ளேபூசி
காமப்பா லுண்ணுவிப்பாள் விண்ணிலேற்றி
கருணையுடன் ஈன்றெடுத்த ஞானசத்தி
சோமப்பா லுண்டவற்கு சட்டைபோகும்
சோதியாம் சிதம்பரத்தைச் சொல்லக்கேளே. 152

சிதம்பரச் சக்கரம்

சொல்லுகிறேன் சிதம்பரமாஞ் சக்கரத்தின் போக்குச்
சுகமாகப் பானுவைப்போல் விருத்த மொன்றிட்டு

Koviloor Digital Library

மல்லுகிறேன் அதுமேலே விருத்தமொன்றிட்டு
வாகாக அதுமேலே விருத்தமொன்றிட்டு
அல்லுகிறே னிப்படியே வளையமெட்டிட்டு
அப்பனே சக்கரம்போல் வார்த்துக்கொண்டு
நல்லுகிறேன் நடுமைய வித்தினுள்ளே
நலமான சிவபீஜம் மஎன்றுபோடே. 153

போடடா நீரெண்டாம் வளையத்துள்ளே
புகழான பஞ்சிதழா யாகநீயும்
போடடா மூன்றாந்தான் வளையத்துள்ளே
பொலிவான எட்டிதழாய்ப் போடுபோடு
போடடா நாலாந்தான் வளையத்துள்ளே
பூட்டிடுவாய்ப் பதினொன்றே ரெண்டிதழும்நீதான்
போடடா அஞ்சாந்தான் வளையத்துள்ளே
பொங்கமாய்ப் பதினேழு யிதழுந்தானே. 15

தானென்ற ஆறாந்தான் வளையத்துள்ளே
சாதகமாய் யிருபத்திரண் டிதழுமிட்டு
வேனென்ற ஏழாந்தான் வளையத்துள்ளே
விளங்கியிதில் இருபத்து அஞ்சுபோட்டு
மோனென்ற எட்டாந்தான் வளையத்துள்ளே
முப்பத்தி யைந்திதழும் முசியப்போட்டு
வானென்ற வளையங்கள் ஏழுக்குள்ளே
வகைநூற்று இருபத்து ஐந்துமாச்சே. 155

ஆச்சப்பா ஈசான்யம் நடுமையந்தான்
அப்பனே அகாரமுதல் மாறிக்கொண்டு
ஓச்சப்பா யிருபத்தி யைந்தும்போட்டு
உத்தமனே தென்முகந்தான் நடனராஜன்
வீச்சப்பா வடபாகம் வாமதேவர்
விளங்கியதோர் மகாரமுதல் மாறிப்போடு
கூச்சப்பா தென்புறத்தே அகாரந்தானும்
கூசாமல் சிகாரமுதல் மாறும்பாரே. 156

மாறடா மேல்முகத்தில் சத்யோஜாதம்
வளமாக நகாரமுத லிருபத்தைந்தும்
மாறடா கீழ்முகத்திற் தத்புருஷமப்பா
வகாரமுத லெழுந்தைத்தும் மாறுமாறு

Koviloor Digital Library

மாறடா யைந்துமுகம் நூற்றிருபத்தைந்தும்
வாகாக யிதழெல்லாம் வளமாய்ப்போட்டு
மாறடா மேல்வளையம் முப்பத்தைந்தில்
வைக்குமந்த அட்சரத்தை மகிழ்ந்துகேளே. 157

கேளப்பா யகாரமுதல் அக்ஷரம்வரைக்கு
கெடியான முப்பத்தி யைந்தும்போடு
வேளப்பா அதின்கீழே இருபத்தைந்தில்
விளங்கிநின்ற அம்முதலாய்ப் பதினாறும்போடு
நாளப்பா பிருதிவியிலே பிருதிவிபீசம்
நலமான அப்புவிலே அப்புபீஜம்
சூழப்பா வன்னியிலே வன்னிபீஜம்
சுகமாக இட்டாக்கால் சுருக்காம்பாரே. 158

பாரப்பா வாயுவிலே வாயுபீஜம்
பரிவான விண்ணிலே ஆகாசபீஜம்
நேரப்பா இப்படியே ஐந்துமுக மிட்டு
நிறையான சிவதீட்சை பதினொன்றுமப்பா
சேரப்பா சக்கரங்கள் எல்லாம்போட்டு
சிவனுடைய சக்கரத்தில் சூழக்கேளு
தாரப்பா சதுரம்போல் மூன்றுரேகை
சாதகமாய் நால்வாசல் விட்டுப்போடே. 159

போட்டல்லோ மேல்வாசல் கணபதியுங்கந்தன்
புகழான கீழ்வாசல் கிரீடிபிரிங்கி
நீட்டல்லோ வடமுகத்தில் பத்திரகாளி
நிலையான வீரபத்திரன் நிலைக்கப்போட்டு
மூட்டல்லோ தென்முகத்தில் துற்கையோடே
மூதண்டக்ஷேத்திரனாம் முனியவைத்து
ஆட்டல்லோ நால்வாசல் தேவதைக்கும்பீஜம்
அங்கங்கே வரைந்துவைத்து அறிந்துபோற்றே. 160

போற்றடா உள்வீதி வடபாகத்தில்
புகழான தண்டகே சுரனைவைத்து
தேற்றடா தென்புறத்தில் செப்பக்கேளு
தெட்சணா மூர்த்தியைத்தான் வைத்துப்பூசி
கோற்றடா சன்னதியில் நந்திபீடம்
குறையாமல் அடுக்கவொரு பீடஞ்சத்தி

Koviloor Digital Library

காற்றடா யீசான்ய மூலையப்பா
கால்துண்டி பைரவனை வைத்திடாயே. 161

வைத்திடுவாய் அடுக்கவல்லோ சூரியனையும்நீயும்
மைந்தனே ரெண்டாந்தரம் வீதிக்குள்ளே
பயித்திடுவாய் அஷ்டகஜம் அஷ்டனாகம்
பாங்கான அஷ்டசத்தி பரிந்துவைத்து
நயித்திடுவாய் அதிதரங்கன் ரூருச்சண்டன்
நலமான குறோதனோடு உன்மத்தரப்பா
கைத்திடுவாய் கபாலியொடு பீஷ்மமூர்த்தி
கைகடந்த சம்மாரன் எட்டுப்பேரே. 162

பேரான ஆபரண தேவதைகளெல்லாம்
பெறிந்துமே பீசமிட்டு சூழநீயும்
வாரான சக்கரத்தைத் தென்முகமாய்வைத்து
மருவியதோர் அபிஷேக மாட்டிநீயுந்
தாரான தேககுத்திப் பண்ணிநீயும்
சாதகமாய் வடமுகத்தே இருந்துகொண்டு
நேரான மாதுருகா நியாசம்பண்ணி
நிர்மலமாம் அஞ்செழுத்தின் நியாசம்பண்ணே. 163

பண்ணடா காமகளா நியாசந்தானும்
பரிவாகச் சடங்கமென்ற நியாசந்தானும்
கண்ணடா சோடச நியாசந்தானும்
கரபதமும் அகம்சிவத்தின் னியாசம்
விண்ணடா சிவமான தசதீட்சையோதி
வேதாந்தச் சின்மயனாஞ் சிவனைப்பூசி
மண்ணடா தொட்டாலும் சொர்ணமாகும்
வாயிலிட்ட மருந்தெல்லாம் சித்தியாமே. 164

சித்தியடா காயசித்தி குளிகைசித்தி
ஜெகமறிய வாசிசித்தி வாதசித்தி
பத்தியடா அஷ்டகர்ம சித்தியாகும்
பாரறிய யோகசித்தி ஞானசித்தி
முத்தியடா குருபதத்தில் சகலசித்தி
மூதண்ட பரதாய பிறவேச்சித்தி
ஆத்தியடா பூரணத்தி லாறுவரைதாண்ட
ஆத்தாளு மப்பனையும் பூசைபண்ணே. 165

Koviloor Digital Library

பண்ணடா தென்முகமாய்ச் சிவனைவைத்து
பாங்கான தேவியுட சக்கரத்தைக்கேளு
நண்ணடா வாமத்தி லவளைவைத்து
நலமான பாத்திரங்கள் முன்னேவைத்து
கண்ணடா கலசமுதல் சாங்கம்வைத்து
காணவே திசைகளெல்லாம் பந்தம்பண்ணி
விண்ணடா குருபதத்தில் குருவைநோக்கி
வேதாந்த சின்மயமே என்றுசொல்லே. 166

சொல்லியபின் வஸ்துவிட கிடத்தைவாங்கி
சக்கிரத்தி னறுசாப மெல்லாம் தீர்த்து
மல்லியபின் பஞ்சகர்த்தாள் சாபந் தீர்த்து
மைந்தனே என்னுடைய சாபந் தீர்த்து
அல்லியபின் சித்தருட சாபந்தீர்த்து
ஆதிரவி வன்னிமதி களையுமூட்டி
ஒல்லியபின் சோடசமும் அஞ்செழுத்துமோதி
உத்தமனே கிடத்தை வைத்து வுச்சப்பாறே. 167

பார்த்தல்லோ சந்திரனில் அமுர்தசத்தி
பராபரியைக் கிடத்தினுள்ளே பாவினையே செய்து
கோர்த்தல்லோ சங்குநீர் கொண்டு நீயும்
குமுறவே சகலமெல்லாஞ் சுத்தி செய்து
போர்த்தல்லோ பலைத்துமாங்கம் விபூதிபூசி
புலித்தோலின் மேலிருந்து பிராணாயம் பண்ணி
மார்த்தல்லோ பாத்திரத்தில் களையுனாட்டி
மைந்தனே பாத்திரத்தின் பேரைக் கேளே. 168

கேளடா சங்கமொன்று குருத்தானொன்று
கெடியான ஆதார போகமொன்று
நாளடா பெலியொன்று அஞ்சும் வைத்து
நலமான கலசத்தை முன்னே பூசி
வாளடா வஸ்துவைத்தான் ஆதாரத்தூட்டி
மைந்தனே நாகவல்லி இலையால் மூடி
தாளடா கெந்தமொடு புஷ்பஞ் சாற்றி
சக்கரத்தை அற்சிக்க சாத்துவேனே. 169

சாத்துகிறேன் வலக்கரத்தில் புஷ்பம் வாங்கி
சாதகமாய் இடக்கரத்தில் சுற்றி வாங்கி

Koviloor Digital Library

போற்றுகிறேன் குருவோடு கணபதியும் பீடம்
புகழான ஆபரண தேவதைகளெல்லாம்
ஆத்துகிறேன் வயிரவன்தான் வடுகன்சித்தர்
அப்பனே நவநாத வீரரோடு
ஏத்துகிறேன் சவுசஷ்டி வயிரவனுங் கூட
இதமான பஞ்சகர்த்தாள் இணங்கங்கேளே. 170

கேளடா அப்பியாச சத்தியோடு
கெடியான ருத்திரர்கள் கணங்கள்தானும்
நாளடா சகலசித்தி சகலருத்திரன்
நண்பாக அற்சிப்பாய் சக்கரங்கள் ரெண்டில்
வேளடா உருத்திரசிவன் தேவியோடு
வேதாந்த நடனத்தைக் காட்டுவார்பார்
பாரடா மற்றதொரு பூசையெல்லாம்
பரிவான குருசொல்லப் பரிந்துகேளே. 171

காணடா அற்சினைகள் தீர்ந்த பின்பு
கைமுறையாய்ப் பாத்திரங்கள் வஸ்துப்பூரி
பூணடா அன்னமொடு பலகாரங்கள்
புகழான சுத்தியொடு போதவைத்து
தோணடா மணிபூசை சங்குபூசை
துடந்துநின்ற செயகண்டி ஓசையோடு
ஆணடா நைவேத்தியஞ் செய்துநீதான்
அரகரா சிவசிவா அம்மாவென்னே. 172

அம்மனொடு சிவனுக்குத் தூபதீபம்
ஆலாத்திக் கற்பூர தீபமாட்டி
அம்மனொடு சிவனுக்குங் கந்தவகை தூவி
,ஆதியே காரணமே என்று போற்றி
அம்மனொடு சிவனையுந்தான் தோத்திரமே செய்து
அஷ்டாங்கம் எட்டெட்டும் அருள்தாவென்று
அம்மனொடு சிவனையுந்தான் பூசை பண்ண
ஆருக்குங் கிடையாது அதீதந்தானே. 173

தானென்ற குருபதத்தில் குருவை நோக்கி
சாதகமாய் குருவினது பாத்திரத்தைக் கொண்டு
கானென்ற தத்துவமுந் தேகமூன்றுங்
கைமுறையாய் சோதித்துப் பானம் பண்ணி

Koviloor Digital Library

வேனென்ற குண்டலியில் வாசியத்தான் மூட்டி
விளங்கியொரு பாத்திரத்தைப் பானம் பண்ணி
வானென்ற சிவசத்தி இருவரையும் நோக்கி
மகத்தான பாத்திரத்தைப் பானம் பண்ணே. 174

பண்ணியல்லோ லகிரியிலே லெட்சியத்தினுள்ளே
பாங்கான சிவசத்தி தீட்சையோது
புண்ணியமே செய்தவற்குத் தசதீட்சை எய்தும்
பொல்லாத துரோகிக்கு எய்தாதப்பா
கண்ணியதோர் தசதீட்சை லெட்சியத்தினுள்ளே
காட்டியல்லோ பிராணாயம் மூட்டிவாங்க
நண்ணியதோர் குருபதந்தான் பூரணத்தின் மேலே
நண்பான ரவிபோல காணும்பாரே. 175

பாரடா அதுக்குள்ளே சொக்கி நிற்கில்
பானுவிட காந்தியென்ன கோடியைப்போ
பூரடா அதுக்குள்ளே நினைவு போச்சு
பூசித்த மனம்போச்சு புத்திபோச்சு
ஆரடா நானென்ற சொல்லும் போச்சு
ஆத்தாளும் அப்பனையும் பூசித்தால் முத்தி
சாரடா இதுமுறைதான் கெடுக்க வேண்டாம்
சண்டாளர் வாமத்தைக் கெடுத்தார்காணே. 176

கெடுத்ததென்ன வாமத்தில் சத்தியைத்தான் வைத்து
கெடியாகப் பூசித்து சையோகித்து
மருத்ததென்ன பஞ்சமந்தான் முக்தியென்று
மாயத்தே அமைந்தார்கள் மருளவாமி
அடுத்ததென்ன சித்தரெல்லாம் பெண் புசிப்பாராகி
அகண்டவெளி சத்தியையே அற்சினையேசெய்வார்
படுத்ததென்ன இல்லையவர் சமாதியிலே நிற்பார்
பாங்கான லாகிரிதான் கொண்டு ஏறே. 177

ஏறடா பராபரத்தின் பரமுந்தாண்டி
இயல்பாகச் சிவந்தாண்டி ஏறிமேலே
தேறடா நாதமொடு விந்துதாண்டி
சிறந்துமிந்த ஆறுதலம் சேர்ந்து ஏறி
மாறடா மேலேதான் நிர்க்குணத்தின் வீதி
மைந்தனே அகண்டத்தில் மருவியூது

Koviloor Digital Library

கூறடா இதுவறிந்தால் அவனே சுவாமி
கூறினேன் பூசைவிதி கூர்ந்து கேளே. 178

கேளப்பா இப்படியே பூசை செய்தால்
கெட்டுப்போம் ஆகாமிய பிராரத்தங்கள்
நாளப்பா சஞ்சிதம்தான் போவென்றால்
நலமான பூரணத்தில் புக்கப்போகும்
பாறப்பா மற்றதெல்லா மொன்றுமில்லை
பாரப்பா குருத்தேடி பணிந்து கேளு
நீளப்பா விட்டாக்கால் மனம்பேயாகி
நிலைக்காது மனக்குரங்கு நீதான்பாரே. 179

பாரடா யிப்படியே பூசைசெய்வோன்
பரிவாகக் கோபம் வந்து பார்த்தானானால்
நேரடா தேசமெல்லாம் தணல்தீப்பற்றும்
நிமிஷத்தே மன்னர்தனம் நீறாய்ப் போகும்
காரடா என்றாலும் கார்க்கமாட்டார்
கலந்தகத்த வாமத்தீக் காணகோபம்
ஊரடா யிருப்பார்கள் அனேகம் பேர்கள்
உத்தமர்கள் உண்டு உண்டு கண்டுபேசே. 180

பேசையிலே அஷ்டாங்க மாடுகிறதைக் கேளு
பேரான வாசியைத்தான் வசியஞ் செய்வார்
ஆசையல்லோ சிவனையல்லோ மோசஞ் செய்து
ஆகாத துரோபதையை யுச்சாடித்து
பாசயிலே காணத்தைத் தம்பனேமே செய்து
பரவிநின்ற பொறியைஞ்சும் வித்துவேஷித்து
காசயிலே ஆங்காரம் பந்தனமே செய்து
கலங்காமல் காரணத்தில் கலப்பார்காணே. 181

கலக்கவே ஆக்ருஷி பூரணத்ததை நீயுங்
காணாத சஞ்சிதத்தை மாரணமே செய்து
நிலக்கவே அஷ்டகர்ம மிப்படியே செய்வார்
நேராக மற்றமுறை பாரார் பாரார்
துலக்கவே இதைவிட்டு கர்மவாமி
சூழுலகில் பெண்களைத்தான் அழைப்பாரையோ
புலக்கவே யிதுகண்டு சிவனுந்தேவி
போடுவார் நரகத்தில் போடுவாரே. 182

Koviloor Digital Library

போடுகிற நரகத்தில் விழுகநன்றோ
பூகழான ஞானத்தில் ஏறல் நன்றே
ஆடுகிற வாதசித்தி வந்துதானால்
ஆசையினால் அலைந்துகெட்டு அழிதல்நன்றோ
ஓடுகிற வாசியெல்லாம் விடுக்கநன்றோ
உத்தமனே பூரணத்தில் மறிக்க நன்றோ
தேடுகிற தெட்டென்ன ஞானத்தெட்டு
சிவயோகி யானாக்கால் தேடுவானே. 183

வானென்பார் வெளியென்பார் அகண்டமென்பார்
வரையில்லா நிற்குணமாம் போதமென்பார்
தானென்பார் தனையீன்ற ஆதியென்பார்
சகலசெந்து தாபரமாய் நிறைந்ததென்பார்
மோனென்பார் மூர்த்தியென்பார் முஷ்டிலென்பார்
மூச்சற்ற பீடத்தே மோட்சமென்பார்
பானென்பார் பானுவைப்போல் ஒளிதானென்பார்
பராபரமாய் நின்றதென்று பகருவாரே. 184

பகருவார் பகரறியாய்ச் சோதியென்பார்
பராபரத்தில் பராபரமாய் நின்றதென்பார்
பகருவார் ஆதியந்த மில்லாதென்பார்
பாங்கான நித்தசுத்த புத்தமென்பார்
பகருவார் ஆதிக்கும் அனாதியென்பார்
பாங்கான அடிமுடிவாய் நின்றதென்பார்
பகருவார் பலவிதமாய் ஒன்றைத்தானே
பார்த்தவர்க்கு வெகுசுருக்கு பரிந்துகாணே. 185

காணப்பா மகாரமுதல் ஐந்தெழுத்து மாறில்
கருவான வசியமாம் பாரு பாரு
நேரப்பா நகாரமுதல் நடுவணையே மாறில்
நேரான அழைப்புவித்தை யாகுமாகும்
காரப்பா சிகாரமுதல் நடுவணையே மாறில்
கடியதொரு பேதனமாங் கண்டு கொள்ளே
வேறப்பா வகாரமுதல் நடுவணையே மாறில்
வெகுசுருக்கு வித்துவே ஷணமுமாமே. 186

காணப்பா நகாரமுதல் ஐந்தெழுத்துமாறில்
கைகண்ட தம்பனமாங் காணும்காணும்

Koviloor Digital Library

பூணப்பா மகாரமுதல் ஐந்தெழுத்துமாறில்
புகழான மோகனமாம் பூலோகத்தில்
தோணப்பா சிகாரமுதல் ஐந்தெழுத்துமாறில்
சொற்பெரிய மாரணமாஞ் சொல்லக்கேளு
ஊணப்பா வகாரமுதல் ஐந்தெழுத்துமாறில்
உச்சாடனக் கிரிகை யோட்டும்பாரே. 187

ஆமடா திக்கெட்டி லக்கர்மமெட்டு
அப்பனே சொல்லுகிறேன் கேளுகேளு
ஓமடா கீழ்முகத்தில் வசியமாகும்
உத்தமனே அக்கினியில் மாரணமேசித்தி
தேமடா தென்திசையில் பேதனமேசித்தி
சிகமறியக் கன்னியிலே தம்பனமேயாகும்
வாமடா வருணனிலே வித்துவேஷணை
வந்திடுமே சித்தியிது மருவிடாயே. 188

மருவியதோர் வாயுவென்ற மூலைக்குள்ளே
வாகாக ஓடுகிற வரிசைசித்தி
தருவியதோர் குபேரனிலே மோகனமேசித்தி
சார்ந்துநின்ற ஈசான்யம் அழைப்புசித்தி
கருவியதோ ரெட்டுமுக மெட்டுஞ்சித்தி
கைகண்ட படிசொன்னேன் கண்டுபாரு
அருவியதோ ரெட்டுக்கும் பலகையுண்டு
அப்பனே சொல்லுகிறேன் அறிந்திடாயே. 189

அறிந்திடுவாய் வில்வமடா வசியமாகும்
அப்பனே வெண்ணாவல் அழைப்புவித்தை
மறிந்திடுவாய் அரளியென்றால் மோகனத்துக்காகும்
மகத்தான ஆலென்றால் தம்பனமுமாகும்
பிரிந்துநின்ற தில்லையென்றால் பேதனமுமாகும்
பேராகத் துரத்திவைக்கும் பிலாப்பலகையப்பா
வெறிந்திடுவாய் பாதிரிதான் வித்துவேஷிக்கும்
விளங்கியிந்தப் பலகையெட்டின் விதமுந்தானே. 190

தானென்ற அத்தியடா மாரணத்துக்காகும்
சாதகமாய் எட்டுவகை பலகைசீவி
வானென்ற ஐந்தெழுத்து மாறியதிலிட்டு
வாகாக ஜெபஞ்செய்ய எட்டுமாகுங்

Koviloor Digital Library

கோனென்ற சிதம்பரத்தின் கர்மவித்தை
குறிப்பறிந்து பூசைபண்ணச் சித்தியாகும்
ஊனென்ற உடலுக்குள் தியானம்பண்ணி
உத்தமனே சக்கரத்தைப் பூசைபண்ணே. 191

பண்ணவே ஜெபத்துக்குத் தாவடத்தைக்கேளு
பாங்கான அழைப்புக்குப் படிகமாலை
ஒண்ணவே வசியத்தில் ருத்திராட்சம்
உத்தமனே மோகனத்தில் மிளகுமாலை
கண்ணவே துரத்துகைக்குச் சீந்தில்மாலை
கடியவித்து வேஷணந்தான் சங்கமாலை
நண்ணவே பேதனந்தான் எட்டிவித்து
நலமாகத் தாவடமாய்க் கோர்த்துக்கொள்ளே. 192

கொள்ளடா தம்பனைக்குத் தாமரையின்மணிதான்
கொடியதோர் மாரணத்தில் நாபியதுமணிதான்
உள்ளடா இதுவெட்டுங் கர்மத்துக்கு
உத்தமனே தாவடங்கள் எட்டுஞ் சொன்னேன்
வில்லடா இந்தமுறை நற்சீஷனால்
வெறும்பசுவாய் நின்றவற்குச் சொன்னால்தோஷந்
தள்ளடா சீஷனது மனதுகண்டு
சவுமியமாஞ் சீஷனுக்குச் சாரச்சொல்லே. 193

ஓலையில் சக்கரங்கீறித் தனல்காட்டுதல்

சொல்லுகிறேன் கர்மங்க ளாடும்போது
சுருக்காக இருக்கவென்றால் கருவைக்கேளு
அல்லுகிறேன் ஓலையிலே சக்கரத்தைக்கீறி
அப்பனே பிராணாயம் ஆவாகித்து
மல்லுகிறேன் சக்கரத்தில் ஐங்காயம்பூசி
மைந்தனே தனல்காட்ட மண்டிச்சாகும்
வெல்லுகிறேன் என்றுசொல்லி யாரும்வந்து
வெல்லரிது சிவனாலும் வேகும்பாரே. 194

பாரப்பா சிதம்பரத்தில் அஷ்டகர்மம்
பாடினேன் சூஸ்திரத்தில் பாகமாக
நேரப்பா தேவியது சக்கரத்தின்வேகம்
நிமிஷத்தில் அண்டமெல்லாம் நீறாய்ப்பண்ணும்
கூறப்பா இக்கருவைக் கூறொண்ணாது
கூறவென்றால் சீஷர்குணங் கண்டுகூறு

Koviloor Digital Library

சாரப்பா தசதீட்சை பெற்றோராகில்
சாதகமாய் நினைத்துடனே எட்டுமாமே. 195

ஆமப்பா சிவனுடைய சக்கரத்தின்மையம்
ஆதியென்ற நாற்பத்து முக்கோணமிட்டு
ஓமப்பா சிவசத்தி சமமழுத்து
உத்தமனே பூசைசெய்ய தசதீட்சையோடே
வேமப்பா அண்டரண்ட மவர்பார்த்தபார்வை
வேதாந்த சிரோமணிதா னவற்குநாமம்
நாமப்பா கண்டபடி சூத்திரத்தில் சொன்னோம்
நலமான சிவசத்தி நண்பைக்கேளே. 196

கேளப்பா சிவசத்தி சக்கரங்கள்ரெண்டுங்
கெடியாக ஒன்றாக சமமழுத்தி
தாளப்பா தங்கமென்ற தகட்டில்கீறி
சாதகமாய் நால்வாசல் தேவதையுமிட்டு
சூளப்பா ஆவரண தேவதையுமிட்டு
சுகமாகப் பூசிப்பார் சித்தரெல்லாம்
நாளப்பா இதினாலே குளிகைசித்தி
நலமான காயசித்தி யாகுந்தானே. 197

தானென்ற நாற்பத்து முக்கோணத்தைச்
சமத்தாக மேருவைப்போல் வார்த்துக் கொண்டு
வானென்ற சிதம்பரத்தின் மையத்தேவைத்து
மகத்தான தசதீட்சைப் பூசைசெய்வார்
கானென்ற ஆகாமி யபிராப்த்திரண்டுங்
கடுந்தீயில் காஷ்டம்போல் வெந்துபோகும்
கோனென்ற சஞ்சிதந்தான் துடர்ந்துபின்னே
கொடியதொரு கள்ளனைப்போல் கூடும்பாரே. 198

பாரப்பா உலகத்தில் பிராணாயாமம்
பரிவான தீட்சைமுதல் சிவயோகங்கள்
நேரப்பா செய்வோர்க்கு பந்துவாலும்
நேரான சீஷவற்கச் சினங்களாலும்
தூரப்பா ராசாவி லிடுக்கஞ்செய்து
துரத்துமடா சஞ்சிதந்தான் திரொபவையாய்நின்று
ஊரப்பா இருக்கையிலே இடுக்கம்வந்தால்
ஓடாமல் தியானமது உளறிப்போமே. 199

Koviloor Digital Library.

போகுமே என்று சொல்லிக் கோபம் வந்தால்
பொடியாச்சு அண்டரெண்டஞ் சத்துருவும் நீறும்
வாகுமே கோபத்தால் தவமெல்லாம் போச்சு
வந்துதடா தோஷமினி யென்னசொல்வேன்
தாகுமென்ற மனமடங்கி சாந்தமாகி
தனிப்புறவே குகைக்கட்டி ஏகாந்தமாகி
வெகுமோசம் சித்தாந்த மென்னவேண்டாம்
வேதாந்த பூரணத்தில் நின்றுபாரே. 200

பாரப்பா நிர்க்குணத்தில் நின்றாயானால்
பதாஜனன சஞ்சிதத்தோ டனைத்தும் போகும்
நேரப்பா பூரணத்தி லனேகம் சித்தி
நிர்க்குணத்தில் நின்றவனே நிறைந்தவாமி
சேரப்பா யோகமுதல் வாதசித்தி
சிகமறிய காயசித்தி குளிகை சித்தி
ஓரப்பா மனம்பிடித்துத் தேறியேறு
உத்தமனே திராவகத்தை உறைக்கின்றேனே. 201

மகா திராவகம்

உறைக்கிறேன் எருக்கோடு குப்பைமேனி
உத்தமனே வாழையொடு துத்திதானும்
நிறைக்கிறே நாயுருவி முருங்கைமத்தை
நேரான தென்னிலையும் அருகுங்கூடத்
தறைக்கிறேன் தாழையொடு சித்தர்மூலம்
சார்வாகப் பதினொன்றும் சுட்டசாம்பல்
கரைக்கிறேன் வெவ்வேறா யுப்பாய்க்காச்சிக்
காணமே வகையொன்று பலமுமூன்றே. 202

மூன்றோடு கல்லுப்பு வளையலுப்பு
மூதண்ட இந்துப்புச் சாரந்தானும்
மூன்றோடு துரிசி துத்தம் பூனீரப்பா
மூதண்ட வகையொன்று பலமுமஞ்சு
மூன்றோடு அன்னத்தைக் கரைத்த பேதி
முசியாமற் பதினஞ்சு பலமும்போடு
மூன்றோடு சவுட்டுப்பு பலந்தான் கேளு
முடுகவடா ரண்டுபத்து பலமும் போடே. 203

போடவே படிகமது பலமுங்கேளு
புகழான எழுபதடா பலமுமப்பா

Koviloor Digital Library

நீடப்பா வெடியுப்பு நூறுபலம்போட்டு
நேராகப் பொடிசெய்து எல்லாங்கூட்டி
ஆடவே பதினொன்றாய்ப் பகுந்துக் கொண்டு
அப்பனே ஒருபங்கு கலையத் தூட்டி
மூடவே செங்கல்லைத்தான் வில்லைபோல
முன்னாக நடுமையந் தமருபண்ணே. 204

பண்ணடா பெருவிரலும் ஓடத்தக்க
பாங்கான செங்கலென்ற சில்லுக்குள்ளே
ஒண்ணடா சில்லோடு கலயவாயும்
உத்தமனே சேர்த்தல்லோ சீலைசெய்து
கண்ணடா அதுமேலே குகையை மூடி
கடுகவே குகைத்தூரில் பணம்போல் பொத்து
விண்ணடா அது மேலே காசிமேறா
விலாய்ப் புறத்தில் தமரிட்டு விளங்கச்சேரே. 205

சேர்த்தல்லோ சீலைசெய்து ஆறவிட்டு
சிவசத்தி யிருவரையும் பூசை பண்ணி
கோர்த்தல்லோ அடுப்பேற்றித் தீயைமூட்டிக்
குமுறாமல் தீயைமெள்ள எரிப்பாயாகில்
மார்த்தல்லோ குப்பியது மூக்குக்குள்ளே
வருகுமடா திராவகந்தான் புகையோடொக்க
ஏர்த்தல்லோ பீங்கானில் வைத்துக் கொண்டு
இப்படியே கலசத்திற் போட்டு வாங்கே. 206

வாங்கடா கூறான பதினொன்றுந்தான்
மைந்தனே எடுத்தல்லோ குப்பியில்விட்டு
ஓங்கடா முதிர்ந்துநின்ற கிளிஞ்சில்தன்னை
உவருமண்ணுஞ் சுண்ணாம்புங் கரைத்துவிட்டு
தேங்கடா தீயெரிக்க வெளுத்துப்போகும்
சிறப்பான சிப்பியல்லோ சுத்தியாச்சு
தாங்கடா யிதையெடுத்து நொறுக்கித் தூளாய்த்
திராவகத்தை வார்த்திடவே சலமாய்ப் போமே. 207

சலத்தினுள்ளே தெளிவதெல்லா மிருந்துக் கொண்டு
சாதகமாய் அடியில்நின்ற மட்டியெல்லாம்
மலத்தியதைக் காய்ச்சிடுவாய் மைனம் போல
வாங்கியல்லோ சாரமஞ்சு பலத்துக்கப்பி

Koviloor Digital Library

குலத்தியல்லோ குகையிலிட்டுப் புடத்தைப்போடக்
குலையாமற் சாரமங்கே கட்டிப்போகும்
அலத்தியல்லோ திரியாதே வாதசித்தியாச்சே
ஆச்சரியங் குளிகைமுதல் சித்தியாச்சே. 208

வீரக்கட்டு

ஆச்சடா இச்சாரம் சிப்பிநீரால்
அரைத்தல்லோ வீரத்துக் கப்பிநீயும்
ஓச்சடா அப்ரேகப் பொடியிலிட்டு
உத்தமனே புடம் போட வீரங்கட்டும்
போச்சடா சாவுபொய்யாய் வீரஞ்செத்தால்
புகழ்பெரிய சூதத்தைக் கட்டக்கேளு
வாச்சடா சூதமது பலந்தானொன்றில்
வையடா செயசாரம் பணந்தானொன்றே. 209

இரசக்கட்டு

தானென்ற செயவீரம் பணமும்போடு
சாதகமாய் சிப்பிநீர் விட்டு ஆட்டி
கானென்ற குகையினுள்ளே வைத்துஊதக்
கண்விட்டு ஆடுமடா சூதந்தானும்
கோனென்ற சூதமதும் பலந்தானொன்று
கொடிதான முன்சாரம் பணந்தானொன்று
வானென்ற முன்வீரம் பணந்தானொன்று
வைத்தல்லோ சிப்பிநீர் விட்டு ஆட்டே. 210

ஆட்டியல்லோ குகையிலிட்டு உருக்கிப்பாரு
அரகரா மணிபோல ஆடுமாடும்
ஓட்டியல்லோ யிப்படியே நூறு தொந்தங்கட்டும்
உத்தமனே சித்தரெல்லாம் பத்தேசொன்னார்
மூட்டியல்லோ சூதமொன்றில் துறைகள் கோடி
மூதண்டங் கெவனமாங் குளிகை கோடி
நாட்டியல்லோ ஒவ்வொன்றைச் செந்தூரிக்க
நலமாகச் சொல்லுகிறேன் நண்பாய்க் கேளே. 211

இரச சிந்தூரம்

கேளப்பா கூட்டியதோர் சூதமொன்று
கெடியான னாகமொன்று உருகும்போது
நாளப்பா தங்கமது நாலுக்கொன்று
நாட்டியல்லோ உருக்கியதை வாங்கிக் கொண்டு

Koviloor Digital Library

வேளப்பா கெந்தகமே யிதற்குப்பாதி
விரவியல்லோ பொடிசெய்து குப்பிக்கேற்றி
நீளப்பா அடுப்பேற்றி தீயைமூட்டி
நினைவாகச் செந்தூரப் பதத்தில் வாங்கே. 212

வாங்கியதோர் செந்தூரம் நூற்றுக்கொன்று
மாட்டடா நவலோகம் பொன்னுமாகும்
ஓங்கியதோர் குன்றியுண்ண மண்டலத்தினுள்ளே
உத்தமனே காயசித்தாம் வலுக்குந்தேகம்
தாங்கியதோர் வாசியெல்லாம் உள்ளே நிற்கும்
சதாநித்தம் குருபதத்தில் மனதுநிற்கும்
தேங்கியதோர் சட்டையொன்று கக்கிப் போகும்
தேகமது பொன்னிறம்போ லாகும் பாரே. 213

இரச சிந்தூரம் (வேறு)

பாரடா பின்னமொரு தொந்தத்தாலே
பரிவ்ாகக் கட்டியதோர் சூதந்தன்னை
நேரடா காரீயம் சமனாய்க்கூட்டி
நினைவாக நாலிலொன்று தங்கம்கூட்டி
சேரடா யிந்திடைக்குப் பாதிகெந்தி
சிறப்பாக எட்டிலொன்று வீரம்போட்டு
வாரடா பொடியாக்கிக் குப்பிக்குள்ளே
மைந்தனே வாலுகைமேல் ஏற்று ஏற்றே. 214

வாலச்சந்திர செந்தூரம்

ஏற்றியல்லோ தீமூட்டி யெரித்துநீயும்
இதமாகப் பதம்பார்த்து செந்தூரித்து
தேற்றியல்லோ நவலோகம் நூற்றுக்கொன்று
சூட்டடா பனிரெண்டு மாற்றுமாகும்
போற்றியல்லோ பின்னுமொரு சூதந்தானும்
புகழாகப் பலமெட்டு எடுத்துநீயும்
மாற்றியல்லோ தங்கமொரு பலமுங்கூட்டி
மைந்தனே தெளிவாக வுருக்கிடாயே. 215

உருக்கியல்லோ பொடியாக்கி யிதனில்கேளு
உத்தமனே பதினாறு பலந்தான்கெந்தி
நொருக்கியல்லோ பொடிசெய்து கூட்டிநீயும்
நேராக அரைவாசி குப்பியிலே போட்டு

Koviloor Digital Library

தருக்கியல்லோ வாலுகையி லேற்றிமூட்டி
சமரசமாய்ப் பதம்பார்த்து செந்தூரித்து
மருக்கியல்லோ யிதைஎடுத்து நூற்றுக்கொன்று
மாட்டடா நவலோக மொன்றுமாமே. 216

ஆமடா இதின்பேரு வாலச்சந்திரன்
அப்பனே குன்றியுண்ணு நேரத்துக்கு
ஓமடா மண்டலந்தான் கொண்டாயானால்
உத்தமனே சந்திரன்போல் முகத்தில்காந்தி
போமடா சட்டையொன்று உரிந்துதானால்
புகழான தங்கம்போல் தேகமாகும்
வேமப்பா னாடியினில் தோஷம்நீங்கி
வெகுசுறுக்காய் தாதுவிர்த்தி விரைந்துகாணே. 217

காணப்பா நரைதிரையுங் கடுகப்போகும்
கன்னிகள்மேல் கவனமடா மெத்தவாகும்
பூணப்பா தந்தமெல்லா மிறுகிக்காணும்
புகழாகக் கண்கள்ரெண்டும் துலக்கமாகும்
ஊணப்பா உடம்பிறுகி வாலையாவான்
உத்தமனே வெகுசுருக்கா யிந்தக்கற்பம்
வீணப்பா போகாது உண்டோர்க்கையா
வேதாந்தி யானாக்கால் சித்தியாமே. 218

துத்தச்சத்து

சித்திக்க உபரசத்தின் சத்தைக் கேளு
செயமான சாரமொரு பணந்தான் ரெண்டு
ஒத்திக்கச் செயவீரம் பணந்தான் ரெண்டு
உத்தமனே மடல்துத்தம் பலமும்போட்டு
கொத்திக்கச் சிப்பிநீர் விட்டேயாட்டிக்
குகையிலிட்டு உருக்கிடவே சத்துமாகும்
பத்திக்கத் துத்தசத்து நாகம் போலப்
பண்பாக உருகுமிது பாருபாரே. 219

துத்தசத்து சிந்தூரம்

பாரடா துத்தசத்தில் வேதைசொல்வேன்
பரிசமுதல் தூம்புரமாம் வேதையாட
நேரடா செயசூதம் துத்தச்சத்தில்
நேராகக் கூட்டியல்லோ உருகும்போது

Koviloor Digital Library

சேரடா நாலிலொன்று தங்கந்தானும்
சிறப்பாக உருக்கியிதை மணியாய்வாங்கி
ஏரடா இந்திடைக்குக் கெந்தியிட்டு
உத்தமனே பொடிசெய்து குப்பிக்கேற்றே. 220

ஏற்றியல்லோ வாலுகையில் தீயைமுட்டி
எடுத்திடுவாய்ச் செந்தூரம் பதமும்பார்த்து
போக்கியல்லோ நவலோகம் ஆயிரத்துக்கொன்று
பூட்டிடவே பதினாறு மாத்துமாகும்
மாற்றியல்லோ வீரமிட்டுச் செந்தூரித்தால்
ஃமந்தனே சூதமிட்டு அரைத்துக்கொண்டு
தோற்றியல்லோ திரியிலிட்டுத் திரித்துக்கொண்டு
சுத்தமாம் ஆநெய்யில் துவைத்திடாயே. 221

துவைத்ததொரு திரியெடுத்துத் தீபமேற்றி
சூழவே கடுதாசிக் குருதுகட்டி
பைத்ததொரு நவலோகத் தட்டுவைத்து
பாங்கான தீயவித்த தூமஞ்சாடி
யவைத்ததொரு தட்டெல்லாம் கருத்துப்போகும்
அப்பனே தணல்காட்டத் தங்கமாகும்
கைத்ததொரு தூம்புரமாம் வேதைமார்க்கம்
கண்டுகொள்ளு மாணாக்காள் கண்டுகொள்ளே. 222

காந்த சத்து

கண்டுகொள்ளு காந்தமது பலந்தானொன்று
கட்டியதோர் சாரமது பணந்தானைந்து
கண்டுகொள்ளு செயவீரம் பணந்தானைந்து
செப்பக்கேள் வெண்காரம் காசும்போட்டு
ஒண்டுகொள்ளு சிப்பிநீர் விட்டேயாட்டி
உத்தமனே உருட்டியொரு குகையில்வைத்து
பண்டுகொள்ளு சில்லிட்டு உருக்கிப்பாரு
பளபளத்து னாகம்போ லிருக்கும்பாரே. 223

காந்தசத்து சிந்தூரம்

பாரடா காந்தமது நாகமானால்
பரிவான காயசித்தி லோகசித்தி
நேரடா யிந்திடைக்குச் செயரசமுங்கூட்டி
நிலையான சத்திடைக்குத் தங்கம்கூட்டி

Koviloor Digital Library

சேரடா உருக்கியிதை மணியாய்வாங்கி
சிறப்பான கெந்தகமுஞ் சமனாய்ச்சேர்த்து
சேரடா பொடிசெய்து குப்பிக்கேற்றி
சிறப்பாக வாலுகையில் தீயைமூட்டே. 224

மூட்டியல்லோ செந்தூரப் பதத்தைப்பாரு
மோசங்கள் வாராமல் சலாகுபோட்டு
நீட்டியல்லோ சலாகுமுனை கரகரப்புக்கண்டால்
நிலைத்துதடா செந்தூரம் பதமாச்சென்று
பூட்டியல்லோ யீசான்யம் பூசைபோட்டு
புகழாகக் குளிர்ந்தபின்பு யிறக்கிப்பாரு
ஆட்டியல்லோ செந்தூர மருணன்போலாம்
அப்பனே தினம்ரெண்டு குன்றிதிண்ணே. 225

திண்ணடா மண்டலத்தில் காயசித்தி
சிகப்பாகு மருணனைப்போல் தேகந்தானும்
மண்ணடா கரபாதம் கஞ்சம்போலாம்
மைந்தனே ரோமமது வண்டுபோலாம்
கண்ணடா கண்கள்ரெண்டும் சிவப்பேயாகும்
கலகலத்த தந்தமெல்லாம் கல்லுப்போலாம்
பொன்னடா ஆகவென்றால் சொல்லக்கேளு
பூட்டுகிற துறையினது போக்கைக்கேளே. 226

காந்தசத்து சிந்தூரம் (வேறு)

கேளடா காந்தமென்ற னாகமொன்று
கெடியான தங்கமொன்று செயரசந்தானொன்று
நாளடா மூன்றுமொன்றாய் உருகும்போது
நலமான நாகமதில் மூன்றுபோடு
கேளடா புகையைந்துங் கட்டிக்கொண்டு
குமுறவே நின்றுருகி மணியுமாகும்
வேளடா இந்திடைக்குக் கெந்திகூட்டி
விளங்கிடவே னாலிலொன்று சிலையுஞ்சேரே. 227

சேர்த்தல்லோ பொடிசெய்து குப்பிக்கேற்றி
சிறப்பான வாலுகையில் வைத்துமூடி
கோர்த்தல்லோ தீயெரிக்கச் செந்தூரமாகும்
குமுறாமல் பதம்பார்த்து இறக்கிக்கொண்டு
நூற்றல்லோ ஒன்றிடுவாய் நவலோகத்தில்
நுகரவே பனிரண்டு மாற்றுமாகும்

Koviloor Digital Library

பார்த்தல்லோ மயங்காதே பொன்னைநீயும்
பராபரத்தில் குளிகையிடடுப் பார்த்திடாயே. 228

பூனாகச்சத்து

பார்த்திடவே பூனாகச் சத்தைக்கேளு
பறிவாகச் செந்தரையின் பூனாகத்தை
மார்த்திடுவா யுலர்த்தியதைப் பொடியேசெய்து
மைந்தனே செயசாரம் வராகனொன்று
கோர்த்திடுவாய் செவ்வீரம் விராகனொன்று
கூட்டடா வெண்காரம் விராகனஞ்சு
போர்த்திடுவா யிதுவெல்லா சிப்பிநீரால்
புகழாக வரைத்துருட்டிக் குகையில்வையே. 229

பூனாகச்சத்து சிந்தூரம்

வைத்தல்லோ சில்லிட்டே யுருக்கும்போது
மைந்தனே மணிமணியாய்ச் சத்துவீழும்
ஒய்த்தல்லோ மணியெல்லாம் உருக்கிவார்க்க
உத்தமனே பளபளக்கும் வயிரம்போலாம்
பைத்தல்லோ பூனாகச் சத்துதானும்
பாங்காக காசிடைதான் உருக்கும்போது
நைத்தல்லோ நாகமந்த யிடையேபோடு
நலமாக உட்கொண்டு உருகும்பாரே. 230

பாரப்பா யிப்படியே ஊட்டிஆட்டப்
பரிவாக நூறிடைதா னாகங்கட்டும்
நேரப்பா கட்டியதோர் னாகமொன்று
நிலையான சூதமொன்று தங்கமொன்று
தாரப்பா உருக்கியிதை வாங்கிக்கொண்டு
சமனாக கெந்தகமும் கூட்டிக்கொண்டு
கூரப்பா பொடியாக்கி குப்பிக்கேற்றி
குறையாமல் வாலுகையில் வைத்திடாயே. 231

வைத்தல்லோ தீயெரித்துச் செந்தூரித்தால்
மாட்டலாம் நூற்றிற்கு ஒன்றேவேதை
கைத்தல்லோ போகாது பதினாறுமாற்றாங்
கைகண்ட சித்தியடா பூனாகவேதை
மைத்தல்லோ மற்றதெல்லாம் சுறுக்கில்லைவேதை
மைந்தனே ஆதிரச னாகமாச்சு
பொய்த்தல்லோ போகாதே யாரெடுத்துச்செய்தும்
புண்ணியற்கு ரசவித்தை புகழுண்டாமே. 232

Koviloor Digital Library

பூனாகசத்து சிந்தூரம் (வேறு)

புகழான பூனாகச் சத்தினோடே
பூட்டியல்லோ சமன்தங்க முருகும்போது
தகளான செயசூதம் சமனாய்ப்போட்டு
சாதகமா யெடுத்திதனை நொறுக்கிக்கொண்டு
அகழான இந்திடைக்கு கெந்திகூட்டி
அப்பனே குப்பியிலே வாரியிட்டு
நிகரான வாலுகையி லேற்றிமூட்டி
நிர்மலம்போல் செந்தூர மாகுந்தானே. 233

தானென்ற செந்தூரம் நித்தங்கேளு
சமரசமாய் ரண்டுகுன்றி திண்ணுதிண்ணு
கானென்ற மண்டலத்தே காயசித்தி
கடுஞ்சுறுக்காய்ச் சட்டையொன்று தள்ளிப்போடும்
வானென்ற குருபதந்தான் வெட்டவெளியாகும்
மாட்டுகிற கேசரிப்பூ மைந்தாகாணும்
ஊனென்ற பூனாகச் சஞ்சீவியப்பா
உத்தமனே யிதையறிந்து வுரைத்துக்கொள்ளே 234

இரும்புசத்து

கொள்ளவே அயத்தினது கற்பங்கேளு
குறையாமல் அரப்பொடியோ பலமுரெண்டு
தெள்ளவே செயசாரம் பணமுமூன்று
செயமான வீரமது பணமும் ரெண்டு
அள்ளவே செயநீரை விட்டேயாட்டி
அப்பனே குகையிலிட்டு உருக்கிப்பாரு
மெள்ளவே யீயம்போ லுருகிநிற்கும்
வெகுசுறுக்கு அயத்தினது ஈயந்தானே. 235

இரும்புசத்து சிந்தூரம்

தானென்ற ஈயமது உருகும்போது
தாக்கிடவே நாகத்தை நூறுகட்டும்
வானென்ற பச்சைரச மிந்தனாகம்
வாங்கியடா கட்டுமே நூறுதொந்தம்
கோனென்ற தங்கமிட்டுக் கெந்தகமுங்கூட்டிக்
குமுறவே செந்தூரம் செய்தாயானால்

Koviloor Digital Library

கானென்ற நவலோகம் நூற்றுக்கொன்று
காட்டிடவே பனிரெண்டு மாற்றுமாமே. 236

வேறு

ஆமப்பா யிரும்போடு தங்கம் நேராய்
ஆடிநின்று வருகையிலே செயரசமுங்கேளு
ஓமப்பா அவ்விடையே போட்டு நீதான்
உத்தமனே யுருக்கியொரு மணியாய் வாங்கி
சேமப்பா யிவ்விடைக்குக் கெந்திகூட்டித்
திறமாக நொறுக்கியிதை குப்பிக்கேற்றி
தாமப்பா வாலுகையில் செந்தூரித்து
சாதகமாய் தினம்ரெண்டு குன்றிதின்னே. 237

தின்னடா காயமது இரும்பு போலாம்
செகமறியத் தாதுவெல்லாம் முறுக்கே யேறும்
மன்னடா இரும்பேது அப்ரேகமப்பா
மகத்தான சித்தியடா மண்டலத்திலாகும்
பொன்னடா உன்தேகம் வயிரத்தூணாம்
புருஷத்துவ மென்பதுவும் பொருந்திநிற்கும்
இன்னுமடா இரும்பினது போக்குச் சொல்ல
எத்தனைதா னிமுத்தாலும் ஏறுந்தானே. 238

இராஜவர்த்தி சத்து

ஏறவே மனவர்த்தக் கருவைக் கேளு
எடுத்திடப் பாமனவர்த் தம்பலமுரெண்டு
தேறவே ஜெயசாரம் விராகனொன்று
ஜெயமான வீரமது விராகனொன்று
மாறவே சிப்பிநீர் விட்டேயாட்டி
வைத்தல்லோ குகைக்குள்ளே யுருக்கிப்பாரு
ஊறவே மணிமணியாய் நிற்குமப்பா
உரைக்கிறேன் வேதையிதில் உரைக்கிறேனே. 239

இராஜவர்த்தி சத்து சிந்தூரம்

உரைக்கிறேன் மனவர்த்தச் சத்துமொன்று
உத்தமனே காரீயம் பத்துக்கட்டும்
தரைக்கிறேன் காரீயம் பத்தேயாடில்
தாக்கடா நாகமது பத்துக்கட்டும்

Koviloor Digital Library

நிறைக்கிறேன் ரெண்டுமொன்றா யுருகும்போது
நீட்டடா சூதமதில் பத்துக்கட்டும்
பறைக்கிறே னிவ்விடைக்கு நாலுக்கொன்று
பரியிட்டு ஒரு மணியாய்ப் பாங்காய் வாங்கே. 240

வாங்கியே யிவ்விடைக்குக் கெந்தி கூட்டி
மைந்தனே செந்தூரம் செய்தாயானால்
ஓங்கியே நவலோகம் நூற்றுக்கொன்று
ஊட்டிடவே பொன்னாகு முயர்த்திமெத்த
தாங்கியே தினம்ரெண்டு குன்றி கொள்ள
சாதகமாய் மண்டலத்தில் காயசித்தி
பாங்கியே தேகமது நீலம்போல
பளபளத்துக் காயசித்தி யாகும் பாரே. 241

நிமிளை சத்து

பாரப்பா நிமிளையென்ற சத்தைச் சொல்வேன்
பரிசமுட அஷ்டாங்க வேதையாட
நேரப்பா நிமிளையது பலந்தானொன்று
நிலைத்துநின்ற சாரமது பணந்தானொன்று
சேரப்பா ஜெயவீரம் பணந்தானொன்றா
சேர்த்தல்லோ சிப்பிநீர் விட்டேயாட்டி
தாரப்பா குகையிலிட்டே யுருக்கிநீதான்
தங்கம் போல் நின்றாடும் சார்ந்துகாணே. 242

நிமிளைசத்து சிந்தூர குரு

காணடா நிமிளையொரு காசுதூக்கிக்
கடியதொரு தங்கமது காசுதூக்கி
பூணடா ரெண்டுமொன்றா யுருகும்போது
போட்டிடுவாய் காசுரெண்டு ஜெயசூதத்தை
ஊணடா உருக்கியொரு மணியாய் வாங்கி
உத்தமனே குருசெய்ய முறையைக்கேளு
தோணடா சவுக்காரச் சுன்னம்ரெண்டு
துடியான வீரமொன்று பூரமொன்றே. 243

ஒன்றடா சீனமது கூடப்போடு
உரத்தோடு குருவண்டு சூதம்போடு
நன்றடா சிப்பிநீர் விட்டேயாட்டி
நலமான மணிமேலே பூசிக்காய்ச்சி
பன்றடா அண்டத்தோல் பொடியில் வைத்துப்

Koviloor Digital Library

பாங்காக மூடியே சீலைசெய்து
கன்றடா கனபுடமாய்ப் போட்டாயானால்
காரணமாம் நிமிளையது குருவுமாமே. 244

குருவாலே சவாதிட்டுக் காரங்கூட்டி
குமுறவே மர்த்தித்து வைத்துக்கொண்டு
கருவிலே சரக்கெல்லாந் தொட்டுத்தொட்டு
காட்டிடுவாய் ஒன்பதிலும் நூற்றுக்கொன்று
தருவிலே பதினாறு மாற்றுகாணும்
தாயுடைய நாதமடா இந்தவேதை
அருவிலே யிதைநீக்கிச் செந்தூரஞ் சொல்வேன்
அண்டரண்ட பகிரர்க்கும் அறிந்துகொள்ளே. 245

நிமிளைசத்து சிந்தூரம்

அறிந்துகொண்டு நிமிளைரெண்டு பலந்தான்தூக்கி
அப்பனே மூன்றுபலஞ் ஜெயகூதங்கூட்டி
மறிந்துகொள்ளு தங்கமொரு பலமும்போடு
வாகாக யுருக்கியொரு மணியாய்வாங்கி
நெறிந்துகொள்ளு இவ்விடைக்குக் கெந்தகமும்போடு
நேராகப் பொடிசெய்து குப்பிக்கேற்றி
பிறிந்துகொள்ளு வாலுகையின் மேலேவைத்துப்
பேராக அடுப்பேற்றித் தீயைமூட்டே. 246

மூட்டியே செந்தூரம் பதத்தைப்பார்த்து
முதிராம லிறக்கியே பூசைபண்ணி
நீட்டியே ஒன்பதிலும் நூற்றுக்கொன்று
நிறையாக இட்டிடவே பதினாறுமாற்றாம்
பூட்டியே செந்தூரம் தூமத்துக்காகும்
புகழான தேவியது னாதவேகம்
ஆட்டியே பிரித்தாக்கா லனேகம்போக்காம்
ஆதியென்ற கெந்தகத்தி னாண்மைதானே. 247

கர்ப்பூரசிலை சத்து

தானென்ற கர்ப்பூரச் சிலையைக்கேளு
சாதகமாய்ச் சத்தாக்கி வேதையாடக்
கானென்ற பலம்ரெண்டு கர்ப்பூரச்சிலைதான்
கட்டியதோர் சாரமது பணந்தான்மூன்று
வானென்ற வீரமது பணந்தான்மூன்று

Koviloor Digital Library

வார்த்தல்லோ சிப்பிநீ ராட்டிக்கொண்டு
வேனென்ற ககையிலிட்டு ஊதும்போது
வெள்ளியைப்போல் சத்தெல்லா மிறங்கும்பாரே. 248

இறங்கியதோர் சத்தெடுத்து யுருகும்போது
இட்டுப்பார் நாகத்தை நூறுகட்டு
மிறங்கியதோர் சத்தெடுத்து யுருகும்போது
விட்டுப்பார் தங்கமது நூறுகட்டும்
இறங்கியதோர் சத்தெடுத்து யுருகும்போது
இருபதிடை வங்கமிடக் கட்டிப்போமே
இறங்கியதோர் சத்தெடுத்து வேதைபார்க்க
இனமான சரக்குகளைக் கட்டுகட்டே. 249

கர்ப்பூரசிலை சத்து சிந்தூரம்

கட்டியதோர் நாகத்தில் சமனாய்ச்சூதங்
காட்டியல்லோ னாலிலொன்று தாயுங்கூட்டி
தொட்டியதோர் கெந்தகமே சமனாய்ச்சேர்த்து
சிறப்பாகச் செந்தூரம் செய்தாயானால்
ஒட்டியதோ ரொன்பதிலும் நூற்றுக்கொன்று
ஓடியல்லோ தசமாற்றுக் காணுங்காணும்
நெட்டியதோர் வேதையடா யிதினின்வேகம்
நேரான காரீயக் கட்டைக்கேளே. 250

காரீயக்கட்டுச் சிந்தூரம்

கேளடா கட்டியதோர் காரீயத்தில்
கெடியாக னாலிலொன்று தங்கஞ்சேர்த்து
நாளடா யுருகையிலே சமனாய்ச்சூதம்
நாட்டிடவே வாங்கியது கட்டிப்போகும்
நீளடா யிவ்விடைக்குக் கெந்திகூட்டி
நேராகச் செந்தூரம் செய்தாயானால்
சூளடா யொன்பதிலும் அன்பதிற்கு
சூட்டிடவே தங்கமுமாஞ் சூட்டிப்பாரே. 251

சூட்டியதோர் தங்கமென்ற தகட்டைத்தானும்
துடிய்யாக யுருக்கியே சமனாய்நாகம்
பூட்டியே யுருக்கையிலே சமனாய்ச்சூதம்
போட்டுடனே யுட்கொண்டு கட்டிப்போகும்

Koviloor Digital Library

நீட்டியே யிதையெடுத்துச் சமனாய்க்கெந்தி
நேராகப் பொடிசெய்து குப்பிக்கேற்றி
ஆட்டியே வாலுகையில் செந்தூரித்து
ஆத்தாளு மப்பனையும் பூசைபண்ணே. 252

காரீயக்கட்டுச் சிந்தூரம் (வேறு)

பண்ணியதோர் செந்தூரம் நூற்றுக்கொன்று
பாச்சினா லொன்பதிலும் பதினாறுமாற்று
அண்ணியதோர் தினம்குன்றி கொண்டாயானால்
அப்பனே தங்கம்போல் தேகமாகும்
நண்ணியதோர் வேதையிது வித்தின்வேதை
நலமான சிவயோகிக் கெய்யுமெய்யும்
ஒண்ணியதோர் வேதைக்குத் தங்கம்பொன்னாம்
ஒன்றுமில்லை ஒன்றுமில்லை யுன்னிக்காணே. 253

வங்ககுரு

காணப்பா கடியதோர் வங்கத்தாலே
காணவே வங்கவெள்ளி முறையைச்சொல்வேன்
பூணப்பா வங்கம்நின்று உருகும்போது
போடடா சரிகைவெள்ளி யிதிலேபாதி
தோணப்பா ரெண்டிடைக்குச் செயசூதம்ரெட்டி
சூட்டியே யுருக்கியொரு மணியாய்வாங்கி
ஊணப்பா வெள்ளையொடு வீரஞ்சீனம்
உத்தமனே சவுக்காரச் சுன்னங்கூட்டே. 254

கூட்டப்பா தாளகத்தின் சுன்னந்தானும்
குறையாமல் சமனாக நிறுத்துக் கொண்டு
மூட்டப்பா மணியிடைக்கு யெல்லாந்தானும்
மூதண்ட புனுகோடே யிழைத்துப்பூசி
நீட்டப்பா நன்றோட்டுப் பொடியில் வைத்து
நேராக மூட்டியொரு சீலைசெய்து
பூட்டப்பா கெஜபுடமாய்க் கனக்கநீயும்
புகழ்பெரிய குருவாகும் வங்கந்தானே. 255

வங்கமென்ற குருவெடுத்து வங்கத்துள்ளே
மாட்டடா ஐந்நூற்றுக் கொன்றுநீயும்
வங்கமென்ற நீர்வற்றி வெள்ளியாகும்
மாற்றதுவும் முப்பத்தி ரெண்டுமாற்று

Koviloor Digital Library

வங்கமென்ற குருவெடுத்து வீரங்காரம்
மர்த்தித்து ஓடுமுதல் கல்லிற்பூசி
வங்கமென்ற குருவெடுக்கத் தங்கமாச்சு
மாற்றிலுமே பதினாறு மாற்றுமாமே. 256

ஆமப்பா வங்கமென்ற குருவையள்ளி
அப்பனே சூதத்தில் போட்டு நீயும்
ஓமப்பா முலைப்பாலை விட்டுக் காய்ச்ச
உத்தமனே யிட்டலிபோல் கட்டிப்போகும்
தாமப்பா சரக்கையெல்லாம் பூசிக்காய்ச்ச
தயங்காமல் மணிபோல நின்றேயாடும்
காமப்பால் வித்தையே யிதுக்குமீடோ
காரசாரத் துறைதான் தீநீராட்டே. 257

படிகச் சத்து

ஆட்டான படிகக்கல் சத்தைச் சொல்வேன்
அப்பனே படிகக்கல் பலந்தான்ரெண்டு
கூட்டான செயசாரம் விராகனொன்று
கூடவே ஜெயவீரம் வராகனொன்று
நீட்டான வெண்காரம் விராகனைந்து
நேராகச் சிப்பிநீர் விட்டேயாட்டி
பூட்டான குகையினுள்ளே வைத்தேயூதப்
பொங்கியது பொரிபொரியாய்ச் சத்துமாமே. 258

படிகச்சத்து செந்தூரம்

சத்தான படிகக்கல் சத்தில்நாகம்
தாக்கிடவே நாகமட்டும் கட்டும்கட்டும்
வித்தான தங்கமிட்டுச் சூதஞ்சேர்த்து
விளங்கியதோ ரிவ்வெடைக்குக் கெந்திகூட்டி
முத்தான வாலுகையில் செந்தூரித்தால்
மூற்கமுட னாயிரத்துக் கொன்றேயோடும்
பத்தான தினங்குன்றி கொண்டாயானால்
பாலனைப்போல் பதினாறு வயதுமாச்சே. 259

கல்நார் சத்து

ஆமப்பா கல்னாரின் சத்தைக்கேளு
அப்பனே ரெண்டுபல மெடுத்துக் கொண்டு

Koviloor Digital Library

ஓமப்பா செயசாரம் அஞ்சுபணங்கூட்டி
உத்தமனே செயவீரம் அஞ்சு பணம்போட்டு
சேமப்பா சிப்பிநீர் விட்டேயாட்டி
திறமான குகையிலிட்டே யுருக்கிநீதான்
வாமப்பா லுண்டவர்க்கு சத்துவீழும்
மதிகெட்ட பசுவானால் தீயுந்தானே. 260

இரசக்கட்டு

தானென்ற சத்துக்கு நேரேதங்கம்
சாத்தியே யுருக்கியொரு கிண்ணிவார்த்து
வானென்ற சூதமிட்டு வாலுகையில் வைத்து
மத்தைச்சார் விட்டதிலே கொதிக்கவைக்க
கோனென்ற சூதமது கட்டிப் போகும்
குளிகைக்காங் குருவுக்காங் கோடிவேதை
ஊனென்ற தேகமது சித்தியாகும்
உடலா யாகாசத் திலோடுவோடே. 261

கல்னார்சத்து சிந்தூரம்

ஓடியதோர் சத்துக்குப் பாதிதங்கம்
ஊட்டியல்லோ யுருகையிலே சூதங்கேளு
நாடியதோர் சமனிட்டு யெடுத்துக்கொண்டு
நலமான யிவ்விடைக்குக் கெந்திகூட்டி
நீடியதோர் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
நேரான வாலுகையில் செந்தூரித்து
ஆடியதோர் ஒன்பதிலும் நூற்றுக்கொன்று
அப்பனே வேதிக்கு மறிந்துகாணே. 262

அறிந்துஇந்தச் செந்தூரம் ரெண்டுகுன்றி
அப்பனே தினமுண்ணு மண்டலத்தினுள்ளே
பிரிந்துநின்ற நரம்பெல்லாம் முறுக்குமேறிப்
பேரான காயமது பொன்போலாகும்
முறிந்துநின்ற நரம்பெல்லாங் கூடிப்போகும்
மூச்சடா ஒட்டாமல் சுழியிலேறும்
நெறிந்துஇந்த காயசித்தி சுறுக்குமெத்த
நேராகக் கொண்டேறி நில்லு நில்லே. 263

சுக்கான்கல் சத்து

நில்லடா சுக்காங்கல் சத்தாய்வாங்க
நேராகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
கல்லுடா ரெண்டுபல மெடுத்துக்கொண்டு

Koviloor Digital Library

கட்டியதோர் சாரமது காகமொன்று
செல்லடா கட்டியதோர் வீரந்தானும்
திறமாகக் காசிடைதான் கூடப்போட்டு
வல்லடா சிப்பிநீர் விட்டேயாட்டி
வைத்துருக்கக் காரமிட்டு ஈயமாமே. 264

சுக்கான் கல்சத்து குரு

ஆமிந்த ஈயமது பலந்தானொன்று
அப்பனே சரிகைவெள்ளி பலந்தானொன்று
சேமிந்த செயசூதம் பலந்தானொன்று
திரளநன்றாய் உருக்கியதை மணியாய் வாங்கி
காமிந்த வீரமொடு சீனக்காரம்
கடுஞ்சுருக்காம் சவுக்காரம் அரிதாரந்தான்
வாமிந்த மணியிடைக்கி நேரேகூட்டி
மைந்தனே புனுகிட்டுக் குழைத்துப்பூசே. 265

பூசியே கிளிஞ்சியது தூளில்வைத்துப்
போடடா கனபுடமாய்ப் பொருமிநீறும்
ஆசியே குருவாச்சுச் சுக்கான்சத்து
அப்பனே னாலிலொன்று வீரஞ்சேர்த்து
வாசியே வங்கத்தில் நூற்றுக்கொன்று
மாட்டினால் பதினாறு மாற்றுவெள்ளி
நேசியே செம்பிலன் பத்துக்கு ஒன்று
நீட்டிடவே தசமாற்றுக் காணுந்தானே. 266

தேனென்ற யுபரசங்கள் நூற்றிரண்டு பத்துத்
திராவகத்தால் சத்தாகும் தனித்தனியே வேதை
கோனென்ற குருவாகும் களங்கமாகும்
கொடியதொரு செந்தூரம் கோடியாகும்
வானென்ற சூதமது குளிகையாகும்
மைந்தனே சாரணையைத் தீர்த்தாயானால்
ஊனென்ற புடம்போடே கெவனமாகும்
உத்தமனே பாஷாண வற்கங்கேளே. 267

கெந்தகச் சத்து

கேளடா கெந்தகந்தான் பலந்தானொன்று
கெடியான செயசாரம் பணந்தானொன்று

Koviloor Digital Library

வாளடா செயவீரம் பணந்தானொன்று
வாகாகச் சிப்பிநீர் விட்டேயாட்டி
நாளடா காரமிட்டு உருக்கும்போது
நலமான சத்தாக நடுவேநிற்கும்
தேளடா தேவியுட னாதச்சத்து
சேர்ந்தாக்கால் நாகரசம் நூறுசாமே. 268

சாகுமடா நூறுதொந்தம் நாகந்தானும்
தாக்கினால் நூறுதொந்தம் சூதம்கட்டும்
சாகுமடா னூறுதொந்தம் தங்கம்தங்கம்
சாத்திப்பார் காரீயம் நூறுகட்டும்
சாகுமடா தென்றிதல்லாம் க்ஷணத்திலப்பா
தாக்கினால் நவலோகம் பத்துதொந்தம்
சாகுமடா பாஷாணம் அறுபத்துநாலும்
தாயுடைய னாதத்தில் நாட்டும்பாரே. 269

கெந்தகச்சத்து குரு

பாரப்பா ஒவ்வொன்றில் குருவோகோடி
பரிவான செந்தூரக் களங்கங்கோடி
நேரப்பா ஒவ்வொன்றை பிரித்தேயாட
நிலையேது கரையேது நினைவுமேது
தூரப்பா தொட்டவிடந் தெரியாதப்பா
தோகையுட சத்தினா லாடுமாடும்
போரப்பா தூமமுதல் பரிசவேதை
போகுமடா போகுமடா புனைந்து செய்யே. 270

தாளகச் சத்து

செய்யடா தாளகத்தின் சத்தைச் சொல்வேன்
சிறப்பான தாளகமும் பலமுந்தூக்கி
கையடா செயசாரம் பணமுமொன்று
கட்டியதோர் வீரமது பணமுமொன்று
நய்யடா சிப்பிநீர் விட்டேயாட்டி
நலமாகக் காரமிட்டு உருக்கிப்பாரு
மெய்யடா சத்தாக னாகம்போலே
வெகுசுறுக்காய் தாளகந்தா னிறங்குந்தானே. 271

தாளகசத்து சிந்தூரம்

இறங்கியதோர் தாளகத்தின் சத்தினோடே
யிட்டல்லோ சமன்தங்க முருக்கும்போது

Koviloor Digital Library

தரங்கியதோர் செயரசந்தான் ரெட்டிப் பிட்டு
சாதகமாய் மணிபோல வாங்கிக் கொண்டு
அறங்கியதோர் கெந்தகத்தைச் சமனாய் கூட்டி
அப்பனே செந்தூரம் செய்தாயானால்
உறங்கியதோர் ஒன்பதிலும் நூற்றுக் கொன்று
உயர்த்தியடா பதினெட்டு மாற்றுமாமே. 272

ஆமப்பா தாளகத்தின் சத்தைத்தானும்
அப்பனே பலமெடுத்து வில்லைப்போல்வார்த்து
ஓமப்பா வீரமொடு சூதம்பூசி
உத்தமனே குருவண்டு சீனந்தானும்
தேமப்பா வகையொன்று காசுமூன்று
சிறப்பாக சிப்பிநீர் விட்டேயாட்டி
தாமப்பா வில்லையின்மேல் பூசிக்காச்சி
சமரசமாய் ஒட்டில்வைத்து ஓடுமூடே. 273

மூடியே சீலைசெய்து கெஜபுடமாய்ப்போட
மூதண்ட குருவாகுந் தாளகந்தானப்பா
நீடியே குருவெடுத்து அயக்கொமுவில்பூசி
நேராக சீலைசுற்றி எண்ணெய் தோய்த்து
நாடியே புடம்போட ஈயமாகும்
நலமான அயனாகம் பாருபாரு
தேடியே அலைவார்கள் லோகவாதி
திறமாக அயனாக செயந்தான்காணே. 274

காணப்பா அயனாக முருகும்போது
கமளித்து னாகத்தை நூறுகட்டுந்
தோணப்பா இதையெடுத்துச் செந்தூரித்தால்
தூரமடா வெகுதூரம் வேதையாகும்
பூணப்பா தாளகத்தின் குருவைத்தொட்டு
பூசினால் உபரசங்க ளெல்லாமீயம்
வீணப்பா போகாது ஒவ்வொன்றில்வேதை
விட்டவிடந் தொட்டவிடந் தெரியாதாட்டே. 275

மனோசிலை சத்து

ஆட்டான மனோசிலையின் சத்தைக்கேளு
அப்பனே சிலையதுவும் பலந்தானொன்று

Koviloor Digital Library

மூட்டான செயசாரம் பணந்தானொன்று
மூதண்ட செயவீரம் பணந்தானொன்று
நீட்டான செயநீரை விட்டேயாட்டி
நேராகக் காரமிட்டு உருக்கிப்பாரு
பூட்டான மனோசிலைதான் சத்தாய்நிற்கும்
புகழான ஜெகசோதி நாதந்தானே. 276

மனோசிலைசத்து சிந்தூரம்

நாதமென்ற சத்தோடே தங்கஞ்சூதம்
நாடியே செந்தூரம் செய்தாயானால்
வாதமென்ற அங்கமெல்லா மெட்டுமாடும்
வாகான களங்கோடு குருதான்கோடி
வேதமென்ற சொற்படிதான் சின்மயமுஞ்சொன்னார்
வெகுபோக்குத் தூமமுதல் பரிசமாடும்
பேதமென்ற போக்கல்லோ திராவகத்தின்வேதை
சிவன்சொன்னார் தேவிக்குச் சித்திதானே. 277

தொட்டிச்சத்து

சித்தியென்ற தொட்டியது சத்தைக்கேளு
சிறப்பாகப் புத்தொட்டுத் தொட்டிதானும்
பத்தியென்ற பலமெடுத்து மதிலேகேளு
பாங்கான செயசாரம் பணமும்போட்டு
முத்தியென்ற செயவீரம் பணமும்போட்டு
மூதண்ட சிப்பிநீர் விட்டேயாட்டி
அத்தியென்ற காரமிட்டு உருகும்போது
அப்பனே செம்புபோல் சத்துமாமே. 278

தொட்டிச்சத்து சிந்தூரம்

ஆமப்பா தொட்டியது சத்திற்சேர்க்க
அப்பனே தங்கமிட்டு உருகும்போது
ஓமப்பா செயசூதம் ரெட்டிகூட்டி
உத்தமனே மணியாக வாங்கிக்கொண்டு
சேமப்பா சமனாக கெந்திபோட்டு
சிறக்கவே வாலுகையில் செந்தூரித்தால்
தாமப்பா நவலோகம் நூற்றுக்கொன்று
தாக்கிடவே பதினாறு மாற்றும்பாரே. 279

லிங்கச்சத்து

பாரப்பா லிங்கமது பலந்தானொன்று
பரிவான செயசாரம் பணந்தானொன்று

Koviloor Digital Library

நேரப்பா செயவீரம் பணந்தானொன்று
நிலையான சிப்பிநீர் விட்டேயாட்டி
தூரப்பா காரமிட்டு உருக்கிப்பாரு
சுகமான பவழம்போல் மணியாய்நிற்கும்
சீரப்பா யிவ்விடைக்குச் செயசூதம் போட்டு
சிறப்பான சூதமிடை தங்கம்போடே. 280

லிங்கசிந்தூரம்

போட்டல்லோ மணியாக வாங்கிக்கொண்டு
புகழான நேரிடைதான் கெந்திகூட்டி
நீட்டல்லோ வாலுகையில் செந்தூரித்து
நிலையாக ஒன்பதிலும் நூற்றுக்கொன்று
மூட்டல்லோ இட்டுப்பார் பதினாறுமாற்று
முசியாமல் ரெண்டுகுன்றி தினம்தான் கொள்ள
ஆட்டல்லோ மண்டலத்தில் காயசித்தி
ஆச்சரியம் வாலையைப்போ லாகுந்தானே. 281

கெவுரிச்சத்து

தானென்ற கெவுரியது சத்தைக்கேளு
சாதகமாய்க் கெவுரியொரு பலந்தான்தூக்கி
வானென்ற செயசாரம் பணந்தானொன்று
வாகான செயவீரம் பணந்தானொன்று
ஊனென்ற சிப்பிநீர் விட்டேயாட்டி
உத்தமனே காரமிட்டு வுருகும்போது
வேனென்ற கெவுரியது சத்தாய்நிற்கும்
வேதையிடச் சொல்லுகிறேன் விரைந்துகேளே. 282

கெவுரிச்சத்துச் சிந்தூரம்

கேளப்பா கெவுரியுடன் தங்கஞ்சூதம்
கெடியாக கெந்தியிட்டுச் செந்தூரித்து
நாளப்பா நவலோக மன்பதிற்தொன்று
நாட்டினால் தசமாற்று நலமாய்க்காணும்
வேளப்பா எரித்தசிவன் வாமபாகம்
விளங்கிநின்ற சத்தியடா கெவுரித்தாய்தான்
சூளப்பா இதின்வேதை தூமமாடுஞ்
சொற்பெரிய தீமுறுகல் துறையைக்கேளே. 283

தீமுறுகல் சத்து

துறையான தீமுறுகல் பலந்தானொன்று
சொற்பெரிய செயசாரம் பணந்தானொன்று

Koviloor Digital Library

மறையான செயவீரம் பணந்தானொன்று
மைந்தனே சிப்பிநீர் விட்டேயாட்டி
நிறையான காரமிட்டு வுருக்கும்போது
நிற்குமடா சத்தாகிக் கெட்டியாக
அரைடான சத்துக்குத் தங்கம்சூதம்
அப்பனே கெந்தியிட்டுக் குப்பிக்கேற்றே. 284

தீமுறுகல் சத்து சிந்தூரம்

ஏற்றியல்லோ செந்தூரம் செய்தாயானால்
யேழுவகை லோகத்தில் எழுபதிலுமோடும்
மாற்றியல்லோ யுபரசத்தி விட்டாயானால்
யகத்தான செயமாகும் பாருபாரு
போற்றியல்லோ வுபரசத்தின் செம்பின்வேதை
போகுமடா கோடான கோடிதானும்
ஆற்றியல்லோ தீமுறுகல் ஆடும்ஆட்டு
ஆச்சரியம் வெகுகறுக்கு அறிந்துபாரே. 285

பவளப்புத்துச் சத்து

பாரடா பவளம்போல் புத்தாய்நின்ற
பாஷாண சத்தெடுக்கப் பாடுவேன்கேள்
நேரடா பலமொன்றே யிதனைத் தூக்கி
நிலைத்துநின்ற செயசாரம் பணமும்போட்டு
கூரப்பா செயவீரம் பணமும்போட்டுக்
கொடியதொரு சிப்பிநீர் விட்டேயாட்டி
தாரடா உருக்கி[illegible] சத்[illegible]ப்நிற்கு[illegible]
தனிப்[illegible] புத்தி[illegible]து சத்[illegible]. 286

பவளப்புத்துச் சத்து சிந்தூரம்

தானென்ற சத்துநின்று வுருகும்போது
தாக்கடா னாகத்தை நூறுகட்டும்
வானென்ற செயன[illegible]த் திடை[illegible] கட்[illegible]
மாட்டியல்லோ இவ்விடைக்குச் சூதம்கூட்டிக்
கானென்ற கெந்தியிட்டுச் செந்தூரித்து
காட்டடா ஒன்பதிலும் நூற்றுக்கொன்று
கோனொன்ற பதினாறு மாற்றேயாகும்
கொள்ளரிது கொண்டாக்கால் கொடியதீயே. 287

மிருதார்சிங்கிச் சத்து

தீயான மிருதாரு சிங்கிதன்னைச்
செய்யவே சத்தாகச் செப்பக்கேளு

Koviloor Digital Library

தாயான தங்கமொன்று சத்துநேரே
சமரசமாய்ச் செந்தூரஞ் செய்யச்சொல்வேன்
காயான சிங்கியது பலந்தான் தூக்கி
கடியதொரு செயசாரம் பணந்தான்போட்டு
ஓயான செயவீரம் பணந்தான்போட்டு
உத்தமனே சிப்பிநீர் விட்டேயாட்டே. 288

மிர்தார்சிங்கிச் சத்து சிந்தூரம்

ஆட்டியபின் வுருக்கிடவே சத்தாய்நிற்கும்
அப்பனே காரீய வர்ணமாக
நீட்டியபின் இதினோடே தங்கமிட்டு
நேராகச் சூதமிட்டுக் கெந்திகூட்டி
மூட்டியபின் வாலுகையில் செந்தூரித்தால்
மோசமில்லை ஒன்பதிலும் நூற்றுக்கொன்று
காட்டியபின் பனிரெண்டு மாற்றேகாணும்
காரீயம் காரீயம் சிங்கிதானே. 289

வெள்ளைப் பாஷாண சத்து

தானென்ற வெள்ளையைத்தான் சத்தாய்ச்செய்ய
சாற்றுகிறேன் வெள்ளையது பலமுந்தூக்கி
வானென்ற செயசாரம் பணமுந்தூக்கி
மைந்தனே ஜெயவீரம் பணமும்போட்டு
ஊனென்ற சிப்பிநீர் விட்டேயாட்டி
உத்தமனே காரமிட்டு யுருக்கிப்பாரு
கோனென்ற சத்தாகும் வெள்ளைதானும்
கொள்ளையோ வெள்ளிவித்தை கூறுவேனே. 290

வெள்ளைச் சத்துகுரு

கூறுகிறேன் சத்தொன்று வெள்ளீயமொன்று
கூடிநின்று உருகையிலே வெள்ளியொன்று
மாறுகிறேன் தாளகத்தின் சத்ததொன்று
மகத்தான அப்பிரேகச் சத்ததொன்று
தேறுகிறேன் செயரசந்தான் அஞ்சுபோடு
திரளவே யுருக்கியொன்றாய் வாங்கிக்கொண்டு
ஏறுகிறே னிதன்மேலே பூசக்கேளு
இதமான சவுக்காரச் சுன்னங்காணே. 291

காணப்பா வீரமொடு புனுகுபூரம்
கைமுறையாய் வகையொன்று காசுரெண்டு
பூணப்பா அரைத்துநன்றாய் துரிசினோடு

Koviloor Digital Library

புகழான அண்டோட்டுப் பொடியில்வைத்து
தோணப்பா மூடிநன்றாய்ச் சீலைசெய்து
துடியாகக் கெஜபுடமாய்ப் போடுபோடு
வீணப்பா போகாது குருவேயாகும்
வெட்டவெளி யாச்சுதடா வெள்ளிப்போக்கே. 292

போக்கான வங்கத்தில் நூற்றுக்கொன்று
புகழான குடவனிலே எழுநூற்றுக்கொன்று
தாக்கான இரும்பிலே அறுநூற்றுக்கொன்று
சாற்றினாற் பதினெட்டு மாற்றுவெள்ளி
போக்கான உபரசத்தில் சத்துதாக்கி
புகழ்பெரிய ஈயத்தில் முன்னூற்றுக்கொன்று
ஆக்கான செம்பிலே நூற்றுக்கொன்று
அத்தனையும் வெள்ளியதா யாகுந்தானே. 293

தானென்ற பாஷாணம் அறுபத்துநாலும்
சத்தெடுத்து இப்படியே வெவ்வேறாக
வானென்ற தங்கமிட்டுச் சூதஞ்சேர்த்து
மைந்தனே கெந்தியிட்டு செந்தூரித்தால்
கானென்ற யுகவரைக்கு மாடலாகும்
கரைகாணப் போகாது துரிசினாட்டு
ஊனென்ற காயசித்தி பண்ணிக்கொண்டு
உத்தமனே துறைகோடி யாடிப்பாரே. 294

பிராணாயாமம்

பாரப்பா பிராணாயம் பண்ணிப்பண்ணி
பரிவான தசதீட்சைக் கருவில்நின்று
நேரப்பா சமாதியிலே உரத்துவோங்கி
நின்றாலோ காயசித்து லோகசித்துமாகும்
ஊரப்பா யிருக்கிறவன் பிராணாயாமம்
உருட்டுவான் கையில்மணி முகத்தைத்தொட்டு
போரப்பா யிதினாலே ஒன்றுமில்லை
பூமியிலே இறந்தவர்கள் கோடிதானே. 295

கோடியடா வுலகத்தில் பிராணாயஞ்செய்து
குறையாமல் ஒருநேர முண்டுமுண்டு
வாடியடா உடம்பெல்லாம் வெளுத்துச்சோம்பி
வாடாமல் தசதீட்சை கேட்டோர்கோடி

Koviloor Digital Library

நாடியடா வாதத்தில் சுட்டுச்சுட்டு
நற்பூசை யறியாமல் கெட்டோர்கோடி
ஓடியடா குருவறிந்து தசதீட்சைகேட்டால்
உத்தமனே சித்தியென்ற தெட்டுமாமே. 296

ஆமடா அடயோகஞ் செய்யும்போது
அப்பனே பூரித்தே யொதிங்கித்தானால்
சேமப்பா விலாப்புறத்தே சொரிகிக்கொள்ளும்
திறமான கண்போகும் முகம்கோணிப்போம்
வேமப்பா வுடம்பெல்லாம் விக்கலாகும்
வேர்வையாய் வுடம்பெல்லாம் வலியேகாணும்
ஓமப்பா அடயோகங் கர்மயோகம்
உத்தமனே லயபோக வுணர்வுகேளே. 297

கேளப்பா யூதமெல்லாம் லயமேசெய்து
கெடியான தத்துவத்தை லயமுஞ்செய்து
நாளப்பா குருபதத்தில் கூடிநின்று
நலமாக யேறுவார் கடினமெத்த
வேளப்பா பரியங்க யோகத்தாலே
விழுவார்கள் மலமெல்லாம் கர்மம்கர்மம்
நீளப்பா ராசமென்ற யோகவீதி
நிலைத்தல்லோ சாதித்து நின்றுபாரே. 298

பாரடா யிதின்மேலே மந்திரயோகம்
பரிவாகத் தசதீட்சை முறையோடொக்க
நேரடா அகண்டவெளிச் சக்கரத்திலோட்டி
நிறையாகப் பிராணாயந் தீர்த்துத் தேறி
காரடா நிர்க்குணத்தில் மவுனத்தூட்டி
கலந்துவிட்டாய் நீயுமே பூரணத்தினோடு
ஆரடா தசதீட்சை சொல்லப்போறார்
அறிந்துணர்ந்த பெரியோரை அடுத்திடாயே. 299

அடுத்திட்டுப் பொருளீய்ந்து தொண்டு பண்ணி
அனுசரித்துக் கேட்டாக்கால் சொல்லுவார்கள்
மடுத்திட்டுக் கேட்டுடனே சொல்லவில்லையென்று
மனக்குரங்கால் கெட்டவர்கள் கோடாகோடி
கடுத்திட்டு அலையாதே மோட்சம் வேண்டில்
காத்திருந்து குருபதத்தில் கேளு கேளு

Koyiloor Digital Library

கொடுத்திட்டால் தீட்சைவர அச்செனனம் முத்தி
கூடடா பூரணத்தில் கடுகநீயே. 300

நீயென்றுங் குருவென்றும் பேதமில்லை
நிர்மலமாம் வெளிபோலே நின்றதொன்று
தாயென்றும் சிவமென்றும் பேதமில்லை
சராசரங்க ளெங்குமொன்றாய் நின்றதப்பா
வாயுயென்றும் நாவென்றும் பேதமில்லை
மருவியதோர் செலத்ததிலே ருசிதானப்பா
தீயென்றும் வாவென்றும் பேதமில்லை
தெளிந்தோர்க்கு வாசியென்ற குதிரைதானே. 301

குதிரையின்மே லேறியல்லோ தச்தீட்சை வீதி
குறுகாமல் சுழிமுனையில் ஓடப்போடு
குதிரையின்மே லேறியல்லோ சக்கரங்களெல்லாம்
குலாவியல்லோ பலவந்த மாகப்போட்டு
குதிரையின்மே லேறியல்லோ ராஜவீதிக்குள்
பதமாம் புருவமையத் தூடேபாரு
குதிரையின்மே லேறியல்லோ குருபதத்தில்புக்கி
குதிரைமுளை அங்கேயடா கட்டுக்கட்டே. 302

கட்டினால் வாசியைத்தான் மூச்சாடாது
கருவறிந்து குருசொல்ல கட்டவேணும்
நெட்டினால் பிராணாயம் வாசிகொண்டு
நீங்காம லூதுகிலும் ஒன்றுமில்லை
மூட்டினால் வாசியது னாடிசுத்திபோச்சு
மூதண்ட குளிகைக்குப் பிலமோயில்லை
ஓட்டினா லாவதென்ன அன்னத்தைவிட்டு
உத்தமனே தீட்சைவிட்டால் வுடம்புபாழே. 303

சூதக்கட்டு

பாழான முப்பாழுந் தாண்டியாடப்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் சூதத்துக்கு
வேரான செயசாரம் வீரங்கூட்டி
விளங்கவே சிப்பிநீர் விட்டேயாட்டி
நாளான முந்திமுந்திக் கட்டுஞ்சூதம்
நண்பாக யெடுத்தல்லோ மறுசூதத்தில்
தோரான பணவிடைதான் கூடப்போட்டு
துடியான செயசாரம் பணமும்கூட்டே. 304

Koviloor Digital Library

கூட்டியல்லோ வீரமொரு பணந்தான்கூட்டிச்
சுகமாக சிப்பிநீர் விட்டேயாட்டி
மூட்டியல்லோ உருக்கிடவே சூதத்துக்கு
முழுஜெயமாய் நின்றாடும் மோசமில்லை
கூட்டியல்லோ துறைதோறுஞ் செயசூதந்தான்
குறையாமல் பணவிடைதான் கூட்டு கூட்டு
மாட்டியல்லோ யிப்படியே நூறுதொந்தங்கூட்ட
மகத்தான சூதமிது குளிகைக்காமே. 305

ஆமப்பா பாஷாணம் அறுபத்து நாலும்
அப்பனே செயசாரஞ் செயமாம்வீரம்
தாமப்பா சிப்பிநீர் கொண்டுகட்டுஞ்
சரக்கெல்லாம் தொந்திக்க வகையைச் சொல்வேன்
ஓமப்பா கட்டியதோர் பாஷாணத்தில்
உத்தமனே தினந்தோறும் பணமே கூட்டில்
வேமப்பா சரக்கெல்லாம் வர்ணம் போகா
வெகு சுறுக்காய் வேதையெட்டு மாடுந்தானே. 306

சூதபற்பம்

தானென்ற திராவகத்தைச் சுறுக்காய்ச் சொல்வேன்
சலம்போல இலைகளெல்லாம் கரைந்து போக
வேனென்ற முன்னெடுத்து பத்துப்பங்கில்
விளங்கவே யொருபங்கை திராவகமாய் வாங்கி
கோனென்ற மறுபங்கி லூற்றிநீதான்
குமுறவே ஊத்தியதை கல்வத்திலிட்டு
ஊனென்ற திராவகமாய் வாங்கிக் கொண்டு
உத்தமனே மறுபங்கில் ஊற்றுஊற்றே. 307

ஊற்றியல்லோ வுலர்த்தியிதைத் திராவகமாய்வாங்கு
உத்தமனே யிப்படிதானஞ்சு தொந்தமேற்ற
போற்றியல்லோ குப்பியிலே நில்லாதப்பா
பூவரக்கால் குப்பிசெய்து அதிலேவாரு
தோற்றியல்லோ நூறுபலஞ் சூதத்துக்குத்
துளியடா மூன்றுவிட்டால் சேறாய் நீறும்
வாத்தியடா வாதத்தில் தீநீர்வித்தை
வந்தவனே முழுவாதி மருவிக்காணே. 308

காணப்பா ஒன்பதிலும் சூதபற்பம்
காட்டினால் நூற்றொன்று கனகமாகும்

Koviloor Digital Library

பூணப்பா இதை உருக்கக் குளிகையாகும்
போட்டாக்கால் சாரணைதான் கெவனமோடும்
வீணப்பா வாதமல்ல ரசமேவாதம்
வித்தையெல்லாம் ரசத்தைவிட்டால் விழலாய்ப் போகும்
ஊணப்பா கண்டுகொள்ளு ரசத்தைநீதான்
உத்தமனே காணாட்டால் லோகம் பொய்யே. 309

பொய்யடா பொய்யடா சூதம் போனால்
புகழான சூதமங்கே கட்டுப்பட்டால்
மெய்யடா மெய்யடா யெட்டெட்டுமாடும்
எவ்வெளியும் காட்டிவிக்கும் சூதவேகங்
கைய்யடா கைய்யடா காணிகொள்ள
கா்யசித்தி லோகசித்தி ரெண்டுமாகும்
அய்யடா அய்யடா சூதம் போனால்
அறுபத்து நாலினது ஆண்மைகேளே. 310

கேளப்பா சரக்கான அறுபத்துநாலும்
கெடியான உபரசங்கள் நூற்றுரெண்டு பத்தும்
நீளப்பா திராவகத்தைத் துளியே வார்க்க
நிமிஷத்தில் நீறாக வெந்துபோகும்
நாளப்பா நீற்றோடு தங்கஞ்சூதம்
நலமாகக் கலந்தாக்கால் வேதைகோடி
தாளப்பா பிடித்துநித்தம் குருவைக்கேளு
சண்டாளத் திருட்டுவித்தை யாகாவாறே. 311

வாறான பாஷாண நீற்றுவகை யெல்லாம்
மைந்தனே குருதொட்ட தெல்லாங்கட்டும்
வேறாக ஒவ்வொன்றில் களங்குகோடி
வேதையிடச் செந்தூரத் துறையோ கோடி
ஆறாகப் பெருகினதைப் பரித்துப்பாட
அப்பனே காவியங்கள் அநேகமாகும்
பேரான வித்தையடா தீநீர் வித்தை
பேசார்கள் பேசார்கள் வல்லோர்தானே. 312

தானென்ற திராவகத்தின் வித்தைபோல
சமரசமாய் லகுவான வித்தையில்லை
கோனென்ற தச தீட்சைக் குருவைப்போல
கோடி ஜென்ம மெடுத்தாலும் குருவுமில்லை

Koviloor Digital Library

பானென்ற சிவசத்தி பூசைபோல
பாரடா கிரிகையிலே பூசையில்லை
வானென்ற குருபதத்தின் மேலே நிற்கும்
மனது போல் ஞானமில்லை மைந்தாகாணே. 313

கெந்தகத் தைலம்

காணப்பா கெந்தகத்தின் தைலம்சொல்வேன்
கைமுறையாய்க் கெந்தகம் பலமும்பத்து
பூணப்பா கல்வத்திற் போட்டுக் கொண்டு
புகழ்வெள்ளை தாமரைப்பூச் சாற்றாலாட்டு
தோணப்பா இருபதுநாள் ஆட்டு ஆட்டு
துடியான அழிஞ்சில்வித்துப் பலமும்போட்டு
ஊணப்பா மூன்றுநா ளரைத்துவாங்கி
உத்தமனே உருட்டியதை யுலர்த்திடாயே. 314

உலர்த்தியல்லோ குப்பியிலே போட்டு நீயும்
உத்தமனே குப்பிக்குச் சீலைசெய்து
கலத்தியல்லோ குப்பியின்வாய் கதம்பைமைத்து
கடியதொரு சட்டியிலே நடுவேபொத்து
மலத்தியல்லோ வையாமல் கவிழ்த்து நீதான்
வைத்தல்லோ சட்டியுட தமருக்குள்ளே
தலத்தியல்லோ மண்செய்து சந்துக்கெல்லாம்
சார்வாகக் குப்பியின்மேல் மணலைப் போடே. 315

போட்டல்லோ மணல்மேலே புடத்தைப்போடு
புகழானச் சட்டியைத்தான் முக்கவரில் வைத்து
நீட்டலல்லோ குப்பியது மூக்குக்குள்ளே
நேராகப் பீங்கானை வைப்பாயப்பா
மூட்டல்லோ தயிலமெல்லாம் பீங்கானில் வீழும்
முறையாக விழுகமட்டும் புடத்தைப்போடு
ஆட்டலல்லோ யித்தைலம் சவுக்காரமிட்டு
அப்பினால் துரிசியின் மேல் வெள்ளையாமே. 316

வெள்ளையென்ற துரிசியது சூதத்திட்டு
வெருவியே தைலமிட்டுக் கொதிக்கவைக்கத்
தள்ளையென்ற சூதமது கட்டிப் போகும்
சரக்கெல்லாம் இப்படியே கட்டும் கட்டும்
கொள்ளையென்றோ ஒவ்வொன்றில் கோடிவேதை

Koviloor Digital Library

கூட்டலாஞ் செந்தூரக் களங்கங்கோடி
அள்ளையென்ற தங்கமிட்டுச் சூதங்கூட்ட
அறுபத்து னாலுமுக மாடுந்தானே. 317

தானென்ற செம்பதுவும் பலந்தானொன்று
சாதகமாய் குகையில்நின்று உருகும்போது
கானென்ற தைலமது மூன்றுதுளிக்குத்த
கடுங்காரங் கடுங்காரஞ் சிவப்போமெத்த
ஊனென்ற செம்பினது ஊரல்போச்சு
உத்தமனே செம்பொன்னே ஆச்சுஆச்சு
தேனென்ற தங்கமொன்று செம்புரெண்டு
சிறப்பான வெள்ளியது ஏழுங்கூட்டே. 318

கூட்டியல்லோ உருக்கிடவே பொன்னுமாகுங்
குறையாமல் எட்டரையே காணுங்காணும்
நீட்டியல்லோ தினந்தோறும் தயிலந்தானும்
நினைவாகப் பணவிடையே மண்டலமுங்கொள்ள
ஆட்டியல்லோ நோய்களெல்லாம் மாண்டுபோகும்
அப்பனே விந்துமெத்த அதிகமாகும்
பூட்டியல்லோ யிதினோடே செயரசமுங்கொண்டால்
பொன்போல காயமது சித்தியாமே. 319

வெடியுப்பு செயநீர்

சித்திக்க வெடியுப்பு செயநீர்கேளு
செப்புகிறேன் வெடியுப்புப் பலமோபத்து
பத்திக்க புளியுதுவும் பலமோபத்து
பாங்காக யிடித்துநன்றாய் அதினில்கேளு
ஒத்திக்கத் துரிசியொடு சூடன்சீனம்
உத்தமனே யிந்துப்பு சாரந்தானும்
மத்திக்க யுருவியுப்பு அமுரியுப்பு
மைந்தனே வகையொன்று பலமுந்தூக்கே. 320

தூக்கியெல்லாம் பொடிசெய்து கூடப்போட்டு
சுகமாகப் பிளியுப்பில் பிரட்டிக்கொண்டு
தாக்கியல்லோ யிடித்துநன்றாய் மெழுகுபோலச்
சமரசமா யெடுத்துநன்றாய் வில்லைசெய்து
தேக்கியல்லோ கொளுத்திடவே வேகும்வேகும்
செப்பரிது வெகுவேகம் வெடியுப்புச்சுன்னம்

Koviloor Digital Library

வாங்கியல்லோ யிதையெடுத்துப் பனியில்வைக்க
மகத்தான செயநீராம் மைந்தாபாரே. 321

பாரப்பா யிந்தநீர் தெளிவையெல்லாம்
பரிவாகப் பீங்கானில் இறுத்துக்கொண்டு
சேரப்பா சவுக்காரச் சுன்னந்தானும்
திறமானச் சவ்வீரம் பூரமூன்றும்
நேரப்பா வகையொன்று காசுவொன்று
நிறையாகப் பொடிசெய்து இதிலேபோட்டு
நீரப்பா ஆடுகிற ஆட்டைச் சொல்வேன்
நேரான கட்டினத்தின் நிறையைக்கேளே. 322

நாகக் கட்டு

கேளடா கரண்டியிலே நாகம்வைத்துக்
கெடியாக வுருக்கையிலே துளியேகுத்தி
நாளடா மென்மேலும் காயக்காய
நலமாகக் குத்திவர சாமம்ரெண்டு
தாளடா நாகத்தை வுருக்கிப்பாரு
தனிப்புகையும் கட்டியல்லோ மணிபோலாடும்
நீளடா வுருகையிலே புகையோ கண்டால்
நினைவாக முன்போலே சுறுக்குப்போடே. 323

போட்டிடவே நாகமங்கே கட்டிப்போகும்
புகழான செந்தூர வரிசைக்கேளு
நாட்டிடவே தங்கமொரு பலந்தான்வாங்கி
நலமாக வுருகையிலே நாகங்கேளு
மூட்டிடவே அஞ்சுபல நாகம்போடு
மூதண்ட மணியாக உருகிநிற்கும்
கூட்டிடவே யிவ்விடைக்குச் சூதஞ்சேர்த்துக்
குமுறவரை பீங்கானில் எடுத்திடாயே. 324

நாகக்கட்டு சிந்தூரம்

எடுத்திட்ட நாகத்தின் சத்தைநேராய்
இதமான செயநீரால் நன்றாயாட்டி
மடுத்திட்டுக் கலந்திதனைக் குப்பிக்கேற்றி
மைந்தனே வாலுகையி லேற்றிமூட்டி
அடுத்திட்டப் பதம்பார்த்துச் செந்தூரித்தால்
அப்பனே அன்பதுக்கு ஒன்றேவேதை

Koviloor Digital Library

நடுத்திட்ட நாகத்தின் கட்டைப்போலே
நலமான காரீயக் கட்டைக்கேளே. 325

காரீயக்கட்டு

கேளடா கெந்தகந்தான் பலமும்ரெண்டு
கெடியான உப்புநீர் விட்டேயாட்டி
நாளடா மூன்றுநா ளரைத்தபின்பு
நலமான கால்பலமும் காரங்கூட்டி
நீளடா அரைத்திதனை உலர்த்திக்கொண்டு
நேராக ரெண்டுபலங் காரீயந்தான்
வாளடா உருகையிலே பொடியைத்தூவு
வாங்கியல்லோ கெந்தகத்தால் ஈயம்சாமே. 326

காரீயக்கட்டுச் சிந்தூரம்

ஈயமென்ற சீஸமது பலமும்நாலு
இதமான தங்கமது பலந்தானொன்று
தாயமென்ற ரெண்டுமொன்றா யுருக்கிக்கொண்டு
சமனாகச் சுத்தித்தச் சூதங்கூட்டி
காயமென்ற கெந்தகந்தான் இதுக்குநேராய்
கலந்துமே பொடிசெய்து குப்பிக்கேற்றி
ஓயமென்ற வாலுகையில் செந்தூரித்தால்
ஓடுமே அன்பதுக்கு மொன்றுதானே. 327

தாளகக்குரு

தானென்ற செயநீரில் தாளகத்தை நீதான்
சமரசமாய் மூன்றுநா ளரைத்தபின்பு
கானென்ற கட்டாகுஞ் ஜெயத்தைப்பார்த்துக்
காரமிட்டு அரைத்துமே வைத்துக்கொண்டு
கோனென்ற வங்கமது உருகும்போது
குடுத்துவர வங்கமது கட்டிப்போகும்
வேனென்ற வெள்ளியிட்டு வெள்ளையிட்டு
விளங்கியதோர் சூதமிட்டுக் குருவுஞ்செய்யே. 328

குருவெடுத்து வங்கத்தில் நூற்றுக்கொன்று
கூட்டினால் தசமாத்து வெள்ளியாகும்
குருவெடுத்துக் குடவனிலே ஒன்பதுக்கொன்று
கொடுத்துடனே வெள்ளியது பத்துமாற்றாம்
குருவெடுத்து செம்பிலே அன்பதுக்கொன்று
கூட்டினால் வெள்ளியது மேலாய்க்காணும்

Koviloor Digital Library

குருவெடுத்து இரும்பிலே முப்பதுக்கொன்று
குறையாமல் பூசினால் வெள்ளியாமே. 329

ஆமப்பா தாளகம்போ லரைத்தாயானால்
அறுபத்து நாலுவகை சரக்குங்கட்டும்
ஓமப்பா தங்கமொடு சூதங்கூட்டில்
உத்தமனே செந்தூரம் கோடாகோடி
வேமப்பா அண்டரண்டம் செயநீராட்டு
வெகுசுறுக்கு உப்பினது வேகமாகும்
சாமப்பா வென்றக்கால் சரக்குச்சாமோ
சாரமென்ற காரமொடு லவணந்தானே. 330

செம்பு சுத்தி

தாயான வேதைக்குச் செம்புசுத்தி
சாத்துறேன் புலத்தியனே கேளுகேளு
வேயான புளிமோரில் பசுமஞ்சளிட்டு
விரைந்திடித்து பிழிந்துக்கொண்டு இதிலேசெம்பை
ஓயாம லுருக்கிவிடு பதினொன்றப்பா
உத்தமனே யிதன்பிறகு சாய்க்கக்கேளு
வாயான பூசணிக்காய் சாற்றினுள்ளே
வார்த்திடாய் பதினொன்று தரந்தான்பாரே. 331

பாரப்பா வெண்ணொச்சி சாற்றினுள்ளே
பரிவாகச் சூடனையும் கரைத்துக்கொண்டு
நேரப்பா ஐயைந்து தரமும்சாய்க்க
நிறையான செம்பதுவும் சுத்தியாச்சு
வேரப்பா வெள்ளியெட்டு செம்புரெண்டு
விளங்கிநின்று உருகையிலே களங்கமீய
ஊரப்பா வன்னியொத்த பொன்னுமாகும்
உத்தமனே ஊறவில்லை உறைத்துக்காணே. 332

மகாதிராவகம் (வேறு)

ஏமரசம் பலமிரண்டு வீரமஞ்சு
இசைந்துநின்ற சீனமது பலமோபத்து
வாமென்ற வெடியுமிரு பத்துப்பலந்தான்
வளமான கல்லுப்பு பலமோ அஞ்சு
காமமென்ற கல்சவடு பலமோ அஞ்சு
கைவிட்ட அமுரியுப்பு பலமுமூன்று

Koviloor Digital Library

சேமமென்ற இவையெல்லாம் பொடியாய்ச்செய்து
சிறக்கவே ரவியினுள்ளே காயப்போடே. 333

காயவிட்டு மூன்றுதினம் கலையத்தேற்றி
கலயத்துக் கரைவாசி மருந்துபோட்டு
வேயவிட்ட திராவகத்தை வாங்குவாங்கு
வீறுடனே மகத்தான திராவகமேயாச்சு
பாயவிட்ட புலியடா இந்தத்தீநீர்
பாங்காக இன்னீரில் சவ்வீரம்போட்டு
வாய்விட்டுச் சொல்லாதே சங்குநீறு
மகத்தான பூநீறுங் கூடப்போடே. 334

போட்டுடனே மொலுமொலென வெந்துபோகும்
புகழான உபரசங்கள் நூற்றிரண்டுபத்து
நீட்டுடனே தங்கமுதல் நவலோகஞ்சலமாம்
நேரான சரக்கெல்லாம் கரைந்துசத்தாம்
பூட்டுடனே ஒவ்வொன்றில் கோடிவேதை
பொற்சடையோன் தேவிக்குக் சொன்னவாறு
மூட்டுடனே மச்சகேந்திரா புலத்தியனேநீ
முறைமுறையாய் விரித்தாடு முன்தோணாதே. 335

சவ்வீரத் திராவகம்

தோணாத சவ்வீர திராவகத்தைச் சொல்வேன்
துலங்கிநின்ற வெடியுப்பு ரெண்டுபத்துபலந்தான்
காணாத சீனமது பலமோபத்து
கலந்துநின்ற துரிசியது பலமும்ரெண்டு
பூணான கல்லுப்பு பலமோ அஞ்சு
புகழ்ந்துநின்ற கல்சுவடு பலமுமஞ்சு
வீணான சாரமது பலமுமொன்று
வெள்ளையென்ற பாஷாணம் பலமுமூன்றே. 336

மூன்றான யுருவியுப்பு பலந்தான்ரெண்டு
மூதண்டக் கொடிவேலி யுப்போரெண்டு
தோன்றான பூநீறு பலமும்ரெண்டு
துடியான சவ்வீரம் பலமுமஞ்சு
கான்றான பதினொன்றும் பொடியாய்செய்து
காயவிட்டு மூன்றுநாள் கலையத்தேற்றித்
தூன்றான கலையத்துக் கரைவாசிபோட்டு
துடியான திராவகமாய் வடித்திடாயே. 337

Koviloor Digital Library

வடித்ததொரு திராவகத்தில் சங்குநீறும்
வாகான பூநீறும் வீரம்வெள்ளை
பொடித்திதனைச் சமனாகத் திராவகத்தில்போட்டு
பொலுபொலெனக் கரைந்தபின்பு கலக்கக்கேளு
நடித்ததொரு நவலோகத் தன்னில்குத்த
நன்றாக கரைந்தல்லோ சலமுமாகும்
முடித்திந்த நவலோகச் சலத்தினுள்ளே
முதிர்ந்துநின்ற மதயானை சூதஞ்சாமே. 328

சூதமொன்றோ சாவதப்பா துவைத்துவாட்டத்
துடியான சரக்கெல்லாம் சத்தாய்க்கட்டும்
வாதமொன்றோ உபரசங்கள் காரம்சாரம்
மச்சேந்திரா துவைத்ததெல்லாம் ரவியில்போட
வேதமென்றோ காய்ந்தபின்பு ஊதச்சுன்னம்
வெவ்வேறு சுன்னத்தில் துறையோகோடி
பாதமென்ற மெழுகோடு செயநீர்கோடி
பறக்கிறதோர் குளிகையிதில் கோடியாமே. 339

கோடியென்றோ கட்டினங்கள் கோடாகோடி
கொடுஞ் சுருக்காய்போடுகிற வேதைகோடி
நாடியொன்றோ உபரசத்தால் செந்தூரங்கோடி
நலமான சத்துவகை யனந்தங்கோடி
வாடியொன்றோ மயங்காதே புலத்தியனே அய்யா
மச்சருடன் கூடிநின்று தொழிலைப்பாரு
பாடியன்றோ பலநூலில் வாதஞ்சொன்னார்
பாச்சினதோர் கருவையெல்லாம் மறைத்திட்டாரே. 340

ரோமதிராவகம்

மறைத்திட்ட கருவெல்லாம் விரித்துச்சொல்வேன்
மைந்தனே சவ்வீரத் தீநீர்க்குள்ளே
உரைத்திட்ட பூனீறும் சங்குநீறும்
உத்தமனே தாளகமும் சமனாய்க்கூட்டி
நிரைத்திட்ட திராவகத்தில் போட்டாயானால்
நேராக மொலுமொலெனக் கரைந்துபோகும்
கரைத்திட்ட திராவகத்தில் ரோமங்கொள்ள
கருவையெல்லாம் திறந்துசொல்வேன் கருவைக் கேளே. 341

Koviloor Digital Library

கேளடா நரையாத மனுஷரோமம்
　　கெடியாகக் கழுவிநன்றாய் உலரப்போட்டு
நாளடா வீரமது திராவகத்திலாட்டு
　　நலமான மயிர் மேலே பூசிப்பூசி
வேளடா ரவியிலிட்டு காயப்போட்டு
　　விரைந்துமயிர் நொறுங்குகிற பதத்தில்வாங்கி
தேளடா கொட்டியதோர் சுருக்கோடொக்க
　　திராவகத்தி னுள்மயிரைச் சேரப்போடே. 342

போட்டுடனே மொலுமொலுத்துப் பொங்கிவாங்கும்
　　பெரிதாக யிதின்பேரு ரோமத்தீநீர்
நீட்டுடனே ரசத்தின்மேல் ரோமநீரை
　　நிலையாகக் குத்திவைக்கச் சூதங்கட்டும்
மூட்டுடனே கெந்தகமும் தாளகமுஞ் சிலையும்
　　மூதண்ட வீரமொடு கெவுரிலிங்கம்
ஆட்டுடனே சரக்கெல்லாந் துவைத்தேவைத்து
　　அப்பனே ரவியிலிடக் கட்டுந்தானே. 343

கட்டுமடா ரவியிலிட்டுக் காயக்காயக்
　　கடுகவே வேணுமென்றால் அரைத்தாலுங்கட்டும்
ஓட்டுமடா வெடியுப்பு சாரங்காரம்
　　உத்தமனே கல்லுப்புத் துரிசிசீனம்
பட்டுமடா சூதமொடு பூரந்தானும்
　　பாங்காகத் துவைத்ததெல்லாம் ரவியில்போட
கெட்டுமடா என்றதொரு சாரங்காரஞ்
　　சிறப்பாக ரவியினுள்ளே ஜெயமுமாமே. 344

ஆமப்பா ஜெயமான காரசாரம்
　　அறுபத்து நாலையுந்தான் கொல்லும்கொல்லும்
ஓமப்பா உபரசங்கள் சத்தாய்ப்போகும்
　　உத்தமனே சூதமென்ற யானைசாகும்
வேமப்பா தொட்டவிடம் பட்டவிடமெல்லாம்
　　வேரடா வாதத்தில் காரஞ்சாரம்
நாமப்பா கண்டபடி புலத்தியனே சொன்னேன்
　　நலமான லவணமொடு காரந்தானே. 345

ரசத்திராவகம்

தானென்ற சீனமது பலமும்பத்து
　　சாதகமாம் வெடியுமிரு பதுபலந்தான்

Koviloor Digital Library

கோனென்ற கல்சுவடு பலமோ அஞ்சு
குறையாத கல்லுப்பு பலமுமஞ்சு
கானென்ற துரிசியது பலமுமொன்று
காணடா சாரமது பலமுமொன்று
வானென்ற பூரமது பலமுமூன்று
மகத்தான பூநீறு பலமும்ரெண்டே. 346

ரெண்டோடு வெள்ளையது பலமும்ரெண்டு
நேரான ஊர்ச்சூதம் பலமுமேழு
பண்டோடு யுருவியுப்பு பலமுமூன்று
பருவமுட னிவையெல்லாம் பொடியாய்ச்செய்து
கண்டோடு ரவியிலிட்டுக் காயவைத்துக்
கலையத்துக் கரைவாசி போட்டுநீயும்
தண்டோடு திராவகத்தை வடிப்பாயப்பா
சாதகமாய் இதின்பேரு சூதநீரே. 347

சூதமென்ற நீருக்குப் பூனீறும்வீரம்
துடியான சங்குநீர் சமனாய்க்கூட்டி
போதமென்ற பொடிசெய்து திராவகத்தில்போட்டுப்
புகழாகக் கரைந்தபின்பு போக்கைக்கேளு
தாகமென்ற தங்கமுதல் நவலோகத்தில்
தாக்கினால் சலமாகும் பாருபாரு
வாதமென்ற துறைக்கெல்லாம் தங்கநீர்தான்
வாய்திறக்க வொட்டாம லாகும்பாரே. 348

பாரடா தங்கநீர் சூதத்தூட்டிப்
பரிவாகக் கொதிப்பிக்கச் சூதம்கட்டும்
நேரடா சரக்கையெல்லாம் துவைத்துவாட்ட
நிறைநிறையாய்க் கட்டியல்லோ வேதையாடும்
தாரடா திராவகத்தை உபரசத்தில்குத்த
சத்தாகும் சத்தாகும் வெவ்வேறப்பா
ஆரடா உபரசத்தின் வேதைகாண்பார்
அறிந்துபார் மச்சேந்திரா அறிந்துநீயே. 349

அறிந்துகொள்ள திராவகத்தைச் சரக்கில்குத்த
அப்பனே சரக்கெல்லாம் சத்தாய்ப்போகும்
புரிந்துகொள்ளு ஒவ்வொன்றில் தங்கஞ்சூதம்
பேராகக் கூட்டியே செந்தூரங்கோடி

Koviloor Digital Library

நெரிந்துகொள்ளு உபரசங்கள் ஊதச்சுன்னம்
நேரான சரக்கூதச் சுன்னமாகும்
அறிந்திந்த சுன்னத்தில் செயநீர்கோடி
அப்பனே மெழுகுமுதல் களங்கமாமே. 350

சீனக்கட்டு

ஆமப்பா திராவகத்தில் சவுக்காரச்சுண்ணம்
அப்பனே கற்பூர உப்போடொக்க
ஓமப்பா பூநீறும் சங்குநீறும்
உத்தமனே வெள்ளையென்ற பாஷாணத்தோடு
தாமப்பா சமன்கூட்டித் திராவகத்தாலாட்டி
சரக்கான சீனத்தின் மேலேபூசி
சேமப்பா ரவியில்வைப்பாய் காயக்காய
செகமறிய ஏழுநாள் பூசிப்போடே. 351

போடடா ஏழுதினம் காய்ந்தபின்பு
புகழாகத் திராவகத்தில் பூநீறும்சங்கும்
நீடடா வெள்ளையொக்கச் சமனாய்க்கூட்டி
நிலையாகப் பொடிசெய்து திராவகத்திலாட்டி
கூடடா மொலுமொலென கரைந்தபின்பு
குத்தடா சீனத்தின் மேலேநித்தம்
ஊடடா ஏழுதினம் காய்ந்தபின்பு
உத்துப்பார் சீனமது கட்டிப்போச்சே. 352

சீனச் சுண்ணம்

கட்டியதோர் சீனத்தை கரியோட்டிலிட்டு
கலங்காம லூதிடவே சுன்னமாகும்
ஒட்டியதோர் சீனமென்ற சுண்ணந்தன்னை
உத்தமனே திராவகத்தி லுடைத்துப்போட்டு
நெட்டியது மொலுமொலுத்துக் கரைந்தபின்பு
நேராகப் பீங்கானில் வார்த்துநீயும்
பட்டியது கற்பூரப் பலகைப்போட்டு
பருவமுடன் தினமேழு நிழலில்வையே. 353

வைத்ததொரு எட்டாநாள் ரவியில்வைக்க
வாகாகக் காய்கையிலே கற்பூரமுப்பாம்
கைத்ததொரு ரவியினுள்ளே காயக்காயக்
கடுவேக மேறியல்லோ கற்பூரமுப்பாம்

Koviloor Digital Library

தைத்ததொரு உப்பெடுத்து திராவகத்திலாட்டி
சமரசமாய் பணம்போல வில்லைக்கட்டி
அய்த்ததொரு உலரவைத்துக் கிளிஞ்சிநீறில்
அழுத்தியல்லோ தீயெறிப்பாய்க் கடிகையஞ்சே. 354

கடிகையஞ்சு தீயெறித்து ஆறவிட்டு
காணப்பா நீபாரு கற்பூரச்சுண்ணம்
மடிகையிந்தச் சுண்ணத்தில் ரெட்டிப்புசார
மாட்டியல்லோ அரைக்கையிலே செயநீராகும்
பிடிகையிலே செயநீரில் வீரந்தோய்த்துப்
பேராக வாட்டயிலே மெழுகாம்வீரம்
கடிகையி லெடுத்தவன்முன் குரங்கேபோலே
தடவிடவே நவலோகம் சவளையாமே. 355

சவளையிடை நாகமிட்டு உருகும்போது
தாக்கடா நாகமிடை செயரசத்தைநீயும்
சவளையிடை ரெட்டிப்புக் கெந்திகூட்டி
சமரசமாய்ப் பொடிசெய்து குப்பிக்கேற்றி
சவளையைநீ அடுப்பேற்றிச் செந்தூரித்தால்
தனிலோக மொன்பதிலும் எட்டுமாற்று
சவளையென்ற செந்தூரம் குன்றிதின்ன
சதாசிவன்போல் காயசித்தி மண்டலத்திலாச்சே. 356

ஆமப்பா முன்னெடுத்த சீனச்சுன்னம்
அப்பனே வெடியுப்புச் சமனாய்க்கூட்டி
வேமப்பா திராவகத்தை விட்டேயாட்டி
வில்லைகட்டிக் கரியோட்டி லூதச்சுன்னம்
ஓமப்பா யிச்சுன்னம் திராவகத்தில்போட
உத்தனே மொலுமொலென்க் கரைந்துபோகும்
சேமப்பா யிதினோடே கல்லுப்புச் சுண்ணம்
சிறப்பான பூரவுப்பும் கூடப்போடே. 357

போட்டுடனே மொலுமொலெனக் கரைந்துபோகும்
புகழாக இதைவிட்டு ரசத்தையாட்டு
நீட்டுடனே ரவியில்வைத்து அரைக்கும்போது
நிலையாக ரசமாண்டு முழிக்கும்பாரு
ஆட்டுடனே யிப்படித்தான் பதினொருநாள் அரைத்து
அப்பனே ரசந்தானும் வாலைரசமாகும்

Koviloor Digital Library

மூட்டுடனே யிதையெடுத்துத் தணலிலூது
மூதண்டச் சூதமது ஜெயமாம்பாரே. 358

பாரப்பா ரசத்திலே அசைவுகண்டால்
பரிவாக முன்போலே அரைத்துநீதான்
நேரப்பா யிதைஎடுத்துப் பீங்கானில்வைத்து
நிலையான பறங்கியது சாராயம்விட்டு
சேரப்பா ரவியில்வைப்பாய் பதினைந்துநாள் தான்
சிவந்துதான் வாலைரச மாச்சுவாச்சு
ஊரப்பா வாலைரசம் பரீட்சைகேளு
உத்தமனே குகையிலிட்டுச் சிவக்க ஊதே. 359

ஊதியதோர் வாலைரசம் கையில்வார்க்க
உத்தமனே குளிர்ந்திருக்கும் கரங்கள்தானும்
வாதிகள் தாம் என்றவர்கள் செய்வார்செய்வார்
மற்றவர்கள் தெரியாமல் மச்சாகேளு
ஊதியதோர் குருவிடத்தே கைமுறையாய்ப்பாரு
உத்தமனே சுண்ணாம்பின் கருவைக்கேளு
பாதியதோர் விட்டுவிட்டுக் கழுவிச்சுட்டால்
பாழாச்சு வாதமடா பரிந்து கேளே. 360

வாலைரச சிந்தூரம்

கேளடா வாலைரசம் செந்தூரஞ்செய்ய
கெடியாகப் பலமெட்டு வாலைரசந்தூக்கி
நாளடா தங்கமது பலந்தான்ஒன்று
நலமாகத் தகட்டித்துக் கூடப்போட்டு
நீளடா அரைக்கரைக்கக் கலந்துபோகும்
நேராகக் கலந்துநன்றாய்க் கரைந்தபின்பு
தாளடா கெந்தகமும் பலமுமெட்டு
தன்னோடே விட்டரைத்துப் பொடியாய்ப் பண்ணே. 361

பண்ணியதைக் குப்பியிலே எடுத்துநீயும்
பருவமுடன் வாலுகையி லேற்றிநீயும்
கண்ணியதை அடுப்பேற்றிச் செந்தூரிக்க
கண்டிடடா தலத்திலே நின்றுபோகும்
ஒண்ணியிந்தச் செந்தூரம் அன்பதிற்கொன்று
ஒட்டினால் மாற்றெட்டு உரைத்துப்பாரு
எண்ணியிந்தச் செந்தூரம் பணவிடையேகொள்ள
யெளிதடாக் காயசித்தி மண்டலத்திலாச்சே. 362

Koviloor Digital Library

ஆமிந்தச் செந்தூரம் கொள்ளுவோர்க்கு
ஆச்சரியம் சதயானைப் பிலமேயெய்தும்
ஓமிந்தக் காயத்தில் சட்டையொன்று போகும்
உற்றுப்பார் சந்திரன்போல் முகமுமாகும்
சேமிந்த மதியினுள்ளே அமுர்தம் வீழுஞ்
சுத்தவெளி சுழிமுனையோ திறந்து போகும்
நாமிந்தப் படிகொண்டோம் புலத்தியனே அய்யா
நலமான மனதுடனே நீயுங்கொள்ளே 363

பஞ்சமுக திராவகம்

கொண்ட பின்பு அஞ்சுமுக திராவகத்தைக்கேளு
கோடான கோடிதுறை யிதிலேசொல்வேன்
அண்டபின்பு வெடியிமிரு பதுபலந்தான்
அப்பனே சீனமது பலமோபத்து
தண்டபின்பு கற்சுவடு பலமோ அஞ்சு
சாதகமாய் கல்லுப்பு பலமுமஞ்சு
உண்டபின்பு னாயுருவி யுப்புதானும்
உத்தமனே பலமொன்று ஒக்கப்போடே. 364

போட்டல்லோ பொடியாக்கி காயப்போட்டு
புகழான கலையத்தில் பாதியிட்டு
நீட்டல்லோ திராவகத்தை வடித்துக்கொண்டு
நேராக யிதைவிட்டு ஆட்டு ஆட்டு
பூட்டல்லோ யிதின்கருவை விரித்துச்சொல்வேன்
பூநீறும் தாளகமும் சங்குநீறும்
மூட்டல்லோ யிதில்போட மொலுமொலெனக் கரையும்
மோசமில்லை தலைமயிரை கரைக்கும்பாரே. 365

பாரப்பா பூநீறும் சங்குநீறும்
பருவமுடன் வீரமது சமனாய்க் கூட்டி
நேரப்பா திராவகத்தில் போட்டாயானால்
நிமிஷத்தில் இரும்பையல்லோ கரைத்துப் போடு
தாரப்பா பூநீறு சங்குநீறும்
சமனாக கெந்தகமும் திராவகத்தில் போட
ஊரப்பா செம்பையெல்லாம் கரைத்துப் போடும்
உத்தமனே யிதன்கருவை யுரைக்கக்காணே. 366

காணடா வெள்ளையொடு தாளகமும்வீரம்
கடியதொரு பூநீறும் சங்குநீறும்

Koviloor Digital Library

தோணடா சமனாக இதிலே போட
சுழன்று பொங்கி மொலுமொலெனக் கரைந்து போகும்
ஊணடா வெள்ளீயம் காரீயம் நாகம்
உத்தமனே யிதிலிடவும் கரைந்து போகும்
வீணடா திராவகத்தில் சும்மா போட்டால்
வேதையில்லை பாதையில்லை விழலாய்ப்போமே. 367

ஆமிந்த திராவகத்தில் நீதான்கேளு
அப்பனே கட்டியதோர் வெடியுப்பினோடு
ஓமிந்த துரிசிநீர் கொஞ்சம்விட்டு
உத்தமனே திராவகத்தை விட்டேயாட்டி
சேமிந்தச் சாரத்தின் மேலேபூசி
சிறப்பாக கவசித்துக் காயப் போட்டு
காமிந்த கரியோட்டில் நன்றாய்வாட்டி
கனலுக்கு லூற்றிடவே சாரஞ்சாமே. 368

சாரக்கட்டு

சாகுமடா சாரமிது கட்டியாகச்
சமத்தான முழுக்கட்டு நன்றாய்ப்பாரு
வேகுமடா யிதைக்கண்டால் சரக்கானதெல்லாம்
விரைந்தெடுத்து பூசிடவே மணியாயாடும்
பாகுமடா நாகவங்கம் பூசியூத
பண்பாக மணிபோலே நின்றேயாடும்
ஆடுமடா சாரமிது வீரங்கட்டி
அப்பனே பித்தளையும் பொன்னுமாமே. 369

சாரக்கட்டு சிந்தூரம்

பொன்னான சாரத்தில் துரிசிநீறு
போட்டல்லோ சூதத்தி லிட்டேயாட்ட
மன்னான சூதமது மணிபோலாடும்
மகத்தான சூதத்தில் குருவோ கோடி
பன்னான செந்தூரங் களங்குங்கோடி
பறக்கிறதோர் குளிகைக்கு சாரணையோகோடி
தின்னான காயசித்தி அனேகம்கோடி
தெருவெல்லாம் பொன்னாக்கும் சாரந்தானே. 370

சாரமடா கட்டினா லவனேவாதி
சரக்கெல்லாம் பாண்டமடா தடியேசாரம்

Koviloor Digital Library

வீரமடா இதினோடே கூட்டினாக்கால்
மெல்லுமடா ஓடுமுதல் கல்லும்மண்ணும்
காரமடா கூட இட்டா லுபரசங்கள்சத்தாங்
கலங்கிநின்ற சத்துகளில் வேதைகோடி
ஊரமடா செந்தூரம் பூசியூதி
உருக்கிடவே பொன்னாகு முரைத்துப்பாரே. 371

சவுக்காரச் சுன்னம்

பாரடா சவுக்காரச் சுன்னம்சொல்வேன்
பருவமுடன் சவுக்காரக் கட்டிவாங்கி
நேரடா வெள்ளையது காசுரெண்டு
நிறையான சூடனது காசுரெண்டு
காரடா பூநீறு காசுவொன்று
சமரசமாய் சங்குநீர் காசுவொன்று
ஏரடா யிவையெல்லாம் திராவகத்திலாட்டி
யிதமான சவுக்காரத் தப்பிப்போடே. 372

போடடா ரவியினுள்ளே காயக்காய
புகழாக திராவகத்தைக் குத்துகுத்து
நீடடா பட்சமொன்று தினந்தோறுந்தான்
நினைவாக திராவகத்தைக் குத்துகுத்து
ஊடடா யெண்ணெயெல்லாம் கக்கும்பாரு
உத்தமனே யிதன்மேலே சேலைசுத்தி
ஆடடா காயவைத்து கொளுத்திப்பாரு
அப்பனே யெண்ணெயெல்லாம் எரிந்து போமே. 373

எரிந்தபின்பு கவசத்தை வாங்கிப்பாரு
என்னசொல்வேன் புலத்தியனே தங்கம்போல் நிற்கும்
பரிந்தபின்பு யிதன்மேலே சங்குநீறும்
பருவமுடன் பூநீறும் சமனாய்க்கூட்டி
சரிந்தபின்பு திராவகத்தை விட்டேயாட்டி
சவுக்காரக் கட்டியின்மேல் கவசம்போட்டு
அறிந்தபின்பு ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
அப்பனே திராவகத்தைக் குத்துகுத்தே. 374

குத்தியதோர் திராவகத்தில் சங்குநீறும்
கொடியதொரு பூநீறு வெள்ளைகூட்டி
அத்தியதோர் பொடியாக்கி திராவகத்திலிட்டு
அப்பனே கரைந்தபின்பு யெடுத்துநீயும்

Koviloor Digital Library

வைத்தியதோர் சவுக்காரக் கட்டிமேலே
 வாரடா யெண்ணெயெல்லாம் கக்கும்பாரு
பத்தியதோர் தினம்பத்து யிப்படியே வார்த்துப்
 பாரடா யெண்ணெய் கக்கிக் கடுங்காரமாமே. 375

கடுங்கார மிதின்மேலே யின்னமொன்று
 கைமுறையாய்ச் சொல்லுகிறேன் புலத்தியனேகேளு
அடுங்காரம் பூநீறும் சங்குநீறும்
 அப்பனே சமனெடுத்து திராவகத்திலாட்டி
படுங்கார சவுக்காரக் கட்டிக்கப்பி
 பண்பாக ரவியினுள்ளே காயப்போடு
மடுங்கார கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து
 மைந்தனே யிருசாமம் தீயைமாட்டே. 376

சவுக்காரச்சுன்னம் (வேறு)

மாட்டிடவே சவுக்காரக் கட்டுச்சுன்னம்
 மைந்தனே கட்டியா யிருக்கும்பாரு
மூட்டிடவே யிதின்போக்குக் கரைகொள்ளாது
 மூதண்டங் கிழித்தாடும் யானும்காணேன்
பூட்டிடவே யின்னமொரு சவுக்காரஞ் சொல்வேன்
 புகழான மச்சேந்திரா நன்றாய்க்கேளு
நீட்டிடவே கடல்நுரையும் சீனக்காரம்
 நிலையான சூடனோடு சமனாய் கூட்டே. 377

சமனாக யெடுத்தல்லோ திராவகத்திலாட்டுச்
 சார்வாக வில்லைதட்டி யுலரப்போட்டு
கமனான கரியோட்டில் போட்டேயூத
 கடுஞ்சுன்ன மாகுடா யெடுத்துக்கொண்டு
தமனாக யிவற்றுடனே பூநீறும் வெள்ளை
 சாதகமாய் சூடன்தான் கூடக்கூட்டி
எமனாகும் திராவகத்தை விட்டேயாட்டி
 என்மகனே சவுக்காரக் கட்டிக்கப்பே. 378

அப்பியல்லோ ரவியிலிட்டுக் காயக்காய
 அப்பனே திராவகத்தில் சங்கு நீறும்
ஒப்பியல்லோ பூநீறும் வெள்ளைகூட்டி
 உத்தமனே பொடிசெய்து திராவகத்தில் போடக்

Koviloor Digital Library

கொப்பியல்லோ மொறுமொறுத்துக் கரைந்துபோகும்
குத்தடா யிதையெடுத்து சவுக்காரத்தில்
தப்பியல்லோ யெண்ணெயெல்லாம் வழிந்தேயோடும்
தவறாமல் தினம்பத்து குத்துகுத்தே. 379

குத்தியல்லோ தினம்பத்து காய்ந்தபின்பு
கொளுத்தடா சேலையைத்தான் சுத்திநீயும்
அத்தியல்லோ எண்ணெயெல்லாம் யெரிந்துபோகும்
அப்பனே யிதையெடுத்து நீதான்கேளு
பத்தியல்லோ பூநீறும் சங்குநீறும்
பருவமுடன் சமனாகக் கவசம்போட்டு
முத்தியல்லோ ரவியிலிட்டுக் காயும்போது
மூதண்ட திராவகத்தின் கருவைக் கேளே. 380

கருவான கருச்சொல்வேன் திராவகத்துக்கப்பா
கடுஞ்சுறுக்காய்த் துறைதோறு மாடக்கேளு
குருவான பூநீறும் சங்குநீறும்
கூடவடா வெள்ளையிட்டுப் பொடியாய்ச் செய்து
திருவான திராவகத்தில் போட்டாயானால்
சிவசிவா மொலுமொலெனப் பொங்கிநீராந்
தருவான இந்தநீர் சவுக்காரத்தில்
தவறாமல் தினந்தோறும் வாருவாரே. 381

வாரடா தினம்பத்து ரவியில் போட்டு
மன்னியதோ ரெண்ணெயெல்லாம் கக்கிப்போகும்
நேரடா யிதின்மேலே சங்குநீறும்
நிலையான பூநீறுங் கவசங்கட்டி
ஊரடா கிளிஞ்சில்நீர்க் குள்ளேவைத்து
உத்தமனே யிருசாமம் தீயைமாட்டு
பாரடா சவுக்காரங் கடுங்காரமேறி
பருவமுடன் கட்டியா யிருக்குந்தானே. 382

தானென்ற சவுக்காரஞ் சுண்ணமானால்
சுண்டித்து சரக்கெல்லாம் வாதமாச்சு
வானென்ற சூதமங்கே கட்டிப்போகும்
வாய்வாதப் பொய்யெல்லாம் மெய்வாதமாச்சு
தேனென்ற மொழியாட்குச் சிவந்தான் சொன்னார்
செய்முறையைத் தப்பியல்லோ செகத்தில்வாதி

Kovilpor Digital Library

ஏனென்ற யெண்ணெயினால் கறகறத்துக் காய்ந்து
எரிகையிலே தீயைவிட்டு ஓடும்பாரே. 383

ஓடியதோர் சவுக்காரச் சுண்ணம் செய்தால்
உத்தமனே துறையெல்லாம் விரித்துச் சொல்வேன்
நாடியதோர் கவுக்காரச் சுன்னத்தோடே
நலமான காரமிட்டுச் சமனாயாட்டி
நீடியதோர் நெட்டெழும்பி யிளகும்பாரு
நேராக யிதுக்குள்ளே சீனம்போடு
ஊடியதோர் யிதினுடனே சூடன்போடு
வுத்தமனே வெடியுப்புக் கூடத்தாக்கே. 384

தாக்கடா யிதினோடே கல்லுப்புசற்றே
தயவாகத் திராவகத்தை விட்டேயாட்டி
வாக்கடா வில்லைகட்டிக் காயவைத்து
மைந்தனே கரியோட்டி லூதச்சுன்னம்
போக்கடா யிச்சுன்னம் குருவேயாச்சு
புகழாக யிதின்பேரு சண்முகமாங் குருத்தான்
ஆக்கடா யிக்குருவில் காசுதூக்கி
அரிதாரங் காசிடைதான் கூடப்போடே.. 385

போட்டல்லோ திராவகத்தை விட்டேயாட்டி
புகழான துரிசியின் மேல் பூசுபூசு
நீட்டல்லோ ரவியிலிட்டுக் காயும்போது
நேராக சுண்ணமிட்ட திராவகத்தைக் குத்து
மூட்டல்லோ தினம்பத்து காய்ந்தபின்பு
மூதண்ட சங்குநீர் வெள்ளையுமே பூசி
பூட்டல்லோ சீலைசுத்தி கொளுத்திப் பாரு
புகழான துரிசியது குருவுமாமே. 386

துருசிக்குரு

குருவான துரிசியிலே வீரம்காரம்
கூட்டியல்லோ திராவகத்தி லரைத்துக்கொண்டு
தருவான வெள்ளையின்மேல் பூசுநீயும்
சாதகமாய் ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
கருவான சண்முகமாம் குருவினோடு
காணப்பா சாரமிட்டே யரைத்துப்பூசி
திருவான சீலைசெய்து கரியோட்டில் வாட்டி
சிவக்கவே யூதிடவே கட்டும்பாரே. 387

Koviloor Digital Library

கட்டிச்சு வெள்ளையென்றா லிதிலேகூடக்
கைமுறையாய்ச் சூதத்தை சொல்லக்கேளு
யெட்டிச்ச தாளகத்தை திராவகத்தா லாட்டி
இதமான வங்கமென்ற கட்டிற்பூசி
முட்டிச்சு ஓட்டினுள்ளே வங்கம்வைத்து
மூடியொரு புடம்போட வங்க நீறாம்
ஒட்டிச்சு வங்கத்தில் வீரங்கூட்டி
யுத்தமனே திராவகத்தை விட்டேயாட்டே. 388

ரசித வித்தை

ஆட்டியதோர் குழம்பெடுத்து வெள்ளிரேக்கில்
அப்பியே யூதிடவும் குருவுமாகும்
பூட்டியதோர் குருவோடே சூதம்விட்டுப்
புகழாக வாய்னீரால் அரைப்பாயானால்
தீட்டியதோர் சூதமங்கே உருண்டுகட்டும்
திறமாக உருட்டியிதை நீரிற்போட்டு
ஊட்டியதோர் துரிசிகுரு சவாதுகூட்டி
உத்தமனே உருண்டதொரு சூதத்தப்பே. 389

அப்பியே கரண்டியிலே போட்டு நீயும்
அப்பனே பூட்டவே யுருகுஞ் சூதம்
ஒப்பியே முன்கட்டும் வெள்ளைக்கப்பா
உத்தமனே யிச்சூதம் பாதிகூட்டி
செப்பியே தாளகமுஞ் சற்றேபோட்டு
சீனமென்ற சுன்னமது சற்றே போட்டு
கொப்பியே யிவையெல்லாம் திராவகத்தாலாட்டிக்
குப்பியிலே யெடுத்துநீ சீலை செய்யே. 390

சீலையதுசெய்து நன்றாய் வாலுகையிலேற்றித்
தீயெரிப்பாய் நன்றாகக் களங்காமட்டும்
மாலையல்லோ யிக்களங்கு செம்புபத்தில்
மாட்டினால் வெள்ளியடா பத்தும்பத்து
சூலையல்லோ வங்கத்தி லிருபதுக்கொன்று
சூட்டினால் சுத்தவெள்ளி சீனமாகும்
காலையல்லோ பிடித்தாலும் கருவைச் சொல்லார்
கைமுறையாய்ச் சவுக்கார மாடுமாட்டே. 391

ஆட்டான வெள்ளையைப்போல்க் கெந்தகத்தைக் கட்டும்
அப்பனே தாளகமுஞ் சிலையுங்கட்டும்

Koviloor Digital Library

நீட்டான வீரமுதல் கெவுரிகட்டும்
நிலையாக யிப்படியே சரக்கெல்லாங்கட்டும்
பூட்டான கனபூட்டு சவுக்காரப் பூட்டு
புகழாகக் குருசொல்லிக் காண வேணும்
மூட்டான கனமூட்டுச் சவுக்காரச் சுண்ணம்
மூதண்ட ஏமவித்தை யிதிலே கேளே. 392

ஏமவித்தை

கேளப்பா மனோசிலையும் வீரங்கூட்டி
கெடியாகக் காரமிட்டுத் திராவகத்திலாட்டி
நாளப்பா நாகமென்ற தகட்டில்பூசி
நலமாக ஓட்டிலிட்டு புடத்தைப்போட
தூளப்பா தூளாகும் நாகந்தானும்
தூளான னாகத்தில் வீரங்கூட்டி
நீளப்பா திராவகத்தை விட்டேயாட்டி
நிலையான தங்கமென்ற தகட்டிற்பூசே. 393

பூசடா தங்கத்தி னிடையேபாதி
புகழாக ஓட்டிலிட்டுப் புடத்தைப்போடு
ஆச்சடா தங்கமது பற்பமாகும்
அப்பனே யிதினோடே சூதம்விட்டு
வீசடா நீர்வார்த்து அரைத்தாயானால்
வேதாந்த சூதமது திரண்டு போகும்
வாசடா துரிசிநீர் கரைத்துக்கூட்டு
வண்மையுடன் திரண்டரசத் தப்பியாட்டே. 394

ஆட்டடா கரண்டியிலே யுருகிக்கட்டும்
அப்பனே யிதையெடுத்து மூட்டக் கேளு
நீட்டடா தங்கமென்ற சவளைக்குள்ளே
நேராக யிச்சூதம் சமனாய்ப் போட்டு
கூட்டடா ரெண்டுமொன்றாய் உருக்கி நீயும்
குறையாம லிவ்விடைக்குச் சுத்திகெந்தி
பூட்டடா ஒன்றாகப் பொடியேசெய்து
புகழான குப்பியிலே எடுத்திடாயே 395

எடுத்தல்லோ வாலுகையில் தீயைமூட்டி
இதமாகச் செந்தூரப் பதமே பார்த்து
அடுத்தல்லோ ஆறவிட்டு எடுத்துநீயும்
அப்பனே வெள்ளிசெம்பி லிருபதுக்கொன்று

Koviloor Digital Library

விடுத்தல்லோ மாற்றெட்டாய் விரைந்துகாணும்
வேதைகண்டா லுப்புக்கும் போகாதப்பா
படுத்தல்லோ சவுக்காரச் சுண்ணத்தாட்டு
பணபேதி சிணபேதி யாடும்பாரே. 396

வெடியுப்புக்கட்டு

பாரப்பா சவுக்காரச் சுன்னத்தாலே
பரிவான வெடியுப்புக் கட்டச் சொல்வேன்
நேரப்பா சவுக்காரச் சுன்னமொன்று
நிலையான சீனமொன்று வெடியுப்பொன்று
தாரப்பா சாரமொன்று கல்லுப்பொன்று
சாதகமாய்த் திராவகத்தை விட்டேயாட்டி
சீறப்பா கரண்டியிலே விட்டு நீயும்
சிலுசிலுவெனக் கொதிக்கவைக்கக் கட்டிப்போமே. 397

கட்டியபின் இதையெடுத்து இதினோடொக்கக்
கலந்திடப்பா சீனமது மூன்றுக்கொன்று
நெட்டியபின் இதையரைத்து திராவகத்தினாலே
நேரான வெடியுப்புக் கம்பிக்கப்பி
ஒட்டியதோர் ரவியிலிட்டுக் காயக்காய
உத்தமனே காரமிட்ட திராவகத்தைக்குத்த
பட்டியதோர் இராக்காலங் கிளிஞ்சில் நீராய்ப்
பருவமுடன் வைத்து வைத்து காயப்போடே. 398

காய்கையிலே தினமொருக்கால் திராவகத்தைக்குத்து
கடியதொரு வெடியுப்பு வெளுக்கும்பாரு
பாய்கையிலே பட்சமொன்று காய்ந்து தானால்
பருவமுடன் உப்புபோல் இருகிப்போகும்
ஒய்கையிலே யிதன்மேலே சங்குநீர் பூசி
உத்தமனே கிளிஞ்சிநீர் அடுப்பிலேற்றி
மாய்கையிலே காய்ந்தநீர்க் குள்ளேநீயும்
வைத்திட்ட வெடியுப்புக் கம்பிதானே. 399

கம்பியல்லோ ஆறவிட்டு எடுத்துக் கொண்டு
கலங்காம லடுப்பேற்றி நீரைநீயும்
கொம்பியல்லோ காய்ந்தபின்பு உப்புவைத்து
கொடுஞ்சுருக்காய் அனலேற்றி யாறஆற
வம்பியல்லோ பூநீறில் பிறந்த உப்பும்
மைந்தனே தப்பினால் உருகிப் போகும்

Koviloor Digital Library

சிம்பியல்லோ கனல்கண்டா லெரியுமுப்பை
சிங்கம்போல் சவுக்காரம் செயிக்குந்தானே. 400

செயமான வெடியுப்புக் கம்பிகாரஞ்
சேர்த்திட்டால் செந்தூரக் களங்கமெல்லாம்
பயமான தொன்றுமில்லை சிலுசிலெனவாங்கும்
பழுக்குமடா யுப்புக்குப் பயப்படாது
நயமான வெடியுப்புக் காரஞ் சேர்த்தால்
நலக்கமற்ற களங்கையெல்லா முள்ளே கொள்ளும்
புயமான கிறாவணந்தா னிதுதான் பாரு
பொன்னுக்குத் தாயேது உப்புத்தாயே. 401

தாயான வெடியுப்பை ரசத்தில்கூட்டி
சமத்தானால் கெந்தியிட்டுச் செந்தூரஞ் செய்வாய்
சேயான கம்பியிலே தங்கஞ்சுன்னம்
சேரடா வீரமிட்டு இறக்கிப்பூசி
காயான ரவியினுள்ளே போடு போடு
கடுஞ்சிவப்பா யுப்பதுவும் செந்தூரமாகும்
ஒயான காரீயத் திதனையூட்டி
உத்தமனே பொன்னாகு மூதிப்போடே. 402

போடடா வெடியுப்பால் சரக்கெல்லாங் கட்டும்
புகழான சாரமொடு லவணங்காரம்
நீடடா வெடியுப்பை யரைத்துப் பூசி
நிறைநிறையாய் வாட்டினா லெல்லாங்கட்டும்
ஓடடா வொவ்வொன்றில் வேதைகோடி
உத்தமனே செந்தூரங் களங்கு கோடி
ஆடடா வெடியுப்பி னாட்டைச் சொல்ல
அடங்காது புலத்தியனே ஆடிப்பாரே. 403

கல்லுப்புக்கட்டு

பாரப்பா சவுக்காரச் சுன்னமொன்று
பரிவான சாரமொன்று காரமொன்று
நேரப்பா வெடியுப்பு பூரம்ரெண்டு
நேரான அஞ்சையுந்தான் திராவகத்தி லாட்டி
ஊரப்பா கல்லுப்பில் பிசிறிபோட்டு
உத்தமனே மூன்றுநாள் காய்ந்தபின்பு
சேரப்பா ரவிதனிலே காய்ந்தபின்பு
சிறப்பாக வுப்புக்குக் கீழ்மேல் மூடே. 404

Koviloor Digital Library

மூடியல்லோ புடம்போடு வோட்டினுள்ளே
முத்துப்போல் கல்லுப்புக் கட்டிப்போகும்
நீடியல்லோ கல்லுப்பைச் சுண்ணஞ்செய்தால்
நேரான சூதமெல்லாம் வாலைரசமாகும்
ஆடியல்லோ உப்போடு சாரஞ்சேர்த்தால்
அப்பனே சலமாகும் யானைகட்டும்
ஊடியல்லோ கல்லுப்பு செயநீர்க்குள்ளே
உத்தமனே கற்பூரம் கட்டிப்போமே. 405

கட்டுமடா கல்லுப்பு தண்ணீர்தானும்
கரையேறு சரக்கையெல்லாம் கட்டியாடும்
ஒட்டுமடா யிதைக்கண்டால் நாகவங்கம்
ஒகோகோ வுப்பல்லோ பொன்னுக்காகும்
மட்டுமடா மட்டில்லை வுப்பில்வேதை
மச்சேந்திரா நன்றாக அணைத்துப்பாரு
வெட்டுமடா சவுக்காரம் பட்டவேகம்
வீரியந்தான் கல்லுப்பிற் பிறந்தவாறே. 406

சீனச் சுண்ணம்

வாறான சீனத்தின் சுன்னஞ் சொல்வேன்
மைந்தனே சவுக்காரச் சுன்னமொன்று
பேரான சாரமொன்று வெடியுப்பொன்று
பெருமைபெற்ற பூரமொன்று கல்லுப்பொன்று
தேரான நீரிட்ட திராவகத்தாலாட்டி
சீனமென்ற கட்டியின்மேல் பூசுபூசு
கூறான ரவியினுள்ளே காயப்போட்டு
குத்தடா திராவகத்தைக் குத்துகுத்தே. 407

குத்தவே திராவகத்தில் போடக் கேளு
கொடியதொரு பூநீறும் சங்குநீறும்
பத்தவே வெள்ளையொடு வீரஞ்கூடன்
பருவமுடன் சமனாகத் திராவகத்தில் போட்டு
முத்தவே மொலுமொலெனக் கரைந்தபின்பு
மூதண்டச் சீனத்தின் மேலேகுத்து
ஒத்தவே தினம்பத்து காயக்காய
உற்பனமாய் திராவகத்தை வாருவாரே. 408

வாரடா திராவகத்தை தினந்தான் பத்து
மைந்தனே காய்ந்தபின்பு சங்குநீறும்

Koviloor Digital Library

ஊரடா பூநீறும் வெள்ளைக்கூட்டி
உத்தமனே அரைத்திந்த சீனத்தப்பி
காரடா சுண்ணாம்பு சீலை சுத்தி
காய்ந்த பின்பு கரியோட்டில் வாட்டுவாட்டு
பாரடா அடுத்தடுத்து வாட்டி வாட்டி
பருவமுடன் நன்றாக வூதுவூதே. 409

ஊதிடவே சீனமது கடுஞ்சுன்னமாச்சு
உத்தமனே யிவ்விடைக்குச் சாரங்கூட்டி
மாதிடவே அரைக்கையிலே செயநீராகும்
மச்சேந்திரா சீனமென்ற செயநீரய்யா
ஓதிடவே செயநீரை பீங்கானில் விட்டு
உத்தமனே கற்பூரப் பலகைபோட்டு
வாதிடவே வாரமொன்று நிழலுக்குள்வைத்து
மைந்தனே பத்தாநாள் ரவியில்வையே. 410

வைத்தல்லோ தினமைந்து காய்ந்த பின்பு
வாங்கியல்லோ திராவகத்தை விட்டேயாட்டி
பைத்தல்லோ வில்லைதட்டி வுலரப்போட்டு
பரப்பியடா பூநீறும் சங்குநீறும்
ஐத்தல்லோ மேலுமிந்த நீரைமூட்டி
அடுப்பேற்றி தீயெரிப்பாய் ரெண்டுசாமங்
கைத்தல்லோ கற்பூரஞ் சுன்னமாச்சு
கரைத்ததொரு வாதமெல்லாம் கைக்குள்ளாச்சே. 411

ஆச்சிந்தப் பூரத்தின் சுன்னத்தோடு
அப்பனே வீரமிட்டு அரைத்துக்கொண்டு
ஓச்சிந்த சீனமென்ற செயநீரில் போட்டு
உத்தமனே ரெத்தம்போல் சிவந்துபோகும்
வீச்சிந்த செயநீரில் வீரந்தோய்த்து
விளக்கிலே வாட்டயிலே சிவந்து வீரம்
மூச்சிந்த விடம்போலே மெழுகுமாகும்
மோசமறத் தீயில்வைத்து முனிந்துபாரே. 412

பாரப்பா புகையெழும்பிக் கண்டுதானால்
பருவமுடன் குப்பியது வுடைந்த ஒட்டில்
நேரப்பா வீரமென்ற மெழுகுவைத்து
நேரான செயசாரம் சற்றேபோட்டு

Koviloor Digital Library

சீரப்பா சீனமென்ற செயநீர்குத்தி
திறமான வாலுகையில் பெரியபாய் நீயும்
காரப்பா செயநீரை குத்தக்குத்த
கட்டியடா வீரமது மெழுகுமாமே. 413

மெழுகான வீரத்தை வெதும்பவைத்து
வேதைக்குத் தங்கமென்ற கட்டையூட்ட
ஒழுகான வீரமது மென்றுவாங்கும்
உத்தமனே தகடுதின்ற வீரந்தானும்
தழுகாகப் பரிசித்து வாட்டி நீயும்
தவறாம லுருக்கிடவே நவலோகம் பொன்னாம்
பழுகான வீரமுண்ட நவலோகந்தான்
பசும்பொன்னாய் பளபளக்கும் பாருபாரே. 414

பாரப்பா வீரத்தில் பொன் போடாமல்
பரிசிக்கப் பொன்முதலாய்க் காந்தம் லோகம்
நேரப்பா பூசியல்லோ வுருக்கிப் பாரு
நிமிஷத்தே சவளையாய் நின்றேயாடுந்
தாரப்பா வுபரசங்கள் சவளையாகும்
சவளையிலே சதகோடி துறையுமாகுஞ்
சேரப்பா சவளையிலே சூதங்கெந்தி
சிவசிவா செந்தூரங் கோடிதானே. 415

வெண்காரச் சுண்ணம்

தானென்ற பூரத்தின் சுண்ணம்போலே
சாதகமாய் வெண்காரச் சுண்ணம் பண்ணு
ஊனென்ற வெண்காரச் சுண்ணத்தோடே
உத்தமனே சாரமிட்டு அரைத்தாயானால்
கோனென்ற ஜலமாகும் வெண்காரச் செயநீர்
கொள்ளையடா வாதமிந்தச் செயநீர்க்குள்ளே
வானென்ற வீரத்தை செயநீர்க்குள்ளே
மைந்தனே வைத்துநீ விளக்கில்வாட்டே. 416

சவளை

வாட்டயிலே வீரமது சிவந்து தோன்றும்
மகத்தான மெழுகாகும் மருவிப்பாரு
நீட்டயிலே யிம்மெழுகைப் பரியில்பூசி
நேராக வுருக்கடா சவளையாகும்

Koviloor Digital Library

மூட்டயிலே இம்மெழுகை நவலோகமெல்லாம்
உத்தமனே வுபரசங்கள் சவளையாகும்
பூட்டயிலே சவளைக்கு ரசமும்கெந்தி
புகழான காரீயம் நாகந்தாக்கே. 417

தாக்கடா சமனாக யெல்லாம்நீதான்
சமனாகுங் கெந்தகந்தான் இவற்றிற்கெல்லாம்
வாக்கடா அரைத்ததெல்லாம் குப்பிக்கேற்றி
மைந்தனே வாலுகையில் யெரித்தேயாட்டி
பாக்கடா செந்தூரப் பதத்தைப் பார்த்து
பருவமுடன் வாங்கியல்லோ வைத்துக் கொண்டு
போக்கடா நவலோகம் பத்துக் கொன்று
பூட்டினால் பொன்னாகும் புகழ்ந்துபாரே. 418

பாரப்பா வீரமென்ற மெழுகைத்தானும்
பரிவாக ரவியில் வைத்துப் பறித்தகட்டையீய
நேரப்பா வாங்கியது தின்னும் தின்னும்
நிலைவரமாய்த் தங்கமுண்ட வீரந்தானும்
ஊரப்பா நவலோகப் பரிசவேதை
உத்தமனே தடவியே யுருக்கப் பொன்னாம்
சீரப்பா சவ்வீர மெழுகின் வேதை
செப்புகுறேன் மட்டமெல்லாந் தேசியாமே. 419

தேசியைப் போலாவதற்கு மட்டமெல்லாஞ்
சிறப்பான களங்கங்கள் செந்தூரமெல்லாம்
ஓசியைப் போல் நாலைந்து கண்டுதானால்
உத்தமனே சவ்வீர மெழுகுசேர்த்து
வாசியைப் போல் பிசைந்துநன்றாய் நவலோகத்தூட்ட
மட்டமெல்லா மெட்டரையா மகிழ்ந்து பாரு
தாசியைப் போலாடுமடா சவ்வீரவேதை
சரக்கிலே வெகுசுருக்கு வீரத்தாட்டே. 420

கெந்தகத் தைலம்

ஆட்டான கெந்தகத்தின் தயிலஞ்சொல்வேன்
அப்பனே கெந்தகந்தான் பலமும்பத்து
நீட்டான கற்பூர உப்புதானும்
நிறுத்தல்லோ பலமதுவும் ரெண்டரையேகூட்டு

Koviloor Digital Library

மூட்டான சவுக்கார மெண்ணெயோடே
மோசமற ரெண்டரையாம் பலமும்போடு
கூட்டான இவையெல்லாம் திராவகத்தை விட்டு
குமுறவரை தினமொன்று வில்லைகட்டே. 421

கட்டடா வில்லையது பணம்போல் நீயும்
காயவைத்துக் குப்பியிலே கடுகப்போட்டு
மட்டடா பூப்புடத்தில் தயிலம் வாங்கு
மகத்தான கெந்தியடா தயிலமாச்சு
பட்டடா தயிலத்தால் வேதைசொல்வேன்
பருவமுட னேமரசம் பாலைரசமாக்கி
விட்டடா இத்தைலம் பாலைரசத்துள்ளே
விதமாக மர்த்திக்கத் தயிர் போலாமே. 422

ஆமிந்தத் தயிர்தானே கருத்து நிற்கும்
அப்பனே திராவகத்தைக் குத்தியாட்ட
ஓமிந்தச் சூதமது ஜலமாய்ப்போகும்
உத்தமனே பாலரசத் தண்ணீரென்பார்
சேமிந்த பாலரசத் தண்ணீர்விட்டு
செம்பான காசுகளை போட்டு ரொம்ப
வாமிந்தச் செம்புகளை சட்டியிலே போட்டு
மருவியிதை அடுப்பேற்றித் தீயைமூட்டே. 423

மூட்டியே வறுக்கையிலே சிவந்தால்காசு
மூதண்ட கெந்தகத்தின் தைலங்குத்தி
பூட்டியல்லோ புழுகுசட்டம் ரெண்டு மூன்று
புகழாக வெட்டியிதில் கூடயிட்டு
நீட்டியல்லோ வறுக்கையிலே காசுதானும்
நேராகக் கருக்குமடா பாருபாரு
ஊட்டியல்லோ தயிலத்தைக் குத்திக்குத்தி
உத்தமனே நன்றாக வறுத்திடாயே. 424

வறுத்தபின்பு இறக்கியல்லோ சுத்திகாசை
மைந்தனே பின்பொருக்கா லடுப்பிலேற்றி
கருத்தபின்பும் காசுக்குள் தைலம்குத்தி
கலங்காமல் காசையெல்லாம் வறுப்பாய்நீயும்
பொறுத்தபின்பு மிப்படியே மூன்றுதரஞ் செய்துப்
புகழாகக் காசெடுத்து நறுக்கிப்பாரு

Koviloor Digital Library

மறுத்தபின்பு காசடா பொன்காசுமாச்சு
மைந்தனே தசைமாற்றாம் கெந்தியாட்டே. 425

ஆட்டான காசையெல்லாங் கோணியிலே போட்டு
அப்பனே காசோடு சிறுகல்லு மிட்டு
நீட்டான பாறையிலே அடித்தாயானால்
நேரான காசெல்லாம் சோகிபோல் பிளக்கும்
பூட்டான காசெல்லாம் பொற்காசாய் நிற்கும்
புதுமையடா செம்பல்லோ பொன்னுமாச்சு
ஊட்டான வேதையிது கெந்தகத்தின் வேதை
உத்தமனே ரசத்தண்ணீ ரோட்டங்கேளே. 426

கேளப்பா சீனமென்ற சுன்னந்தன்னைக்
கெடியாக வெடியுப்புக் கம்பிக்கப்பி
நாளப்பா தினந்தோறும் தோய்த்துத் தோய்த்து
நலமாகக் காயவைப்பாய் பட்சமொன்று
சூளப்பா இதைஎடுத்து மேலேபூசு
சொல்லுகிறேன் திராவகத்தில் நீறுவெள்ளை
ஆளப்பா சங்குநீர் கூடக்கூட்டி
அரைத்தல்லோ வெடியுப்புக் கம்பிக்கப்பே. 427

அப்பியல்லோ காயவைத்துத் தினந்தானஞ்சு
அப்பனே கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து
ஒப்பியல்லோ தீயெரிப்பா யாற்றி யாற்றி
யுத்தமனே சட்டியைத்தா னிறக்கிநீயும்
செப்பியல்லோ கனலேறி யாறவாற
சிவசிவா வெடியுப்பு எலும்புபோலாம்
தப்பியல்லோ தீயேறி உருகிநிற்கும்
சமத்தாக நீறாக்கி யெரித்துமேறே. 428

ஏறடா வெடியுப்புக் கம்பிகம்பி
என்னசொல்வேன் புலத்தியனே எலும்பாய்ப் போச்சு
தேறடா வெடியுப்புக் கம்பிதானும்
சிறக்கயினிக் கருச்சொல்வேன் சிறப்பாய்க்கேளு
ஆரடா தங்கமென்ற சுன்னத்தோடே
அப்பனே வீரமிட் டரைத்துப்பூசி
கூறடா ரவியிலிட்டுக் காய்ந்துதானால்
கொடுஞ்சிவப்புக் கொடுஞ்சிவப்பு உப்புத்தானே. 429

Koviloor Digital Library

KOVILOOR ... LIBRARY, KOVILOOR
A. No. 44801

தானென்ற சிவந்த வுப்பைக் காரீயத்துள்ளே
சாதகமாய் பத்திலொன்று கொடுத்தாயானால்
வேனென்று வெங்கலம்போ லிருக்குமப்பா
வேதாந்த துருத்திகொண்டு அறவேஊது
கோனென்ற பொன்னாகும் பத்தும்பத்தும்
கொள்ளையடா வாதமெல்லாம் உப்புக்குள்ளே
தேனென்ற மொழியாட்குச் சிவந்தான் சொன்னார்
சிறப்பை எல்லாம் சூத்திரமாய் செப்பினேனே. 430

செப்பினதோர் வாலைரசத் தண்ணீர்க்குள்ளே
சிறப்பான கல்லுப்பு காரஞ்சாரம்
ஒப்பினதோர் துரிசியோடு பூரஞ்சூடன்
உத்தமனே சரக்கையெல்லாம் தோய்த்துதோய்த்து
அப்பினதோர் மெதுவோடு கடுவுங்கண்டு
அப்பனே காச்சலிலும் வாட்டலிலும் கட்டும்
கொப்பினதோர் இரும்புசெம்பு நாகம்வங்கம்
குத்தினால் ரசத்தண்ணீர் கட்டிப்போமே. 431

கற்பூரவுப்பு

போமப்பா இம்முறையை விட்டு நீயும்
புகழான பூரத்தி னுப்பைக் கேளு
ஆமப்பா சங்குநீர் கரைத்துக்கொண்டு
அப்பனே பூநீறில் வார்த்துக்கிண்டி
சேமப்பா சீனமதில் பொடித்துப் போட்டு
சிறக்கவே கிண்டிநன்றாய்க் காயவைத்து
ஓமப்பா திராவகத்தி லிதனைப்போட
உத்தமனே மொலுமொலெனக் கரையும்பாரே. 432

கரைந்ததொரு திராவகத்தை கற்பூரத்தூற்றிக்
கலங்காமல் நிழலில் வைப்பாய் தினந்தான்பத்து
முறைந்ததொரு இதையெடுத்து ரவியில்வைப்பாய்
மூதண்ட வுப்பாகும் கற்பூரஉப்பு
நிறைந்ததொரு பூரவுப்பை திராவகத்தாலாட்டி
நேராக வில்லைகட்டி யுலர்த்திநீயும்
விரைந்ததொரு கிளிஞ்சிநீர் கீழ்மேலிட்டு
விதமாகக் கடிகையைந்து தீயைமாட்டே. 433

கெந்தக மெழுகு

மாட்டிடவே பூரமது சுன்னமாச்சு

Koviloor Digital Library

மைந்தனே யிச்சுன்னம் விராகன்ரெண்டு
மூட்டிடவே கெந்தகமும் வராகனஞ்சு
முசியாமல் திராவகத்தை விட்டேயாட்டி
பூட்டிடவே கரண்டியிலே கொதிக்கவைத்தால்
புகழான கெந்தியது மெழுகேயாச்சு
நீட்டிடவே யிம்மெழுகைச் சூதத்தூட்டி
நிலையாகக் கொதிப்பிக்கச் சூதக்கட்டே. 434

லிங்கக்கட்டு

கட்டியதோர் சூதத்தை யுருக்கிப்பாரு
கண்விட்டே யாடுமடா சூதஞ்சூதம்
ஒட்டியதோர் சூதமடா காயசித்திக்காகும்
உத்தமனே செந்தூரம் வேதைக்காகும்
நெட்டியதோர் கெந்தகத்தின் மெழுகைதானும்
நேராக லிங்கத்தில் கவசம்கட்டி
அட்டியதோ ரொன்றுமில்லை வாட்டக்கட்டு
மப்பனே முழுக்கட்டு லிங்கந்தானே. 435

தானென்ற லிங்கம்போல் பாஷாணமெல்லாம்
சமத்தாக வாட்டயிலே கட்டிப்போகும்
வானென்ற சூதமொடு தங்கங்கூட்டில்
மைந்தனே சரக்கொன்றில் வேதைகோடி
பானென்ற ரவிபோலே சுறுக்காயாடும்
பராபரியாந் தேவியுடனா தத்தாட்டு
கோனென்ற சூதத்தைக் குருவாய்ச்செய்தால்
கொள்ளையடா வாதமெல்லாம் கொள்ளைகாணே. 436

சூடனுப்பு

காணடா சூடனுப்பு சொல்லக்கேளு
கடுஞ்சுன்ன மாகவுந்தான் சங்குசுட்டு
பூணடா தண்ணியிலே கரைத்துநீயும்
புகழான பூனீறில் விட்டுக்கிண்டி
ஊணடா ரவியிலே காய்ந்தபின்பு
உத்தமனே வெண்காரஞ் சிறுகப்போட்டு
தோணடா உலர்த்திநன்றாய் திராவகத்தில் போட
சுழன்றதுவும் மொலுமொலெனக் கரையும்பாரே. 437

மொலுமொலெனக் கரைந்ததொரு திராவகத்தைநீயும்
மூதண்டச் சூடனிலே விட்டுவிட்டு

Koviloor Digital Library

கலுகலென நிழலிலே பத்துநாள் வைத்து
காயவடா ரவியினுள்ளே அஞ்சுநாள்போடு
பொலுபொலெனச் சூடனது வுப்புமாகும்
போக்கிதிலே வெகுபோக்கு புகலக்கேளு
வலுவலென சூடனுப்பில் சமனாய்க்கெந்தி
மாட்டியல்லோ பொடிசெய்து புனுகும்போடே. 438

புழுகிடவே மர்த்திச்சுப் பீங்கானிலப்பில்
பொறிவான ரவியினுள்ளே வைத்தாயானால்
ஒழுகிட்டு ஓடுமடா தயிலம்பாரு
உத்தமனே தயிலத்தில் வீரம்போட்டு
நெழுகிட்ட துரிசியின் மேற் பூசிபூசி
நேராக ரவியிலிடு தினந்தான்பத்து
திழுகிட்ட துரிசியின்மேல் காரமிட்ட
திராவகத்தை குத்திட்டா தினமுமஞ்சே. 439

அஞ்சிநா ளானபின்பு துரிசிமேலே
அப்பனே தீக்கொளுத்தி சீலைசுத்திப்போட
மஞ்சுநாள் துரிசியது குருவுமாச்சு
மகத்தான குருவடா துரிசிராசன்
ஒஞ்சினா லித்துரிசி கட்டியிலேபூசி
உத்தமனே சூதமிட்டு எரிக்கக்கட்டும்
கெஞ்சினால் விடுகாது சரக்கையெல்லாம்
கெடியாகப் பூசிநீ வாட்டுவாட்டே. 440

வாட்டினால் கட்டிப்போம் சரக்கெல்லாந்தான்
வர்ணமொடு இனம்பார்த்துச் செந்தூரஞ்செய்ய
பூட்டினால் சூதமொடு தங்கங்கெந்தி
புகழான செந்தூரம் கோடாகோடி
நீட்டினால் வெள்ளையொடு சூதம்வெள்ளி
நிலையான வெள்ளிவித்தை கோடாகோடி
ஆட்டினா லாடுமடா வாதப்பொன்தான்
அப்பனே துரிசிநீ ராட்டு தானே. 441

வெண்காரச் சுன்னம்

தானென்ற வெண்காரச் சுன்னஞ்சொல்வேன்
சமத்தான சூடனுப்பும் வீரம்வெள்ளை

Koviloor Digital Library

வானென்ற பூநீறும் சங்குநீறும்
மைந்தனே திராவகத்தா லரைத்துநீயும்
கோனென்ற வெண்காரப் பலகைக்கப்பி
கொடியான ரவியிலிட்டுக் காயக்காய
ஊனென்ற திராவகத்தை குத்துகுத்து
உத்தமனே பட்சமொன்றில் சுன்னமாமே. 442

சுன்னமடா கடுஞ்சுன்னம் காரச்சுன்னம்
தொட்டகுறி போகுமடா காரப்போக்கு
வன்னமடா பூநீறும் சங்குநீறும்
மருவிரெண்டு மரைத்தல்லோ காரத்தப்பி
பன்னமடா ரவியில்வைத்துக் கிளிஞ்சிநீரில்
பாச்சியல்லோ தீயெரிப்பாய் கடிகைநாலு
இன்னமடா என்னசொல்வேன் காரத்தோடு
என்மகனே சாரமது சமனாய்க்கூட்டே. 443

கூட்டியல்லோ அரைக்கையிலே செயநீராகும்
குருடனுக்கு வாதவித்தை கைக்குள்ளாச்சு
மூட்டியல்லோ செயநீரில் வீரம்தோய்த்து
முதிர்ந்துநின்ற ரவியினுள்ளே போடுபோடு
நீட்டியல்லோ வீரமது தோய்த்துதோய்த்து
நேராக ஐந்துநாள் ரவியில்போட
ஆட்டியல்லோ வீரமது சிவந்துபோகில்
அப்பனே மெழுகாகும் அறிந்துபாரே. 444

பாரிந்த மெழுகதுவும் இளகிநிற்கும்
பரிவான சூடனுப்பு நாலிலென்றுபோட்டு
நேரிந்த மர்த்தித்து வைத்துக்கொண்டு
நிலையாகத் தங்கமென்ற தகட்டையூட்ட
சாரிந்த மெழுகதுவும் பரிசவேதை
தப்பாது தப்பாது வீரத்தாண்மை
ஆரிந்தப் படிசெய்வான் வாதிசெய்வாள்
அறியாதே சுடுவாதி அலைவான்காணே. 445

காணப்பா வீரமென்ற மெழுகுக்குள்ளே
கலக்காமல் தங்கத்தைச் சும்மாவாங்கி
பூணப்பா நவலோக முபரசங்களெல்லாம்
பூசியல்லோ உருக்கிடவே ஈயமாகும்

Koviloor Digital Library

தோணப்பா ஈயத்தில் தங்கஞ்சூதம்
சுகமான கெந்தியிட்டால் செந்தூரங்கோடி
வீணப்பா சுடுகாதே திராவகத்தைவிட்டு
வேதாந்த புலத்தியனே நன்றாய்க்கேளே. 446

மெழுகுகளுக்குக் குரு

கேளடா மெழுகான சரக்குக் கெல்லாம்
கெடியான சூடனென்ற உப்பைப்போடு
நாளடா மெழுகெல்லாம் செயமேயாகில்
நலமான வேதையுமாங் கட்டினமுமாகும்
ஆளடா சூடனுப்பை விட்டாயானால்
அடியில்லை மெழுகிற்கு வேதைபோச்சு
வாளடா சூடனது சரக்கை வெட்ட
வல்லமையோ பூரத்துக் கதிகமாமே. 447

ஆமப்பா சூடனுப்பை திராவகத்திலாட்டி
அப்பனே வில்லைகட்டி காயப் போட்டு
ஓமப்பா கிளிஞ்சிநீர்க் குள்ளே வைத்து
உத்தமனே தீயெறிப்பாய்க் கடிகையஞ்சு
நாமப்பா கண்டபடி சூடச்சுன்னம்
நலமாக வெகுசுறுக்கு நாட்டிப்பாரு
காமப்பால் வித்தைக்கு வேமிது வேணும்
கலத்திடுவாய் இதினிடைக்குச் சாரந்தானே. 448

சாரமிட்டு சூடனுட சுன்னத்தோடே
சமரசமாய் அரைக்கையிலே செயநீராகும்
வீரமிட்டு கலக்கி வைத்து ஜயநீர்க்குள்ளே
வேண்டியதோர் சரக்கையெல்லாம் துவைத்துப்போடு
காரமிட்டு ஜயநீரில் காரந்தோய்த்துக்
கடுரவியில் போட்டிடவே காரங்கூட்டு
வாரமிட்ட பூநீருஞ் சங்குநீறும்
மைந்தனே வெள்ளையொடு சமனாய்க் கூட்டே. 449

கூட்டியல்லோ காரத்தின் மேலேகட்டிக்
குமுரவே ரவியினுள்ளே காயப்போடு
நீட்டியல்லோ தினம்பத்துக் கரையும்போது
நேராகக் காரமிட்ட திராவகத்தைக்குத்து

Koviloor Digital Library

ஊட்டியல்லோ பட்சமொன்று காஞ்சுதானால்
உத்தமனே கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து
காட்டியல்லோ தீயெறிப்பாய்க் கடிகையைந்து
கடுங்கார மேறியது சுன்னமாமே. 450

துரிசிச்சுன்னம்

சுன்னமே காரமது ஆச்சுதானால்
சூட்டியல்லோ வீரத்தைக் கூட்டியாட்ட
வன்னமே சிவந்திருக்கும் காரந்தானும்
மைந்தனே யிதினோடே கெந்திகூட்டி
தன்னமே திராவகத்தி லரைத்துநீயும்
சார்வான துரிசியின் மேல் பூசுபூசு
பன்னமோ ரவியிலிட்டுக் காயக்காய
பருவமுடன் திராவகத்தைப் பாச்சுபாச்சே. 451

பாச்சியல்லோ ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
பருவமுடன் பூநீரும் சங்குநீறும்
ஓச்சியல்லோ வெள்ளையிட்டு அரைத்துக் கொண்டு
உத்தமனே துரிசியின்மே லப்பிப்போடு
காச்சியல்லோ கடுங்காய்ச்சல் காய்ந்தபின்பு
கலங்காமல் சீலைசுத்தி தீயைமுட்டி
ஆச்சியல்லோ எடுத்துப்பார் துரிசிசுன்னம்
அப்பனே கடுஞ்சுறுக்கு அறிந்துபாரே. 452

அறிந்திந்தத் துரிசியினால் சூதங்கட்டும்
அறுபத்து நாலையுந்தான் அமிழ்த்திக் கொல்லும்
பிரிந்திந்த துரிசிநீர் விட்டாயானால்
பேயாச்சு வாதமென்ற பேச்சோ பொய்பொய்
முறிந்துநின்ற கைதானும் துரும்பெடுக்கப் போமோ
மோசமடா பூநீறை விட்டவாதம்
நெரிஞ்சு இந்த தீநீறும் சங்குநீறும்
நேராட்டால் சுண்ணாம்பின் துரைதான் பொய்யே 453

கெந்தக சுத்தி

பொய்யாகப் போகாமல் கெந்தகத்தின்சுத்தி
புகலுகிறேன் மச்சேந்திரா நன்றாய்க் கேளு
கையாகச் சங்கைநீ நீறாய்ச்சுட்டு
கரைத்தல்லோ பூநீறுக் குள்ளேவாறு

Koviloor Digital Library

பய்யாக கையிட்டால் கையோவேகும்
　　பருவமுடன் பீங்கானி லிருத்துநீயும்
மெய்யான கெந்தகத்தை யிதிலேபோடு
　　விளங்கியதோர் ரவியினுள்ளே தினமஞ்சுவையே. 454

வைத்ததொரு தண்ணியைத்தா னிறுத்துப் போட்டு
　　மைந்தனே முன்போல கரைத்துவாரு
கச்சுதொரு தினமஞ்சு காய்ந்தபின்பு
　　கலங்காம லிருத்தல்லே வேறேவாரு
ஒச்சதொரு தினம்பத்து காயப்போடு
　　உத்தமனே இப்படிதான் மும்முறையேவாரு
நச்சதொரு கெந்தகத்தி னூறல்போகும்
　　நலமான சுத்தியிது நன்றாய்ப்பாரே. 455

நன்றான கெந்தகத்தை மெழுகுபண்ணு
　　நலமான தயிலமுதல் செந்தூரம்பண்ணு
ஒன்றான கெந்தகத்தை யுப்புப்பண்ணு
　　உத்தமனே துறைக்கெல்லாம் சுத்திபண்ணு
பண்றான கெந்தகமோ சுத்திபோனால்
　　பாழான ஊரலினால் வாதம்போச்சு
கன்றான கருவிதுதான் கேளுகேளு
　　காணுமந்தப் படிதனோ சிலையும்பண்ணே. 456

சிலையுந்தான் தாளகமும் வெள்ளைபண்ணு
　　சிறப்பான லிங்கமுதல் சத்தெல்லாம்பண்ணு
அலையாதே மதிமயங்கி சுத்திபோனால்
　　ஆகாது வேதையிலே ஊரல்காணும்
நிலையாது காவிக்கு முப்புக்குமப்பா
　　நிலைக்கவென்றால் சுத்திசெய்த சரக்கையாட்டு
உலையாது வெகுதூரம் வேதையாகும்
　　உத்தமனே பூநீற்றி னுருதிதானே. 457

வாலைரசம்

உறுதியாய் வாலைரச மொன்று சொல்வேன்
　　உத்தமனே கல்லுப்பு படிதானொன்று
பொறுதியாய் பருவுப்பாய் பொறுக்கிக்கொண்டு
　　புகழான உப்புநீர்க் குள்ளேகேளு
அறுதியாய் சவுக்காரம் கரைத்துக்கொண்டு
　　அப்பனே உப்பிலே விட்டுழாவி

Koviloor Digital Library

நெறுதியா யிருத்துவிட்டு உப்புதானும்
நேராக ரவியினுள்ளே காயப்போடே. 458

போட்டதொரு உப்புக்கு பாவனையைக்கேளு
புகழான பூநீறும் சங்குநீறும்
நீட்டதொரு உப்புநீர்க் குள்ளேபோட்டு
நேராகக் கரைத்துநன்றா யிருத்துக்கொண்டு
பூட்டதொரு கடல்நுரையுஞ் சூடன்ரெண்டு
புகழ்சமனாய்ப் பொடிசெய்து இதிலேபோட்டு
ஊட்டதொரு கல்லுப்பில் விட்டுவிட்டு
உத்தமனே ரவியினுள்ளே காயப்போடே. 459

கல்லுப்பு சுண்ணம்

காஞ்சவுப்பில் விட்டுவிட்டு பிசறிநீதான்
கடுரவியில் போட்டிடுவாய் தினந்தான்பத்து
மாஞ்ச உப்புபலம்பத்து நிறுத்துக்கொண்டு
மைந்தனே கற்பூர உப்புக்கேளு
ஒஞ்சதொரு பலம்ரெண்டு கற்பூரஉப்பு
ஒக்கயிட்டு காரமிட்ட திராவகத்தைவார்த்து
பாஞ்சதொரு தினம்பத்துக் காயக்காய
பரிவாக அரைத்தரைத்து ரவியில்வையே. 460

வைத்தல்லோ வில்லைதட்டி யுலரப்போட்டு
மச்சேந்திரா கரியோட்டில் வைத்தேயூது
நைத்தல்லோ கல்லுப்புச் சுண்ணமாகும்
நம்முடைய அமுரியுட வேகங்கேளு
பைத்தல்லோ திராவகத்தி லிதனைப்போடு
பளபளெனக் கலகலெனக் கரைந்துபோகும்
ஒய்த்தல்லோ கரைந்துநின்ற திராவகத்தைவிட்டு
உத்தமனே சூதத்தை யரைத்திடாயே. 461

அரைத்திடுவாய் ரவியினுள்ளே சூதந்தன்னை
அப்பனே சூதமங்கே மாண்டுமாண்டு
நிறைத்திடுவாய் ரவியில்வைக்க அமிந்துக்கொள்ளும்
நேராகப் பட்சமொன்று ரவியில்வைத்து
விரைத்திடுவா யிச்சூதம் வாலைரசமாகும்
வெகுளாதே தீயில்வைத்துப் பாருபாரு
கரைத்திடுவாய் தீக்குள்ளே யசைந்துதானால்
கலங்காதே திராவகத்தை விட்டேயாட்டே. 462

Koyiloor Digital Library

ஆட்டியல்லோ தீமேலே வைத்துப்பார்த்து
அசையாமல் நின்றதென்றா லப்பாகேளு
நீட்டியல்லோ யிச்சூதம் பீங்கானில்விட்டு
நேரான பறங்கியுட சாராயம்வார்த்து
கூட்டியல்லோ ரவியில்வைப்பாய் பக்ஷமொன்று
குறைந்திடவே தினந்தோறும் விட்டுவிட்டு
நீட்டியல்லோ வைத்திடவே வாலைரசமாகும்
நிர்மலமாய் ஜீவவிந்து ஜெயமேயாச்சு. 463

ஜெயமான சூதத்தின் பரிகைஷ கேளு
செப்புகிறேன் குகையிலே சூதம்விட்டு
பயமான மனதைவிட்டு துருத்தியூது
பாரடா தீமேலே சிவந்துநிற்கும்
நயமான சூதத்தைக் கையில்வார்க்க
நண்பாக கரங்கள்ரெண்டும் குளிர்ந்துபோகும்
ஒயமான வாலைரச பரீகைஷயப்பா
உத்தமனே இப்படிநீ பார்த்திடாயே. 464

வாலைரச சிந்தூரம்

பார்த்திடவே வாலைரச செந்தூரங்கேளு
பரிவான வாலைரசப் பலந்தானெட்டு
போர்த்திடவே பறித்தகடு பலமுமொன்று
புகழாக கூட்டிநன்றா யாட்டுயாட்டு
ஏர்த்திடிவே இத்தித்த கெந்திதானும்
என்மகனே பதினோறு பலமும்போட்டு
கோர்த்திடவே அரைத்துநன்றாய் குப்பிக்கேற்றி
குமுறவே வாலுகையில் தீயைமுட்டே. 465

மூட்டியல்லோ தீயெரித்துப் பதத்தைப் பார்த்து
முனைக்கருதில் சிவந்தாக்கால் செந்தூரமாச்சு
நீட்டியல்லோ தினங்குன்றி மண்டலமேகொள்ள
நேராக சட்டையொன்று கக்கிப்போகும்
ஊட்டியல்லோ உன்தேகம் அருணன் போலாகும்
உண்ணடா உண்வுறுதியாய்ப் புலத்தியனேயப்பா
நாட்டியல்லோ நான்உண்டேன் சித்தர் உண்டார்
நமனில்லை கற்பவரை நாட்டுந்தானே. 466

தானென்ற செந்தூரம் நவலோகத்தில்
தாக்கடா நூற்றொன்று பத்துபத்தாம்

Koviloor Digital Library

கோனென்ற திராவகத்தை விட்டுவா நீ
கொடியசுன்ன மாகியல்லோ வுப்பாய்ப் போகும்
வானென்ற சவுக்காரம் வுப்பேயானால்
வாதமெல்லாம் வழலையிலே வளர்ந்தவாறே. 475

வாறான பலமொன்று சவுக்காரவுப்பு
மைந்தனே பலமொன்று வாலைரசவுப்பு
தேறான பலம்ரெண்டு கெந்தகத்தினுப்பு
சிறக்கவே பலமொன்று சூடனுப்பு
கூறான புனுகதுவும் பலந்தான்ரெண்டு
கூட்டியல்லோ இவையெல்லா மரைத்து நீயும்
தாறான பீங்கானின் தட்டிலப்பி
சமரசமா ரவியினுள்ளே வைத்திடாயே. 476

துருசிக் குரு

வைத்திடவே ரவிபட்டு தயிலமோடும்
வாங்கியல்லோ தயிலமெல்லாம் பரணியிலேவிட்டு
தைத்திடவே காந்திகொண்டு காட்டிக்கூட்டித்
தைலமெல்லாம் வழித்தெடுத்துக் கொண்டு நீயும்
மொய்த்திடவே தயிலத்தில் வீரம்போட்டு
முனையாகக் கிண்டிநீ வைத்துக்கொண்டு
கைத்திடவே தயிலமதை துரிசிக்குப்பூசிக்
கலங்காமல் ரவியினுள்ளே காயப்போடே. 477

போடடா தினம்தோறும் தயிலம்பூசி
புகழாக தினம்பத்து காய்ந்தபின்பு
நீடடா திராவகத்தில் பூநீறுவெள்ளை
நிலையான சங்குநீர் சமனாய்ப்போட்டு
ஊடடா திராவகத்தில் கரைத்துக்கொண்டு
உத்தமனே தினந்தோறும் துரிசில்குத்து
ஆடடா தினமைந்து குத்திகுத்தி
அப்பனே காய்ந்தபின்பு சீலைசுத்தே. 478

சுத்தியல்லோ தீகொளுத்த துரிசிச்சுன்னந்
துடியடா யிந்தமுறை துரிசின்வேகம்
அத்தியல்லோ துரிசியென்ற துறையின்தோறும்
அப்பனே மறக்காதே கடுங்காரமேற்று
பத்தியல்லோ கடுங்கார மேறாவிட்டால்
பலபலவாம் சரக்கோடு சூதங்கட்டா

Koviloor Digital Library

உத்தியல்லோ திராவகத்தில் நீறைவிட்டு
உத்தமனே துரிசியின்மேல் காரமேற்றே. 479

ஏற்றியதோர் துரிசியைத்தான் சவ்வாதில்கூட்டி
என்மகனே காரமிட்டு யிழைத்துக் கொண்டு
போற்றியதோர் சரக்கையெல்லாம் பூசிவாட்ட
பொன்மணிபோ லுருகியடா வேதையாகும்
மாற்றியதோர் துரிசியடா புழுகுசீனம்
மர்த்தித்துச் சரக்குகளில் பூசிப்பூசி
சாற்றியதோர் தணல்மேலே ஊதச்சுன்னம்
சதகோடி நவகோடி விரியும்பாரே. 480

பாரப்பா முன்னெடுத்த பாலரசகெந்தி
பரிவான தைலத்தை ரவியில் வைத்து
நேரப்பா பரித்தகடு நீட்டநீட்ட
நேராக மென்றுமென்று வுள்ளேவாங்கும்
சீரப்பா சட்டியிலே செம்புகாசு
சிறக்கவிட்டு அடுப்பேற்றித் தீயை மூட்டி
காரப்பா காய்ந்தபின்பு தைலங்குத்திக்
கலகலெனக் கரண்டிக்குள் வறுத்திடாயே. 481

வறுக்கையிலே புழுகுசட்ட மெட்டிப்போட்டு
மைந்தனே கருக்கமட்டும் வறுப்பாய்நீதான்
மறுக்கையிலே யிதையெடுத்து மாற்றிக் கொண்டு
மைந்தனே அடுப்பேற்றிக் காய்ந்தபின்பு
பொறுக்கையிலே தைலமிட்டு புனுகுசட்டம் போட்டு
புகழாக வறுத்திடுவாய் கருகத்தானும்
சிறுக்கையிலே யிப்படித்தான் ஆற்றியாற்றி
செம்மையாய் ஐந்துதரம் வறுப்பாய்காணே. 482

காணப்பா யிதையெடுத்துக் கோணியிலே போட்டுக்
காசுபோல் கல்லிட்டுத் தண்ணீர்விட்டு
பூணப்பா பாறையிலே யரைத்தாயானால்
போச்சுதடா கருப்பெல்லாம் பொற்காசாச்சு
ஊணப்பா யிந்தமுறை கெந்தகமும் சூதம்
உப்பான படியாலே ஒடிற்றையா
வீணப்பா சுடுவார்கள் வாதமாகா
வேதையொன்று வொருமாற்றுங் காணார்தானே. 483

Koviloor Digital Library

தானென்ற தைலத்தைச் சரக்கில்பூசி
சமரசமாய் வாட்டயிலே யெல்லாங்கட்டும்
கோனென்ற தைலத்தை நாகவங்கந்தன்னில்
குத்தியடா வுருக்கையிலே கட்டிப்போகும்
வானென்ற சூதத்தில் தைலங்குத்த
மைந்தனே யேமரசந் தயிர்போலாகுந்
தேனென்ற தயிரிலே திராவகத்தை விட்டால்
ஜெலமாகும் சூதமது செப்பக் கேளே. 484

செப்பியதோர் ரசநீரில் வெடியுப்புக்கம்பி
சிறப்பாகத் தினம் தோய்த்து ரவியிற்போட
ஒப்பியதோர் தினம்பத்து காய்ந்துதானால்
உத்தமனே கம்பியது கட்டிப்போச்சு
தப்பியதோர் பூநீறும் சங்குநீறும்
சார்வான வெள்ளையிட்டுத் திராவகத்திலாட்டி
கொப்பியதோர் வெடியுப்புக் கம்பிக்கப்பி
கூசாமல் ரவியினுள்ளே காயப்போடே. 485

காய்ந்தபின்பு தினமைந்து கிளிஞ்சிநீறில்
கைமுறையாய் வைத்தல்லோ தீயையேற்று
மாய்ந்தபின்பு வெடியுப்புக் கம்பிதானும்
மைந்தனே எலும்புபோல் கட்டிப் போகும்
ஓய்ந்தபின்பு கிளிஞ்சிநீர் குத்திகுத்தி
உத்தமனே யடுப்பேற்றி பதனமாகக்
காய்ந்தபின்பு வெடியுப்பு முழுக்கட்டாச்சு
காதலுடன் செந்தூரம் செய்திடாயே. 486

செய்திடுவாய் ரசநீரில் தோய்த்துத் தோய்த்து
சிறப்பான சாரமொடு காரம்பூரம்
கையித்திடுவாய் கல்லுப்புத் துரிசிதானும்
கைமுறையாய்ப் பாஷாண வர்க்கமெல்லாம்
நொய்திடுவாய் கடுவோடு லகுவுங்கண்டு
நுகரவே ரவியோடு வாட்டுவாட்டு
பைத்திடுவாய் நாகவங்க முருகும்போது
பாச்சடா ரசநீரை கட்டிப்போமே. 487

கட்டியதோர் ரசநீரில் தங்கமீய
கபளித்து மென்றல்லோ வுள்ளேவாங்கும்

Koviloor Digital Library

ஒட்டியதோர் தங்கமுண்ட நீரேவேதை
ஓடுமடா வோடுமடா கரைகொள்ளாது
கெட்டியா மிம்முறைதான் நிலைத்தவேதை
கேலியாய்ப் போகாது கெவனமாய்க்கொள்
தெட்டியதோர் வாதமல்ல சிவவிந்தில் வாதம்
சிறப்பான ரசத்தைவிட்டால் வாதம் போச்சே. 488

கெந்தி தாளகவுப்பு

போச்சென்று போகாமல் கெந்தகத்தினுப்பை
புணர்ச்சியாய்த் தாளகத்தைச் செய்யக்கேளு
வாச்சென்று பலம்பத்து சுத்தித்தகெந்தி
மைந்தனே பலமைந்து தாளகமுங்கூட்டி
ஓச்சென்று ரெண்டையுந்தான் பொடியாய்ப்பண்ணி
உத்தமனே பீங்கானில் போட்டு நீயும்
காச்சென்ற திராவகத்தை விட்டுவிட்டுக்
கடுரவியில் வைத்திடுவாய் தினமோபத்தே. 489

பத்தான தினங்காய வுப்பேயாகும்
பரிவான வுப்போடு பூரவுப்பும்
கொத்தான இதுரெண்டுஞ் சமனாய்க் கூட்டி
குமுறவே அரைத்திடவே ஜலமுமாகும்
சித்தான செலத்தினுள்ளே வீரம்போட்டு
சேரவே மர்த்தித்துத் துரிசிமேலே
தித்தான தினம்பூசி காயப்போடு
சிறப்பாக ஏழுநாள் காயப்போடே. 490

துருசியால் ரசக்கட்டு

காய்ந்தபின்பு நீறிட்ட திராவகத்தைகுத்தி
கடுரவியில் போட்டிடவே சாரமேறும்
ஒய்ந்தபின்பு இதை எடுத்து சீலைசுத்தி
உத்தமனே தீகொளுத்தத் துரிசிச் சுன்னம்
வாய்ந்தபின்பு துரிசியினால் சூதங்கட்ட
வகைசொல்வேன் வகைசொல்வேன் நன்றாய்கேளு
தோய்ந்தபின்பு இத்துருசை வாய்நீராலே
சுகமாகச் சட்டியிலே நடுவே பூசே. 491

பூசியல்லோ சூதத்தை யிதிலேவிட்டுப்
புகழாக அடுப்பேற்றி எரித்துநீயும்
தாசியல்லோ சூதமங்கே காய்ந்தபின்பு

Koviloor Digital Library

சாரமொடு வெடியுப்பு சமனாய்க் கூட்டி
வாசியல்லோ பொடிசெய்து மேலேதூவ
மதயானை மேற்கத்தி சூதங்கட்டும்
ஆசியல்லோ யிச்சூதம் கரியிலாடும்
அப்பனே துரிசியதின் ஆண்மைதானே. 492

பூநீறு பாஷாண சிங்கி நீர்

தானென்ற துரிசிமுறை குருவுக்கெல்லாம்
சாதகமா யிப்படியே சூதங்கட்டும்
வேனென்ற சரக்கோடு காரசாரம்
மேல்பூசி வாட்டிடவே யெல்லாங்கட்டும்
ஊனென்ற புனுகோடு சவ்வாதுகூட்டி
உத்தமனே துரிசிநீர் கூடிற்றானால்
தேனென்ற சிங்கியது சூதங்கூட்ட
சிறப்பாகத் துள்ளியிட கட்டிப்போமே. 493

கூட்டுமடா சிங்கியினால் சரக்கில்பூச
கடுங்கார சாரமொடு லவணஞ்சாகும்
ஒட்டுமடா உபரசத்தை மணிபோலாட்டும்
ஊதினால் சுன்னமுமாங் கட்டுமாகும்
வெட்டுமடா வாதமென்ற இனத்தையெல்லாம்
வெகுகோடி குருவாகும் செயநீராகும்
தெட்டுமடா துரிசிவிட்டால் வாதந்தானும்
சிவமான செம்பினது செயலிதாமே. 494

செயலான சரக்கோடு சாரகாரஞ்
சேர்ந்துநின்ற உபரசங்கள் கடுஞ்சுன்னமாச்சு
மயலான கருவையெல்லாம் விரித்துச் சொல்வேன்
வாய்திறந்து பாடார்கள் சித்தர் தானும்
புயலான வெள்ளையென்ற பாஷாணத்தை
பூட்டியல்லோ திராவகத்தால ரைத்துநீயும்
கயலான ஜெயம்பார்த்து தணலின்மேலே
கடுகவே பலமாறு நிறுத்திடாயே. 495

சகலமும் சுன்னமாக திராவகம்

நிறுத்திடுவாய் பூநீறு பலந்தான்பத்து
நேரான சங்குநீர் பலந்தான்பத்து
பொறுத்திடுவா யிவைரண்டும் பொடியாய்ப் பண்ணி
புகழாகப் பதனமாய் வைத்துக் கொண்டு

Koviloor Digital Library

அகத்தியர் மகாதிராவகம்

ஒருத்திடுவாய் துரிசிமுதல் காரசாரம்
உத்தமனே சரக்கோடு நவலோகங்கள்
மருத்திடுவாய் மருந்துமுன்னே பூசிக்காய்ந்த
வகைக்கெல்லா மிப்பொடியைக் கீழ்மேல்போடே. 496

போட்டல்லோ யிப்பொடியை கீழ்மேலிட்டு
புடம்போட தங்கமுதல் சகலஞ்சுன்னம்
நீட்டல்லோ சரக்குமுதல் காரசாரம்
நிலையான தங்கமுதல் கடுஞ்சுன்னமாகும்
பூட்டல்லோ கனபூட்டு திறந்து சொன்னேன்
புத்தியுள்ள புலத்தியனே நன்றாய்க் கேளு
மூட்டியல்லோ யிப்பொடிதான் சுன்னத்துக்கு
மோசங்கள் வாறாமல் கண்டுமேறே. 497

பூநீர் சங்குநீர் பாஷாணம்

ஏறடா திராவகத்தில் காரமேற்றி
எடுத்தாடச் சுண்ணாம்பின் கருவைச் சொல்வேன்
நீறடா பூநீறும் சங்குநீறும்
நேரான வெள்ளையொடு மூன்றுங்கேளு
கூறடா சமனாகத் தூக்கிக் கொண்டு
குமுறவே பொடிசெய்து திராவகத்தில் போட்டு
தேறடா மொலுமொலெனக் கரைந்துதானால்
திராவகத்தில் கடுங்காரம் ஏறும்பாரே. 498

பாரப்பா திராவகமோ காரமேரில்
பட்டவிடந் தொட்டவிட மெல்லாம் சுண்ணம்
சீரப்பா கல்சுவடு திராவகத்தில் போட்டால்
சிறப்பான சரக்கையெல்லாம் மடக்கிக் கொல்லும்
சாரப்பா திராவகத்தில் துரிசி நீரிட்டால்
சணத்திலே செயமாகும் சூதம்சூதம்
வேறப்பா நாகவங்கம் திராவகத்திலிட்டால்
வேரற்ற மரம்போலே எல்லாஞ்சாமே. 499

சாகுமே சரக்கையெல்லாம் திராவகத்துக்குள்ளே
சாற்றுகிறேன் கடுஞ்சுன்ன மாகக்கேளு
பாகவே பூநீறும் சங்குநீறும்
பரிவான வெள்ளையொடு சமனாய்க் கூட்டி
காகவே வீரமொடு கற்பூரத்துப்பும்
கலந்துகொண்டு யிவையைந்து திராவகத்தில் போட

Koviloor Digital Library

வேகவே கடுவேக மெல்லாம் நீறும்
விரிஞ்சுதடா சுன்னமென்ற காடுதானே. 500

தானென்ற சுன்னத்தின் வரிசைசொல்வேன்
சாதகமாங் கல்லுப்பு சுன்னத்தோடு
தேனென்ற சாரமிட்டு அரைத்தாயானால்
செலமாகும் கல்லுப்பு செயநீரப்பா
ஊனென்ற செயநீரில் சீனச்சுன்னம்
உத்தமனே வீரமொடு ரெண்டும்போட்டு
வானென்ற கற்பூரப் பலகையிலேவிட்டு
மறவாமல் தினம்பத்து நிழலில்வையே. 501

சுன்னவரிசை உப்பு, பூரம், தாளகம், வங்கம்

வைத்தபின்பு பத்தாநாள் ரவியில் வைக்க
மைந்தனே ஐந்துநாள் காயஉப்பாம்
கைத்தபின்பு உப்பெடுத்து திராவகத்திலாட்டி
நலமாகக் காச்சிடவும் வங்கமாகும்
ஒய்த்தபின்பு சங்குநீர் பூநீறுவெள்ளை
உத்தமனே முன்னெடுத்த பொடியுப்புக்குள்ளே
பைத்தபின்பு வில்லைக்குக் கீழ்மேலிட்டு
பதமாக அடுப்பேற்றி எரித்திடாயே. 502

எரித்திடுவாய் கடிகைஐந்து பூரஞ்சுன்னம்
எமும்பிற்றே சுன்னத்தால் பூரக்காடு
பரித்திடுவாய் பூரமென்ற சுன்னத்தோடு
பாச்சியல்லோ வீரமிட்டுத் திராவகத்திலாட்டி
அரித்தியல்லோ தாளகத்தின் மேலேபூசி
அப்பனே ரவியிலிட்டுக் காயும்போது
திரித்திடுவாய் காரமிட்ட திராவகத்தைநீயும்
தினந்தோறும் பத்துநாள் குத்திடாயே. 503

குத்தியல்லோ காய்ந்தபின்பு முன்னெடுத்த நீற்றில்
குமுறவே வைத்திதனை அடுப்பிலேத்தி
பத்தியல்லோ தீயெரிப்பாய் சாமமொன்று
பாங்கான தாளகந்தான் சுன்னமாச்சு
வெத்தியென்ற தாளகந்தான் வீரங்கூட்ட
வேதையொரு கோடான கோடியாகும்
சத்தியென்ற தாளகத்தின் சுன்னத்தோடே
சமனாக வீரமிட்டு திராவகத்திலாட்டே. 504

Koviloor Digital Library

ஆட்டியல்லோ வங்கத்தின் மேலேபூசி
அப்பனே காயவைத்து திராவகத்தைக் குத்து
மூட்டியல்லோ தினந்தோரும் திராவகத்தைக் குத்து
மூதண்ட தினமைந்து காய்ந்தபின்பு
நீட்டியல்லோ பூநீறும் சங்குநீறும்
நேரான வெள்ளையிட்ட பொடியில்வைத்து
கூட்டியல்லோ புடம்போட வங்கஞ்சுண்ணம்
கொடும்வங்க வேதையையான் கூறிலேனே. 505

கூறாத வங்கத்தின் சுன்னத்தோடே
கூட்டியல்லோ சமபாகம் வீரந்தானும்
நாறாத நீரிட்ட திராவகத்தாலாட்டி
நலமாக நிமிளையின் மேல் பூசுபூசு
ஊறாத ரவியிலிட்டுக் காயும்போது
உறுதியாங் காரமிட்ட திராவகத்தைகுத்து
தேறாத பட்சமொன்று காயக்காய
தினந்தோறும் திராவகத்தை வாருவாறே. 506

வார்த்தல்லோ தினந்தோறும் பாருபாரு
மைந்தனே நிமிளையங்கே வெளுத்துதானால்
ஏர்த்தல்லோ முன்பெடுத்த பூநீரில்வைத்து
என்மகனே புடம்போடு நிமிளைச்சுன்னம்
ஊர்த்தல்லோ நிமிளையுட சுன்னத்தாட்டு
உகாந்தவரை யொடுங்காது உத்தமியாள் நாதம்
சேர்த்தல்லோ நிமிளைக்குச் சமனாய்வீரஞ்
சிறப்பான திராவகத்தா லரைத்திடாயே. 507

அரைத்தல்லோ சாரத்தின் மேலேபூசு
அப்பனே கசகசக்கும் மணலில் வைத்து
விரைத்தல்லோ தீயெரிக்க சாரக்கட்டு
வெளுத்தல்லோ சுண்ணாம்பு போலேயாகும்
நிரைத்தல்லோ சாரத்தில் பூரஉப்பும்
நேராக வீரமிட்டு திராவகத்தாலாட்டி
திரைத்தல்லோ பணம்போலே வில்லைக்கூட்டி
சிறப்பான ரவியினுள்ளே காயப்போடே. 508

காய்ந்தபின்பு முன்பெடுத்த நீற்றில்வைத்து
கலங்காமல் தீஎரிப்பாய் சாமமொன்று

Koviloor Digital Library

ஓய்ந்தபின்பு சாரமடா கடுஞ்சுன்னமாச்சு
ஒகோகோ என்னசொல்வேன் சாரத்தாட்டு
ஆய்ந்தபின்பு தேவிக்குச் சிவந்தானன்று
அளவில்லை சாரத்தின் வேதையென்றார்
பாய்ந்தபின்பு மலையோடு மண்கல்தானும்
பரிசத்தில் வேதையுமாம் பாருபாரே. 509

பாரப்பா சாரமென்ற சுன்னத்தோடே
பரிவாக வீரமடா சமனாய்ச் சேர்த்து
சேரப்பா பூரமென்ற சுன்னஞ்சத்தே
சிறப்பான திராவகத்தை விட்டேயாட்டி
நேரப்பா துரிசியின்மேல் பூசிப்போடு
நிமிஷத்தில் சுக்கரனாய் போகும் பாரு
ஆரப்பா யித்துரிசி யாடுவார்கள்
ஆதிஎன்ற சிதம்பரத்தை பூசித்தோரே. 510

பூசிப்பாய் சிவனோடு தேவிதன்னைப்
புகழான எட்டெட்டு மாடலாகும்
வாசிப்பாய் துரிசியைத்தான் ரவியில் போட்டு
மைந்தனே நீறிட்ட திராவகத்தைக்குத்து
ஓசிப்பாய் தினந்தோறுங் குத்துகுத்து
உத்தமனே தினம்பத்து மானபின்பு
நேசிப்பா யிதுமேலே சீலைசுத்தி
நிலையாகத் தினமைந்து காயப் போடே. 511

போட்டபின்பு யிதையெடுத்து முன்வைத்தநீறை
புகழாக கடிகையிலே கீழ்மேலுமிட்டு
நாட்டபின்பு சில்லிட்டுச் சீலைசெய்து
நலமாகப் புடம்போட துரிசிசுன்னம்
ஆட்டபின் பேழங்க மேறியதோர்வேகம்
அரகரா சிவனுக்கு ஒப்புஒப்பு
தேட்டபின்பு யித்துருசி சிங்கிசெய்யச்
செப்புகிறேன் நன்றாகச் சேர்ந்துகேளே. 512

சிங்கி

கேளடா சவ்வாது கழஞ்சிரெண்டு
கெடியான புனுகதுவும் கழஞ்சிரெண்டு
நாளடா யித்துருசி கழஞ்சிஒன்று
நலமான சாரமது பணமுரெண்டு

Koviloor Digital Library

வேளடா காரமது பணமுரெண்டு
வெருவியெல்லா மரைத்துமொரு பீங்கானிலப்பி
நீளடா ரவியில்வைக்கத் தயிலமோடும்
நேரடா யிதின்பேரு சிங்கியாச்சே. 513

ஆச்சிந்த சிங்கியது போட்டுக்குத்த
அப்பனே சூதமது வெண்ணையாகும்
ஓச்சிந்த வெண்ணையைதான் உழிபோலக்கட்டி
உத்தமனே சூடன்தீக் குள்ளேவாட்டிப்
பாச்சிந்த கரண்டியிலே நல்லெண்ணெய்குத்தி
பருவமுட னுருக்கினால் உருகியாடும்
கோச்சிந்த சூதத்தைக் கரியில்வைத்து
குமுறவே யூதிடவே மணியாம்பாரே. 514

ஏமக்குரு

பாரடா ஏமமென்ற குருவைச் சொல்வேன்
பரிசமுதல் சந்தான வேதையாக
நேரடா இச்சூதம் பலமதொன்று
நிலையான தங்கமது பலமும்ரெண்டு
சேரடா யிவைரெண்டும் வுருக்கியொன்றாய்
சிறப்பான ஒருமணியாம் எடுத்துக்கொண்டு
தாரடா தாளகத்தின் சுன்னத்தோடே
சமனாக பூரத்தின் சுன்னம்கூட்டே. 515

கூட்டடா யிரண்டுக்கும் சவ்வீரம்நேராய்
குறையாமல் மணியிடைக்கு மூன்றுக்கொன்று
ஆட்டடா திராவகத்தால் மணிமேற்பூசு
அப்பனே ரவியினுள்ளே யுலரப்போடு
நீட்டடா யிதன்மேலே வெள்ளையோடு
நேரான சவுக்காரச் சுன்னம்பூசி
மூட்டடா முன்பொடியைக் கீழ்மேலிட்டு
மூதண்ட குகைவாய்க்குச் சில்லுப்போடே. 516

சில்லிட்டுச் சீலைசெய்து கெசபுடமேபோடு
சிவசிவா தங்கமடா குருவேயாச்சு
மல்லிட்டு குருவோடே சவாதுகாரம்
மத்தித்துச் சூதத்தில் யோட்டிற்போடு
தெல்லிட்டு யுருக்கிடவே சூதம்கட்டுஞ்
சிகமரிய யிச்சூதம் முழுக்கட்டாச்சு

Koviloor Digital Library

அல்லிட்டு மிக்குருவைச் சரக்கில்பூசி
அப்பனே நவலோக வேதைபோடே 517

போடடா நவலோகம் வேதையாகும்
புகழான யுபரசமும் வேதையாகும்
ஆடடா யிக்குருவைப் பிரித்தேயாட
அடங்காது யுகாந்தவரை யாடிப்பாரு
மூடடா ஏமரசக் குருவின்போக்கை
மோசமடா நற்சீஷன் கண்டுசொல்லு
கூடடா சூதமென்ற குருவைச்சொல்வேன்
குறிப்பாகப் புலத்தியனே கூர்ந்துகேளே. 518

கேளப்பா முன்கட்டுஞ் சூதமொன்று
கெடியான சீனவெள்ளி யிடைதான்ரெண்டு
நாளப்பா ஒருமணியா யுருக்கிக்கொண்டு
நலமாக யிதன்மேலே பூசக்கேளு
நீளப்பா தாளகத்தின் சுன்னத்தோடே
நிலையான கற்பூரச் சுன்னம்கூட்டி
தாளப்பா யிதன்நேரே வீரங்கூட்டி
திராவகத்தை விட்டரைத்து மணிக்குப்பூசே. 519

பூசியல்லோ யுலர்த்தியிதை முன்பொடியிலிட்டுப்
புகழாகக் குகையிலிட்டுப் புடத்தைப்போடு
மாசியல்லோ யற்றிடவுங் கெஜப்புடத்தைப்போடு
மகத்தான ரசிதமது குருவுமாச்சு
வாசியல்லோ யிக்குருதான் வெள்ளிவித்தையாட
மைந்தனே காரமொடு சவாதுகூட்டி
வேசியல்லோ யிதைத்தொட்டுச் சரக்கில்பூசி
வெதும்பிடவே சரக்கெல்லாம் கட்டிப்போமே. 520

கட்டியதோர் சரக்கெடுத்து யுபரசமும்லோகங்
காட்டுமுன்னே பதினாறு மாற்றுவெள்ளி
ஒட்டியதோ ரிக்குருவிற் புனுகுசீனம்
உத்தமனே விட்டரைத்துச் சரக்கிற்பூசி
அட்டியதோர் சரக்கையெல்லாம் தணலிலூத
அப்பனே கடுஞ்சுன்னம் ஆகும்பாரு
கொட்டியதோர் செயநீரு மெழுகோகோடி
செப்பரிது ரசிதமென்ற குருநீறாட்டே. 52

Koviloor Digital Library

ஆட்டான ரசிதகுரு ஏமகுருரெண்டால்
ஆடுமடா கட்டினமும் நீற்றினமும்கோடி
மூட்டான யுபரசங்கள் சத்தேயாகும்
மூதண்ட குளிகைக்குச் சாரணையைத்தீரு
நீட்டான யிக்குருத்தான் தென்னிலையைப்போல
நிறைநிறையாய் பிரிந்தாடும் கவரோகோடி
சாட்டான வாதத்தில் சூதந்தங்கம்
தவறினால் துறையெல்லாம் தவறிப்போமே. 522

போமென்று சொன்னதென்ன பூரணமேயையா
பொன்னிட்டால் பொன்னாகும்வெள்ளி யிட்டால்வெள்ளி
தாமென்று வாதத்துக் காதியென்ன
சமுசயங்கள் எண்ணாதே கோசபீசம்
ஓமென்று சிவன்சொன்னார் ஆதிநூலில்
உத்தமியாள் யிதைக்கேட்டு விரித்தாளப்பா
நாமென்று சொன்னதல்ல சமாதிக்குள்ளே
நலமான பூரணந்தான் சொன்னவாறே. 523

சூடனுப்பு

வாறான சூடனுப் பொன்று சொல்வேன்
மைந்தனே துரிசிக்கு யிம்முறைதானையா
வீரான திராவகத்தில் சீனக்காரம்
விளங்கியதோர் பூநீறும் சங்குநீறும்
கூறான இவைமூன்றும் பொடியாய்ப் பண்ணி
கொட்டடா திராவகத்தில் மொலுமொலென வேகும்
ஆறான திராவகத்தைச் சூடனிலேகுத்தி
அப்பனே தினம்பத்து நிழலில்வையே. 524

கெந்தகவுப்பு

வைத்தபின்பு யிதையெடுத்துப் பீங்கானோடே
மைந்தனே தினமைந்து ரவியிற்போடு
நைத்தபின்பு சூடனது வுப்பேயாகும்
நலமான கெந்தகத்தின் வுப்பைக்கேளு
பைத்தபின்பு சுத்திசெய்த கெந்தகத்தைநீயும்
பரிவாகப் பொடிசெய்து பீங்கானிற் போட்டு
மைத்தபின்பு காரமிட்ட திராவகத்தைக்குத்தி
மைந்தனே பக்ஷமொன்று ரவியிற்போடே. 525

போட்டிடடா கெந்தகமும் வுப்பேயாச்சு

Koviloor Digital Library

புகழான கெந்தியுப்பும் சூடனுப்பும்
மூட்டிடடா சமனாக ரெண்டும்தானும்
மூதண்ட புனுகிட்டு கூடயாட்டி
நீட்டிடடா பீங்கானாம் தட்டிலப்பி
நேராக ரவியில்வைக்க தயிலமோடும்
பூட்டிடடா யித்தயிலம் துரிசிமேலே
புகழாக தினம்பூசி ரவியில்வையே. 526

வைத்தல்லோ தினமேழு காய்ந்தபின்பு
மைந்தனே திராவகத்தில் சங்குநீறும்
பைத்தல்லோ வெள்ளையொடு பூநீறும் போட்டு
பரிவாகக் கரையையிலே சவ்வீரம் போட்டு
நைத்தல்லோ யிதையெடுத்து துரிசிமேலே
நலமாகக் குத்திவர தினந்தானஞ்சு
கைத்தல்லோ துரிசியுட செம்புமாறும்
கலங்காமல் சீலைசுத்தி கொளுத்திடாயே. 527

கொளுத்திடவும் குருவாகும் துரிசிதானும்
கொளுத்தாமல் இன்னமொரு விவரஞ்சொல்வேன்
அளுத்திடவே பூநீறும் சங்குநீறும்
அப்பனே துரிசிக்குக் கீழ்மேலிட்டு
வளுத்திடவே சட்டியொடு அடுப்பிலேற்றி
மைந்தனே கடிகையைந்து எரித்தாயானல்
நளுத்திடவே துரிசியது குருவுமாகும்
நாட்டினால் சூதமது கட்டும்பாரே. 528

சவ்வீரவைப்பு

பாரடா சவ்வீர வைப்புச்சொல்வேன்
பரிவாக சூதமது பலமும் பத்து
நேரடா கல்லுப்பு வெடியுப்புச்சீனம்
நிலையான துரிசுயொடு அன்னபேதி
தாரடா தாளகமும் வெள்ளையோடு
சவ்வீரம் கொடுவேலி யுப்புத்தானும்
ஊரடா வகையொன்று தூக்ககேளு
உத்தமனே ரெண்டரைதான் பலமும் தூக்கே. 529

தூக்கியல்லோ வகைவகையா யெல்லாங்கூட்டித்
துடியாகப் பொடிசெய்து காயவைத்து

Koviloor Digital Library

தேக்கியல்லோ வளையலென்ற குப்பிக்குள்ளே
சிறப்பாக அரைவாசி இதனையிட்டு
வாக்கியல்லோ வாலுகையின் மேலேயேற்றி
மைந்தனே தீயெரிப்பாய் பனிரெண்டு சாமம்
போக்கியல்லோ தேங்காய்போல் பதங்கமேறும்
புகழான கொச்சியென்ற வீரமாச்சே. 530

வீரமடா யின்னமொன்று சொல்லக்கேளு
விளங்கியதோர் சூதமது பலமும்பத்து
சாரமடா பலம்அஞ்சு தூக்கிக் கொண்டு
சாதகமாய் கல்லுப்பு வெடியுப்புச்சீனம்
ஆரமடா அன்னமென்ற மேதியோடே
அப்பனே துரிசிமுத லிடையைக் கேளு
வாரமடா வகையொன்று ரெண்டரையே பலந்தான்
மைந்தனே ரசத்தோடு பொடியாய்ப் பண்ணே. 531

பண்ணியல்லோ உலரவைத்து தினந்தான்மூன்று
பரிவான வளையலென்ற குப்பியிலேபோடு
அண்ணியல்லோ அரைவாசி குப்பியிலேபோட்டு
அப்பனே குப்பிக்குச் சீலைசெய்து
ஒண்ணியல்லோ வாலுகையின் மேலேஏற்றி
உத்தமனே தீயெரிப்பாய் பனிரெண்டுசாமம்
கண்ணியல்லோ சவ்வீரம் பதங்கமேறும்
கண்டிட்ட தேங்காய்போ லிருக்குந்தானே. 532

தானென்ற முன்னெடுத்த கொச்சிவீரம்
சமுசியமாய் மறந்துவிட்டேன் சாரஞ்சேர்க்க
கோனென்ற சூதத்தின் இடையேபாதி
கூட்டடா சாரமங்கே கூட்டுகூட்டு
ஊனென்ற சாரத்தை விட்டாயானால்
உத்தமனே கொச்சியென்ற வீரம்போச்சு
வேனென்று பின்னெடுத்த சவ்வீரப்பெயரை
விளம்பினேன் பறங்கியென்ற வீரமாமே. 533

நாகரசம்

ஆமடா பறங்கியென்ற வீரத்தாலே
ஆட்டுகிறேன் வாதமென்ற பெண்ணைப்பாரு
ஓமடா முந்திமுந்தி நாகரசஞ்சொல்வேன்
உத்தமனே நாகமது பலமும்பத்து

Koviloor Digital Library

வாமடா சவ்வீரம் ரெண்டுபத்துபலந்தான்
வளமாகக் கூடஇட் டரைத்துநீயும்
சேமடா நாகத்தைக் கூட்டாய்போட்டு
சிறக்கவே திராவகத்தை விட்டு ஆட்டே. 534

விட்டுவிட்டு திராவகத்தை தினந்தானஞ்சு
விளம்பவே அரைத்துநீ வைப்பாயப்பா
நட்டுவிட்டு தினம்ரெண்டு சும்மாவைத்து
நலமாகப் பின்னெடுத்து அரைக்கும்போது
கட்டுவிட்டு னாகமெல்லாம் ரசமாய்ஒடும்
கண்டாயோ ரசமெல்லாம் வாங்கிக்கொண்டு
ஒட்டுவிட்டு அரைத்து நன்றாய் ரசமெல்லாம்வாங்கும்
ஒன்றுக்கு முக்கால்தான் நிற்கும்பாரே. 535

நாகரசத் தொழில்

பாரடா யிச்சூதம் நாகரசமென்பார்
பரியான நாகரசத் தொழிலைக்கேளு
நேரடா யிச்சூதம் வராகன்ரெண்டு
நிர்மலமாய்ப் பறித்தகடு வராகனொன்று
பேரடா யிதுமூன்றும் அரைத்துநன்றாய்
பேசாமல் திராவகத்தை விட்டேயாட்டி
பேரான தினமூன்று அரைத்தாயானால்
பொன்கரைந்து ஏமரச மாகும்பாரே. 536

ஆகுமந்த ஏமரசம் துரிசிநீரிட்டு
அப்பனே கட்டியல்லோ யெடுத்துக்கொண்டு
போகுமிந்த காரீயம் வராகன்ரெண்டு
புகழாக உருகையிலே இதனைப்போடு
தாகுமிந்த யிதையெடுத்து நொறுக்கிக்கொண்டு
சாதகமாய் கெந்தகந்தான் வராகனெட்டு
வாகுமிந்த கட்டியதோர் வெடியுப்புத்தான்
மைந்தனே வராகனொன்று கூடப்போடே. 537

போடடா யிதினோடே கட்டியதோர்லிங்கம்
புகழாக வராகனொன்று கூடக்கூட்டி
நீடடா பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
நிலையான வாலுகையில் ஏற்றிமூட்டு
நாடடா தீயெரித்துச் செந்தூரம்பண்ணு
நலமான வெள்ளிசெம்பில் பத்திலொன்றுபோடு

Koviloor Digital Library

கூடடா மாற்றென்ன ஆறேழுகாணும்
கூசாமல் உப்புக்கு மிறங்கும்காணே. 538

லிங்கக்கட்டு

இறங்கவே லிங்கத்தின் கட்டைச்சொல்வேன்
இதமான லிங்கமோ பலமதொன்று
தறங்கவே நாகரசம் வராகன்ரெண்டு
சார்வான காரீயம் வராகனொன்று
உறங்கவே வெடியுப்பு வராகனொன்று
உத்தமனே சீனமென்ற காரமொன்று
பிறங்கவே கல்லுப்பு அரைக்காசினிடைதான்
பேராக இவையெல்லாம் திராவகத்திலாட்டே. 539

ஆட்டியல்லோ லிங்கத்தின் மேலேபூசி
அப்பனே ரவியினுள்ளே காயப்போடு
மூட்டியல்லோ தினம்பத்து காய்ந்தபின்பு
முசியாதே சவுக்காரம் பச்சைசீவி
நீட்டியல்லோ திராவகத்தா லரைத்துப்பூசி
நேராகக் கரியோட்டில் வாட்டுவாட்டு
கூட்டியல்லோ சரக்கையெல்லாம் லிங்கத்திலேற்றி
கொல்லுமடா லிங்கத்தை ஈயந்தானே. 540

ஈயத்தைக் கொல்லஇன்னம் கருவைச்சொல்வேன்
என்மகனே துரிசிநீர் சாரங்கூட்டி
நேயத்தை அரைக்கையிலே மெழுகாய்ப்போகும்
நீட்டியந்த லிங்கத்தில் கவசம்போட்டு
பாயொத்து தணல்மேலே வாட்டுவாட்டு
பட்டுதடா லிங்கமது பணமேதின்க
காயத்தை யிருத்திவிக்கும் இந்தலிங்கம்
கவரான செந்தூரத் துறைக்குக்கூட்டே. 541

நாகரச சவ்வீரம்

கூட்டவே நாகரச சவ்வீரம்வைக்க
குறிப்பாகச் சொல்லுகிறேன் மச்சேந்திராகேளு
நாட்டவே நாகரசம் பலந்தான்பத்து
நண்பான சாரமது பலந்தானைந்து
நீட்டவே கல்லுப்பு வெடியுப்புசீனம்
நேரான துரிசியொடு அன்னபேதி
பூட்டவே வகையொன்று ரெண்டரைப்பலந்தான்
புகழாக வெல்லாந்தான் பொடியாய்ப்பண்ணே. 542

Koviloor Digital Library

பொடியாக்கி வளயலென்ற குப்பியிலே போட்டுப்
போக்காக அரைவாசி யடைத்துநீயும்
படியாக்கிக் குப்பிக்குச் சீலைசெய்து
பாங்கான வாலுகையின் மேலேயேற்றி
நெடியாகத் தீயெரிப்பாய் பனிரெண்டுசாமம்
நேரான நாகரசம் சவ்வீரமேறும்
குடியாக்கி நாகரச சவ்வீரத்தாலே
கூறுகிறேன் ஏமரசம் கூறினேனே. 543

ஏமரச சவ்வீரம்

கூறுகிறேன் நாகரசம் வீரந்தானும்
குறிப்பாக ரெண்டுபத்து பலந்தான் தூக்கி
ஆறுகிறேன் தங்கமது பலமும்பத்து
அப்பனே கூடஇட்டுத் திராவகத்தாலாட்டு
தேறுகிறேன் தினமைந்து அரைத்தாயானால்
சிவசிவா தங்கமெல்லாம் ரசமாய்ப்போகும்
மாறுகிறேன் பின்னொருநா ளரைத்துநீயும்
மைந்தனே ஏமரச மெல்லாம்வாங்கே. 544

ஏமரசத் தொழில்

வாங்கியதோர் ஏமரசத் தொழிலைக்கேளு
மைந்தனே ஏமரசம் பீங்கானிலிட்டு
பாங்கியதோர் திராவகத்தைக் குத்திகுத்திப்
பரிவாக ரவியில்வைக்க உப்பேயாகும்
தேங்கியதோர் தினம்பத்துக் காயஉப்பாம்
சிறப்பாகக் கட்டியதோர் வெடியுப்புக்கம்பி
ஓங்கியதோ ரிந்தஉப்பை மேலேபூசி
உத்தமனே ரவியினுள்ளே காயப்போடே. 545

காய்ந்துடனே வெடியுப்புக் கம்பிதானும்
கண்டாயோ பவளம்போற் சிவந்துபோகும்
வாய்ந்துடனே காரீயத் துள்ளேபோட்டு
மைந்தனே யூதிடவும் தங்கமாகும்
வோய்ந்துடனே வெடியுப்புக் கம்பிதானும்
உத்தமனே சரக்கையெல்லாம் கொல்லும்கொல்லும்
பாய்ந்துடனே வெடியுப்புச் செந்தூரத்தை
பலபலவாம் துறைக்கெல்லாம் போடுநன்றே. 546
நன்றான ஏமரசம் கட்டக்கேளு
நலமான சவுக்காரச் சுன்னத்தோடே

Koviloor Digital Library

கன்றான சாரமிட்டு அரைத்தாயானால்
கசகசன நெட்டேறி ஜெயநீராகும்
ஒன்றான ஜெயநீரில் துரிசிநீர்விட்டு
உத்தமனே கலக்கியல்லோ சுறுக்கும்போட
பன்றான ஏமரசங் கட்டிப்போகும்
பருவமுடன் செந்தூரம் செய்யக்கேளே. 547

செய்யவே ஏமரசம் பலந்தானெட்டு
சேரடா பதினாறு பலந்தான்கெந்தி
மய்யவே பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
மைந்தனே வாலுகையில் வைத்துமூட்டு
கொய்யவே செந்தூரப் பதத்தைப்பார்த்து
குமுறவே சிலாக்கையிட்டால் கரகரக்கும்பாரு
பய்யவே யிப்பதத்தில் ஆறவிட்டு
பயிரவனை பூசித்து யிறக்கிடாயே. 548

இறக்கியதோர் செந்தூரம் பத்துக்கொன்று
இட்டிடுவாய் ரவிமதியில் பத்தும்பத்துந்
துறக்கியதோர் யிதையெடுத்து தொந்தம்மெத்த
சொல்லுகிறேன் மச்சேந்திரா நன்றாய்க்கேளு
திறக்கியதோர் செந்தூர மொன்றுதானும்
சிறப்பான தங்கமது மூன்றிற்போடு
அறக்கியதோர் தங்கமது செம்பாய்நிற்கும்
அப்பனே யிந்திடைக்கு செயரசமுங்கூட்டே. 549

தொந்தம்

கூட்டியல்லோ செயமான யேமரசத்தோடு
குமுறவே வுருக்கியடா நொறுக்கிக்கொண்டு
நீட்டியல்லோ யிந்திடைக்கு ரெட்டிகெந்தி
நேராக யிட்டல்லோ குப்பிக்கேற்றி
மூட்டியல்லோ வாலுகையில் செந்தூரித்தால்
மோசமில்லை நூற்றிலொன்று ஓடும்வேதை
ஆட்டியல்லோ தசமாற்றுக் கதிகமாகும்
அப்பனே செந்தூரம் காசுதூக்கே. 550

தூக்கியதோர் செந்தூரம் காசுதானும்
சுகமாக முக்காசாந் தங்கத்தில்போடு
தாக்கியதோர் மணியாக்கி நொறுக்கிக்கொண்டு
சாதகமா யிந்திடைக்குச் செயரசத்தைச்சேர்த்து

Koviloor Digital Library

தேக்கியதோ ரிதையுருக்கி மணியாய்வாங்கி
சிறப்பாக யிதில்ரெட்டி கெந்திகூட்டி
வாக்கியதோ ரிதையெடுத்துக் குப்பிக்கேற்றி
வாலுகையில் செந்தூரம் செய்திடாயே. 551

செய்ததொரு செந்தூரம் யிருநூற்றுக்கொன்று
சேரடா நவலோகம் பதினாறுமாற்றாம்
பயித்ததொரு செந்தூரம் தினம்குன்றிகொள்ள
பாலனாம் மண்டலத்தில் பாருபாரு
கயித்ததொரு செந்தூரம் தங்கத்திலிட்டுக்
கட்டியதோர் சூதமிட்டு கெந்திசேர்த்து
எய்த்ததொரு தொந்தமடா யெத்தனையோயேறும்
யேறெற மாற்றுமுதல் வேதைகேளே. 552

கேளடா முன்னூறு நானூறுக் கோடும்
கெடியாக அஞ்சுநூறுக் காயிரமுமோடும்
நீளடா தொந்தமொன்றில் நூறுநூறோடும்
நிலையான மாற்றேதோ என்றாயானால்
தாளடா பத்துமுதல் பத்துமாற்றாந்
தங்கமடா மாற்றேற செம்பு போலக்காணும்
வேளடா வுரித்தசிவன் தேவிக்குச்சொன்னார்
வேதாந்தி யெனக்குநன்றாய் விளம்பினானே. 553

ஏமரச லிங்கம் கட்டும் விபரம்

விளங்கியதோர் யேமரசங் கூட்டக்கேளு
வெருளாதே துரிசிநீர் தன்னிலொக்க
உளம்பியதோர் வெறுந்துரிசி சத்தேபோடு
உத்தமனே சாரமதில் சத்தேபோடு
குளம்பியதோர் வாய்நீரை விட்டேயாட்டி
கூசாமல் சட்டியுட நடுவேபூசி
தளம்பியதோர் யேமரசம் யிதிலேவார்த்துச்
சார்வாக அடுப்பேற்றி தீயைமூட்டே. 554

மூட்டியல்லோ தீயெரித்து காய்ந்தபோது
மூதண்ட வெடியுப்புச் சாரந்தானும்
கூட்டியல்லோ சமனாகப் பொடியாய்ப்பண்ணி
கூசாமல் சத்துமேல் தூவுதூவு
ஆட்டியல்லோ பானையைப்போல் வீரிட்டுச்சாகும்
அப்பனே கட்டிப்போம் பாருபாரு

Koviloor Digital Library

நீட்டியல்லோ முழுக்கட்டு யிந்தச்சூதம்
நினையடா யிப்படியே சூதமெல்லாம்சாமே. 555

சாகுமடா சூதமிந்தப் படியேகட்டு
சார்வான யேமரசக் கட்டைவாங்கி
வாகுமடா யேமரசம் பொடியாய்ப் பண்ணி
மைந்தனே லிங்கமிடை மூன்றுக்கொன்று
பாகுமடா வெண்கருவால் கவசங்கட்டி
பரிவாகச் சீலைசெய்து காயப்போட்டு
வேகுமடா கரியோட்டில் வாட்டிவாட்டி
வெருளாம லூதிடவே லிங்கக்கட்டே. 556

கட்டடா முழுக்கட்டு லிங்கந்தானும்
கடுகயிடு ரவிமதியிற் பத்துக்கொன்று
பட்டடா தசமாற்றாம் பாருபாரு
பாங்காக யிப்படியே வீரங்கட்டு
நெட்டடா திசைக்கொன்று நவலோகவேதை
நேரான வீரத்தால் பத்தும்பத்து
முட்டடா யேமரசம் ஆருசெய்யார்
முழுவாதி யல்லாமல் மற்றோர்பொய்யே. 557

பொய்யடா வாதமொன்று சொன்னேன்வாயில்
போடடா மண்ணையள்ளி மெய்தானென்று
கய்யடா யேமரசங் கரண்டியிலேவிட்டு
கடுந்துரிசு நீரிதிலே சூடப்போட்டு
தய்யடா கெந்தகத்தின் தயிலம்விட்டு
சமத்தாக வூதிடவே செந்தூரமாகும்
மெய்யடா வாதமென்று வேதை போடு
விடுப்பட்ட மதயானை வாதிதானே. 558

ஏமரச சவ்வீரம்

வாதியென்றா யேமரச சவ்வீரம் வைப்பான்
மைந்தனே யேமரசம் பலந்தான்பத்து
பாதியென்ற சாரமதில் பலமுமைந்து
பரிவான கல்லுப்பு வெடியுப்புச்சீனம்
சாதியென்ற கற்சுவடு துரிசிதானும்
தாக்கடா வொவ்வொன்று ரெண்டரையே பலந்தான்
ஓதியென்ற யிவையெல்லாம் பொடியாய்ப்பண்ணி
உத்தமனே செயஞ்செய்யக் கருவைக்கேளே. 559

Koviloor Digital Library

கேளடா திராவகத்தில் துரிசிநீரிட்டுக்
கெடியாகக் கலக்கியல்லோ யிதிலேவிட்டு
நாளடா பகலிலே அரைத்துநன்றாய்
நலமாக ரவியில்வைத்து ஆட்டு ஆட்டு
நீளடா யிரவிலே பனியில்வைக்க
நெகுழுமடா நெகுழுமடா பாருபாரு
ஆளடா யிப்படியே பத்துநாளாட்டி
அப்பனே தணல்மேலே செயத்தைப்பாரே. 560

செயமாகக் கண்டபின்பு வளயற்குப்பி
செலுத்தியல்லோ அரைவாசி வாலுகையிலேற்றி
நயமாகத் தீயெரிப்பாய்ப் பத்துச்சாமம்
நாட்டியே கீழ்நிற்கும் மேலேறாது
பயமான தொன்றுமில்லை வில்லையப்பா
பாரடா கீழிருக்கும் செயவீரந்தான்
உயமான வர்ணமென்ன செங்கல்வர்ணம்
உத்தமனே யிதின்வேதை யுறுதிதானே. 561

உறுதியென்ற செயவீரம் வெள்ளிபத்தில்
ஊட்டடா வொன்றதுதான் பத்தும்பத்தாம்
பொறுதியென்ற செயவீரம் துரிசிக்குப்பூசி
போடடா ரவியினுள்ளே பொங்கிநீறும்
அறுதியென்ற இத்துரிசி சவாதுகாரம்
அணைத்திட்டால் சரக்கெல்லாம் வுருகியாடும்
நெறுதியென்ற யிவ்வீரம் புனுகுசீனம்
நேர்ந்திட்டால் சகலமுந்தான் சுன்னக்காடே. 562

சுன்னமோ கட்டினமோ செயநீரோகோடி
தொட்டுடனே நவலோக நீரோகோடி
வன்னமோ புனுகோடு செந்தூரங்கோடி
மைந்தனே யேமரச வீரத்தாட்டு
கன்னமோ போடவடா வாதக்கூட்டம்
கடைதிறந்து போகுமடா வீரவேகம்
இன்னமோ வென்னசொல்வேன் யென்னாற்கூடா
எழும்புமடா வெழும்புமடா வீரத்தாட்டே. 563

காரிய செயநீர்

ஆட்டாகக் காரியச் செயநீர் சொல்வேன்
அப்பனே காரியம் சட்டியிலே போட்டு

Koviloor Digital Library

நீட்டாக வுருகையிலே மூன்றுக்கொன்று
நேரான வீரரச மதிலேவாரு
மூட்டாக ரெண்டுமொன்றா யுருகும்போது
மூதண்ட சவ்வீரங் கற்பூரவுப்பு
கூட்டான வெள்ளையொடு மூன்றுங்கூட்டிக்
குமுறவே திராவகத்தா லரைத்திடாயே. 564

அரைத்தல்லோ செயம்பார்த்துப் பொடியாய்ச் செய்து
அப்பனே சூதமொடு காரீயமுகத்தில்
விரைத்தல்லோ பொடிதூவ வாங்கும்வாங்கும்
விளங்கியதோர் ஈயமது தம்பித்துநிற்கும்
நிரைத்தல்லோ பதங்கண்டு யீயமுகம்பார்த்து
நேரான திராவகத்தில் சங்குநீறும்
பரைத்தல்லோ பூநீறும் வெள்ளை கூட்டிப்
பாச்சியல்லோ திராவகத்தில் குத்துகுத்தே. 565

குத்தடா காரமிட்ட திராவகத்தைநீயும்
குமுறியல்லோ யீயரசம் விரியும்பாரு
அத்திடா அதுபதந்தா னப்போவாங்கி
யப்பனே யிதினோடு கற்பூரநீறும்
முத்தடா சவுக்கார நீறுங்கூட்டி
மூதண்ட திராவகத்தை விட்டேயாட்டி
பத்தடா வில்லைசெய்து காயப்போட்டுப்
பருவமுடன் கரியோட்டி லூதுவுதே. 566

ஊதடா காரீயஞ் சுன்னமாகும்
உத்தமனே வெளுக்குமட்டும் நன்றாயூது
கோதடா இதற்குநேர் சாரங்கூட்டிக்
குமுறவரை காரீயம் செயநீராகும்
வாதடா வந்திடத்தே யிந்தநீரை
வார்க்கல்லோ ரசத்திலே கொதிக்க வைக்க
ஏதடா சூதமங்கே கட்டிப்போச்சே
யெடுத்திடடா செந்தூரஞ் சுன்னப்போக்கே. 567

போக்கான செயநீரில் வீரந்தோய்த்துப்
போடடா ரவியினுள்ளே மெழுகுமாகும்
வாக்கான மெழுகினுள்ளே பறித்தகட்டையூட்ட
வாங்குமடா வாங்குமடா மென்றுமென்று

Koviloor Digital Library

தாக்கான மெழுகெடுத்து நவலோகத் தீய
　　சத்தியந்தான் தசமாத்து தப்பாதப்பா
நீக்கான காரியந் தங்கத்துக்கு
　　நேரடா நேரடா நீதான்காணே. 568

காணடா சரக்குகளில் செயநீரைத் தோய்த்துக்
　　கடுரவியில் வாட்டினால் கட்டிப்போகும்
பூணடா செந்தூரங் களங்கங்கோடி
　　பொன்னோடு சூதமிட்டால் வேதைகோடி
தோணடா யின்னீரில் சுன்னங்கோடி
　　துறைகோடி கவர்கோடி சொல்லப் போகா
ஊணடா காரீயத்துறையில் வேதை
　　உத்தமனே புடசெயமாம் வுறுதிதானே. 569

தானென்ற காரீயச் சுன்னம்போலே
　　சாதகமாய் வெள்ளீயச் சுன்னம்பண்ணி
கோனென்ற காரமிட்டுச் செயநீராக்கி
　　குத்தியல்லோ சூதத்தில் கொதிக்கக்கட்டும்
கானென்ற சரக்கையெல்லாம் துவைத்துவாட்டக்
　　கண்விட்டு ஆடுமடா பாருபாரு
ஊனென்ற வங்கத்தின் வேதை வேகம்
　　உத்தமனே வெகுசுறுக்கா முறுதிபாரே. 570

பாரடா வெள்ளீயச் சுன்னம் போலே
　　பாங்கான நாகத்தைச் சுன்னம்செய்து
சேரடா இதினோடே சாரந்தானே
　　சேர்த்தரைக்க நாகமது செயநீராகும்
வாரடா சூதத்தில் கொதிக்கக் கட்டும்
　　மைந்தனே ரசங்கட்ட வாதமாகும்
ஆரடா யிக்குருவை யறிந்தோன்வாதி
　　யப்பனே சரக்கையெல்லாம் துவைத்து வாட்டே. 571

வாட்டயிலே கட்டிப்போம் சரக்கானதெல்லாம்
　　வாசனைக்கு நவலோகஞ் சுன்னமாகும்
மூட்டயிலே ஒவ்வொன்றில் கவரோகோடி
　　மூதண்ட நாகமடா பொன்னுக்குவித்து
கூட்டயிலே இனங்கண்டு கூட்டுகூட்டுக்
　　கோடான கோடியடா செந்தூரமாகும்

Koviloor Digital Library

நீட்டயிலே நாகநீர் மெழுகுகோடி
நேரேது தாரேது நாகத்தாட்டே. 572

திரிவங்கம்

நாகமொன்று வங்கமொன்று காரீயமொன்று
நலமான மூன்றையுந்தான் சமனாய்க்கூட்டி
போகமொன்றி உருகையிலே சவ்வீரச்சூதம்
பூட்டடா இதிற்பாதி புகழநீயும்
வேகமொன்றி இதுநாலும் உருகும்போது
வெள்ளையென்ற பாஷாணம் கற்பூரவுப்பு
தாகமொன்றி சவ்வீரம் தாளகமும்கூடன்
சமனாக எடுத்துநீ திராவகத்திலாட்டே. 573

ஆட்டியல்லோ திராவகத்தால் செயத்தைப்பற்றி
அப்பனே காயவைத்துப் பொடியாப்பண்ணி
மூட்டியல்லோ தூவிடுவாய் கொஞ்சம் கொஞ்சம்
முன்மகம்போல் திரிவங்கம் உண்டுஉண்டு
நீட்டியல்லோ திரிவங்கம் தப்பித்துநிற்கும்
நேராகக் கரண்டியிலே இருக்கும்போது
கூட்டியல்லோ திராவகத்தில் சங்குநீறும்
கொடியதொரு பூநீறும் காயப்போடே. 574

போட்டல்லோ திராவகத்தில் கரைத்துக்கொண்டு
புகழான திரிவங்க முகத்தில்குத்து
நீட்டல்லோ திரிவங்கம் விரித்துதானால்
நேரான பதமென்று அறிந்துவாங்கி
கூட்டல்லோ இதுவோடே சவுக்காரச்சுன்னம்
குறையாதே தாளகத்தின் சுன்னம்போட்டு
மூட்டல்லோ கற்பூரச் சுன்னம்போட்டு
மூதண்ட திராவகத்தால் அரைத்துக்கட்டே. 575

கட்டியல்லோ வில்லையைப்போல் காயப்போட்டுக்
கரியோட்டில் ஊதியடா சுன்னமாக்கி
எட்டியல்லோ இந்திடைக்குச் சாரங்கூட்டி
இமுத்தரைத்துப் பனியில்வைக்கச் செயநீராகும்
ஒட்டியல்லோ செயநீரில் வீரந்தோய்த்து
உத்தமனே வாட்டயிலே மெழுகாய்ப்போகும்
கொட்டியல்லோ இம்மெழுகு செயித்தவீரம்
கெடியான தங்கத்தில் மெழுகுபூசே. 576

Koviloor Digital Library

பூசியல்லோ உருக்கிடவே தங்கந்தானும்
புகழான ஈயம்போல் சவளையாகும்
தேசியல்லோ சவளைக்கு ரெட்டிப்புவீரம்
சேர்த்தல்லோ திராவகத்தை விட்டேயாட்டி
வாசியல்லோ அற்றதுவும் சூதமாகும்
மைந்தனே சவளையது சூதம் சூதம்
வேசியல்லோ யென்றதொரு துருசிநீரால்
விரைந்திட்டு யிச்சூத முருக்கிடாயே. 577

தங்கச் சூதம்

உருக்கியதோர் சூதத்தின் ரெட்டிகெந்தி
உடன்சேர்த்துப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
மருகியதோர் வாலுகையின் மேலேயேற்றி
மாட்டியல்லோ தீயெரித்துச் செந்தூரஞ்செய்து
முறுகியதோர் நவலோக முப்பதுக்குளொன்று
மூட்டினா லெட்டரையே மாற்றுகாணும்
கிறுகியதோ என்றுசொல்லி இந்தப் பொன்னைச்
செலவழித்தால் நரகத்தில் எய்துந்தானே. 578

தானென்ற வீரத்தின் மெழுகுதானும்
சாற்றடா நவலோகஞ் சவளையாகும்
கோனென்ற நவலோகச் சவளையாலே
கோடான கோடிதுறை ஆடலாகும்
வானென்ற வீரத்தின் மெழுகுக்குள்ளே
மாட்டினால் பறித்தகட்டில் வேதையாகும்
ஊனென்ற திரிவங்க செயநீர்க்குள்ளே
உத்தமனே சரக்கையெல்லாம் துவைத்துவாட்டே. 579

வாட்டியல்லோ உருக்கிடவே எல்லாமாகும்
மகத்தான உபரசங்கள் சத்தாய்ப்போகும்
ஊட்டியல்லோ செயநீரைச் சூதத்துள்ளே
உத்தமனே கொதிப்பிக்கச் சூதங்கட்டும்
மூட்டியல்லோ இச்சூதம் செந்தூரமாகும்
மூதண்ட குருவாகும் களங்கமாகும்
பூட்டியல்லோ துரைகோடி ஆடலாகும்
புகழானத் திரிவங்கத் தாட்டும்பாரே. 580

வெடியுப்புக்கட்டு

பாரடா வெடியுப்புக் கம்பிதானும்

Koviloor Digital Library

பருவமுடன் கட்டுகிற கருவைச் சொல்வேன்
நேரடா வெடியுப்பு நாலாங்காய்ச்சல்
நேரான கம்பியைத்தான் எடுத்துக்கொண்டு
கூறடா திராவகத்தில் வீரம்போட்டு
குமுறவே கரையையிலே அரப்பொடியைப்போட்டு
நேரடா கரைந்தபின்பு வெள்ளைபோட்டு
நேரான சங்குநீர் கூடப்போடே. 581

போடடா பூநீறும் இதிலேநீயும்
புகழான சாரமதில் சத்தேபோடு
கூடடா சீனமதில் பச்சைபோடு
குமுறியல்லோ திராவகத்தில் கரைந்து போகும்
நீடடா இதினுள்ளே வெடியுப்பு தோய்த்து
நேராக ரவியினுள்ளே போடுபோடு
ஆடடா தினந்தோறும் தோய்த்து தோய்த்து
அப்பனே ரவியினுள்ளே காயப்போடே. 582

காயவே தினந்தோறும் தோய்த்துப்போடு
காய்ந்தபின்பு இராக்காலம் கிளிஞ்சி நீற்றில்
மாயவே புதைத்துவைத்து மறுநாள்கேளு
மைந்தனே திராவகத்தில் தோய்த்துப்போடு
ஓயவே இப்படித்தான் பக்ஷமொன்று
உத்தமனே மறவாமல் செய்தாயானால்
பாயவே எலும்புபோல் வெளுத்துக்காணும்
பருவமிது பதம்பார்த்து எடுத்திடாயே. 583

எடுத்ததொரு கம்பிக்குப் பூசக்கேளு
இதமான சீனமது பலந்தான்ரெண்டு
அடுத்ததொரு கடல்நுரைதான் பலந்தான்ரெண்டு
அப்பனே இவ்விரண்டை திராவகத்தாலாட்டி
மடுத்ததொரு வில்லையைப்போல் கட்டிநீயும்
மைந்தனே உலர்த்தியல்லோ கரியோட்டிலூதி
படுத்ததொரு சுண்ணாம்பாய் எடுத்துக் கொண்டு
பாங்கான திராவகத்தால் அரைத்துப்பூசே. 584

பூசியல்லோ கம்பியின்மேல் காயப்போடு
புகழாக தினமைந்து காய்ந்தபின்பு
வாசியல்லோ கிளிஞ்சிநீர் சட்டியிலேபப்பா

Koviloor Digital Library

வளமாகத் தீயெரித்து சூடு பார்த்து
ஓசியல்லோ கம்பியிதில் புதைத்து வைத்து
உத்தமனே ஆறவிட் டெடுத்துக்கொண்டு
நேசியல்லோ கிளிஞ்சிநீர் அடுப்பிலேற்றி
நேராகத் தீயெரித்து சூட்டில் வாங்கே. 585

வாங்கியந்தச் சூட்டினுள்ளே உப்பை வைத்து
மைந்தனே ஆறவிட்டு எடுத்து நீயும்
ஓங்கியிந்தப் படிதான்நீ தீயையேற்றி
உத்தமனே உப்பரைத்த பதத்தைப்பார்த்து
தேங்கியந்த நீற்றினுள்ளே உப்பை வைத்து
சிறப்பாகக் கடிகையைந்து எரித்தாயானால்
பாங்கியந்த வெடியுப்பு எலும்பு போலப்
பதையாமல் கட்டிப்போம் பாருபாரே. 586

வெடியுப்புச் செந்தூரம்

பாரடா வெடியுப்புச் செந்தூரஞ் சொல்வேன்
பரிவான யேமரசம் பீங்கானில் விட்டு
நேரடா திராவகத்தை விட்டுவிட்டு
நினைவாகப் பத்துநாள் வெய்யலிலே வைக்க
தூரடா யேமரச முப்பேயாகும்
துரிசியென்ற நீற்றிலே நாலிலொன்று போட்டு
வேரடா திராவகத்தை விட்டேயாட்டி
வில்லைசெய்து ரவியினுள்ளே யுலரப் போடே. 587

உலர்ந்ததொரு வில்லையைத்தான் சங்குநீறும்
உத்தமனே பூநீறும் வெள்ளைகூட்டி
கலர்ந்ததொரு பொடியாக்கி வில்லைக்கப்பா
கட்டியல்லோ கீழ்மேலும் புடத்தைப்போட்டு
வலர்ந்திதனைப் புடம்போட அறியாவிட்டால்
வாகான அடுப்பேற்றி தீயைமூட்டி
புலர்ந்திதனைக் கடிகையைந்து தீயை வாட்ட
போக்கான யேமரசம் சுன்னமாமே. 588

சுன்னமென்ற யேமரசச் சுன்னத்தோடே
சூட்டியல்லோ சவ்வீரம் இளக்கிக் கொண்டு
கன்னமென்ற வெடியுப்புக் கம்பிக்குப்பூசி
கடுரவியில் போட்டிடவே சிவந்துபோகும்

Koviloor Digital Library

இன்னமொன்று உப்புக்குச் செந்தூரஞ் சொல்வேன்
    எடுத்திட்டால் தங்கமென்ற சுன்னமொன்று
வன்னமென்ற வீரமிட்டே அரைத்துக் கொண்டு
    மகத்தான வெடியுப்புக் கம்பிக்கப்பே. 589

அப்பியல்லோ ரவியிலிடச் சிவந்து போகும்
    அப்பனே வெடியுப்புச் செந்தூரமிதுதான்
ஒப்பியல்லோ சிவந்தவுப்பைக் காரீயத்தில்
    உத்தமனே பத்திலொன்று கொடுத்தேயூத
கப்பியல்லோ அற்றுப்போய் தங்கமாகும்
    காரீய வேதையடா பத்தும்பத்தும்
தப்பியல்லோ போகாது வுப்பின் வேதை
    சதாசிவனைப் போலாடும் தாக்கிப்பாரே. 590

வெடியுப்புக்கட்டியுருக்க

பாரடா இன்னமொரு வெடியுப்புக்கட்டு
    பருவமாய்ச் சொல்லுகிறேன் உருகியாட
நேரடா வெடியுப்பு நாலாங்காய்ச்சல்
    நிலவரமாய்ப் பன்னிரண்டு பலந்தான் தூக்கி
சேரடா சட்டியிலே இட்டுவுப்பை
    சிறப்பாக அடுப்பேற்றி உருகும்போது
தாரடா அன்னமென்ற பேதிதானும்
    தவறாமல் பலம்பத்து எடுத்திடாயே. 591

எடுத்தல்லோ பாழ்க்கிணற்று தண்ணீர்விட்டு
    இதமாகக் கரைத்துவைத்து இன்னங்கேளு
அடுத்தல்லோ கடல்நுரைதான் பலமும்ரெண்டு
    அப்பனே சூடனது பலமுமொன்று
மடுத்தல்லோ திராவகத்தால் அரைத்துக்கொண்டு
    மைந்தனே வில்லைகட்டி உலரப்போடு
படுத்தல்லோ கரியோட்டில் ஊதச்சுன்னம்
    பாங்காக இதையுமொக்கக் கரைத்திடாயே. 592

கரைத்திடவே சீனமது பலத்தைக் கேளு
    கைமுறையாய் ஒண்ணரையே பலமும்போடு
விரைத்திடவே இவையெல்லாம் கலக்கி நன்றாய்
    விளம்பியதோர் தெளிவிருத்து ரவியில் வைக்க
நிறைத்திடவே உப்பாகும் கல்சவட்டினுப்பு
    நேராக இந்துப்பு பலந்தான்மூன்று

Koviloor Digital Library

தரைத்திடவே முன்னுருகும் வெடியுப்புக்குள்ளே
சமரசமா யிதைத்தூவ கட்டிப்போமே. 593

கட்டியதோர் வெடியுப்புத் தண்ணீர்போலே
கலங்காம லுருகுமடா தீபத்தாது
ஒட்டியதோர் உப்பிதுதான் முழுக்கட்டப்பா
உத்தமனே இந்தவுப்பில் துறையைக் கேளு
நெட்டியதோர் உப்புநின்று உருகும்போது
நேராக சாரத்தைத் தோய்த்துவாட்ட
கெட்டியடா முழுக்கட்டு சாரம்சாரம்
கெடியான வாதவித்தை கைக்குள்ளாச்சே. 594

ஆச்சடா லிங்கமதைத் துவைத்துவாட்டு
அப்பனே வெள்ளையென்ற பாஷாணம்வாட்டு
வீச்சடா சரக்கையெல்லாம் துவைத்துவாட்ட
வெகுசுறுக்காய்க் கட்டியடா வேதையாகும்
காச்சடா கவுரியைத்தான் தோய்த்துதோய்த்துக்
கரியில் வைத்து உருக்கையிலே சத்தாய்போகும்
மூச்சடா கல்லுப்பு துரிசிவீரம்
மூதண்ட சூடனொடு வெவ்வேறாய்ப் பூசே. 595

பூசியல்லோ தினந்தோறும் காயப்போட்டுப்
புகழாக தினம்பத்து கடந்தபின்பு
ஆசியல்லோ வாட்டயிலே கட்டிப்போகும்
அப்பனே லகுமெதுவு கண்டுவாட்டு
தேசியல்லோ இந்தவுப்பு சரக்கைக் கொல்ல
தேவியுட னாதமய்யா வெடியுப்புப்பாரு
நேசியல்லோ வெடியுப்பை யாறவைக்க
நேராகப் புட்டுப்போ லிருக்குந்தானே. 596

தானென்ற வுப்பாலே நாகங்கட்டும்
சமுசயங்கள் எண்ணாதே காரீயங்கட்டும்
கானென்ற முன்கட்டு சரக்கையெல்லாம்
கைமுறையாய்ச் செந்தூரம் களங்கு செய்வாய்
வானென்ற தாயிட்டு கெந்தகமுமிட்டு
மைந்தனே சூதமிட்டால் வேதைகோடி
தேனென்ற பூமியுட னாதத்தாட்டு
சிவசிவா என்றாலும் முடியாவாறே. 597

Koviloor Digital Library

காரீய செயநீர்

வாறான காரீயச் செயநீரொன்று
மச்சேந்திரா சொல்லுகிறேன் துறைகளுக்கெல்லாம்
வீறான காரீயம் உருகும்போது
வெடியுப்புக் கட்டினதும் வெள்ளையுங்கூட்டி
கூறான சமன்கூட்டிப் பொடியாய்ச் செய்து
குறிப்பாகத் தூவிவர காரீயத்தில்
பேறான கட்டியதோர் வெடியுப்பிட்டு
பிரளவே யுருக்கிடவும் வெந்துபோமே. 598

வெந்தல்லோ காரீயம் கரைந்து பொங்கி
வெகுகாரச் சுண்ணாம்பாம் இதனைவாங்கி
அந்தல்லோ யிந்திடைக்குச் சாரஞ்சேர்த்து
அப்பனே யரைத்தாக்கால் செயநீராகும்
வந்தல்லோ செயநீரை வாங்கிக் கொண்டு
மைந்தனே செந்தூரத் துறைகள் தோறும்
நொந்தல்லோ போகாம லரைத்துநீயும்
நுகரவே குப்பியிலே எடுத்திடாயே. 599

எடுத்திடுவாய் வாலுகையில் செந்தூரங்கள்
எடுத்ததுறை சரக்கெல்லாம் செயமாய் நிற்கும்
மடுத்திடுவாய் லோகத்தி லெட்டிவாங்கும்
மைந்தனே காரீயத் தடுத்தவாறு
கொடுத்திடுவாய் வர்ணமங்கே யெழும்பிக்காணும்
கூசாது உப்புக்குத் தங்கமாகும்
அடுத்திடுவாய் காரீயக் கருவைவிட்டால்
அப்பனே வங்கத்துக் கோடிப்போமே. 600

செந்தூரத்திற்கு காரீயத்திராவகம்

ஓடாமல் காரீயத் திராவகத்தைச் சொல்வேன்
உத்தமனே வெடியுப்புப் பலமோ ஒன்று
வாடாமல் சவ்வீரம் பலமோ ஒன்று
வளமாக ரெண்டையுந்தான் பொடியாய்ப் பண்ணி
நீடாமல் காரீயம் உருகும்போது
நினைவாக பொடியையிட்டு வறுப்பாயானால்
கூடாமல் காரீயம் பற்பமாகும்
கூட்டியிந்த பற்பத்தைத் திராவகத்தாலாட்டே. 601

Koviloor Digital Library

ஆட்டியல்லோ வில்லைகட்டி காயப்போட்டு
அப்பனே இதைப்பொடித்து திராவகத்தில்போட
நீட்டியல்லோ மொலுமொலெனக் கரைந்துநீறாய்
நேராகப் போகிவிடும் பாருபாரு
தாட்டியல்லோ காரீயம் தன்னையுண்ட
திராவகங்காண் திராவகங்காண் தன்னைக்கேளு
மூட்டியல்லோ திராவகத்தில் சவ்வீரம் போட்டு
முதிர்ந்ததொரு ரவியினுள்ளே வைத்திடாயே. 602

சவ்வீர உப்பு

வைத்திடுவாய் வீரமதில் ரொம்பப்போட்டு
வளமாகத் தினந்தோறும் திராவகத்தைவாரு
கைத்திடுவாய் தினம்பத்து காய்ந்துதானால்
காரமடா கடுங்காரம் வீரவுப்பு
நைத்திடுவாய் வீரமது பத்துக் கொன்று
நாட்டியல்லோ கற்பூரங் கூடப்போட்டு
ஒயித்திடுவாய் திராவகத்தை விட்டு விட்டு
உத்தமனே ரவியில்வைக்க உப்புமாமே. 603

உப்படா வீரமொடு பூரம்ரெண்டு
உத்தமனே கூட்டியதோர் வேகத்தாலே
உப்படா சிவந்திருக்கும் தொட்டவிடம்வேகும்
உறுதியடா தொழிலுக்குப் பாருபாரு
உப்படா இதினோடே சாவதுகூட்டி
ஓங்கியதோர் ரவியினுள்ளே வைத்தாயானால்
உப்படா உருகிநின்று தகட்டைவாங்கும்
உயர்ந்ததொரு செயசாரச் சத்தேபோடே. 604

போட்டல்லோ இறக்கியதை வைத்துக்கொண்டு
புகழான குடவன்முதல் நவலோகத்தில்
நீட்டல்லோ பூசியிதை வாட்டி நீயும்
நேராக உருக்கினால் பொன்னாய்ப் போகும்
மூட்டல்லோ இந்தவுப்பில் சவாதுகாரம்
முறையாக மத்தித்து வழித்துக் கொண்டு
பூட்டல்லோ சரக்கோடு காரசாரம்
பூசியல்லோ வாட்டியிதை யுருக்கிடாயே. 605

Koviloor Digital Library

உருக்கிடவே உருகிப்போம் சரக்கெல்லாந்தான்
உறவான தங்கமொடு சூதஞ்சேர்த்து
பருக்கிடவே செந்தூரஞ் செய்தாயானால்
பணவேதை ஆடுமடா வீரத்தாட்டு
சொருக்கிடவே உபரசங்கள் பூசியூத
சுகமாக முத்துப்போல் சத்தாய் நிற்கும்
நெருக்கிடவே சத்தாகும் ஈயமாகும்
நேராக சூதமொடு தங்கஞ்சேரே. 606

சேர்த்தல்லோ உபரசத்தைச் செந்தூரித்தால்
ஜெகமறிய நவலோகம் வேதையாகும்
கோர்த்தல்லோ உபரசத்தில் கற்பங்கோடி
கொள்ளுகிற முறைகோடி குறியைக்கேளு
போர்த்தல்லோ உபரசத்தின் இடைகாரீயம்
பூட்டியல்லோ உருகையிலே ஈயஇடைநாகம்
மார்த்தல்லோ நாகஇடை சூதம்போடு
மைந்தனே சூதயிடை நாகம்போடே. 607

போடிந்த இடைக்கெல்லாம் ரெட்டிகெந்தி
புகழாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றி
ஊடிந்த வாலுகையில் செந்தூரித்தால்
உத்தமனே வெகுதூரம் ஓடும்வேதை
நீடுமிந்த மாற்றென்ன பதினாறப்பா
நேரான யுபரசத்தின் வேகம்வேகம்
ஆடுமிந்தப் படிதானே உபரசங்களெல்லாம்
அப்பனே வீரத்தில் ஆட்டுதானே. 608

தானென்ற ரசத்தையல்லோ உப்பாய்ச் செய்ய
சாதகத்தைச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
கானென்ற துரிசியது விராகனஞ்சு
கைமுறையாய் சங்குநீர் விராகனஞ்சு
வானென்ற வர்ய்நீரால் சங்குநீறை
வளமாக துரிசியின்மேல் கவசங்கட்டி
வேனென்ற ரவியினுள்ளே காயப்போட்டு
விளங்கியதோர் திராவகத்தி லிதனைப்போடே. 609

போடடா மொலுமொலெனக் கரைந்துபோகும்
புகழான ரசத்தையொரு பீங்கானில்விட்டு

Koviloor Digital Library

நீடடா திராவகத்தை யதிலேவார்த்து
நேராக ரவியில்வைப்பாய் தினந்தோறும்விட்டு
ஊடடா தினம்பத்தி லுப்பேயாகும்
உத்தமனே ரசவுப்பே யென்றுபேரு
ஆடடா இந்தவுப்பில் சாரம்சாற்றே
அனைத்தல்லோ திராவகத்தால் அரைத்திடாயே. 610

கல்லுப்புக் கட்டு

அரைத்தல்லோ கல்லுப்பு மணிக்குப்பூசி
அப்பனே ரவியினுள்ளே காயப்போட்டு
விரைத்தல்லோ பூநீறுக் குள்ளேவைத்து
மேல்மூடிப் புடம்போடு உப்புக்கட்டும்
நிரைத்தல்லோ உருக்கிடவே கரியிலாடும்
நேரான முழுக்கட்டுக் கல்லுப்பப்பா
ஓரைத்தல்லோ உப்புநின்று உருகும்போது
ஒன்பதென்ற பாஷாண மொவ்வொன்றீயே. 611

ஈய்ந்திடவே ஒவ்வொன்று வர்ணத்தோடே
என்மகனே மணிபோல இருக்கும்பாரு
ஆந்திடவே ஒவ்வொன்றில் தாயுஞ்சூதம்
அப்பனே காரீயம் நாகம்கூட்டி
மாய்த்திடவே செந்தூரம் செய்தாயானால்
மாட்டடா நவலோகம் வேதையாகும்
பாய்ந்திடவே உப்பினது வேதைபட்டால்
பறியடா உப்புக்கு நெறியுமாமே. 612

கெந்தி பூர உப்பு

நெறியான கெந்தியோடு பூரங்கூட்டி
நிலையாக உப்பெடுக்க விபரங்கேளு
பொறியான சுத்தித்த கெந்திதானும்
போடடா பலமொன்றும் இதனோடொக்க
மறியான சூடனது விராகன் மூன்று
மைந்தனே பூரமது விராகன்ரெண்டு
குறியான இவைமூன்றும் பொடியாய் செய்துக்
கொட்டியல்லோ பீங்கானில் திராவகத்தைவாரே. 613

வார்த்தல்லோ தினந்தோறும் நிழலில் வைப்பாய்
மச்சேந்திரா பத்துநாள் கடந்தபின்பு

Koviloor Digital Library

ஏர்த்தல்லோ ரவியில்வைக்க வுப்பேயாகு
மிதுவடா கெந்தியொடு பூரமுப்பு
போர்த்தல்லோ இந்தவுப்பில் புனுகுகூட்டிப்
புகழாக மத்தித்துப் பீங்கான் தட்டில்
சேர்த்தல்லோ அப்பியிதை ரவியில்வைக்க
சிறப்பாகத் தயிலம்போ லோடுந்தானே. 614

ஓடியதோர் தயிலத்தில் வீரம்போட்டு
உறவாக மத்தித்துத் துரிசிக்கப்பி
நாடியதோர் ரவியினுள்ளே காயப்போடு
நாலேழு பூசியடா காய்ந்தபின்பு
தேடியதோர் பூநீறுஞ் சங்குநீறும்
சிறப்பான வெள்ளையொடு திராவகத்திற் போட்டு
நீடியதோர் துரிசியின்மேல் குத்திகுத்தி
நேராக மூன்றுநாள் ரவியிற்போடே. 615

துருசிகுரு ரசக்கட்டு

போட்டல்லோ காய்ந்தபின்பு சீலைசுற்றி
புகழாக கொளுத்திவிடு துரிசிநீறும்
மூட்டல்லோ இந்தநீர் சட்டியிலேபூசி
மூதண்ட சூதத்தை யிதிலேவார்த்து
நீட்டல்லோ வடுப்பேற்றி தீயையாட்ட
நேராகச் சூதமங்கே காய்ந்தபோது
பூட்டல்லோ சாரமொடு வெடியுப்பிரண்டும்
பொடியாக்கி யிதன்மேலே தூவுதூவே. 616

தூவுகையிற் சூதமங்கே வீரிட்டுக்கட்டும்
துடியான கட்டிதுதான் சூதம்சூதம்
தாவுகையி லிக்குருவில் சவாதுகாரம்
சாற்றியல்லோ மத்தித்து வைத்துக்கொண்டு
பாவுகையில் சரக்குமேல் பூசியூதப்
பருவமுடன் சரக்கெல்லாம் கட்டியாடும்
கோவுகையில் சரக்கொன்றில் வேதைகோடி
கூட்டடா தங்கமுடன் சூதந்தானே. 617

தானென்ற குருவாகுந் துரிசிக்குள்ளே
சத்தல்லோ காரமிட்டுத் திராவகத்தாலாட்டி
கோனென்ற சாரத்தின் மேலேபூசிக்
குமுறவே ரவியினுள்ளே காயப்போட்டு

Koviloor Digital Library

வேனென்ற மிதன்மேலே கவசங்கட்டி
வெடியுப்பு கட்டினதை திராவகத்திலாட்டி
ஊனென்று மிதன்மேலே கவசம்போட்டு
உத்தமனே காயவைத்துச் சீலை செய்யே. 618

சீலையொடு கரியோட்டில் வாட்டி வாட்டிச்
சிக்கெனவே யூதிடவே சாரங்கட்டும்
மாலையொடு முழுக்கட்டு சாரமப்பா
வாய்திறந்து பேசாதே வேதைசொல்வேன்
காலையொடு மிச்சாரம் விராகனஞ்சு
கலந்திதிலே சவ்வீரம் பலமுமொன்று
ஆலையொடு திராவகத்தா லிளக்கியாட்டி
அப்பனே ரவியில்வைத்துச் சூடுபாரே. 619

வீரமைனம்

சூடுகண்டு பறித்தகட்டைக் கொடுத்தாயானால்
சுகமான யானையைப்போல் மென்றுவாங்கும்
நீடுகண்டு இதின்பேரு சவ்வீரமெழுகு
நேராக இதின்வேதை சொல்லக்கேளு
ஊடுகொண்டு மிதைஎடுத்து முருக்கினாக்கால்
உத்தமனே யிதன்சோதி கண்கொள்ளாது
கூடுகொண்டு மதன்வயதைச் சொல்லப்போமோ
குறையாது எட்டரையே மாற்றுமாமே. 620

ஆமடா இம்மெழுகை யிரும்புரவி வெள்ளி
அவைமீது பூசியல்லோ உருக்கினாக்கால்
ஓமடா தசமாற்றும் உற்றுப்பாரு
உத்தமனே சவ்வீரத் தடுத்தவாறு
சாமடா கட்டியதோர் சாரத்தாலே
சரக்கெல்லாம் பூசியல்லோ வாட்டி வாட்டு
நாமடா சாரத்தின் முடிவைக் கானோம்
நலமான சாரத்தி னாட்டைக்கேளே. 621

கேளடா கட்டியதோர் சாரந்தன்னில்
கெடியாக வீரமிட்டு அரைத்துக் கொண்டு
நாளடா கவுரியின்மேல் பூசிவாட்டி
நலமாக உருக்கிடவே சத்தாய்ப்போகும்
வாளடா கவுரிசத்துத் தூபவேதை
ன்மைந்தனே செந்தூரம் நூற்றுக்கோடும்

Koviloor Digital Library

தேளடா இச்சாரம் உபரசத்தில்பூசிச்
சிறப்பாக உருக்கவெல்லாம் சத்தாய்ப்போமே. 622

சத்தடா வுபரசங் ளானதெல்லாம்
சாதகமாய்ச் செந்தூர வரிசைசொல்வேன்
வித்தடா வித்தோடே சூதங்கெந்தி
வெருவியல்லோ உபரசமுங் குப்பிக்கேற்றி
பத்தடா வாலுகையில் செந்தூரித்தால்
பலபலவாம் உபரசத்தில் வேதைகோடி
முத்தடா சாரத்தால் சுன்னஞ்சொல்வேன்
மூவுலகும் கிழிந்தாடும் சுன்னப்போக்கே. 623

போக்கான சாரத்தில் புனுகுவீரம்
போடடா சீனமொடு பூரத்துப்பும்
வாக்கான இவையைந்தும் அரைத்துக்கொண்டு
மைந்தனே உபரசங்கள் நூற்றுரெண்டுபத்தும்
ஆக்கான பாஷாணம் அறுபத்துநாலும்
அப்பனே காரமொடு லவணஞ்சாரம்
போக்கான நவலோகம் ஒன்பதுடன்கேளு
புகழாகப் பூசியல்லோ ஊதினாக்கால்
தாக்கான சுன்னமடா எல்லாமப்பா
சாரத்தி னாட்டைஎன்ன சாற்றுவேனே. 624

சாற்றுவேன் ஒவ்வொன்றில் செந்தூரங்கோடி
சமரசமாய் மெழுகோடு செயநீர்கோடி
போற்றுவேன் கட்டினமும் நீற்றினமும்கோடி
பொன்னோடு நவலோக ரசங்கள்கோடி
ஆற்றுவேன் பச்சைதொட்ட வேதைகோடி
அப்பனே என்னசொல்வேன் சாரத்தாழ்மை
மாற்றுவே னென்றாலும் மாற்றொட்டாது
மாசத்தின் நாதமடா சாரந்தானே. 625

சிப்பிநீர் சாரக்கட்டு ஜெயநீர்

தானென்ற கிளிஞ்சியது சுத்திசொல்வேன்
சமரசமாய் முதிர்ந்ததொரு கிளிஞ்சிவாங்கி
ஊனென்ற பூநீறும் சுன்னம்கூட்டி
உத்தமனே கரைத்தல்லோ அதிலேவார்த்து
வேனென்ற சிப்பியிது பலந்தான்பத்து
வேகவிட்டுத் தண்ணீரும் வற்றினாக்கால்

Koviloor Digital Library

தேனென்றே உணர்ந்தபின்பு நொறுக்கிக்கொண்டு
சேர்த்திடடா சாரமதில் பலமும்பத்தே. 626

பத்தாக ரெண்டையுந்தா னரைத்துநன்றாய்
பருவமுடன் மூன்றுநாள் சும்மாவைத்து
அத்தாக வெடியுப்பை அயச்சட்டியிட்டு
அப்பனே அடுப்பேற்றி யுருகும்போது
முத்தாக மனுஷனது தலைமயிரைப்போட
மூதண்ட வெடியுப்பு மென்றுவாங்கி
சித்தாக தம்பித்துக் கட்டிப்போகும்
சிறக்கஇதைப் பனியிலே வைத்திடாயே. 627

வைத்திடவே வெடியுப்பு செயநீராகும்
மைந்தனே முன்னரைத்த கிளிஞ்சிசாரம்
நைத்திடவே யிதைவிட்டு அரைத்துநன்றாய்
நலமாகச் சியம்பார்த்துக் குகையிலிட்டு
மெய்த்திடவே புடம்போடு சாரங்கட்டும்
மூதண்ட பனியில்வைக்க செயநீராகும்
கொய்த்திடவே யிதின்பேரு சாரநீர்தான்
கொள்ளையடா வாதமிதில் கூறக்கேளே. 628

கேளடா யின்னீரில் சீனச்சுன்னம்
கெடியான சங்குநீர் வெள்ளைகூட்டி
நீளடா சமனாகப் பொடித்துப்போட்டு
நேராக கலக்கியல்லோ வைத்துக்கொண்டு
தாளடா வெடியுப்புக் கம்பிக்கப்பி
சமரசமாய் ரவியினில்வை தினந்தான்பத்து
சூளடா வெடியுப்பு நீரேவற்றி
சுகமாக எலும்புபோ லிருக்கும்பாரே. 629

பாரிந்தக் கம்பிக்குச் சீனச்சுன்னம்
பரிவான வெள்ளையென்ற பாஷாணங்கூட்டி
நேரிந்த சவுக்காரச் சுண்ணம்போட்டு
நிலையாகச் செயநீரா லரைத்துக்கொண்டு
ஊரிந்தக் கம்பியின்மேல் பூசிநன்றாய்
உத்தமனே நன்றாகக் காயப்போட்டு
காரிந்தக் கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்துக்
கைமுறையாய் அடுப்பேற்றித் தீயையாட்டே. 630

Koviloor Digital Library

ஆட்டியல்லோ தீயெரிப்பாய் மெள்ளமெள்ள
அப்பனே யாறவிட்டு விட்டுஆட்டு
மூட்டியல்லோ கிளிஞ்சிநீ றாத்தியாச்சு
மூதண்ட வெடியுப்பு மாற்றியாற்றி
நீட்டியல்லோ கனலேற வைத்துவைத்து
நேராகத் தீயெரிப்பா யிருகமட்டும்
ஓட்டியல்லோ வெடியுப்பு எலும்புபோல
உத்தமனே கட்டிப்போம் உறுதிதானே. 631

உறுதியென்ற வெடியுப்புக் கம்பிமேலே
உத்தமனே வீரத்தைச் செயநீரால்பூசி
வெறுதியென்ற ரவியினுள்ளே போட்டாயானால்
வெகுவிந்தைக் கம்பியடா சிவந்துபோகும்
பெறுதுயென்ற சிவந்தகம்பி பலமுமொன்று
பேரான ஏமரசம் விராகனஞ்சு
சுருதியென்ற காரீயச் செயநீர்விட்டுச்
சுகமாகத் தினமொன்று மரைத்திடாயே. 632

அரைத்ததொரு மருந்துக்கு ரெட்டிதானும்
அப்பனே சுத்தித்த கெந்திகூட்டி
நிரைத்ததொரு பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
நேரான வாலுகையில் செந்தூரித்தால்
தரைத்ததொரு நவலோகம் வேதையாகும்
சாத்தினால் காரீயம் பொன்னுமாகும்
உரைத்ததொரு வெடியுப்புச் செந்தூரம்பாய்ந்தா
லோடாது உப்புக்கு முறுதிதானே. 633

கல்லுப்புச்சுண்ணம் வாலைரசம்

உறுதியென்ற சாரநீர்க் குள்ளேகேளு
உத்தமனே பூநீறுஞ் சங்குநீறும்
பெறுதியென்ற வெள்ளையொடு மூன்றுங்கூட்டி
பேராகப் பொடிசெய்து யிதிலேபோட்டு
நெறுதியென்ற கல்லுப்பைத் தோய்த்துதோய்த்து
நேராகத் தினம்பத்து ரவியில்போட்டு
அறுதியென்ற கிளிஞ்சிநீர்க் குள்ளேவைத்து
அதட்டியொரு புடம்போடச் சுண்ணமாமே. 634

ஆமிந்தக் கல்லுப்புச் சுண்ணந்தானும்
அப்பனே பலம்ரெண்டு பூரமொன்று

Koviloor Digital Library

ஓமிந்த ரெண்டையுந்தான் வெடியுப்புநீரால்
உத்தமனே அரைத்தல்லோ வில்லைகட்டிப்
போமிந்த வெகுவாக நீற்றில்வைத்து
புடம்போட்டு யெடுத்தல்லோ செயநீரில்போட்டு
வாமிந்த கரைத்தல்லோ சூதத்தில்விட்டு
மைந்தனே ரவியில்வைத்து அரைத்திடாயே. 635

அரைத்திடவே மாண்டல்லோ சூதந்தானும்
அப்பனே களங்குடனே இழுத்துக்கொள்ளும்
நிரைத்துடனே பத்துநாள் ரவியில்வைத்து
நேராகத் தினந்தோறும் அரைப்பாயப்பா
உரைத்திடவே தினந்தோறும் செயநீரைவார்த்து
உறுதியா யரைத்துநீ காயப்போட்டு
தரைத்திடவே ரசமெடுத்துச் செயநீரும்விட்டு
சமரசமாய்க் கொதிப்பிக்க வாலையாமே. 636

ஆமிந்த வாலையைத்தான் பீங்கானில்விட்டு
அப்பனே பறங்கியுடச் சாராயம்வார்த்து
ஓமிந்த ரவிக்குள்ளே பக்ஷம்வைப்பாய்
உத்தமனே வற்றவற்ற வார்த்துவார்த்துச்
சேமிந்தப் பாலைக்கு பரீக்ஷையென்ன
சிவக்கவே காய்ச்சியிதைக் கையிலூத்தக்
காமிந்தக் குளுந்தல்லோ குறக்குவலிவாங்கும்
கண்டிடடா வாலைரசப் பருவந்தானே. 637

பருவமென்ற வெடியுப்புச் செயநீர்க்குள்ளே
பாங்கான சரக்கெல்லாம் தோய்த்துதோய்த்து
அறுவமென்ற ரவியினுள்ளே போடுபோடு
அப்பனே சரக்கெல்லாம் கட்டிப்போகும்
நிருபமென்ற செயநீரில் பூநீறும்வெள்ளை
நேராகச் சங்குநீர் கூட்டிப்போடு
உருவமென்ற கட்டியதோர் சரக்கையெல்லாம்
உத்தமனே பூசியல்லோ ரவியிற்போடே. 638

போட்டல்லோ காய்ந்தபின்பு கிளிஞ்சி நீறில்
புதைத்தல்லோ யெரிப்போடு புடமும்போடு
மூட்டல்லோ சரக்குகளில் லகுமெதுவும் கடிகம்
மோசங்கள் வாராமல் கண்டுபோடு

Koviloor Digital Library

நீட்டல்லோ சரக்கெல்லாஞ் சுன்னமாகும்
நேராக ஒவ்வொன்றில் செந்தூரரங்கோடி
ஆட்டல்லோ செயநீறும் மெழுகுகோடி
ஆடுமடா கரைகாணா ஆட்டுதானே. 639

பூநீறு திராவகம்

தானென்ற பூநீறு படியோபத்து
சாதகமாய்ப் பாழ்ங்கிணத்துத் தண்ணீர் விட்டு
தேனென்று கரைத்திருத்துக் காய்ச்சிக் கொண்டு
திரும்பியதில் நீர்வார்த்து கரைத்துக் கொண்டு
வேனென்று இதையிறுத்து காய்ச்சி நீயும்
விளங்கியதில் பின்னுமந்த உப்புநீர்விட்டு
கானென்று இதைக்கலக்கி யிறுத்துக் கொண்டு
காய்ச்சியல்லோ குழம்புபோல் வைத்திடாயே. 640

வைத்தபின்பு உப்புநீர்க் குள்ளே நீயும்
வளமாகக் கற்சுன்ன மரைத்து நீயும்
நைத்தபின்பு இதையிருத்து அதிலேவார்த்து
நலமாக கலக்கியல்லோ காய்ச்சு காய்ச்சு
ஓய்ந்தபின்பு குழம்புபோல் ரவியில் வைக்க
உப்படா பூநீறு உப்புஉப்பு
தைத்தபின்பு இந்தவுப்புப் பலந்தான் பத்து
சாதகமாம் சீனமது ரெண்டுபத்து பலமே. 641

பலமடா நாற்பதொரு வெடியுப்புத்தானும்
பாங்காக மூன்றையுந்தான் பொடியாய்ச் செய்து
கலமடா பூநீறு வெடியுப்புதானும்
கலையத்து ளரைவாசி போட்டு நேராய்
பிலமடா திராவகத்தை வாங்கியேதான்
பேரான திராவகந்தான் சேரையொன்று
குலமடா பூநீறும் சங்குநீறும்
கூட்டியல்லோ கரைத்தநீர் சேரையொன்றே. 642

முட்டை ஜெயநீர்

ஒன்றாக ரெண்டையுந்தான் கலந்து கொண்டு
உத்தமனே பூநீறு சங்குநீறும்
நன்றாக வீரமொடு மூன்றுங்கூட்டி
நலமாகக் கலந்த நீர் விட்டேயாட்டி
பன்றான தலைமுட்டை தொட்டுநீயும்

Koviloor Digital Library

பருவமுடன் வெதுப்பாதே பூசுபூசு
குன்றான அண்டத்தை ரவியில் வைக்க
கொட்டுமடா வெண்கருவுந் தண்ணியாமே. 643

தண்ணீரால் வடிந்ததெல்லாம் ஒன்றாய்க் கூட்டிச்
சார்வாகச் சேரையொன்று மெடுத்துக் கொண்டு
தண்ணீராய் முன்னெடுத்த ரெண்டு தண்ணீர்
தயங்காம லிதினோடே கூடவிட்டு
தண்ணீரா யிரண்டையுமே யொன்றாய்ச் சேர்த்து
தணியாம லிவையிரண்டுங் கலக்கியென்றாய்
தண்ணீராம் ரெண்டோடே திராவகமு மூன்று
தாக்கியல்லோ பீங்கானில் வார்த்திடாயே. 644

வார்த்ததிலே போடுகிற மருந்துகேளு
வாகான கற்பூரம் வீரம்லிங்கம்
கோர்த்ததிலே துரிசிநீர் தங்கச்சுன்னம்
கூட்டடா சுத்தித்த சூதந்தானும்
ஆர்த்ததிலே அஞ்சுவகை பாஷாணங்கூட்டு
அப்பனே வகையொன்று விராகனொன்று
சேர்த்ததிலே பொடியாக்கிக் கூடப்போட்டு
சிறப்பாக ரவியினுள்ளே வைத்திடாயே. 645

தங்கச் சுன்னம்

வைத்தல்லோ ரவியினுள்ளே காயக்காய
மைந்தனே தைலம்போ லிருக்கும்பாரு
தைத்தல்லோ இதின்பேரு தயிலமென்றகறணி
தடவியல்லோ நவலோகம் காய்ச்சினாக்கால்
ஒய்த்தல்லோ பனிரெண்டு மாற்றானதங்கம்
உயர்த்தியடா மாற்றிதுதான் உரைத்துப்பாரு
கைத்தல்லோ இத்தைலம் சரக்கையெல்லாம்
கொன்றுமே வேதைமுக மாடும்பாரே. 646

தங்க ஜெயநீர்

ஆடவே தங்கநீ ரொன்றுகேளு
அப்பனே தாளகமும் பூரம்வீரம்
நீடவே வகையொன்று காசதொன்று
நேராகப் பொடிசெய்து வைத்துக் கொண்டு
ஊடவே பூநீறின் திராவகத்தினுள்ளே
உத்தமனே பூநீறும் சங்குநீறும்

Koviloor Digital Library

தேடவே வெள்ளையொடு மூன்றும் போட்டுச்
சிறப்பாக காரத்தை யேற்றிடாயே. 647

ஏற்றியதோர் திராவகத்தை முன்பொடியில் வார்த்து
இழுத்தரைக்கத் தாளகமும் பூரம்வீரம்
மாற்றியதோர் கட்டிப்போ மிதனைநீயும்
மாசற்ற தங்கமடா காசுரெண்டு தூக்கிப்
போற்றியதோர் தகடடித்து இம்மருந்து பூசிப்
புகழாகக் காயவைத்து நீதான்கேளு
ஆற்றியதோர் தினம்பத்துக் காய்ந்தபின்பு
அப்பனே நொறுக்கியல்லோ திராவகத்திலாட்டே. 648

ஆட்டியல்லோ வில்லைகட்டி யுலரப்போட்டு
அப்பனே பூநீறுஞ் சங்குநீறும்
நீட்டியல்லோ வெள்ளையொடு மூன்றுங் கூட்டி
நேராகப் பொடிசெய்து கீழ்மேலிட்டு
மூட்டியல்லோ புடம்போடத் தங்கச் சுன்னம்
முறையான துரைக்கெல்லா மிதனைகூட்டு
பூட்டல்லோ யிச்சுன்னம் செயநீர்பண்ண
புகழாகச் சொல்லுகிறேன் புகழ்ந்து கேளே. 649

கேளடா தங்கமன்ற சுன்னமொன்று
கெடியான சாரமொன்று கூடக்கூட்டி
நீளடா அரைக்கையிலே செயநீராகும்
நெட்டிட்ட தங்கத்தின செயநீரப்பா
நாளடா யிந்தநீர் சத்திற்குத்தி
நலமாகக் கொதிக்கையிலே சூதங்கட்டும்
தேளடா யிந்தநீர் சரக்கையெல்லாம்
சிறப்பாக வொவ்வொன்றாய் தோய்த்துவாட்டே. 650

வாட்டயிலே சரக்கெல்லாம் கட்டிப்போகும்
மைந்தனே வொவ்வொன்றில் தங்கஞ்சூதம்
நீட்டயிலே கூட்டியல்லோ செந்தூரித்தால்
நிரை நிரையாய் நவலோகம் வேதையாகும்
பூட்டயிலே களங்காகும் குருவுமாகும்
போகுமடா வெகுவேதை போக்கோகோடி
மூட்டயிலே செயநீரில் வீரந்தோய்த்து
முதிரவே வாட்டிடவே மெழுகுமாமே. 651

Koviloor Digital Library

சவ்வீரமெழுகு அண்ட நீர்க்கட்டு

மெழுகாக வீரத்தை பறியிற்பூசி
முதிரவே வாட்டியல்லோ உருக்கினாக்கால்
ஒழுகான தங்கமடா சவளையாகும்
உத்தமனே அப்ரேக மிரும்புகாந்தந்
தழுகான அண்டோடு கிளிஞ்சி துத்தம்
சார்வான யுபரசங்க ளெல்லாம் பூசி
நெழுகான கனல்வாட்டி யுருக்கினாக்கால்
நேராக ஈயமாய்ப் போகும்பாரே. 652

பாரடா யுபரசமா மீயமொன்றில்
பாய்ந்தல்லோ தங்கமொடு சூதங்கெந்தி
நேரடா குப்பியிலே செந்தூரித்தால்
நிலைகோடி கலைகோடி வேதையாகும்
தூரடா தங்கத்தில் செயநீராட்டுச்
சொல்வார்கள் சொல்வார்கள் துரையோகோடி
ஆரடா யிந்தமுறை யெடுத்துச் சொன்னார்
ஆத்தாட்குப் பிறைசூடி சொன்னவாரே. 653

வாறாக முன்னெடுத்த அண்ட நீரில்
மாட்டியல்லோ துரிசிநீர் கலக்கிக் கொண்டு
பேராக சாரத்தைத் தோய்த்துப்போடு
பிசகாமல் ரவியினுள்ளே முழுக்கட்டுமாகும்
தேறாக அண்டநீர்க் குள்ளே நீதான்
சீனமென்ற சுண்ணத்தைக் கலக்கிக் கொண்டு
வீறாக வெடியுப்புக் கம்பி தோய்த்து
வெய்யலிலே போட்டுவா கட்டிப்போமே. ' 654

கட்டுமடா அண்டநீர்க் குள்ளேகேளு
கடியதொரு சவக்காரச் சுண்ணம்போட்டு
மட்டுமடா கரைந்து நன்றாய்க் கல்லுப்பைத் தோய்த்து
மைந்தனே ரவியினுள்ளே போடக்கட்டும்
நெட்டுமடா அண்டநீர்க் குள்ளேநீயும்
நேரான துரிசிநீர் சீனச்சுண்ணம்
வெட்டுமடா வீரமொடு மூன்றுங் கூட்டி
விளங்கவே பொடிசெய்து நீரில்போடே. 655

போட்டல்லோ கலக்கியிதை ரசத்தில்குத்தி
பொருபொரெனக் காயவைக்கச் சூதங்கட்டும்

Koviloor Digital Library

நீட்டல்லோ இந்நீரில் சரக்குகளைத் தோய்ந்து
நேராக ரவியிலிடக் கட்டிப்போகும்
பூட்டல்லோ பூரமுதல் காரசாரம்
புகழாகத் துவைத்தல்லோ ரவியில்போட
மூட்டல்லோ சகலமெல்லாம் கட்டிப் போகும்
முசியாமல் ஒவ்வொன்றில் கோடியாட்டே. 656

வாலைரசம்

ஆடவடா வாலைரச மின்னஞ்சொல்வேன்
அப்பனே பலமொன்று கல்லுப்புச் சுண்ணம்
நீடவடா கற்பூரம் பலமரையுங்கூட்டி
நேராகத் திராவகத்தா லரைத்துக் கட்டி
ஊடவடா புடம்போட்டே யெடுத்துக் கொண்டு
உற்ற அன்னபேதி திராவகத்திற் போட்டு
கூடவடா மொலுமொலெனக் கரைந்தபின்பு
குற்றியல்லோ சூதத்தி லரைத்திடாயே. 657

அரைத்திடுவாய் ரவியில் வைத்து மாண்டுமாண்டு
அப்பனே சூதமங்கே முழிக்கும்பாரு
நிறைத்திடுவாய் தினந்தோறும் திராவகத்தைவிட்டு
நேராகப் பட்சமொன்று அரைப்பாயப்பா
திரைத்திடுவா யிச்சூதம் தணலின்மேலே
ஜெயம்பாரு ஜெயம்பாரு ஜெயித்தால் வாங்கி
உரைத்திடுவாய்ச் சூதத்தில் திராவகத்தைவிட்டு
உத்தமனே கொதிப்பித்து யிறக்கிடாயே. 658

இறக்கியல்லோ யிச்சூதம் பீங்கானில்விட்டு
இதிலல்லோ பறங்கியுட சாராயம்வார்த்து
மறக்கியல்லோ ரவியில் வைப்பாய் பட்சமொன்று
வற்றவற்றச் சாராயம் விட்டுவிட்டு
நிறக்கியல்லோ யிச்சூதம் பாலரசமாச்சு
நேராக யிதினுடைய பரீட்சை கேளு
உறக்கியல்லோ குகையிலிட்டுத் துருத்தி கொண்டுத
உத்தமனே தணலுக்கு யசையாவாறே. 659

வாறாகக் காய்ந்தரசம் கையிலே வார்க்க
மைந்தனே குளிர்ந்தல்லோ குரக்கு வலிவாங்கும்
தேறாக யிந்தரசம் செந்தூரித்து
தினந்தோறும் பணமுண்ண தேகந்தானும்

Koviloor Digital Library

கூறாக பாலையைப்போற் காந்தியாகும்
 கோடிவரை யிருத்துமடா சாவெய்தாது
தாறாக நவலோகம் பூசிப்போட
 தப்பாது பன்னிரண்டு மாற்றுமாகும். 660

அன்னபேதித் திராவகம்

ஆமடா அன்னமென்ற பேதியாலே
 அப்பனே திராவகத்தை வைக்கச் சொல்வேன்
ஓமடா கற்சவட்டில் உப்புநீர்விட்டு
 உத்தமனே கரைத்தல்லோ யிருத்துக் கொண்டு
காமடா காய்ச்சியிதை வற்றச் செய்து
 கரைத்தல்லோ பின்பொருக்கா லிருத்துக்காய்ச்சி
தாமடா யிப்படியே மூன்றுதரங் காய்ச்சி
 தனிப்பிறகு காய்ச்சுகிற கருவைக்கேளே. 661

கருவென்ன சுண்ணாம்புத் தண்ணீரிற் போட்டுக்
 கலக்கியல்லோ யிருத்திதிலே விட்டுநீயும்
திருவென்ன யிதையிறுத்து ரவியில் வைக்கச்
 சிறக்கவே யுப்பாகும் யன்னபேதி
உருவென்ன யிந்தவுப்பு பலந்தான் பத்து
 உத்தமனே சீனமது யிருபதுபலந்தான்
தருவென்ன வெடியுப்பு நாற்பது பலந்தான்
 சாதகமா யிவையெல்லாம் பொடியாய்ப் பண்ணே. 662

பண்ணியதோர் பொடிதன்னை யுலரப்போட்டு
 பருவமுடன் கலையத்தி லரைவாசி போட்டு
நண்ணியதோர் திராவகத்தை வாங்கு வாங்கு
 நல்லதடா தொழிலுக்குச் சுருக்குமெத்த
ஒண்ணியதோ ரிதினாலே வுப்புச் சொல்வேன்
 உத்தமனே கெந்தகந்தான் பலமுமொன்று
கண்ணியதோர் சூடனது வராகன்மூன்று
 கற்பூரம் ரெண்டு காசிடையும் போடே. 663

போடடா வெள்ளையென்ற பாஷாணந்தான்
 புகழான நான்கு காசிடையுநீதான்
நீடடா வீரமது காசிரெண்டு
 நேராக ஐந்தையுந்தான் பொடியாய்ப் பண்ணி
ஊடடா திராவகத்தில் சங்குநீறும்
 உத்தமனே பூநீறும் வெள்ளைபோட்டு

Koviloor Digital Library

கூட்டா கலக்கியந்தப் பொடியில் வார்த்துக்
குறுகாமல் ரவியில் வைப்பாய் தினமும் பத்தே. 664

துரிசிக்குரு

பத்துநாள் தினம்தோறும் திராவகத்தைவிட்டு
பாங்காக ரவியினுள்ளே காயக்காய
அத்துநாள் பின்னைந்தும் சும்மாகாய
அப்பனே சரக்கைந்து முப்புமாச்சே
கொத்துநா ளிந்தவுப்பில் புனுகுகூட்டி
குழப்பியல்லோ பீங்கானி லப்பிவைக்க
முத்துநாள் ரவிபட்டு தயிலமோடும்
மூதண்ட தைலத்தைத் துரிசிக்கப்பே. 665

அப்பியல்லோ தினம்தோறும் பூசிப்பூசி
அப்பனே பட்சமொன்று ரவியில்போடு
ஒப்பியல்லோ காய்ந்தபின்பு நீதான்கேளு
உத்தமனே திராவகத்தில் சங்குநீறும்
கொப்பியல்லோ பூநீறும் வெள்ளைகூட்டி
குமுறவிட்டு திராவகத்திற் கரைத்துக்கொண்டு
கப்பியல்லோ காயுமொரு துரிசிமேலே
கடுங்கார மேறுமடா குத்துகுத்தே. 666

குத்தடா தினந்தோறும் ஐந்து நாள்காய
கொடுஞ்சுருக்கா யாடவென்றால் திராவகத்தைக்குத்து
அத்தடா துரிசியுட செப்பெல்லாந்தான்
ஆதியென்ற குருவாச்சு யப்பாகேளு
சுத்தடா யிதின்மேலே சீலைதானும்
சுகமாகத் தீகொளுத்த சுண்ணமாகும்
முத்தடா யித்துரிசி சுருக்குமெத்த
மூதண்ட சூதத்தைக் கட்டக்கேளே. 667

கேளடா யித்துரிசி சட்டிமையம் பூசிக்
கெடியாகியது மேலே சூதம்வார்த்து
நீளடா தீயெரித்துச் சூதங்காயில்
நேராக வெடியுப்பும் சாரங்கூட்டி
தூளடா செய்தல்லோ அதுமேலேதூவச்
சூதமென்ற யானையங்கே வீரிட்டுச்சாகும்
தேளடா கொல்லித்தேள் துரிசிச்சுண்ணம்
செணத்திலே சூதத்தைக் கட்டியாட்டே. 668

Koviloor Digital Library

ஆட்டவல்லோ யிக்குருவில் சவாதுகூட்டி
அப்பனே காரமிட்டு யிறக்கிக் கொண்டு
நீட்டல்லோ சரக்குகளில் பூசியூத
நிறைநிறையாய் மணிபோலே நின்றேயாடும்
பூட்டல்லோ வொவ்வொன்றில் செந்தூரங்கோடி
புத்தியுண்டா யிருந்தாக்கால் விரித்தேயாடும்
மூட்டவல்லோ இக்குருவில் புனுகுசீனம்
முறையாகக் கூட்டியல்லோ வைத்திடாயே. 669

வைத்ததொரு மருந்தெடுத்து வுபரசமுங் காரம்
மாட்டியல்லோ பூசியெல்லாம் வுலரப்போட்டு
நைத்ததொரு திராவகத்தைக் குத்திக்குத்தி
நலமாகக் காய்ந்தபின்பு ஊதச்சுன்னம்
மைத்ததொரு சுன்னமொன்றில் சாரங்கூட்ட
வளர்ந்துதடா செயநீரும் சுண்ணத்தாலே
கைத்ததொரு செயநீரில் செந்தூரங் கோடி
கட்டினமும் களங்கினமும் கோடிதானே. 670

கட்டினம் நீற்றினம்

தானென்ற பூநீறு திராவகத்தினாலே
சாத்தினேன் பாலைரசம் முன்னேதானே
ஊனென்ற அன்னத்தின் பேதியுப்பால்
உத்தெடுத்த திராவகத்தால் வாலைரசமாகும்
கோனென்ற மலைருதுவும் பூநீறும் விட்டால்
கோடிதுறை பாழாச்சு வாலைரசம் போச்சு
கானென்ற கடுஞ்சுன்ன மிதுரெண்டப்பா
கரையில்லை யிதின்போக்குக் கண்டிடாயே. 671

ரசவுப்பு

கண்டிடடா ரசவுப்பு மொன்றுசொல்வேன்
கடுங்காரத் திராவகத்தை ரசத்தில் விட்டு
ஒண்டிடடா தினந்தோறும் ரவியில் வைத்து
உத்தமனே வற்றவற்ற திராவகத்தை வாரு
பண்டிடடா பட்சமொன்று காய்ந்துதானால்
பாரடா சூதமங்கே உப்புமாச்சு
தண்டிடடா இந்தஉப்பில் நாலுக்கொன்று
தாக்கடா துரிசிநீர் கூடக்கூட்டே. 672

கூட்டியல்லோ திராவகத்தா லரைத்துநீயும்
கூசாமல் வில்லைகட்டி யுலரப் போட்டு

Koviloor Digital Library

நீட்டியல்லோ வெள்ளையிலே திராவகத்தைவிட்டு
நேராக அரைத்தந்த வில்லைக்குப்பூசி
மூட்டியல்லோ உலரவைத்து உலர்ந்தபின்பு
மூதண்டப் பூநீறும் சங்குநீறும்
ஆட்டியல்லோ வில்லைக்குக் கீழ்மேலிட்டு
அப்பனே லகுபுடமாய் போட்டிடாயே. 673

போடடா புடமொன்றில் சூதச்சுன்னம்
புகழான ரசவுப்புச் சுன்னமாச்சு
கூடடா இவ்விடைக்கு சாரங்கூட்டி
குமுரரெண்டு மரைக்கையிலே செயநீராகும்
நீடடா யிந்தநீர்க் குள்ளேவீரம்
நிலையாகத் தோய்த்தொடுத்து வாட்டவாட்ட
ஆடடா வீரமங்கே மெழுகுமாச்சு
அப்பனே தங்கத்தில் மெழுகுபூசே. 674

தங்கரசம் வெடியுப்புச் செந்தூரம்

பூசியல்லோ தங்கத்தை வாட்டிநீயும்
புகழாக யுருக்கிடவே சவளையாகும்
ஆசியல்லோ சவளைரெட்டி சவ்வீரங்கூட்டி
அப்பனே திராவகத்தா லரைத்தாயானால்
மாசியல்லோ சவளையெல்லாம் ரசமாய் நிற்கும்
மைந்தனே யிதின்பேரு சவளைச்சூதம்
தாசியல்லோ சவளைரசம் பீங்கானில் விட்டு
தப்பாமல் திராவகத்தை வாருவாரே. 675

வாரடா தினந்தோறும் பட்சமொன்று
மைந்தனே கடுரவியில் வைத்துவைத்து
காரடா சூதமங்கே உப்புமாகுங்
காணிந்த வுப்புக்கு மூன்றுக்கொன்று
தோரடா துருசிநீர்க் கூடப்போட்டு
சுழலவரை திராவகத்தை விட்டுநீயும்
பாரடா யிதையுருட்டி வில்லைகட்டி
பரிவான ரவியினுள்ளே காயப்போடே. 676

காய்ந்தபின்பு வில்லைக்கு வெள்ளைபூசி
காயவைத்து பூநீறும் சங்குநீறும்
ஆய்ந்தபின்பு சமன்கூட்டிக் கீழ்மேலிட்டு
அப்பனே புடம்போடச் சுன்னமாகும்

Koviloor Digital Library

மாய்ந்தபின்பு சவளையென்ற சுன்னமாச்சு
மகாசுறுக்கு மகாசுறுக்கு வீரஞ்சேர்ப்பாய்
பாய்ந்ததொரு வெடியுப்புக் கம்பிதானும்
பரிவாகக் கட்டியபின் னிதனைப்பூசே. 677

பூசியல்லோ ரவியிலிட உப்புத்தானும்
புகழாகப் பவழம்போல் சிவந்து போகும்
வாசியல்லோ சிவந்த உப்பைக் காரீயத்தில்
மாட்டடா முப்பதுக் கொன்றுநீயும்
தேசியல்லோ காரீய வேதைபோடச்
சிவசிவா சதாசிவன் போலிருக்குமப்பா
மாசியல்லோ அற்றுநின்ற காரீயவேதை
மாற்றென்ன பதிமூன்று மகிழ்ந்துபாரே. 678

பாரடா பறிச்சவளைச் சூதச்சுன்னம்
பாங்காகப் பலமொன்று சாரமொன்று
நேரடா யரைக்கயிலே செயநீராகும்
நேரான செயநீரை ரசத்தில் விட்டு
காரடா காக்கையிலே சூதங்கட்டுங்
கடுங்கட்டு கடுங்கட்டு சூதந்தானும்
தூரடா செயநீரில் சரக்குகளைத் தோய்த்துச்
சமரசமாய் வாட்டயிலே மெழுகுமாமே. 679

மெழுகான சரக்குகளில் வேதைகோடி
வெவ்வேறு கவர்கோடி துறையோகோடி
ஒழுகான செயநீரில் வீரந்தோய்த்து
உத்தமனே வாட்டயிலே மெழுகுமாகும்
தழுகான மெழுகதிலே தகட்டையீயத்
தங்கமென்ற தகட்டையெல்லாம் வீரம்வாங்கும்
பழுகாத நவலோக முபரசத்தில் பூசி
பாங்காகக் காய்ச்சிடவே தங்கமாமே. 680

ஆமடா வீரமென்ற மெழுகைத்தானும்
அப்பனே தகடுதின்னக் குடுக்காமுன்னே
ஓமடா வுபரசமும் நவலோகங்கள்
உத்தமனே பூசியல்லோ வாட்டியாட்டத்
தாமடா சகலமெல்லாம் சவளையாகும்
தங்கமென்ற சவளைமுதல் சகலமுந்தான் வேதை

Koviloor Digital Library

போமடா செந்தூரங் களங்கஞ்சூதம்
போக்கிதிலே வெகுகோடிப் பூட்டிப்பாரே. 681

கெந்தகத் திராவகம்

பூட்டவே கெந்தகத்தின் திராவகத்தைச் சொல்வேன்
புத்தியுள்ள புலத்தியனே நன்றாய்க்கேளு
நீட்டவே கெந்தகந்தான் பலமும்பத்து
நேரான பூநீறு பலமும்பத்து
கூட்டவே யரைக்கையிலே மெழுகுமாகும்
குளிரவே பனியில்வைத்து ஆட்டுஆட்டு
மூட்டவே யிதினுடனே சீனந்தானும்
மோசமற ரெண்டுபத்து பலமும்போடே. 682

போடடா வெடியுப்பு நாற்பதுபலந்தான்
புகழான கல்லுப்பு பலமுமைந்து
கூடடா யிவையெல்லாம் பொடியாய்ச்செய்து
குமுறவே ரெண்டுநாள் ரவியில்போட்டு
ஆடடா கலையத்தி லரைவாசிப் போட்டு
அப்பனே திராவகத்தை வாங்கு வாங்கு
ஊடடா யிதின்பேரு கெந்தகத்தின்தீநீர்
உத்தமனே வெகுசுறுக்கு உறுதிகேளே. 683

கேளப்பா திராவகத்தில் சங்குநீறும்
கெடியான பூநீறும் வெள்ளைகூட்டி
நீளப்பா பொடிசெய்து திராவகத்திற் போட்டு
நேராக மொலுமொலெனக் கரைந்து போகும்
சூளப்பா திராவகமாந் துரைகட்கெல்லாம்
சூட்டினால் நீறுகள்தான் கடுங்காரமென்பார்
ஆளப்பா தினந்தோரும் துரிசிமேலே
அப்பனே திராவகத்தைக் குத்துகுத்தே. 684

துரிசிகுரு வீரமைனம்

குத்திடவே துரிசியது பொங்கிநீறும்
குருவடா குருவடா துரிசிராஜன்
அத்திடவே யிதுக்கொக்க சாரங்கூட்டி
அப்பனே யரைக்கையிலே செயநீராகும்
பத்திடவே செயநீரில் வீரந்தோய்த்து
பதங்கண்டு வாட்டிடவே மெழுகாய்ப் போகும்

Koviloor Digital Library

முத்திடவே யிம்மெழுகு உபரசமும் லோகம்
மூதண்ட தங்கமுதல் பூசியாட்டே. 685

பூசிடவே யுருக்கிடவுஞ் சவளையெல்லாம்
போக்கறிந்து விரித்தாட வுகாந்தங்கொள்ள
வாசியல்லோ யிம்மெழுகு தங்கந்தின்னும்
மதயானை மதயானை வீரம்வீரம்
பேசியல்லோ யிம்மெழுகு நவலோகத்தில்
பேராக பரிசித்துக் காய்ச்சப்பொன்னும்
வேசியல்லோ யாடுகிற ஆட்டம்போல
விசுறுமடா வாதஅங்கம் வீசும்பாரே. 686

உமுரியுப்புத்துறை

பாரடா உமுரிவெட்டிச் சுட்டுநீயும்
பருவமுடன் சாம்பலைத்தா னுடைத்துப் பார்க்க
நேரடா உப்புஉப்பாய் வெளுத்துநிற்கும்
நிலையாகப் பொறுக்கியல்லோ வைத்துக் கொண்டு
சேரடா பூநீறுஞ் சங்குநீறும்
சேர்த்தல்லோ கரைத்திந்தத் தெளிவுவாங்கு
வேரடா வெள்ளையென்ற பாஷாணம் போட்டு
வெருவியல்லோ தெளிவுனுள்ளே கரைத்திடாயே. 687

கரைத்ததிலே வமுரியுப்பு தோய்த்து தோய்த்துக்
கடுரவியில் பத்துநாள் போடுபோடு
உரைத்ததிலே கடுங்கார மேறுமேறும்
உத்தமனே வுமுரியுப்புக் கடுஞ்சுன்னமாகும்
வெரைத்ததிலே மூன்றிடைதான் தூக்கிக் கொண்டு
வெள்ளையென்ற பாஷாண மொன்றுகூட்டி
தரைத்ததிலே திராவகத்தை விட்டேயாட்டி
சாதகமாய் வில்லையைப்போல் கட்டுகட்டே. 688

கட்டியதோர் வில்லைதன்னை யுலரப்போட்டு
காணடா பூநீறுஞ் சங்குநீறும்
ஒட்டியதோ ரெண்டையுந்தான் கலந்து கொண்டு
உத்தமனே வில்லைக்குக் கீழ்மேலிட்டு
பட்டியதோர் கனபுடமாய் போட்டாயானால்
பாரடா வுமுரியுப்புச் சுன்னமாகும்
நெட்டியதோர் வுமுரியுப்பு சுன்னத்தோடே
நேராக சாரமிட்டு யரைத்திடாயே. 689

Koviloor Digital Library

வீரமைனம்

அரைத்திடவே செயநீறாம் வுமுரிச்சாரம்
அப்பனே துரிசிநீ ரதிலேபோட்டு
விரைத்திடவே கலக்கிவைத்து வீரந்தோய்த்து
வெய்யலிலே போட்டிடவே மெழுகுமாகும்
தரைத்திடவே மெழுகெடுத்துக் குப்பியிலே போட்டுச்
சாதகமாய் சூடனுப்பு செயமாய்ப் போட்டு
உரைத்திடவே துரிசிநீர் கூடப்போட்டு
உத்தமனே செயநீரும் கூடவாரே. 690

வார்த்தல்லோ வாலுகையில் குப்பிக்கேற்றி
மைந்தனே தீயெரித்து மூன்றுசாமம்
பார்த்தல்லோ செயமான பருவம் நீதான்
பதங்கம்போல் கண்டாக்கால் தீநீர் குத்தி
மார்த்தல்லோ துரிசிநீர் விட்டுக்கிண்டி
மைந்தனே செயம்பார்த்து வாங்கு வாங்கு
ஏர்த்தல்லோ சவ்வீர மெழுகுக்கெல்லா
மிப்படியே குருகூட்டிச் செயமாய்ப் பண்ணே. 691

பண்ணியல்லோ செயம்பார்த்துப் பனியில் வைத்து
பருவமுடன் மெழுகாக வாங்கிக் கொண்டு
ஒண்ணியல்லோ பீங்கானில் வைத்து நீயும்
உத்தமனே யிளகினால் ரவியில் வைப்பாய்
எண்ணியதோர் வீரமென்ற மெழுகுதோறும்
யிட்டிடடா துரிசிநீர் சூடனுப்பும்
அண்ணியதோ ரிதுரெண்டும் விட்டாயானால்
அப்பனே வீரமென்ற வேதைபோச்சே. 692

போச்சென்று விடுகாதே வீரத்திற்கு
புகழாகக் குருவிட்டு மெழுகு செய்து
வாச்சென்ற தங்கத்தில் பூசிவாட்டி
மைந்தனே. யுருக்கிடவே சவளையாகும்
ஒச்சென்ற நவலோகஞ் சவளையாகும்
உத்தமனே யுபரசமும் சவளையாகும்
காச்சென்ற சவளையிலே சூதங்கெந்தி
கலந்தல்லோ செந்தூரம் செய்திடாயே. 693

Koviloor Digital Library

செய்ததொரு செந்தூரம் வேதைகோடிச்
சிறக்கவே பத்தாகும் மாற்றுமாற்று
கொய்ததொரு வீரமென்ற மெழுகை வைத்து
கொடுத்திடடா பறித்தகடு மென்று வாங்கும்
பைத்ததொரு பறியுண்ட வீரந்தானும்
பரிசத்தில் வேதையுமாம் பாருபாரு
நைத்ததொரு சவளையிலே லகுமெதுவைக் கேளு
நலமான யினச்சேர்வை காணுகாணே. 694

இனச்சேர்வை

காணடா துத்தமென்ற சவளையோடே
கலந்திடடா யிரும்பென்ற சவளைதானும்
பூணடா துத்தமென்ற சவளையோடே
போட்டிடடா காந்தமென்ற சவளைதானும்
தாணடா துத்தமென்ற சவளையோடே
தாக்கிடடா தங்கமென்ற சவளைதானும்
ஊணடா துத்தமென்ற சவளையோடே
உத்தமனே செம்பினுட சவளைசேரே. 695

சேரடா துத்தமென்ற சவளையோடே
சேர்ந்துநின்ற அப்ரேகச் சவளைகூட்டு
பாரடா துத்தமென்ற சவளையோடே
பட்டதொரு காரீயங் கூடக்கூட்டி
நேரடா யிவைகளுக்குச் சூதம்தங்கம்
நேராகக் கெந்தகமும் கூடக்கூட்டி
ஊரடா குப்பியிலே செந்தூரித்தால்
ஒவ்வொன்றில் கோடிமுகம் வேதையாமே. 696

பஞ்சசுன்னக் குகை

ஆமப்பா பஞ்சசுன்னக் குகையைச் சொல்வேன்
அப்பனே வெடியுப்புச் சீனக்காரம்
ஓமப்பா கல்லுப்பு சூடனோடு
உத்தமனே கடல் நுரையும் சமனாய்க்கூட்டி
வேமப்பா திராவகத்தை விட்டேயாட்டி
வில்லையைப் போல் கட்டியிதை யுலரப் போட்டு
சேமப்பா தணலிலிட்டு சிக்கெனவேயூதச்
செகமரிய பஞ்சசுன்ன மென்றும் பேரே. 697

Koviloor Digital Library

பேரான பஞ்சசுன்னம் வெண்கருவாலாட்டி
பிலக்கவொரு குகைபோலே பிடித்துக் கொண்டு
தாரான குகையை நன்றாய் யுலரவைத்து
சாதகமாய் துரிசிநீ ருள்ளே பூசி
வாரான சூதமிதி லிட்டேயூத
மைந்தனே சூதமங்கே கட்டிப் போகும்
காரான குகையினுள்ளே சரக்குகளை வைத்து
கனல்மூட்டி யூதிடவே கட்டிப் போமே. 698

கட்டியதோர் சரக்குகளில் வேதைகோடி
கரையேற்ற செந்தூரத் துறையோகோடி
கட்டியதோர் சூதத்தில் குருவோகோடி
கட்டியதோர் சாரணையில் குளிகை கோடி
நெட்டியதோர் சவுக்கார மிதனில் வைத்து
நேர்பாக ஊதிடவே சுன்னமாகும்
பட்டியதோர் துரிசிக்கு மருந்துபூசி
பாச்சியிதில் வைத்தூதச் சுன்னமாமே. 699

சுன்னமென்ற துறையெல்லா மிதிலேவைத்து
சூட்டியே ஊதிடவும் கடுஞ்சுன்னமாகும்
தன்னமென்ற தங்கமொடு சூதங்கூட்டி
சாத்தியல்லோ மருந்துகளை யிதிலேவைத்து
மன்னமென்ற புடம்போட சூதத்தங்கம்
மகத்தான குருவாகும் ஆதிவித்தை
பன்னமென்ற குகையென்ன வாதத்துக்கு
பருவமுட னாதாரக் குகையுமாச்சே. 700

ஆச்சடா பூனாகம் மயூரச்சத்து
அப்பனே வாங்குதற்கு அறியச் சொல்வேன்
காய்ச்சடா எள்ளெண்ணெய் சட்டியிலேவிட்டு
கழுவியல்லோ பூனாக மதிலேபோடு
வாச்சடா மொறுமொறுத்த பதத்தில்வாரி
வாகாக நிறுத்தல்லோ இதற்குப் பாதி
பாச்சடா வெங்காரங் கூடக்கூட்டி
பருவமுட னரைத்தபின்பு கூட்டக்கேளே. 701

கேளடா வெண்ணெயொடு குன்றிதேனும்
கெடியான சக்கரையும் எட்டிலொன்றுகூட்டி

Koviloor Digital Library

நாளடா வில்லையது சரவுலையிற்போட
நலமாக சத்தாகும் பூனாகமெல்லாம்
வேளடா சத்தோடு பாதிதங்கம்
விரைந்து நின்று உருகையிலே காரீயந்தான்
தானடா தங்கஇடை கூடப்போட்டு
ஜகமான நாகமிதில் ரெட்டிப் போடே. 702

போட்டல்லோ நாகமொடு காரீயந்தங்கம்
புகழாக சத்தோடே யுருகும்போது
நீட்டல்லோ இவ்விடைக்கு செயசூதம் போட்டு
நேராக உருக்கியொரு மணியாய் வாங்கி
கூட்டல்லோ யிவ்விடைக்குக் கெந்திகூட்டி
குமுறவே பொடிசெய்து குப்பிக்கேற்றி
பூட்டல்லோ வாலுகையில் ஏற்றி மூட்டி
புகழான செந்தூரப் பதத்தைப் பாரே. 703

பாரடா செந்தூர மானபின்பு
பாய்ச்சினால் நவலோகம் தங்கமாகும்
நேரடா பூனாக சத்தின்வேதை
நிலைக்குமடா நிலைக்குமடா உப்புக்கப்பா
ஆரடா பூனாகம் இப்படித்தான் சொல்வார்
அப்பனே மச்சேந்திரா கேழ்க்கிற்சொன்னேன்
வேரடா பூனாகம் குளிகைக்கெல்லாம்
வெகுசுறுக்கு கற்பமடா சட்டைபோமே. 704

மயூரச்சத்து

சட்டையென்ற பூனாகச் சத்தைவிட்டு
சாதகமாய் மயூரத்தின் சத்தைச் சொல்வேன்
மட்டையென்ற மயிலிறகைத் திரிபோல் செய்து
வார்த்தல்லோ நல்லெண்ணெய் தோய்த்து தோய்த்து
தட்டையென்ற தீகொளுத்தி எரிந்து வெந்து
சாம்பலைப்போ லிருக்குமடா யிதனை வாங்கி
கட்டையென்ற வெண்காரம் பாதிகூட்டிக்
கடுந்தேனும் சக்கரையும் குன்றிதானே. 705

குன்றியொடு வெண்ணெயடா நாலுங்கேளு
குறையாமல் எட்டிலொன்று கூடக்கூட்டி

Koviloor Digital Library

ஒன்றையொடு அரைத்தெல்லாம் வில்லைதட்டி
உலர்த்தியல்லோ நாளத்தி லூதுஊது
பன்றோடு மணிமணியாய்க் குகையினுள்ளே
பாரடா யுடைக்கையிலே சிதறிவீழும்
நன்றான மயூரத்தின் சத்திதப்பா
நலமாக யெடுத்தொன்றா யுருக்கிடாயே. 706

உருக்கியதோர் சத்துக்குப் பாதிதங்க
மூட்டியல்லோ தங்கயிடை காரீயம் போட்டு
சொருக்கியதோர் தங்கம்ரெட்டி நாகம்போட்டு
சுகமாக உருக்கையிலே சொல்லக்கேளு
நெருக்கியதோர் யிடைக்கெல்லாம் ஜெயகூதம்போட்டு
நிலையாக உருக்கியொரு மணியாய் வாங்கி
தருக்கியதோர் மணியிடைக்கு கெந்திகூட்டி
தவளம்போல் பொடி செய்து குப்பிக்கேற்றே. 707

ஏற்றியல்லோ வாலுகையில் செந்தூரித்தால்
என்னசொல்வேன் பஞ்சவர்ண மயூரச்சத்து
போற்றியல்லோ நவலோகம் வேதையாடும்
பொன்னடா பதினைந்து மாற்றுமாகும்
தேற்றியல்லோ யிதையெடுத்து பணந்தான் கொள்ள
தேகமடா பஞ்சவர்ண காந்தியோடும்
ஆற்றியல்லோ மண்டலந்தான் உண்டாயானால்
அப்பனே சட்டைதள்ளும் ஆதிதானே. 708

தாளகச் சத்து

தானென்ற தாளகத்தின் சத்தைச் சொல்வேன்
சாதகமாய் தாளகமோ பலமோபத்து
கானென்ற கல்வத்தி லிதனைப்போட்டுக்
கட்டியதோர் சூடனுமோ விராகன்ஐந்து
வேனென்று கூடயிட்டு திராவகத்தாலாட்டு
விளங்கியதோர் தினமொன்று அரைத்துநீயும்
வானென்ற காரீயம் நூறுபலத்தகட்டில்
மைந்தனே யிதைப்பூசி யுலரவையே. 709

உலர்ந்தபின்பு வோட்டிலிட்டு ஓடுமூடி
உத்தமனே புடம்போட ஈயம்சாகும்

Koviloor Digital Library

அலர்ந்தபின்பு யிதையெடுத்து பலமோபத்து
அப்பனே தாளகமும் முப்பது பலந்தான்
கலந்தபின்பு திராவகத்தை விட்டேயாட்டி
கலங்காமல் முச்சாமம் அரைத்துநீயும்
புலர்ந்தபின்பு உலரவைத்து இதனோடொக்க
புகழான ஆமணக்கின் பருப்பு கூட்டே. 710

கூட்டியே பருப்போடே யரைத்துநீயும்
குமுறவே மெழுகுபோல் எடுத்துக் கொண்டு
நீட்டியே கரண்டியில் இட்டு நீயும்
நேராகக் கரியோட்டில் ஊதுஊது
ஆட்டியல்லோ ஈயம்போல் சத்தாய்நிற்கும்
அப்பனே தாளகத்தின் சத்துசத்து
பூட்டியல்லோ தாளகத்தின் சத்தின்வேதை
புகழாக விரித்திடுவேன் நன்றாய்க்கேளே. 711

கேளடா காரீயம் பலமதொன்று
கெடியாக உருகையிலே தாளகத்தின் சத்தை
நாளடா பலமொன்று கூடப்போடு
நலமாக உருக்கினால் ஈயம்கட்டும்
தாளடா நாலுபலம் தங்கம்நின்று
தண்ணீர்போல் உருகையிலே வலிந்தூயம்
நீளடா இதில்போட்டு உருகும்போது
நேரான நாகரச ஜெயத்தைப்பாரே. 712

தாளகச் செந்தூரம்

பாரடா நாகரசம் துரிசிட்டுக்கட்டி
பாங்காக பலமிரண்டு இதிலேபோட்டு
நேரடா பலமொன்று கட்டியதோர் லிங்கம்
நீட்டிடவே வாங்கியது உருகிநிற்கும்
சேரடா சுத்தித்த கெந்திதானும்
சிறப்பாக ஏழுபலம் கூடக்கூட்டி
தாரடா நொறுக்கியெல்லாம் பொடியாய்ச் செய்து
சமத்தாக குப்பியிலே எடுத்திடாயே. 713

எடுத்தல்லோ வாலுகையில் செந்தூரித்தால்
இதமாக வெள்ளியெட்டு செம்பிரண்டுகூட்டி

Koviloor Digital Library

மடுத்தல்லோ உருக்கையிலே செந்தூரமொன்று
மாட்டினால் ஏழரையே மாற்றுகாணும்
படுத்தல்லோ தாளகத்தின் சத்துவேதை
பசுமையடா பசுமையடா பொன்தானப்பா
அடுத்தல்லோ லட்சுமியாள் நாதத்தாட்டு
ஆடுமடா கோடிதுறை ஆடுந்தானே. 714

கெந்தகச் செம்பு

தானென்ற கெந்தகத்தின் செம்பைச் சொல்வேன்
சாதகமாய்த் திராவகத்தை பீங்கானிலிட்டு
வேனென்ற துரிசிநீர் அதிலேபோட்டு
வெந்தல்லோ கரைந்தபின்பு கெந்தகத்திலிட்டு
கானென்ற கல்வத்தில் ரெண்டுநாளாட்டிக்
காரமடா கெந்தகத்திற் பாதிகூட்டி
ஊனென்ற பச்சரித் தவுடும்போட்டு
உத்தமனே நன்றாக அரைத்திடாயே. 715

அரைத்தல்லோ வில்லைதட்டி உலரப்போட்டு
அப்பனே நாளத்தில் ஊதுஊது
விரைத்தல்லோ கெந்தகந்தான் செம்பாய்வீழும்
வெகுசுருக்கு வெகுசுருக்கு தேவியதுநாதம்
நிரைத்தல்லோ இச்செம்பை தங்கத்துள்ளே
நீட்டடா பத்தில்ஒன்று தங்கம்செம்பாம்
திரைத்தல்லோ பறிச்செம்பை வெள்ளிபத்தில்
சேரடா ஒன்றதுதான் மாற்றுமாறே. 716

ஆறாமே மாற்றதுதான் கெந்தகத்தின்செம்பு
அகண்டதொரு பூரணமே ஆச்சரியம்சொல்லில்
தேறாமோ பறிச்செம்பு பலமும்மூன்று
ஜெயமான வாலைரசம் பலமும்மூன்று
வேறாமோ தகடடித்து ரசத்தோடொக்க
வேதிச்சு அரைத்துநன்றா யுருட்டிக்கொண்டு
தாறாமோ இதில்ரெட்டி கெந்தகமும் கூட்டி
சாதகமாய் சவ்வீரம் நாலிலொன்று கூட்டே. 717

கூட்டியல்லோ பொடியாக்கிக் குப்பிக்கேற்றிக்
கூசாமல் வாலுகையில் செந்தூரஞ் செய்தால்

Koviloor Digital Library

நீட்டியல்லோ லோகத்தில் அன்பதுக்கொன்றோடும்
நிறைந்ததொரு மாற்றடா பத்துபத்து
ஊட்டியல்லோ தினந்தோறும் பணவிடையேயுண்ண
உத்தமனே காயசித்தாம் காந்திஏறும்
பூட்டியல்லோ மண்டலமும் தின்றாயானால்
பொற்சடையோன் மேருவுக்குப் போகலாமே. 718

லிங்கக் கட்டு

போகவடா லிங்கமொரு கட்டைச்சொல்வேன்
புகழாகப் பலமொன்று லிங்கந்தூக்கி
ஆகவடா காரீயம் விராகனொன்று
அப்பனே நாகரசம் விராகன்ரெண்டு
தாகவடா வெடியுப்பு விராகன் ஒன்று
சாதகமாய் சீனமொரு விராகன்கூட்டி
பாகவடா சாரமென்று சவுக்காரச்சுன்னம்
பாய்ச்சியல்லோ திராவகத்தை விட்டேயாட்டே. 719

ஆட்டியல்லோ லிங்கத்தின் மேலேபூசி
அப்பனே ரவியினுள்ளே எட்டுநாள் போட்டு
நீட்டியல்லோ இதைஎடுத்து வாட்டக்கேளு
நேரான காரமொடு சாரஞ்சீனம்
மூட்டியல்லோ வெடியுப்பு கல்லுப்போடு
மூதண்ட துரிசியொடு சூடனேழும்
பூட்டியல்லோ வகையொன்று பலமதொன்று
புகழாகக் கூட்டிஎல்லாம் பொடியாய் பண்ணே. 720

பண்ணியல்லோ பொடிதனையு மைந்து கூறிட்டு
பருவமுடன் ஒருகூறு ஓட்டிலிட்டு
நண்ணியல்லோ கறியோட்டில் வைத்துஊதி
நலமாக உருகையிலே லிங்கம்போட்டு
ஒண்ணியல்லோ வாட்டுவாய் பிரட்டிநன்றாய்
உத்தமனே வற்றினபின் எடுத்துக் கொண்டு
கண்ணியபின் அஞ்சுபங்கும் இப்படியேவாட்ட
கடுங்கட்டு கடுங்கட்டு லிங்கந்தானே. 721

தானென்ற லிங்கமது இறுகிநன்றாய்
சாதகமாய் பனங்கதிரு போலேநிற்கும்

Koviloor Digital Library

கானென்ற லிங்கமது உருகிநன்றாய்க்
கடுமெழுகு மாவதற்கு கருவைக்கேளு
ஊனென்ற சவ்வீர மெழுகுபூசி
உத்தமனே வாட்டயிலே உருகிவீழும்
கோனென்ற லிங்கத்தில் தங்கரேக்கு
கொடுத்தல்லோ பிசைந்து கொண்டு வேதைபோடே. 722

போட்டல்லோ நவலோகம் பத்தும்பத்தாம்
புகழாக யிருபதுக்கு ஒன்றேயோடும்
நீட்டல்லோ வீரமது தங்கந்தின்றால்
நேரான லிங்கத்தில் தங்கம்வேண்டாம்
ஊட்டல்லோ லிங்கமொடு வீரந்தங்கம்
ஊட்டியதோ ருறுதியினால் ஓடும்வேதை
ஆட்டல்லோ அங்கங்கள் எட்டுமாடும்
அறிந்தவர்க்கு கவர்கோடி ஆடும்பாரே. 723

கிளிஞ்சித் தொழில்

பாரடா கிளிஞ்சிஎன்ற ஊமைதானும்
பரிவாகச் சதையோடே எடுத்துவந்து
நேரடா தமரிட்டு அதிலேபோட
நிலையான சூடனுப்பு கேளுகேளு
தாரடா சூடனது பலந்தானொன்று
சாதகமாய்க் கற்பூரம் விராகன்ரெண்டு
வேரடா வீரமது விராகன்மூன்று
விரவியல்லோ மூன்றையுந்தான் பொடியாய்ப் பண்ணே. 724

பண்ணியல்லோ பீங்கானில் போட்டுநீயும்
பரிவாகத் திராவகத்தை யிதிலேவார்த்து
ஒண்ணியல்லோ நிழலில்வைத்து தினந்தானெட்டு
உத்தமனே திராவகத்தை விட்டுவிட்டு
கண்ணியல்லோ ரவியில்வைப்பாய் பட்சமொன்று
கடுஉப்பாம் கடுஉப்பாம் சூடன்தானும்
எண்ணியல்லோ இந்தஉப்பை கிளிஞ்சியிலேபோட
யிதமான மாங்கிஷந்தான் கரையும்பாரே. 725

கரைந்ததொரு நீரையெல்லாம் வடித்துக்கொண்டு
கவரான துறையெல்லாம் சொல்லக்கேளு

Koviloor Digital Library

நிரைந்ததொரு சூடனுப்பில் கல்லுப்புகூட்டி
நேராக அரைத்தல்லோ வில்லைதட்டி
உரைந்ததொரு உலரவைத்து ஊதச்சுன்னம்
உத்தமனே சுன்னமிடை அரிதாரங்கூட்டி
விரைந்ததொரு கிளிஞ்சிநீர் விட்டேயாட்டி
விளங்கவே வில்லைபோல் கட்டுகட்டே. 726

கட்டியல்லோ உலர்ந்தபின்பு ஊதச்சுன்னம்
கடுங்காரம் அரிதாரச் சுன்னந்தானும்
ஒட்டியல்லோ இச்சுன்னம் வீரங்கூட்டி
உத்தமனே கிளிஞ்சிநீர் விட்டேயாட்டி
கெட்டியல்லோ துரிசியின்மேல் பூசிப்போடு
கெடியாகக் காய்கையிலே கிளிஞ்சிநீர்குத்து
எட்டியல்லோ பட்சமொன்று காய்ந்தபின்பு
என்மகனே சீலைசுத்திக் கொளுத்திடாயே. 727

கொளுத்தியல்லோ ஆறவிட்டு யெடுத்துப்பாரு
கொடுஞ்சுருக்காய் துரிசியது சுன்னமாகும்
அளுத்தியல்லோ யித்துரிசி சூதங்கட்டும்
அப்பனே சரக்கையெல்லாம் கொல்லும்கொல்லும்
வளத்தியல்லோ யித்துரிசி கிளிஞ்சிநீரில்
மைந்தனே கரைத்துவைத்து வரிசைகேளு
சுளுத்தியல்லோ சாரமதைத் துவைத்துப்போடு
சுகமான யிருகாலி தோய்த்துப்போடே. 728

போடடா வெடியுப்புக் கல்லுப்போடே
புகழான துரிசியொடு சூடந்தானும்
நீடடா யிவைகளெல்லாம் நீரில்தோய்த்து
நேராக ரவியினுள்ளே போடுபோடு
ஊடடா பட்சமொன்று காய்ந்துதானால்
உத்தமனே முழுக்கட்டாஞ் சரக்கதெல்லாம்
ஆடடா யின்னமொரு கருவைச்சொல்வேன்
அப்பனே ரகசியந்தான் அறிந்திடாயே. 729

கல்லுப்பு கட்டு

அறிந்துகொள்ளு கிளிஞ்சிநீர் பீங்கானில்விட்டு
அப்பனே சூடனுப்பு கூடப்போட்டு
மறிந்துகொள்ளு ரவியினுள்ளே வைத்தாயானால்
மைந்தனே கிளிஞ்சிநீர் உப்பாய்நிற்கும்

Koviloor Digital Library

புரிந்துகொள்ளு இந்தஉப்பிற் கல்லுப்பிட்டுப்
பேராக அரைத்தூதச் சுன்னமாகும்
நெறிந்துகொள்ளு கல்லுப்பில் தாளகமும்சேர்த்து
நேராக அரைத்தூதச் சுன்னமாமே. 730

சுன்னமென்ற தாளகத்தில் புனுகுவீரம்
சூட்டியல்லோ யிளக்கியதை துரிசிக்கப்பி
வன்னமென்ற ரவியினுள்ளே போடுபோடு
மைந்தனே பக்ஷமொன்று காய்ந்தபின்பு
சுன்னமென்ற பூநீறுஞ் சங்குநீறுங்
கட்டியதோர் வெள்ளையுந்தான் கலந்து கொண்டு
சன்னமென்ற துரிசிக்குக் கீழ்மேலிட்டுச்
சாதகமாய் அடுப்பேற்றி யெரித்திடாயே. 731

எரித்திடுவாய் கடிகையது நான்குதானும்
என்னசொல்வேன் துருசியது குருவுமாச்சு
விரித்திடுவாய் துரிசியது சூதங்கட்டும்
வேண்டியதோர் சரக்கெல்லாம் மணிபோலாடும்
மரித்திடுவா யென்றுசொன்னால் மார்பிலாணி
மைந்தனே யிருத்துமடா மகத்தாஞ்சூதம்
பரித்திடுவாய் நவலோகம் வேதையானால்
பார்மகனே காயசித்திப் பலிக்கும்பாரே. 732

பாரடா கல்லுப்புக் கட்டுச்சொல்வேன்
பரிவாக என்னமுரி யுப்பேயாச்சு
நேரடா யிதைக்கட்ட வறிந்தானானால்
நிஜமான வாதியென்று கண்டுகொண்டு
வேரடா வாதத்துக் காதிஉப்பு
விதமாகக் கட்டினால் சூதங்கட்டும்
போரடா உப்படங்க வாலைரசமாகும்
புகழான உப்பிலே மணியுமாமே. 733

கல்லுப்புகட்டு (வேறு)

மணியாக உப்பையல்லோ கட்டக்கேளு
மைந்தனே பாறையுப்பை உடைத்துக்கொண்டு
கணியாகப் பாக்குபோ லெடுத்துக்கொண்டு
கையாலே தேய்த்துநன்றா யெடுத்துவைத்து

Koviloor Digital Library

பணியாகப் பலமூன்று அன்னபேதி
பாங்கான கடல்நுரைதான் பலமதொன்று
அணியாக இவைரெண்டும் பொடியாய்ச்செய்து
அப்பனே திராவகத்தை யிதிலேவாரே. 734

வார்த்துடனே பொங்கியது கரைந்துபோகும்
மச்சேந்திரா இதையெடுத்து உப்பில்விட்டு
கோர்த்துடனே கிளறியதைக் கிண்டிக்கிண்டி
கூசாமல் பக்ஷமொன்று ரவியிற்போட்டு
போர்த்துடனே காய்ந்தபின்பு பூநீறில்வைத்து
புகழாக மேல்மூடி புடத்தைப்போடு
ஆர்த்துடனே உப்பதுவுங் கட்டிப்போகும்
அறிந்திந்த உப்பெடுத்து உருக்கிப்பாரே. 735

உருக்கையிலே கரிகுடித்துப் போச்சுதானால்
உத்தமனே முன்போலே புடத்தைப்போடு
செருக்கையிலே கரியில்நின்று திரண்டேயாடும்
செகமறிய முழுக்கட்டா மிந்தவுப்பு
நெருக்கையிலே உப்புநின்று ஆடும்போது
நீட்டடா லிங்கத்தை வாங்கியாடும்
குருக்கையிலே தங்கமிட்டால் கூடக்கொள்ளும்
சூர்லிங்கம் போலிருக்கும் வாங்குவாங்கே. 736

வாங்கியிந்த லிங்கத்தை வேதைபோட
மைந்தனே ஆறேழு மாற்றுகாணும்
ஓங்கியிந்த லிங்கம்போ லுப்புக்குள்ளே
உத்தமனே வீரமிட்டுத் தங்கம்போடு
பாங்கியிந்த மணிபோலே வெளுப்பாய்நிற்கும்
பாச்சடா லோகத்தில் பத்தும்பத்தாம்
தேங்கியிந்த உப்புநின்று ஆடும்போது
சேரடா வெள்ளியொடு வெள்ளைதானே. 737

பஞ்சவர்ண உப்பு

தானென்ற வெள்ளியது உருகிநிற்கும்
தாக்கினால் செம்பிலே வெள்ளியாகும்
கோனென்ற உப்பிலே துரிசிபோட
குறுகாமல் பச்சையைப்போ லுருகிநிற்கும்

Koviloor Digital Library

வானென்ற தாளகத்தை யுப்பில்போட
மைந்தனே பொன்னிறம் போலுருகி நிற்கும்
தேனென்ற கார்முகியை யுப்பில்போட
சிறப்பாகக் கரிந்துருகி மணியுமாமே. 738

மணியான உப்பல்லோ சரக்குகளையுண்டு
மைந்தனே பஞ்சவர்ண மாகநிற்கும்
கணியான துருசியினால் சூதங்கட்டும்
கைவிட்ட தாளகத்தால் வேதையோடும்
பணியான தாளகத்தில் நாகம்போட
பதையாமல் கட்டுமடா நாகந்தானும்
தணியான சவ்வீரங் காரீயங்கட்டும்
தங்கத்தை நீற்றுமிந்த வீரந்தானே. 739

வீரமிட்டால் சூதமங்கே கட்டிப்போகும்
விளங்கியமுன் துரிசியிட்டால் சரக்கெல்லாஞ் சாகும்
ஆரமிட்ட தாளகத்தா லுபரசங்களுருகும்
அப்பனே கார்முகியால் களங்கோகோடி
பாரமிட்ட யுப்பினது ஆட்டிதெல்லாம்
பாரடா யென்னுடைய அமுரியாட்டு
காரமிட்ட கடுங்கார முப்பிலேற்று
கருவையினிச் சொல்லுகிறேன் காணுகாணே. 740

காணடா கட்டியதோ ருப்புத்தானும்
கடுங்கார மேற்றுகிற கருவைச் சொல்வேன்
பூணடா பூநீறுஞ் சங்குநீறும்
புகழான வெள்ளையொடு மூன்றுங்கூட்டி
தோணடா கரைத்திருத்தி உப்பில்விட்டுத்
துடியாகப் பிசறியல்லோ ரவியிற்போடு
ஊணடா யிப்படியே தினந்தோறும் பிசறி
உத்தமனே பட்சமொன்று காயப்போடே. 741

உப்புச் சுன்னம்

போட்டபின்பு பூநீறுஞ் சங்குநீறும்
புகழாகக் கீழ்மேலு மிட்டேயோட்டில்
நாட்டபின்பு புடம்போடு வுப்புத்தானும்
நலமான சுன்னமடா. புலத்தியனே அய்யா
ஆட்டபின்பு கனமாட்டு முப்புநீரில்
ஆடலா மாடலா மறிந்துமாடு

Koviloor Digital Library

பூட்டபின்பு மிதினோடே சாரஞ் சேர்க்க
புகழான செயநீராம் பொலிந்து பாரே. 742

பாரடா செயநீரில் சூதம்விட்டுப்
பரிவாகக் கொதிக்கையிலே சூதங்கட்டும்
நேரடா யிந்நீரில் துரிசிநீறிட்டு
நினைவாகச் சவ்வீரம் துவைத்து வாட்ட
போரடா சவ்வீரம் மெழுகாய்ப்போகும்
பொற்றகட்டில் பூசியல்லோ வுருக்கிப்பாரு
தாரடா தங்கமது சவளையாகும்
சாஸ்திரமோ கொள்ளாது சவளையாமே. 743

ஆட்டான தங்கம்போல் நவலோகஞ்சவளை
யாடுமடா யாடுமடா பிறித்தேயாடும்
நீட்டான வுபரசத்தில் அப்ரேகங்காந்தம்
நேரான பூனாகம் கெந்தகத்தின்சத்து
பூட்டான வண்டோடு இந்திரகோபம்
புகழான கிளிஞ்சியுட னுபரசங்களெல்லாம்
மூட்டான சத்தெடுத்தே யுடைந்துதானால்
மூதண்ட சூதத்தைப் பிடியாவாறே. 744

சத்து மெதுவு

பிடியாது சத்தெல்லா மெதுவில்லாட்டால்
பேரான சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
முடியாது சாஸ்திரத்தில் மெதுவைச்சொன்னால்
மூவுலகும் சித்தராய்ப் போவாரென்று
கடியாது சாரணையில் சூதந்தானுங்
கபளித்துக் கொள்ளாது கக்கிப்போடும்
அடியாது மாருதம்போல் வேதைதானும்
ஆடாது ஆடாது வேதைதானே. 745

ஆடாதே போகவல்லோ சித்தர்நூலில்
அப்பனே யொளித்துவிட்டா ருபரசத்தின்மெதுவை
யோடாதே போகவல்லோ வேதைமார்க்க
மொளித்தாரே தங்கத்தின் சவளைமார்க்கம்
நேடாதே சிவநூலில் சாலகருவெல்லாம்
நிறையாகச் சொல்லிவிட்டேன் சூத்திரத்தினுள்ளே
வாடாதே மயங்காதே நூல்முறையைப் பாரு
மச்சேந்திரா புலத்தியற்கு வருத்திடாயே. 746

Koviloor Digital Library

பாலரசம்

வருத்திடவே பாலரச மொன்றுசொல்வேன்
மைந்தனே கல்லுப்புச் சுன்னத்தோடே
அடுத்திடவே கற்பூர வுப்புகூட்டி
அப்பனே திராவகத்தி லரைத்துக்கட்டி
நெருத்திடவே யுலர்த்தியதை கரியோட்டிலூதி
நேரான திராவகத்திற் போடுபோடு
உருத்திடவே மொலுமொலெனக் கரைந்துபோகும்
உத்தமனே சூதத்தில் விட்டேயாட்டு. 747

ஆட்டடா ரவியில்வைத்துத் திராவகத்தைவிட்டு
அப்பனே சூதமங்கே மாண்டு போகும்
தீட்டடா ரவியில்வைக்க முழிக்குஞ்சூதம்
திறமாக ரவியில்வைத்து தினமுமாட்டு
பூட்டடா யிப்படித்தான் மாசமொன்று
புகழாக அரைத்தரைத்து ரவியிற்போட்டு
நீட்டடா தணல்மேலே செயமாய்நிற்கும்
நில்லாட்டால் திராவகத்தி லரைத்திடாயே. 748

அரைத்திடவே சூதமங்கே செயமாய்நிற்கும்
அப்பனே யிதையெடுத்துப் பீங்கானில்விட்டு
உரைத்திடவே பறங்கியுட சாராயம்விட்டு
உத்தமனே ரவியில் வைப்பாய் வற்றவற்ற
நிரைத்திடவே பட்சமொன்றிப் படியேவாரு
நிலைத்துதடா பாலரசந் தீயிக்கேகாது
பரைத்திடுவா யிச்சூதம் பரீட்சைகேளு
பாங்காக குகையிலிட்டு ஊதுஊதே. 749

ஊதிடவே யசையாது கனலுக்கப்பா
உத்தமனே கரங்கள்ரெண்டும் குளிர்ந்து போகும்
வாதிடவே கொப்பரையில் வென்னீர்காய்ச்சி
வார்த்தாக்கால் பாலரசம் குளிர்ந்து போகும்
ஏதிடவே பாலரசம் பலந்தானெட்டு
என்மகனே தங்கமொன்று கூட்டியாட்டி
மாதிடவே கெந்தகத்தான் பலமுங்கேளு
மைந்தனே பதினாறு பலமும்போடே. 750

Koviloor Digital Library

போட்டல்லோ பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
புகழான வாலுகையில் தீயைமூட்டி
நீட்டல்லோ யெரித்திடுவாய் பதத்தைப் பார்த்து
நேராக தீயெரித்துச் செந்தூரிக்க
ஓட்டல்லோ யிதினோடு ஒன்பதுக் கொன்றோடும்
உத்தமனே தசமாற்று முறுதியாகும்
சாட்டல்லோ சந்திரோதய மென்றநாமம்
தப்பாமல் பணத்தூக்கந் தினந்தானுண்ணே. 751

உண்ணடா மண்டலந்தான் நரைதிரையும் போகும்
உத்தமனே சட்டைகக்கும் பாலையாவாய்
கண்ணடா யிதுகொண்டால் தாதுமீறும்
கலக்கலா மாண்தன்மை யதிகமேறும்
தண்ணடா மதிமேலே மனது வைத்தால்
தாரையா யமுர்தமங்கே யோடும்பாரு
கொண்ணடா யமுர்த்தத்தைக் கனசட்டை தள்ளும்
குருமுனிபோல் அவர்பிள்ளை ஆச்சென்பாரே. 752

ஆச்சடா யிதையுண்ண வரிசை சொல்வேன்
அப்பனே முந்திமுந்தி யிதையுண்ணாதே
வாச்சடா காயசித்தி செய்யுமார்க்கம்
மச்சேந்திரா வரிசை சொல்வேன் நன்றாய்க்கேளு
நீச்சடா சிவன்நூல்தான் சென்று போகும்
நேரான சித்தர்நூல் நிலையோயில்லை
மூச்சடா அத்திடம்போல் கற்பஞ்சொல்வேன்
முந்திநீ கடுக்காயை யிருபதுநாள் கொள்ளே. 753

கொள்கையிலே வாதமொத்த தேகமானால்
கூட்டியல்லோ சுக்கோடு கடுக்காயைக் கொள்ளு
கொள்கையிலே பித்தமொத்த தேகமானால்
கூடவடா சீரகமும் கடுக்காய் கொள்ளு
கொள்கையிலே சிலேத்துமத்தின் தேகமானால்
கூட்டடா சிவதையொடு மிந்துப்பையா
கொள்கையிலே வாதபித்த தேகமானால்
கொடுஞ்சுருக்கா யிந்துப்புங் கூட்டிக் கொள்ளே. 754

கூட்டியல்லோ வாதமொடு சிலேத்துமமும் நின்றால்
குறையாமல் சுக்கோடு மிளகும் சேர்த்து

Koviloor Digital Library

நீட்டியல்லோ பித்தமொடு சிலேத்துமம் நின்றால்
நிலையாது காயசித்தி யாசைபோக்கு
மூட்டியல்லோ யிப்படித்தா னறிந்துமுண்ணு
மோசமில்லை கடுக்காயில் மலமெல்லாம் போகும்
பூட்டியல்லோ யிதைவிட்டு மிளகையுண்ணப்
போக்கோடே பற்பத்தா லேற்றியுண்ணே. 755

உண்டபின்பு கரந்தையிலே வைத்துமுண்ணு
உத்தமனே சீந்தியிலே காந்தம் வைத்துண்ணு
தண்டபின்பு யிதுநான்குங் கடந்துதானால்
சாதகத்தைச் சொல்லுகிறேன் மச்சாகேளு
அண்டபின்பு அப்ரேக நவநீதம் பண்ணி
அப்பனே யைந்துபத்து பலமுந்தூக்கி
பண்டபின்பு மயிலிறகு சுட்ட சாம்பல்
பலம்பத்து மதினோடே பாங்காய்ப் போடே. 756

அப்ரேக செந்தூரம்

போடடா யிதினோடே யிந்திரகோபம்
புகழாகப் படிமூன்று கூடயிட்டு
நீடடா யிவையெல்லா மரைத்து நன்றாய்
நீட்டடா யிருபது பலமோகாரம்
ஊடடா சன்னமச்ச முளுந்துமொச்சை
உத்தமனே வெள்ளெருக்குக் குன்றிதானும்
கூடடா யெள்ளோடு புறாவினெச்சம்
கூட்டடா வகையொன்று பலமும்பத்தே. 757

பத்தோடு யிவையெல்லா மரைத்து நன்றாய்ப்
பாங்கான வாழையது கிழங்குச்சாற்றில்
முத்தோடு முள்ளங்கிக் கிழங்குச்சாறும்
மூட்டியல்லோ யரைத்து நன்றாய் வில்லைகட்டி
கொத்தோடு யுலரவைத்து வங்கனாாம்
கூட்டியல்லோ யூதிடவே சத்தாய்வீழும்
அத்தோடு நொறுக்கியிதைச் சத்தெல்லாம் வாங்கி
அப்பனே சத்தோடு காரம்கூட்டே. 758

கூட்டடா காரமது நாலுக்கொன்று
குமுறவே சக்கரையுந் தேனும் வெண்ணெய்

Koyiloor Digital Library

நீட்டடா குன்றியுட பருப்புங்கூட
நேராக வகையொன்று பலமோவைத்து
சூட்டடா யவையெல்லாம் கறடோடொக்க
சுகமாக வாழையது கிழங்குச்சாற்றால்
ஆட்டடா வில்லைகட்டி முன்போலூது
அப்பனே சத்தாக விழுகும்பாரே. 759

பாரடா சத்தெடுத்து கறட்டையெல்லாம்
பாங்காக யிப்படியே யைந்துதரமூது
நேரடா சத்தெல்லாம் கழன்றுபோகும்
நினைவாக யைந்துதர மூதுவூது
ஊரடா சத்தெடுத்து வுருக்கினாக்கால்
உத்தமனே காரம்போ லுருகும்போது
சேரடா சத்திடைக்கு நாலிலொன்றுதங்கம்
சிறப்பாக யுருக்கியொரு மணியாய்வாங்கே. 760

வாங்கியதோர் சத்திடைக்கு வாலரசங்கூட்டி
மைந்தனே ரசம்ரெட்டி கெந்தகமும்சேர்த்து
ஓங்கியதோர் பொற்றலையின் சாற்றாலாட்டி
உத்தமனே குப்பியிலே யெடுத்துநீயும்
பாங்கியதோர் வாலுகையில் செந்தூரித்துப்
பாங்காக ரெண்டுபணந் தினந்தானுண்ணு
தேங்கியதோர் நோய்களெல்லாம் சிதறியோடும்
சிவப்பாகும் கண்கள்ரெண்டுஞ் சித்திதானே. 761

சித்தியென்ற செந்தூரம் லோகத்திற்பூட்ட
சிறப்பாக தசமாற்றாம் செந்தூரம்பாரு
அத்தியென்ற லோகத்தில் வேதைபோனால்
அப்பனே காயசித்தி பொய்யாய்ப்பபோச்சு
முத்தியென்ற துறைக்கென்ன தசதீட்சையப்பா
மூதண்ட வாதசித்தி ரசத்திலப்பா
பத்தியென்ற காயசித்தாம் லோகம்சித்தியானால்
பதறாமல் ஜெயரசத்தைப் பண்ணிக்கொள்ளே. 762

காந்த செந்தூரம்

பண்ணவடா காந்தசத்தின் கூட்டஞ்சொல்வேன்
பாங்கான ஊசிதனைப் பிடித்தகாந்தம்

Koviloor Digital Library

நண்ணவடா பலந்தானும் நான்குபத்து
நலமான கெந்தகமோ மூன்றுபத்து
ஒண்ணவடா பூநாகம் மூன்றில்நீர்விட்டு
உத்தமனே தலைமயிரும் பலமும்பத்து
அண்ணவடா ராஜவர்தம் பலமோபத்து
அப்பனே ஐந்தையுந்தான் கூட்டுகூட்டே. 763

கூட்டியல்லோ யிடித்தெல்லாம் மயிரைக்கேளு
குறுகவே சுருட்டியதை எள்ளெண்ணெய்தோய்த்து
மூட்டியல்லோ தீக்கொளுத்தி சாம்பலாக்கி
முறையாக வதிற்போட்டு பூனாகமிட்டு
நீட்டியல்லோ யரைத்தெல்லாம் முரவுசெய்து
நேராக யாட்டுரத்தம் விட்டேயாட்டி
பூட்டியல்லோ முசலெலும்பு மாட்டுக்கொம்பு
புகழான குதிரையுட குளம்புதானே. 764

தானென்ற குன்றியொடு வெண்ணெய்தேனும்
சாதகமாய் சக்கரையும் எள்ளுமொச்சை
கோனென்ற சிறுமீனும் உளுந்தோடொக்க
கோதும்பை புறாவினெச்சம் குச்சிலோடு
கானென்ற வகையொன்று பலமோபத்து
காரமடா ஐம்பது பலந்தான்போடு
வானென்ற ஆட்டுரத்தம் விட்டேயாட்டு
மைந்தனே வில்லையைப்போல் கட்டுக்கட்டே. 765

கட்டியல்லோ உலரவைத்து வங்கனாளம்
கடுகவடா யிருபுரமும் பூட்டியூது
அட்டியடா யொன்றுமில்லை காந்தத்தோடு
ஐந்துவகை யுபரசமு முருகிவீழும்
உட்டியடா உடைத்தெடுத்து சத்தைவாங்கி
உத்தமனே சுரண்டிநன்றா யிடித்துநீயு
மெட்டியடா காரமிதில் நாலிலொன்றுபோட்டு
மிதமான வெண்ணெயொடு குன்றிதேனே. 766

தேனோடு சர்க்கரையுங் கூடவிட்டு
சிறப்பாக ஆட்டுரத்தம் விட்டேயாட்டி
வானோடு வில்லைதட்டி முன்போலூது
மைந்தனே சத்தெல்லாம் கழன்று வீழும்

Koviloor Digital Library

ஊனோடு மிப்படியே ஐந்துதரமூது
உத்தமனே சத்தெல்லாம் வாங்கு வாங்கு
பானோடு தேவியைத்தான் பூசைபண்ணிப்
பரிவான யுபரசத்தின் சத்தைவாங்கே. 767

வாங்கியதோர் சத்துக்கு நாலுக்கொன்று
மைந்தனே தங்கமிட்டு யுருக்கி நீயும்
பாங்கிய சத்திடைக்கு பாலரசமுமிட்டு
பருவமுடன் பொடியாக்கி பரிந்துகேளு
ஓங்கியதோ ரசம்ரெட்டி கெந்திகூட்டி
உத்தமனே பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
தாங்கியதோர் வாலுகையில் செந்தூரித்துச்
சாதகமாய் ரெண்டுபணத் தூக்கந்திண்ணே. 768

திண்ணடா தினந்தோறு மண்டலந்தானப்பா
ஜெகமறிய நரைகளெல்லாம் சிதறிவீழும்
பண்ணடா தசதீட்சை வரிசையோடே
பார்க்கையிலே பாம்புத்தோல் போலேதள்ளும்
மண்ணடா செந்தூரம் வெள்ளிபத்திலீய
மாற்றென்ன பதின்மூன்று காணுங்காணும்
எண்ணடா லோகமது வேதிக்காட்டால்
இல்லையடா காயசித்தி யெல்லாம் பொய்யே. 769

கடுங்கற்பம்

பொய்யென்று போகாமல் கடுங்கற்பஞ் சொல்வேன்
புகழாக ஜெயரசமோ பலமோயெட் டு
கையென்ற கெந்தகத்தின் செம்புதானும்
கலந்திடடா பலமொன்று யிதினோடொக்க
சையென்ற தங்கமது பலமூன்று
சாந்தியிந்த மூன்றொன்றா யுருக்கிவாங்கி
மெய்யென்ற கெந்தகந்தா னிதுக்குநேரே
விரைத்திட்டுப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றே. 770

ஏற்றியல்லோ வாலுகையில் செந்தூரித்து
என்மகனே பணந்தூக்கித் தினந்தான்தின்னு
மாற்றியல்லோ மண்டலத்தில் சட்டைதள்ளும்
மாசற்றா லுன்தேக மருணன் போலாம்

Koviloor Digital Library

போற்றியல்லோ மேல்னோக்கி பூரணத்தைப்பாரு
புகழ்கோடி ரவிபோலே யொளியேகாணும்
ஆற்றியல்லோ சமாதியிலே யுரைத்தாயானால்
அப்பனே யுகாந்தவரை யிருத்தும்பாரே. 771

இருத்தியதோர் செந்தூரமா யிஈத்துக்கொன்று
இட்டாக்கால் பதினாறு மாற்றுமாகும்
அருத்தியதோர் குளிகையிட்டுப் பூசிநீயும்
அப்பனே யண்டமொடு பதங்கள்பாரு
ஒருத்தியதோர் மேலிருந்தாள் ஞானசக்தி
உத்தமியாள் தசதீட்சை யோதியேறு
உருத்தியல்லோ யுன்னுருவம் சொரூபமாகும்
உத்தமனே வொளிபோனால் காணுங்காணே. 772

காணடா யுபரசத்தால் சூதங்கட்டும்
கருவையெல்லாம் மொளித்துவிட்டார் சித்தர்தானும்
பூணடா அப்ரேகக் காந்தம்கெந்தி
பூனாகம் பூரமொடு யுபரசங்களெல்லாம்
தோணடா யுருகையிலே சத்தாய்வீழுந்
துடியாக வெங்காரம்போல் நொறுங்கிப்போகும்
வீணடா யிதினோடே தங்கங்கூட்டி
விடயுருக்கி கிண்ணியைப்போல் விடுவார்தாமே. 773

விட்டல்லோ கிண்ணியிலே சூதம்வார்த்து
மேலான வாலுகையி லேற்றிப்பார்ப்பார்
கட்டல்லோ கட்டாது சூதந்தானும்
காய்ந்தாலும் போகாது சும்மாய்நிற்கும்
தெட்டல்லோ கட்டுமென்று சாஸ்திரத்திற் சொன்னார்
செய்துபார் புலத்தியனே செயமாகாது
பொட்டல்லோ போட்டாப்போல் சூதங்கட்ட
போக்கினுட கருச்சொல்வேன் பூண்டுகேளே. 774

சாரக்கட்டு

கேளடா சவ்வீர மைனஞ் சொல்வேன்
கெடியாகக் கிளிஞ்சியுட திராவகத்தினாலே
நீளடா முதிர்ந்ததொரு கிளிஞ்சிதன்னை
நீரிலே சுண்ணாம்பும் பூநீறிட்டு

Koviloor Digital Library

வாளடா கரைத்ததிலே கிளிஞ்சிபோட்டு
மைந்தனே யெரித்திடவே வெளுத்துப்போகும்
தூளடா யிக்கிளிஞ்சி தூளாய்ப் பண்ணி
திராவகத்தை யிதில்வாரு கரைந்துபோமே. 775

கரைந்ததைத்தான் மூன்றுநாள் வைத்துநீயுங்
கலங்காமல் தெளிவிருந்து மண்டிதன்னை
நிறைந்ததொரு மண்டியெல்லாம் வற்றக்காய்ச்சி
நேராக மெழுகுபோலெடுத்துக் கொண்டு
உறைந்ததைத்தான் மெழுகோடு காரங்கூட்டி
உத்தமனே சாரத்தில் கவசங்கட்டி
பறைந்ததைத்தான் மெழுகோடு குகையில் வைத்துப்
பண்பாகப் புடம்போட சாரஞ்சாமே. 776

சாகுமடா சாரமது முழுக்கட்டப்பா
சந்தேக முண்டானால் மறுநாள்போடு
வாகுமடா சாரத்தை தெளிவிலாட்டி
மைந்தனே வீரத்தின் மேலேபூசி
போகுமடா ரவியினுள்ளே காயப்போட்டு
புகழான கிளிஞ்சியுடன் மெழுகால்மூடி
ஆகுமடா சில்லிட்டுப் புடத்தைப்போட
அப்பனே முழுக்கட்டாம் வீரந்தானே. 777

வீரமடா கட்டாதல் கடினமெத்த
விதமறிந்து கட்டினா லவனேவாதி
காரமடா கடுங்காரம் வீரத்தாட்டு
கண்கொள்ளா விண்கொள்ளா வேதையாடும்
ஆரமடா கட்டியதோர் வீரந்தன்னில்
அப்பனே கிளிஞ்சிநீர் தெளிவைக்குத்தி
பாரமடா பனியில் வைக்க மெழுகாம்வீரம்
பணபேதி யாடுமிதில் பரிசுகேளே. 778

பரிசிக்க யுபரசத்தில் சத்தானதெல்லாம்
பாங்காக ஈயம்போ லுருகியாடும்
பரிசித்து தங்கமுதல் நவலோகங்கள்
பார்மகனே யுருக்கையிலே சவளையாகும்
பரிசித்து சூதத்தில் செயசாரம்போட்டுப்
பாரடா தெளிவினா லரைக்கக்கட்டும்

Koviloor Digital Library

பரிசிக்க வேதையென்ன சவளைவேதை
பாருவெள்ளைச் செந்தூர மென்றுபேரே. 779

பேரடா சரக்கால னென்றும்பேரு
பிடராஜன் சவளைபண்ணும் பெரியமூர்த்தி
நேரடா யிதின்போக்கை சித்தரெல்லாம்
நேராக வொளித்துவிட்டார் சாஸ்திரங்களெல்லாம்
பாரடா மச்சேந்திரா உபரசத்தின் சத்தை
பாய்காக வீரமிட்டுருக்கிப்பாரு
பேரடா சத்தெல்லா மீயமாகும்
புகழான ஈயத்தில் தங்கஞ்சேரே. 780

சேர்க்கையிலே தங்கத்தை சவளை பண்ணிச்சேரு
செப்பியதோ ரீயத்தில் நாலுக்கொன்று
ஆர்க்கையிலே யிதையெடுத்து கிண்ணி வார்த்து
அப்பனே கிண்ணியிலே சூதம்விட்டு
பார்க்கையிலே வாலுகையிலே வைத்துமூட்ட
பதையாமல் சூதமங்கே யிட்டலிபோலாகும்
கார்க்கையிலே யிதையெடுத்து யுருக்கினாக்கால்
கண்விட்டே யாடுமடா சூதந்தானே. 781

சூதமல்லோ வாதத்துக் காதியாதி
தொடுகுறிபோல் கட்டினால் வாதமாகும்
சூதமல்லோ காயசித்தி செய்யும் செய்யும்
சுகமான செயமானால் காயசித்திபண்ணு
சூதமல்லோ கவனத்தி லெடுத்தேயாடும்
சூட்டினால் சாரணையைத் தூக்குந் தூக்கும்
சூதமல்லோ கட்டாட்டா லெல்லாம் பொய்பொய்
சொல்லிவிட்டேன் புலத்தியனே சூட்சந்தானே. 782

தானென்ற யுபரசத்தை யீயம்பண்ண
சாத்தாமல் சித்தரெல்லா மொளித்ததென்ன
வானென்ற பூரணமே பொதிகைவேந்தே
மைந்தனுக்கு வர்மத்தை சொல்லுஞ் சொல்லும்
தேனென்ற வீரத்தில் கல்முதலாய்வேதை
செகமறியா தாயிட்டால் பரிசவேதை
கோனென்ற குளிகைக்குச் சாரணையை செய்ய
கொள்ளாது வீரமில்லா உபரசங்கள்பாரே. 783

Koviloor Digital Library

பாரடா யுபரசங்கள் கவுனச்சத்தில்
பாச்சினால் நாகத்தை யுட்கொள்ளாது
நேரடா சூதமிட்டால் புகைந்துபோகும்
நீபாரு வாதத்தில் நாகரசமாதி
ஆரடா துரந்துசொல்வா ருங்களுக்காய்ச் சொன்னேன்
அப்பனே யுபரசத்தின் யீயத்துள்ளே
ஏரடா நாகரசங் கொடுத்தாயானால்
இழுத்தல்லோ கட்டிப்போ மிதில் தாய்கூட்டே. 784

கூட்டியல்லோ கெந்தியிட்டு செந்தூரித்துக்
குருகாது நூற்றிலொன்று வேதையாகும்
மூட்டியல்லோ கருப்பான கரிசாலைக்குள்ளே
மூதண்ட பணந்தூக்க முண்டாயானால்
நீட்டியல்லோ சட்டைகக்கி நரைகளெல்லாம்போம்
நேரான காயசித்தி மெய்யேயாச்சு
ஓட்டியல்லோ கடுஞ்சத்தை செந்தூரித்துண்ண
உத்தமனே நோய்களெல்லா மோடிப்போமே. 785

ஓடுமே நோய்களெல்லாம் கற்பமுண்ணு
உத்தமனே யுண்மையிலே பத்தியத்தைக் கேளு
தேடுமே முன்னுண்ட புளியுமுப்பும்
செகமரியா விட்டாக்கால் மெத்தநன்று
வாடுமே மனதானால் கட்டியதோருப்பை
மைந்தனே கரிசோற்றில் போட்டு உண்ணு
ஊடுமே புளியாகா புளியாரையாகும்
உத்தமனே யருநெல்லிக் காயுமாமே. 786

ஆகுமடா வெள்ளாடு முசலோடாமை
அப்பனே வூர்க்குருவி காடையாகும்
ஆகுமடா கெளுத்தி மீன் சுறாவும் நன்கு
அப்பனே மானாகு மறையுமாகும்
ஆகுமடா மிளகோடு சர்க்கரையுந்தேனும்
ஆவின்பால் நெய்யாகும் சிறுக்கீரையாகும்
ஆகுமடா சிறுபயறு துவரை தானு
மாச்சரியம் பொன்னின் நல்ல கண்ணியாமே. 787

கண்ணியொடு தித்திப்ப தெல்லாமாகும்
கசப்பாகா துவர்ப்பாகா புளிப்புமாகா

Koviloor Digital Library

ஒண்ணியொடு பழவகைக ளெல்லாமாகும்
உத்தமியைப் பூசை பண்ண வஸ்துமாகும்
நண்ணியொடு கொடுவளையின் பிஞ்சுமாகும்
நலமான தூதுவளை காய்பூவாகும்
தண்ணியல்லோ தாகித்தால் வென்னீர் பாலாம்
சாதகமாய் தசதீட்சைக் கருவில் நில்லே. 788

கருவான மூலிகையும் கடுக்காயுமுண்ணில்
கற்பமென்ற கோரக்கர் மூலிகையாகா
தருவான பெண்மேலே மனதுமாகா
தாம்பூலம் தின்றாக்கால் பகலுறக்கமாகா
உருவான கடுகு புளி நல்லெண்ணெயாகா
உத்தமனே முழுகவென்றால் நெய்பயறுமாகும்
திருவாக இப்படியே யிரந்தேயுண்டு
தசதீட்சை சமாதியிலே தினமுந்தூங்கே. 789

தூங்கையிலே மேலருவித் தாரையோடி
சுகமாக யிளந்தேங்காய் போலேவீழும்
வாங்கையிலே வாசியுள்ளே நின்றுபோகும்
மைந்தனே மூலத்தில் பளிச்சென்றேறும்
ஓங்கையிலே தசனாகம் உள்ளே யோங்கும்
உத்தமனே தசதீட்சைக் கடுத்தவாறு
தேங்கையிலே பதினோராறந் தீட்சை பாரு
சேர்ந்துடனே நிருவிகற்பச் சமாதியாமே. 790

மகா சவ்வீரம்

ஆமடா சவ்வீர மொன்று சொல்வேன்
அப்பனே சூதமது பலமோபத்து
ஓமடா சாரமது பலமோ வைந்து
உத்தமனே துரிசியொடு சீனக்காரம்
தாமடா வெடியுப்புக் கல்லுப்போடு
சாதகமா யன்னமென்ற பேதியோடே
போமடா வகையொன்று ரெண்டரைப் பலந்தான்
புகழான தாளகமும் மனோசிலையும் கேளே. 791

கேளடா வெள்ளையொடு கெவரிதானும்
கெடியான மடல்துத்தம் லிங்கத்தோடு

Koviloor Digital Library

நாளடா கொடுவேலி யுப்பினோடு
நலமான பூநீறு வகையதொன்று
நீளடா வொன்றேகால் பலமுங்கூட்டி
நேராகப் பொடிசெய்து ரசத்தோடொக்க
தாளடா பறங்கியுட சாராயங்குத்தி
சாதகமா யரைவாசி தனிலே போடே. 792

போட்டல்லோ ஏழுசுற்றுச் சீலைசெய்து
புகழாக வாலுகையின் மேலேயேற்றி
மூட்டல்லோ பனிரெண்டு சாமம்தீயை
மூதண்ட சவ்வீரம் பதங்கமேறும்
ஆட்டல்லோ யிதினாட்டு வீரராசன்
அப்பனே சாரணைக்காம் மெழுகுக்காகும்
கூட்டல்லோ தங்கமுத லுபரசங்களெல்லாம்
கொடுஞ் சுறுக்காய் கணத்திலே சவளையாமே. 793

சவளை பரீட்சை

சவளையென்ற துரைக்கெல்லாம் பரீட்சைகேளு
சாதகமாய் தங்கமென்ற சவளைக்குள்ளே
குவளையென்ற காரீயம் குத்தியூது
குறுக்கத்துப் போகாமல் நின்றுதானால்
தவளையென்ற சூதத்தைப் பிடித்துக் கொண்டு
தவறாமல் காயசித்தும் லோகசித்துமாகும்
அவளையென்று பூசைபண்ணி சத்திதீட்சை
அப்பனே பதினொன்றுஞ் செயித்துமேறே. 794

ஏறடா சிவதீட்சைப் பதினொன்றப்பா
என்மகனே பகல்முழுதும் செபித்தேயேறு
மாரடா பதினொன்றும் சத்தியுடதீட்சை
மறக்காமல் இராக்கால்ஞ் செபித்தேயேறு
வேரடா விக்கினங்க ளொன்றுமில்லை
வேதாந்த ஞானசத்தி வெளியாய் நிற்பாள்
கூரடா சிவசத்தி யுடலுயிராய் நின்று
கூப்பிட்டால் பூரணமும் பேசுந்தானே. 795

பேசுமென்றீர் பூரணந்தான் பூரணமேயையா
பேச்சேது மூச்சேது வெட்டவெளிக்குள்ளே

Koviloor Digital Library

பேசுமென்ற முறையேது கருவைச் சொல்லும்
பேய்மகனே நினவடா அகண்டம்போல் காணும்
பேசுமென்ற நினைவடா ஞானசத்தியப்பா
பேரின்ப வீடடா வுன்மனையாம் வீடு
பேசுமென்ற யறிவடா அகண்டசிவக்கூறு
பேரான தசதீட்சை யேறிப்பாரே. 796

தீட்சை வுதகம்

பாரடா உதகத்தில் க்ஷணவேதி நன்று
பாங்கான மூன்றுநா ளெட்டுநாளன்று
நேரடா யிதுகடந்தால் சூறுக்கோயில்லை
நேரான உதகத்தில் பரீட்சைகேளு
தாரடா குதிரைமயிர் கள்ளியிலேகட்டி
சலத்திலே போட்டாக்கால் கல்லாய்ப்போகும்
ஊரடா யிருந்துதகம் சுறுக்கோயில்லை
உத்தமனே மலையுதகஞ் சுறுக்குத்தானே. 797

சுறுக்கான உதகத்தில் விளாங்காய்க்குள்ளே
சூட்டியல்லோ சூதத்தை அதிலேபோடு
சுறுக்கான உதகத்தில் கெந்தகத்தைப்போடு
துடியான நாகத்தை யதிலேபோடு
சுறுக்கான உதகத்தில் உபரசங்கள்போடு
தேறாத பாஷாணம் ஆறுபத்தும்போடு
சுறுக்கான உதகத்தி லெல்லாங்கல்லாம்
சூட்டினா லொவ்வொன்றும் வேதையாமே. 798

ஆமடா சூதமென்ற கல்லையுண்ணு
அப்பனே சட்டைகக்கிச் சித்தியாகும்
வேமடா கல்லுகளை யூதச்சுன்னம்
வெகுகோடி மெழுகாகும் செயநீராகும்
சாமடா சரக்கெல்லாம் தப்பாமற்றான்
சாற்றினே னிக்கருவை சூட்சமாக
போமடா சுன்னத்தில் வீரங்கூட்ட
புகழான செந்தூரங் கோடிதானே 799

கோடியென்ற உதகத்தில் தைலஞ்சொல்வேன்
கூட்டடா கெந்தகந்தான் பலமும்நூறு
ஆடியென்ற மனோசிலையு மிருபதுபலந்தான்
அப்பனே தாளகமு மிருபது பலந்தான்

Koviloor Digital Library

தேடியென்ற யிணங்கனது மிருபது பலந்தான்
செகமறிய வீயமது மிருபதுபலந்தான்
நீடியென்ற யிவையெல்லாம் உதகத்திலாட்டி
நேரான அயப்பாண்டத் துள்ளேபோடே. 800

போடடா தூரிலே தமருமூன்று
புகழாகப் பூப்புடத்தில் தைலம்வாங்கு
ஆடடா தைலத்தில் பரிசவேதை
அப்பனே சித்தரெல்லா மிப்படியே செய்வார்
நீடடா உதகவித்தை லகுவுமெத்த
நேராக விரித்தாலும் மெத்தவாடும்
கூடடா வாதமுதல் வயிஸ்தம்பம் ரெண்டுங்
குறிப்பான சூதத்தா லாடும்பாரே. 801

பாரப்பா சிலநூலில் கருவையெல்லாம்
பாடினேன் எண்ணா யிரமாய்முன்னே
நேரப்பா யெட்டைத்தான் எண்ணூறாக
நிறைநிறையாய் புலத்தியரே மச்சமுனிகேளு
ஆரப்பா பார்த்தாலு மொன்றுந்தப்பா
அப்பனே யென்னுடைய சூதத்தின் சொல்லு
சேரப்பா சித்தரெல்லா மிந்தநூல் பார்த்து
திரட்டியல்லோ வெகுநூலாய்க் கட்டினாரே. 802

பொற்குரு

கட்டவே சூதமினிப் பொற்குருவைச் சொல்வேன்
கரையத்த சாத்திரத்தி லென்போல் சொல்லார்
ஒட்டவே மனோசிலையைத் திராவகத்திலாட்டி
உத்தமனே னாலிலொன்று நாகத்திற்பூசி
வெட்டவே யோட்டிலிட்டுப் புடத்தைப்போடு
நிலையாக நாகமங்கே பற்பமாகும்
முட்டவே பற்பத்தி னாலிலொன்று வீரம்
மூட்டியல்லோ திராவகத்தா லரைத்திடாயே. 803

அரைத்தல்லோ பறித்தகட்டின் மேலேபூசி
அப்பனே யுலர்த்தியொரு வோட்டில்மூடி
நிரைத்தல்லோ புடம்போடத் தங்கம்நீறும்
நேராக யிதின்பேரு பொற்குருதானென்பார்
விரைத்தல்லோ யிதினாலே சூதங்கட்ட
வித்தையினிச் சொல்லுகிறேன் புலத்தியனே கேளு

Koviloor Digital Library

கரைத்தல்லோ வாய்நீரில் துரிசி நீற்றைக்
கனமான சட்டியிலே நடுவேபூசே. 804

பூசியல்லோ யிதற்குள்ளே சூதம்வார்த்து
போடடா யதின்மேலே தங்கநீறை
தேசியல்லோ யடுப்பேற்றித் தீயைமூட்டு
திறமாக சூதமங்கே காய்ந்தபோது
ஆசியல்லோ சாரமொடு வெடியுப்பு ரெண்டும்
அப்பனே பொடியாக்கி மேலேதூவு
வாசியல்லோ கட்டினதோர் யோகம்போல
மதயானை சூதமங்கே கட்டிப்போச்சு. 805

கட்டியதோர் சூதத்தில் குளிகைபண்ணு
கைமுறையாய்ச் செந்தூரங் குருவும்பண்ணு
எட்டியதோர் வேதைக்குச் சுறுக்காயோடும்
என்மகனே பொற்குருவால் சூதம்கட்டும்
தெட்டியல்லோ போகாது யாரும்பார்த்து
சிறப்பான முழுக்கட்டுக் கருத்தானப்பா
ஒட்டியல்லோ தங்கமிட்டால் தங்கமாகும்
உத்தமனே யாசையல்ல உறைப்புத்தானே. 806

வெள்ளிக்குரு

தானென்ற வெள்ளியது குருவைச் சொல்வேன்
தாளகத்தை திராவகத்தா லாட்டிநீயும்
கோனென்ற வெள்ளீயத் தகட்டில்பூசி
குமுறவடா காயவைத்து ஓட்டில்மூடி
கானென்று புடம்போட வங்கம்நீறும்
கலந்திடுவாய் நாலிலொன்று வெள்ளைதானும்
வானென்ற திராவகத்தை விட்டேயாட்டி
மைந்தனே சீனவெள்ளித் தகட்டில்பூசே. 807

தகட்டையடா ஓட்டிலிட்டு வோடுமூடி
தகையாமல் புடம்போட வெள்ளி நீறும்
முகட்டையடா சட்டியிலே துருசிநீர்பூசி
மூதண்ட சூதத்தை யதிலேவாரு
பகட்டையடா துறந்து சொல்வேன் சூதங்கட்டப்
பரிவான வெள்ளிநீ ரதிலே போட்டு
புகட்டையடா தீயெரிந்து காயும்போது
போட்டிடடா வெடியுப்பு சாரத்துள்ளே. 808

Koviloor Digital Library

தூளிட்டால் சூதமங்கே வீரிட்டுக்கட்டும்
துரையேது ஆசென்று சொல்ல வேண்டாம்
ஆளிட்ட வெள்ளியிட்டால் வெள்ளி மலையாகும்
அப்பனே குருபண்ணி வங்கத்தில் போடு
நாளிட்ட வெள்ளியடா பத்தும்பத்தாம்
நலமான யுபரசமும் வெள்ளியாகும்
கோளிட்ட வெள்ளிக்கு வெள்ளிவித்தாங்
கூறியதோர் எண்ணூறும் முற்று முற்றே. 809

அகத்திய முனிவர் அருளிச்செய்த
மஹாதிராவகம் எண்ணூறு
முற்றிற்று.

நந்தீசர் திராவகம்

காணப்பா யிந்நூலில்தான் பத்துக்குள்ளே
கணக்காகத் திராவகங்கள் காட்டுகின்றேன்கேள்
வாணப்பா சரியை கிரியையோக கருமஞ்செய்வார்
வளமான சிவயோகி தர்மஞ்செய்வான்
மாணப்பா மடையர்களே யறிவாய்க்கேளு
மகத்தான சிவயோகி புத்திவானாம்
ஆணப்பா ரேசகத்தைக் கட்டினோர்கள்
அல்லலற்ற சிவயோகி யவன் தான்பாரே. 1

சங்கு திராவகம்

பாரப்பா திராவகந்தான் சொல்லக்கேளு
பண்பான சங்குதிரா வகந்தான் சொல்வேன்
ஆரப்பா சங்கதுதான் பலமோபத்து
அப்பனே யுடைத்ததனைத் தூளாய்ப் பண்ணி
வாரப்பா வூசிநீர்தனைத் தெளித்து
வளமான வாலையிற்றான் போட்டுக் கொண்டு
காரப்பா வாலையின்கீழ் தீயைமூட்டிக்
கண்மணியே தீபம்போ லெரித்திடாயே. 2

எரியவே தமர்வாயில் பீங்கான்வைத்து
யென்மகனே சிறுதீயா யெரித்திட்டாக்கால்

Koviloor Digital Library

வரியவே திராவகந்தான் பீங்கானில் வீழும்
வளமான திராவகத்தைச் சீசாவில்வைநீ
அரியவே தேவிக்கும் ருத்திரர்க்கும்
அப்பனே பூசைப்பண்ணி நைவேத்தியஞ்செய்து
மரியவே சோடசமாய்ப் பூரணத்தில் நின்று
மைந்தனே திராவகத்தை பதனம் பண்ணே. 3

வெடியுப்புத் திராவகம்

பண்ணடா வெடியுப்பு திராவகந்தான் கேளு
பண்பான வெடியுப்பு பலமோபத்து
அண்ணடா ரோமநீர் தெளித்துலர்த்தி
அப்பனே வாலைதனி லிட்டுக் கொண்டு
வண்ணடா சிறுதீயாய் மூட்டிக் கொண்டு
வளமான தமர்வாயில் பீங்கான்வைக்க
கண்ணடா கரகரென்று திராவகந்தான் வீழுங்
கண்மணியே திராவகத்தைச் சீசாவில்வையே. 4

கல்லுப்புத் திராவகம்

வையடா பூசித்துப் பதனம்பண்ணு
வளமான திராவகத்தை யென்னசொல்வேன்
கையடா கல்லுப்புத் திராவகந்தான் கேளு
கண்மணியே கல்லுப்பு பலமோபத்து
ஐயடா சுத்தஜலம் வார்த்தரைத்து
அழகான வாலையிற்றா னிட்டுக் கொண்டு
மையடா தீமூட்டித் தீபம்போலே
மைந்தனே தமர்பீங்கான் வைத்துக்கேளே. 5

சீனியுப்புத் திராவகம்

கேளடா திராவகந்தான் கதிர்போல்வீழுங்
கெடியான கல்லுப்பு திராவகந்தான்மைந்தா
வாளடா பூசித்துப் பதனம்பண்ணு
வளமான திராவகத்தை யென்னசொல்வேன்
நாளடா சீனியுப்புத் திராவகந்தான் கேளு
நலமான சீனியுப்பு பலமோபத்து
ஆளடா ரோமநீர் வார்த்தரைத்து
அப்பனே வாலைதனிற் போடுபோடே. 6

Koviloor Digital Library

கறியுப்புத் திராவகம்

போடவே தீபம்போல் தீதான்மூட்டி
புகழான கதிர்வாயில் பீங்கான் வைத்து
ஆடவே கதிர்போலே திராவகந்தான்வீழும்
அப்பனே திராவகத்தைச் சீசாவிலூற்றி
வாடவே பூசித்து பதனம்பண்ணு
வளமான திராவகம்போ லெதுதானுண்டு
நாடவே கறியுப்பு திராவகந்தான் கேளு
நலமான கறியுப்புப் பலந்தானெட்டே. 7

எட்டவே முத்துநீர் வார்த்திடித்து
என்மகனே வாலைதனிற் போட்டுக்கொண்டு
கட்டவே தீமூட்டி யெரித்திட்டாக்கால்
கண்மணியே திராவகந்தான் கதிர்போல் வீழும்
மட்டவே பீங்கானை வைத்தாயானால்
மைந்தனே திராவகந்தான் யிறங்கும் பாரு
வட்டவே சீசாவிற் பதனம்பண்ணு
வளமான கல்லுப்புத் திராவகமுமாச்சே. 8

இந்துப்புத் திராவகம்

ஆச்சடா யிந்துப்புத் திராவகங்கேளு
அப்பனே இந்துப்பு பலமோபத்து
வாச்சடா புளிச்செயநீர் வார்த்திடித்து
வளமாக வாலையிற்றான் போட்டுக்கொண்டு
காச்சடா தீமூட்டிப் பீங்கான்வைத்துக்
கனமான கால்நாழி எரித்தாற்கேளு
நாச்சடா திராவகந்தான் கதிர்போல்வீழும்
நலமான திராவத்தைப் பதனம்பண்ணே. 9

குருஅண்டத் திராவகம்

செய்யவே குருஅண்டத்திரா வகந்தான்கேளு
செயலான அண்டமதைக் கொண்டுவந்து
மெய்யவே கோரையுடன் கசடெல்லாம் போக்கி
மேலான அண்டத்தை கல்லுரலிற்போட்டு
வெய்யவே யெகுவுலக்காற் சாடினாக்கால்
வேதாந்தம் பொடிப்பொடியாய்த் தூளாய்ப் போகும்
நெய்யவே யத்தூளில் விஷச்சுண்ணம்போட்டு
நேராக வாலைதனிற் போட்டுக்கேளே. 10

Koviloor Digital Library

கேளப்பா காலனைப்போல் தீதான்மூட்டிக்
கெடியான கதிர்வாயில் பீங்கான்வைத்து
நாளப்பா திராவகந்தான் சுழித்துவீழும்
வளமான திராவகத்தைச் சீசாவில்வைத்து
ஆளப்பா தேவிக்கும் வைரவற்கும்
அப்பனே வஸ்துவைத்து நைவேத்தியஞ்செய்து
நாளப்பா அண்ட திராவகத்தைவைநீ
நலமாக பூசித்துப் பதனம்பண்ணே. 11

வைத்தியத்திற்கு – ஓமத்திராவகம்

சொன்னேனடா இதுவெல்லாம் வாதத்துக்கு
சொற்பெரிய வைத்தியத்தின் செயலைக்கேளு
வன்னேனடா ஓமத்திராவகந்தான் சொல்வேன்
வளமான ஓமமது பலமோபத்து
அன்னேனடா சிறுநீரி லூறப்போட்டு
அப்பனே வாலையிற்றான் போட்டுக்கொண்டு
மன்னேனடா தீயெரித்துப் பீங்கான்வைத்து
மைந்தனே சாமமது யெரித்திடாயே. 12

எரித்திடவே திராவகந்தா னிறங்கிப்போகும்
என்மகனே திராவகத்தைச் சீசாவில்வைத்து
மரித்திடவே பூசை பண்ணி வைத்தியஞ்செய்ய
மகத்தான நோய்களைத்தான் சொல்லக்கேளு
கரித்திடவே கன்னவிப்பு ருதிசூலை
கண்மணியே முகவாதம் அண்டவாதம்
வரித்திடவே குளுமையுடன் சன்னிபதின்மூன்றும்
வளமாகத் திடுக்கிட்டு வோடும்பாரே. 13

மிளகு திராவகம்

பாரப்பா சூதகத்தின் வாய்வேபோகும்
பண்பான சூலைபதி னெட்டும்போகும்
ஆரப்பா பேதியுடன் வாந்திபோகும்
அல்லாட்டா லதிற்குளிர்மை அகன்றுபோகும்
வாளப்பா மிளகு திராவகந்தான் கேளு
வளமான மிளகப்பா பலமோபத்து
நாரப்பா சுத்தசல மதனிற்போட்டு
நலமாக வூரவிட்டு வாலையிலேபோடே. 14

Koviloor Digital Library

போடப்பா விஷச்சுண்ணம் அண்டச்சுண்ணம்
பேரான யிதுரண்ட மதிலேபோடு
ஆடப்பா கதிர்வாயில் பீங்கான்வைத்து
அப்பனே வைத்திடவே திராவகந்தான்வீழும்
வாடப்பா திராவகத்தைச் சீசாவில்வைத்து
வளமாகத் தேவிக்குப் பூசைபண்ணி
நாளப்பா காசிடைதா னுள்ளுக்கொண்டால்
நலமான சயகாச மீளைபோமே. 15

வசம்பு திராவகம்

போமப்பா சன்னியுடன் குளுமைதோஷம்
போரான வாதமெண் பத்துநாலும்
ஆமப்பா அரைநொடியி லகன்றுபோகும்
ஆனதோர் வியாதியெல்லாம் பறந்துபோகும்
வாமப்பா வசம்பு திராவகந்தான்கேளு
வளமான வசம்பதுதான் பலமோபத்து
நாமப்பா சுத்தசலந் தனிலேபோட்டு
நலமாக மூன்று நாளூறவையே. 16

வையப்பா இடித்ததனை வாலையிலேபோட்டு
வளமாகக் கதிர்வாயில் பீங்கான்வைத்து
ஐயப்பா தீமூட்டி எரித்திட்டாக்கால்
அப்பனே திராவகந்தான் விழுகும்பாரு
கையப்பா திராவகத்தைப் பதனம்பண்ணு
கண்மணியே தேவிக்குப் பூசைசெய்நீ
நையப்பா திராவகத்தைக் காசிடைதான்கொள்ள
நலமாக வாதபித்த சிலேற்பனமும்போமே. 17

நவகாரத் திராவகம்

போமப்பா நவகாரத் திராவகந்தான்கேளு
பேரான வெண்காரஞ் சீனக்காரம்
நாமப்பா குருவண்டு சூதம்லிங்கம்
நலமான யெலிபாஷாணம் வெள்ளைகூட்டு
வாமப்பா வீரமுடன் துருசுமைந்தா
வளமான நவசரக்கும் வகைக்குஒன்று
காமப்பா வீந்ததிலே ஊறப்போட்டு
கண்மணியே தூளிடித்து வாலையிற்போடே. 18

Koviloor Digital Library

போடப்பா கதிர்வாயில் பீங்கான்வைத்துப்
பேரான தீயைத்தான் கதிர்போல்மூட்டு
வாடப்பா நாற்சாம மெரித்திட்டாக்கால்
வளமான பீங்கானிற் திராவகந்தான்வீழும்
நாடப்பா திராவகத்தைப் பதனம்பண்ணு
நலமான தேவிக்கும் வைரவற்கும்
ஆடப்பா பூசை நைவேத்தியஞ்செய்து
அப்பனே திராவகத்தைப் பூசைபண்ணே. 19

பண்ணப்பா திராவகத்தால் நீறும்போக்கு
பண்பான சரக்குவறு பத்துநாலும்
அண்ணப்பா நவரத்தினம் நவலோகங்கள்
அப்பனே மலைக்குகைகள் நீறாய்ப்போகும்
கண்ணப்பா அதரணத்துக் கிதுதான்வேணுங்
கண்மணியே திராவகத்தின் பெருமைமெத்த
வண்ணப்பா மனங்களித்து உனக்குச்சொன்னேன்
வளமான தன்வந்திரி பாருபாரே. 20

நந்தீசர் திராவகம் முற்றிற்று

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
44801

Koviloor Digital Library